# போரே நீ போ…



## செங்கை ஆழியான்

# முன்னுரை

'**போ**ரே நீ போ' என்ற இந்நாவலுக்கு நீண்டதொரு முன்னுரை அவசியமென நான் கருதவில்லை. கடந்த இரண்டரை தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையில் நடந்துவரும் உண்ணாட்டு யுத்தத்தின் விளைவாக 1995 இல் இலங்கை இராணுவம் யாழ்ப்பாண வலிகாமம் பிரதேசத்தைக் கைப்பற்றியது. அந்த வேளை நான்கு இலட்சம் மக்கள் அகதிகளாக இடம் பெயரவேண்டி ஏற்பட்டது. 1995 இல் நிகழ்ந்த இந்த இடப்பெயர்வின் முன்னரும், பின்னருமான பகைப்புலத்தில், இடம் பெயராது ஊராலேயே தங்கிவிட்ட மக்களது மன வுணர்வுகளை இந்த நாவலிற் கூற முயன்றிருக்கிறேன். இந்த நாவலில் வருகின்ற துரையப்பரின் இடம் பெயராது தங்கிவிட்ட அனுபவங்கள் அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் 'அந்த ஆறு மாதங்கள்' என்ற விபரண நூலிலிருந்து பெறப்பட்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டவை. அவருக்கு நன்றி.

இந்த நாவலை நல்ல முறையில் வடிவமைத்து வெளி யிடும் கவிதா பப்ளிகேஷன் சகோதரர் எஸ். சொக்கலிங்கம், ஓவியர் ரமணி, கவிதா பப்ளிகேஷன்ஸாக வெளிவர உதவியாக இருந்த பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் பூ. ஸ்ரீதரசிங்கம் ஆகியோருக்கு மனப்பூர்வமான நன்றிகள்.

**செங்கை ஆழியான்**

ஹம்ஸம்,
75/10A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
(94-021-2222337)
kunarasak@yahoo.com

# பதிப்புரை

**போ**ரே நீ போ...

போரின் விளைவுகள்... மக்களின் இடப்பெயர்வு; அதனால் அவர்களுக்கு ஏற்படும் அவஸ்தைகள், சிரமங்கள், அதன் அவலங்கள் என விரிவாக ஒரு குடும்பப் பின்னணியில் எழுதப்பட்டக் காவியம்...

அற்புதமான நடை.

ஆழமான சொல்லாட்சி...

அமைதியை விரும்பும் ஒவ்வொருவரும் இந் நாவலைப் படிக்க வேண்டும்; இப் புதினத்தின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு அமைதி வாழ்வு வாழ எல்லா முயற்சிகளையும் தங்களால் இயன்ற அளவுக்கு செய்யவேண்டும் என்ற நூல் ஆசிரியரின் அவாவினை நிறைவேற்ற வேண்டும்.

4 முறை இலங்கை தேசிய சாகித்ய மண்டல அகாதெமி விருதும், 8 முறை மாகாணசாகித்ய மண்டலப் பரிசும் பெற்ற படைப்பாளர், அருமை நண்பர் செங்கை ஆழியானின் இந்நூலை கவிதா பப்ளிகேஷன் வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறது.

திரு. செங்கை ஆழியான் அவர்களின் நூல்களைத் தொடர்ந்து வெளியிடுவதில் எங்களுக்கு உறுதுணையாக விளங்கும் வைரவிழா கண்ட இலங்கை பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ஸ்ரீதர சிங்கம் அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றியும் நல்வாழ்த்துகளும்.

ஆசிரியருக்கு எங்களது இதயம் கலந்த நன்றி. அன்பு வாசகர்கள் இந் நாவலைப் பெரிதும் வரவேற்பார்கள். என நம்புகிறேன்.

அன்புடன்,

**சேது சொக்கலிங்கம்**

***கவிதா பப்ளிகேஷன்***

# முன்நிகழ்வு

**சோ**னாவாரியாக மாரி மழை காலம் தப்பிப் பொழிந்து கொண்டிருந்தது. வானமே பொத்தல் விழுந்தது போல நீர்த்தாரைகள் மண்ணில் இறங்கிக் கொண்டிருக்கின்றன. வாங்கில் நீட்டி நிமிர்த்தி துரையப்பர் வளர்த்தப்பட்டிருக்கிறார். உடல் ஒட்டி வதங்கியிருக்கிறது. கரங்கள் இரு பக்கங்களிலும் சோர்ந்து கிடக்கின்றன. மார்புக்கூடு ஏறி இறங்குவதிலிருந்து அவர் இன்னமும் இவ்வுலகின் பந்தங்களுடன் தன் உறவினை அறுத்துக்கொள்ளவில்லையெனத் தெரிகிறது.

"தையல்..." அந்த வயோதிபரின் நெஞ்சக் கூட்டில் வாத்சல்யமான அப்பெயர் எதிரொலித்தபடியிருக்கின்றது. 'என்னுடன் அறுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்து முடித்தவள். என் வாழ்விலும், தாழ்விலும் கூடவே பயணம் செய்தவள். தையல், உன் மரணத்திற்கு நான் காரணமாக அமைந்து விட்டேனா?'

அவர் உதடுகள் துடிக்கின்றன.

"அப்பு, ஏதோ சொல்ல விரும்புகிறார்" என்கிறாள் துயரத்துடன் மூத்தவள் யோகம். அவரைச் சுற்றி எல்லாரும் சூழ்ந்து நிற்கிறார்கள்.

"அப்பு, அப்பு, எங்களை ஒருக்காப் பார் அப்பு" என்று பேரப் பிள்ளைகள் விம்முகிறார்கள். அவர் அவ்வாறான பாசப்பொழிவுடன் தான் அனைவரையும் வளர்த்து ஆளாக்கியவர். உயிர் ஒடுங்கிக் கொண்டிருக்கும் துரையப்பரின் படுக்கையைச் சுற்றி நிற்கும் அவர் உதிரத்தின் பங்காளிகள் உண்மையில் இதயம் குமுறித்தான் கலங்கு கின்றார்கள்.

"ராகுலா..." அவர் உதடுகள் துடிக்கின்றன. 'பேரா, என் பேரா உன்னை இனி எங்க காணப்போறன்? எத்தனை கனவுகளோடு என்னுடன் அளவளாவினாய்?"

“அப்புவுக்கு ராகுலனின் நினைவுதான்” என்றபடி பவளம் விம்முகின்றாள்.

வெளியே முற்றத்தில் வெள்ளம் தேங்கத் தொடங்குகிறது. மழை ஓயும் அறிகுறி இல்லை. வீட்டின் கூரையில் விழும் துளிகள் ஒவ்வொன்றும் கனமான சத்தத்தினை ஏற்படுத்துகின்றன. ‘முற்றத்து இலுப்பை மரத்தில் வெளவால்கள் விழுகின்றனவா? இலுப்பைப் பழங்கள் பிடி கழன்று கூரையில் விழுகின்றனவா? என்ன சத்தம்? லூசியா... லூசியா?’

யாரோ முற்றத்து வெள்ளத்தில் நடந்துவரும் சளசள சத்தம். ‘யார் வருகிறார்கள்? ராகுலனா? அவன்தான் இல்லையே?’

‘வேறு யார்? நாய் துயரத்துடன் நடக்கின்றதோ?’

சிவபுத்திரன் வந்து படிகளில் ஏறுகிறான்.

“அம்மா, மச்சான் மாணிக்கராசாவும் சிவபாலனும் கொழும்புக்கு வந்திட்டினமாம். ரெலிபோனில் பேசினன். எம்.ஓ.டி. கிளியறன்ஸ் நாளைக்குக் கிடைக்குமாம். ஐசிஆர்சி மூலம் அப்புவுக்கு கடுமை யெண்டு அனுப்பிய செய்தி கிடைச்சதாம். வந்திடுவினம்.”

துரையப்பருக்கு அவை கேட்கின்றன. முகத்தில் திடீரெனப் பிரகாசம் பரவுகிறது. ‘எல்லோரும் வருகிறார்கள். என்னுடைய எல்லாப் பேரப் பிள்ளைகளும் நெய்ப்பந்தம் பிடிக்கப் போகிறார்கள். ராகுலா, நீ இருந்தால் தலைமாட்டில் நெய்ப்பந்தத்துடன் நிற்பாயே? தையல், நீதான் எவருமில்லாமல் அநாதையாகச் செத்துப் போனாய். சுடலைக்குக் கூடத் தூக்கிச் செல்ல வக்கற்று காணியில் போட்டுச் சிதை மூட்டினேன். பாரடி தையல், எனக்கு எல்லாரும் வருகினம்!’

அவருக்குத் தன்நிலை புரிகிறது. அவர் நிறை வாழ்வு வாழ்ந்து முடித்தவர். அவர் சாவதற்கு முன்னர் சில காரியங்கள் நடந்தாக வேண்டும். மழை ஏன் இப்படிப் பெய்கிறது?

அவர் நெஞ்சு சற்று ஏறியிறங்குகிறது.

உதடுகள் துடிக்கின்றன. வலக்கரத்தினை நகர்த்த முயல்கிறார். முடியவில்லை.

‘நான் இப்பொழுது சாக மாட்டேன்.’

வானம் பிளவுபட்டதுபோல இடிஇடிக்கிறது. மின்னல் கிளை பரப்பித் தாவுகின்றது. அக்கணத்தில் முற்றம் ஒளி பெறுகிறது. கண்களைக் கூசச் செய்யும் ஒளி.

'ஏன் வெளியில் இயற்கை இப்படி அட்டகாசம் செய்கிறது?'

'எழுந்த பெருஞ் சத்தத்திற்குக் காரணம் இடியா? அல்லது எங்காவது உயிர்களைக் காவுகொள்ளும் குண்டுகள் வெடித்தனவா? இந்த மண்ணில் கௌரவத்துடனும் சுதந்திரத்துடனும் பாதுகாப்புடனும் வாழ்கின்ற நிலை என் பிள்ளைகளுக்கு வரவேண்டும்.'

'அவர்கள் இந்த வாழ்வில் எவ்வளவற்றினை இழந்துவிட்டார்கள். கழிந்த கால இனிமைகள் திரும்பி வரப் போவதில்லை. எதிர்காலமாவது நம்பிக்கையுடன் மலர வேண்டும்.'

"அப்பு... அப்பு"

அவருக்கு அழைப்பொலி கேட்கின்றது. வார்த்தைகள் நெஞ்சுக் குழிக்குள் சிக்கித் தவிக்கின்றன. வெளியே மழை பொழிந்து கொண் டிருக்கின்றது.

1

# புறாப் பிடிக்கும் வயது



இருள் இன்னமும் முற்றாக நீங்கி விடவில்லை. கிழக்கு வானம் வெளுப்பதற்கு இன்னமும் இரண்டு மணி நேரமாவது இருக்கின்ற விடிசாமற் பொழுதின் அமைதியைக் கீறிக் குலைத்தபடி வானத்தில் சீறிக் கொண்டு எறிகணைகள் பாய்ந்து செல்கின்ற இரைச்சலும் அதனைத் தொடர்ந்து அவை எங்கோ விழுந்து வெடிக்கின்ற சத்தமும் எழுந்தபடி இருக்கின்றன. துப்பாக்கிச் சன்னங்கள் 'பட் பட் டுப்' என ஓயாது வெடித்தபடி இருக்கின்றன. காற்றில் மிதந்து வரும் யுத்த அரக்கனின் காவுகொள்ளும் ஒலி எனக்கு வெறுப்பைத் தருகின்றது.

பத்தாண்டுகளுக்கு மேலாக துப்பாக்கி வெடிச் சத்தத்துடன்தான் யாழ்ப்பாணம் விழித்துக் கொள்கின்றது. பனிக்குளிர் இருளினூடாக யுத்த அரக்கனின் குருதி தோய்ந்த கர அரவங்கள் எங்கும் துளாவித் திரிவதாக எனக்குப் படுகிறது. சந்தியில், வீதியில், ஒழுங்கையில், வீட்டில், இருளில், பகலில் எங்கு மரணம் வரும் என்பதற்கு இந்த மண்ணில் நியதியில்லை. சுகம் விசாரித்துவிட்டு, படலையைத் திறந்தபடி வீதியில் ஏறுபவன் கால்களை நகர்த்துவதற்கிடையில் எங்கிருந்தோ காற்றில் வரும் சன்னம் மார்பைத் துளைத்த சம்பவங்கள் நிறையவுள்ளன.

எங்கள் வாழ்க்கையின் கடந்தகால இனிமைகள் பற்றிய கவலைகள் எனக்கில்லை. ஆனால், வாழ்ந்து முடிக்காத நிகழ்காலத்தைப் பற்றியும் அதனால் சோகவடுக்களுடன் எதிர்கொள்ளப்படவிருக்கும் எதிர் காலத்தைப் பற்றியும் அடிக்கடி கவலைப்படுகிறேன். எமது பிள்ளைகள் எவ்வளவு இனிமைகளை இழந்து கொண்டிருக்கிறார்கள்.

வாங்கினை விட்டு எழுந்திருக்காது, முற்றத்து இருளை வெறித்துப் பார்த்தபடி அப்படியே படுத்திருக்கின்றேன். முற்றத்தில் முடங்கிக் கிடந்த நாய் எழுந்து தன்னளவில் மெதுவாக உறுமி அழுதுவிட்டுப் படுத்துக் கொள்கிறது. அதற்கும் இச்சத்தங்கள் பழகிவிட்டன.

வெகுதூரத்தில் சேவல் ஒன்று கூவுவது சன்னமாகக் கேட்கிறது. அதனைத் தொடர்ந்து இன்னொன்று குரல் தந்தது. விடியற்பொழுதில் திக்கிற்கொன்றாகக் குரல் தரும் சேவல்களின் அமைதியைக் கீறும் கூவல் சத்தம் எனக்கு மிகவும் பிடித்தமானது.

அதிகாலை விடியலின் இனிமையை அனுபவிக்காது என்னால் படுக்கையில் உறங்க முடிவதில்லை. விடியலுக்கு முன்னரே எழுந்து பழகிவிட்ட நான் தலைவாசலில் இடப்பட்டிருந்த ஈசிச்செயரில் சாய்ந்து கொள்கிறேன். குண்டுகள் வெடிக்கின்ற சத்தம் தொடர்ந்து விட்டுவிட்டுக் கேட்டபடி இருக்கிறது. எங்காவது சண்டை தொடங்கி விட்டதோ?

முற்றம் வெளுக்கத் தொடங்கியது.

அடுக்களைக்குள் மூத்தவள் யோகம் கேத்தலில் தண்ணீர் ஏந்தி அடுப்பில் வைத்து எரி மூட்டுவது தெரிகிறது.

“எந்தப் பக்கத்தில் சத்தம் கேட்குது யோகம்?”

அவள் நிமிர்ந்து பார்த்தாள். குசினியின் நேர்க் கதவு, தலைவாசலில் ஈசிச்செயரில் சாய்ந்து அமர்ந்திருந்த என்னை அடையாளம் காட்டியது. வலக்கரத்தில் பற்றிப் பிடித்திருந்த சுருட்டுக் காங்கையின் ஒளி வாயில் வைத்து இழுக்கும்போது முகத்தினைப் பிரகாசிக்க வைத்திருக்கும். எனக்கு எண்பத்துமூன்று வயதென்றால் யாராவது நம்புவினமே?

“பலாலிப் பக்கமாக்கும் ஐயா.”

நான் சற்று மௌனமாக இருக்கிறேன். சத்தம் வரும் பக்கத்தை அனுமானிப்பது ஒன்றும் சிரமமில்லை. நிச்சயமாக எனக்கு எத்திக்கி லிருந்து குண்டுச்சத்தங்கள் வருகின்றனவென்பது தெரியும். ஊர் உலகம் அடிபட்டவன். நான் போகாத ஊரே இல்லை. இப்பொழுது

ஓய்வூதியமும் பெரிய விதானையார் என்ற பட்டமும் எஞ்சியிருக் கின்றன.

“பலாலிப் பக்கமே ஐயா?” என்று மீண்டும் யோகம் கேட்கிறாள்.

“சாய்... அப்படித் தெரியவில்லை. சங்கானை, சண்டிலிப்பாய் பக்கமாகத்தான் கேட்குது...” என்றேன் கவலையோடு. என் குரலில் கலந்திருந்த கவலைக்கான காரணம் யோகத்திற்குத் தெரியாமலில்லை. அவள் நெஞ்சு ஒருகணம் திக்கிட்டிருக்கும்.

ஈசிச்செயரை விட்டு நான் எழுந்திருக்கிறேன்.

“பிள்ளை, நான் பிள்ளையார் கோயிலடிக்குப் போயிட்டு வாறன். தேத்தண்ணி ஊத்திவை. ஆச்சி எழும்பவில்லையே? கிழவிக்கு விடிய வெள்ளென எழுப்பிப் பழக்கமில்லை...”

“அம்மா கிழவியெண்டால் நீங்கள்...?” என்று யோகம் சிரிக்கிறாள்.

பிள்ளையார் கோயில் பக்கமாக நடக்கும்போது என் மனதில் யோகம் நிறைந்திருக்கிறாள். மூத்த மகள். எவ்வளவு பெருந்துயரத்தைத் தன்னுள் புதைத்துக்கொண்டு நடமாடுகிறாள்? நினைக்கும்போது நெஞ்சம் ஒருகணம் நின்றுவிடும் போல உணர்வு.

இரண்டு சம்பவங்கள் அவள் வாழ்வினைக் கருகிவிட்டன. எனக்கு அந்த நாள் நன்றாக நினைவிருக்கின்றது. யோகத்தையும் பிள்ளை களையும் பார்ப்பதற்காக நான் கம்பர்மலைக்கு சென்றிருந்தேன். அந்த நாள்... திகதி... நினைவு வருகின்றது.

24, மே மாதம் 1987.

இரவு பி.பி.சி. வானொலி ஒலிபரப்பில் கொழும்பு நிருபர் ஜோன் ரெற்றி அனுப்பிய செய்தியை எல்லாரும் கேட்டுக்கொண்டிருந்தோம்.

“...இலங்கை அரசாங்கம் யாழ்ப்பாணக் குடாநாட்டின்மீது திடீர்த் தாக்குதல் ஒன்றிற்குத் தயாராகவுள்ளது. இத்தாக்குதல் யாழ்ப்பாணக் குடாநாட்டை அரசு தன் வசப்படுத்தும் ஓர் அதிரடி நடவடிக்கையாக அமையலாம். இன்று, நாளை என்று அறிவித்து, தமிழ்ப் போராளி களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி எதிர்பாராத விதமாகவே இத் தாக்குதலை மேற்கொள்ள அரசப் படைகள் திட்டமிட்டுள்ளதை அறிய முடிகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அனுப்பப்பட்ட அரச துருப்புகள் திடீர்த் தாக்குதலுக்குப் பூரண ஆயத்த நிலையில் இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன...

"பெரியதொரு சண்டை வரும்போல...?" என்று கவலையோடு யோகம் கேட்டாள். "இந்தக் குஞ்சு குருமான்களை வைத்துக்கொண்டு நாங்க என்ன செய்யப்போறமோ?"



"அப்படியொன்றும் வராது. கவலைப்படாதை..." என்று என்னால் ஆறுதல் கூற முடிந்தாலும் மனதிற்குள் நாட்டில் நித்தம் நடந்தேறிக் கொண்டிருக்கும் சம்பவங்கள் நிம்மதியாகப் பெருமூச்சினைக்கூட விடுவதற்கு அனுமதிக்கவில்லை. மரணங்கள்கூடக் கௌரவமாக நிகழாத பூமி இது. சிதறிப்போகும் உடல்களைக் கூட்டி அள்ளி மயானத்திற்குக் கொண்டு செல்லும் நிலைவரங்கள்.

"தம்பி ரேடியோவை நிற்பாட்டு" என்றபடி யோகம் எழுந் திருந்தாள். வானொலியை நிறுத்தியபோது வானத்தில் இரைச்சலுடன் வட்டமிடும் விமானம் ஒன்றின் சத்தம் கேட்டது. அச்சத்தத்திற்கு அனைவரினதும் உடல்களைச் சில்லிட வைத்து நடுங்க வைக்கும் சக்தியிருந்தது.

"பொம்பர்..." என்று யோகம் வீரிட்டாள். பொம்பரின் இரைச்சலில் படுத்திருந்த பிள்ளைகள் திடுக்கிட்டு எழுந்து ஓடிவந்து தாயுடன் ஒட்டிக் கொண்டன. பருந்தினைக் கண்ட கோழிக்குஞ்சுகள் போல அவர்களின் உடல்கள் நடுங்கின.

பொம்பர் குத்தியெழுந்து ஆர்ப்பாட்டம் செய்தது. வானம் கிழிபட்டுப் பூமி நடுங்கியது. "அப்பு அவங்கள் இந்தப் பக்கம்தான் வாறாங்கள்" என்று மூத்த பேரன் சிவபுத்திரன் கத்தினான். "எல்லோரும் பங்கருக்கு ஓடுங்கோ..." என்றபடி நான் முற்றத்தில் இறங்கினேன். என்னைத் தொடர்ந்து அவர்கள் எல்லாரும் முற்றத்திற்கு ஓடி வந்தார்கள். நல்ல நிலவு. முற்றம் பால்போலத் தெளிவாகத் தெரிந்தது. வானத்தில் விமானத்தின் இரைச்சல்.

"மணிவண்ணன். லதா ஓடுங்கோ... ஓடுங்கோ பங்கருக்கு..." என்றபடி அறைக்குள் படுத்திருந்த ராகுலனை எழுப்ப யோகம் ஓடினாள். மணிவண்ணனும் லதாவும் முற்றத்தில் இறங்கி பதுங்கு குழிக்குள் இறங்க ஓடாது, பதற்றப்பட்டு வீட்டிற்குப் பின்னால் ஓடிச் சுவருடன் பதுங்கிக் கொண்டனர்.

அதேவேளை பொம்பரில் விடுபட்ட குண்டொன்று நாலைந்து வீடுகள் தள்ளிப் பாய்வதைக் கண்டேன். பொம்பரின் பதிவும் குண்டு வீச்சும் அப்பிரதேசம் எங்கும் பெரும் பயங்கரத்தை விளைவித்தன. விண்ணில் கிளம்பிய பொம்பர் மீண்டும் குத்தெனத் தாழப் பறந்தது. அந்த வீடே ஒருகணம் நடுங்கியது. விமானம் குத்தி எழுந்தபோது பேரிரைச்சல் காதுச்சவ்வுகளை வெடிக்க வைக்குமாப்போல... நான் தலையை உயர்த்திப் பார்த்தபோது வீடிருந்தவிடத்தில் ஒரே புகை... தூசிப்படலம்...

"ஐயோ..."

"அம்மா, மணிவண்ணனும் லதாவும் எங்கே?" என்றான் ராகுலன் பதற்றத்துடன், பதுங்குகுழிக்குள் அவர்கள் இல்லையென்பது அப்பொழுதுதான் அனைவருக்கும் தெரிந்தது.

"ஐயோ..." எனப் பெருங்குரலில் யோகம் கத்தினாள்: "என்ர பிள்ளையள்... என்ர பிள்ளையள்..."

பிள்ளைகளின் உடற்பகுதிகள் கூடக் கிடைக்கவில்லை. மணிவண்ணன் அணிந்திருந்த காற்சட்டையின் ஓர் சிறு பகுதியும் லதாவின் வெள்ளிக் காற்சரம் ஒன்றும்தாம் அவர்கள் இல்லை யென்பதற்குச் சாட்சியங்களாகின.

இன்று நினைத்தாலும் என் சர்வாங்கமும் நடுங்குகின்றது.

வீதியில் நடக்கும்போது நெஞ்சம் கலங்கி அழுகின்றது. இந்த யுத்தம் தொடங்கியதிலிருந்து இந்த மண்ணில் எத்தனை

மணிவண்ணன்கள், லதாக்கள் இருந்தவிடம் தெரியாமல் போய் விட்டார்கள்? யுத்த அரக்கனின் சர்ப்பக்கரங்கள் அப்பாவிகள் எத்தனை பேரினைத் தழுவி அழித்து விட்டன? இந்தப் பூமி மானிடன் வாழ்வதற்காகத்தான் படைக்கப்பட்டதென்பதில் எனக்கு இரண்டு கருத்தில்லை. ஆனால் அரசியல் அயோக்கியர்களின் விஷக்காற்றுப் பட்டு பூமியே கருகி வருகின்றது. பிள்ளையார் கோயில் பக்கமாக நடக்கும்போது என் மனவெளியில் யோகம் நிறைந்திருந்தாள். அவள் எவ்வளவு பெருந் துயரத்தைத் தன்னுள் புதைத்துக்கொண்டு நடமாடுகிறாள்?

பிள்ளையார் கோயில் கோபுரத்தில் புறாக்கள் சிறகடித்துத் தமக்குள் புறுபுறுத்துக் கொள்கின்றன. கோபுரத்து பொம்மைகளில் தாவித்தாவிப் பறந்தமர்கின்றன. கரங்கூப்பி வணங்கிவிட்டுத் தலையை உயர்த்திக் கோபுரத்தைப் பார்க்கும்போது அரசமரத்துளிர்களும் தெரிகின்றன. அடிக்கடி கவனமாக கோபுரத்தில் ஏறி வளர்ந்திருக்கும் அரசமரச் செடியை பிடுங்கி எறிவார்கள். பயனில்லை. அவை கோபுர இடுக்கில் ஆழமாக வேரூன்றிவிட்டதால் மீண்டும் துளிர்த்து விடுகின்றன.

கோயில் வெளிமண்டபத்தில் அமர்ந்துகொண்டேன். அதிகாலையில் பனிக்குளிரும் புறாக்களின் அகவல்களும் தூரத்தில் கேட்கும் வெடிச்சத்தங்களில் அமுங்கிப்போயின. கோயிலின் முன் வீதியில் ஓரிருவர் நடந்து செல்வது தெரிகின்றது. மங்கிய ஒலியில் அவர்களை என்னால் இனங்காண முடிந்தது. சாராயக்கடை வேலுப்பிள்ளையும் தரகியர் செல்லையாவும் பேசிக்கொண்டு செல்கிறார்கள். விடிந்ததும் விடியாததுமாக வேலுப்பிள்ளைக்குக் கடையைத் திறந்துவிட வேண்டும். தேநீர்க் கடை என்று பெயர். தரகியர் செல்லையாவுக்கு விடிந்தும் விடியாததுமாக 'தேநீர்' அருந்திவிட வேண்டும்.

நகரத்துக்கு ஒதுக்குப்புறமாகக் கடற்கரையை அண்டி அமைந் திருக்கும் கிராமம். வடக்கே கிறிஸ்தவர்களும் தெற்கே சைவக்காரரும் நான் அறியத்தக்கதாக ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். குடும்பங்கள் இயல்பாக பெருகிவிட்டதாலும் நகர்ப்புறத்தில் தொழில் பார்க்கும் தொழிலாளர்கள் இங்கு வந்து குடியேறிவிட்டதாலும் கண்ணாப் பற்றைகளுடன் விரிந்து கிடந்த கடற்கரையோரம் குடிசைகளால் இன்று நிரம்பி விட்டது. பெயருக்குக்கூட கண்ணா மரங்களைக் காண முடியாதளவிற்கு சனநெருக்கம்.

கோயில் வாசலில் படுத்துக் கிடக்கும் மாடுகள் அசைபோடு கின்றன.

கோபுரத்தில் புறாக்கள் புறுபுறக்கின்ற சத்தம் எழுந்தது.

கோபுரத்தில் ஏறிப் புறாப் பிடிப்பதில் நான் வலு திறமைசாலி. அப்பொழுது எனக்குப் பன்னிரண்டு வயதிருக்கும். என் வயதொத்த ஐந்தாறு சிறுவர்களுடன் நான் அந்தக் கிராமத்தில் செய்யாத திருக்கூத்துக்கள் இல்லை. சொக்கர் கனகசபை வீட்டில் மாங்காய் பிடுங்குவது, பிராந்து கிழவியின் வளவில் விளாத்திக்குக் கல்லெறிந்து விளாங்காய்களை விழுத்துவது எல்லாவற்றிற்கும் நானே தலைமை வகிப்பேன். விதானையார் ஐயம்பிள்ளையின் மகன் என்ற பாதுகாப்பு எனக்கு அக்கிராமத்தில் இருந்தது. கையும் களவுமாகப் பிடிபட்டாலும், "உது விதானையாற்ற பொடி" என்று விட்டுவிடுவார்கள். பிடுங்கிய கனிகளையும் கையில் கொடுத்து அனுப்பி விடுவார்கள்.

ஒரு முறை என் தந்தையாரிடம் சிக்கிக்கொள்ள நேர்ந்தது.

புறாக்களைப் பிடிப்பதற்காக நான் பிள்ளையார் கோயில் கோபுரத்தின் மீது ஏறிக்கொண்டிருக்கும்போது, அப்பு கோயிலுக்கு வந்துவிட்டார். கீழே நின்றிருந்த தோழர்கள் திக்கிற்கொருவராகச் சிதறி ஓடி விட்டனர்.

"டேய் மயிலு, கந்தா... குஞ்சு பொரிச்சு இருக்கடா..." என்றேன் நான் கோபுரத்தில் நின்றபடி. குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்த அப்பு திகைத்து நின்று விட்டார். கோபுரத்தில் கால்பதித்து ஏறி எத்தகைய அபசாரத்தை மகன் செய்துவிட்டான்?

கோயில் குருக்கள் சாம்பசிவம் வெளியில் வந்தார்.

"சொல்கிறனெண்டு குறை நினைக்க வேண்டாம், விதானையார். உங்கட மோன் இப்படித்தான். எவ்வளவு சொல்லியும் கேட்கிறானில்லை. கும்பாபிஷேகம் செய்யப்பட்ட கோபுரம். இப்படி ஏறி அபசாரம் செய்யலாமோ? ஓணான் மாதிரி தாவு விடுகிறான்."

அப்புவின் விழிகள் சிவந்தன. வரும் வழியில் இரண்டு பிலாப் பனங்கள்ளும் அருந்திருந்தார். கண் முன்னால் மகன் கோபுரத்தில் ஏறி நிற்கிறான். குருக்கள் மகனின் செயலைக் கண்டித்து முறைப்பாடு செய்கிறார்.

"டேய் துரை..." என்று பெருங்குரலில் அதட்டி அழைத்தார்.

அவரின் குரல் கோபுரத்தில் நின்றிருந்த என் காதுகளில் விழுந்தபோது வெலவெலத்து போனேன். பற்றிப் பிடித்த கரங்கள் பிடி கழன்று விடுவன போல, கால்கள் நடுங்கின.

கீழே பார்த்தபோது அப்புவும் குருக்களும் நிற்பது தெரிந்தது.

"அப்பு..." என்று பயத்துடன் அழைக்கத்தான் முடிந்தது.

"ஏன்ரா... ஏறினனி?"

உண்மை சொன்னால் என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியும். விதானையார் என்ற உத்தியோக ரீதியாகக் கைது செய்து வருபவர்களை விட்டு முற்றத்துச் சீமைக்கிளுவை மரத்துடன் அப்பு கட்டுப்போட்டு விடுவார். ஒரு நாள் முழுவதும் அன்னம், தண்ணீர் இன்றி கட்டுப்பட்டுக் கிடந்தவர்கள் என் நினைவுக்கு வந்தார்கள்.

அந்தக்கால விதானைமாரின் அதிகாரம் மிகப் பரந்தது. பொலிஸ், நீதிபதி ஆகியோரின் கடமைகளும் அவர்களுக்கு வெள்ளைக்காரனால் வழங்கப்பட்டிருந்தன. ஒரு தடவை கிளுவை மரத்துடன் கட்டிப் போட்டிருந்த ஒருவனுக்கு முதுகு கிழிந்து குருதி கொப்பளிக்கத்தக்கதாக துவரம் கம்பால் அடித்தும் இருக்கிறார்.

"ஏன் ஆச்சி... அப்பு இப்படிச் செய்கிறார்?"

"அவன் கூடாதவன். ஒரு சின்னப்பிள்ளையைக் கெடுத்துப் போட்டான்" என்று ஆச்சி மெதுவாகக் கூறினாள்.

"அப்ப அவருக்கு வேணுந்தான்..."

நான் என் குடும்பத்தில் நான்காவது பிள்ளை. மூத்தவர் மூன்றும் அக்காமார். கடுஞ் செல்லமாக வளர்த்து விட்டனர். வீட்டில் அப்புவோ ஆச்சியோ ஒரு சிறு கம்பெடுத்து உறுக்குவதையே அக்காமார் விரும்ப மாட்டார்கள். வந்து தடுத்துவிடுவார்கள். இப்பொழுது நான் அகப் பட்டிருப்பது வீட்டில் அல்ல. பிள்ளையார் கோயில் கோபுரம். அதுவும் கையும் மெய்யுமாக...

'பிள்ளையாரே... என்னைக் காப்பாற்று. இனி ஒருக்காலும் கோபுரத்தில் ஏறவும் மாட்டன். புறாப் பிடிக்கவும் மாட்டன்' என்று மனத்திற்குள் வேண்டிக் கொண்டேன்.

"இறங்கடா!"

காற்றில் அசைந்த கோபுரத்து அரச மரத்துளிர்கள் என் கண்களிற் பட்டது.

“அப்பு... நான் அந்த அரசங்கொப்பை பிடுங்கிவிடத்தான் ஏறினனான். கோபுரம் பழுதாப் போகும்... வெடிச்சுப் போகும்.”

அப்பு கவலையோடு குருக்களைப் பார்த்தார்.

அரசங் கிளைகளை வேரோடு இழுத்து அறுத்துக் கீழே எறிந்துவிட்டு இறங்கி வந்தேன். வந்து தகப்பனார் முன் தலை குனிந்தபடி நின்றேன்.

“பொடியனை ஒண்டும் செய்யாதீங்கோ...” என்றார் குருக்கள்.

“...ம்...” என்றபடி என்னைக் கரத்தில் பிடித்தபடி வீட்டிற்கு இழுத்து வந்தார். வரும் வழியில் கிளுவை மரமும் கைகளைக் கட்டும் வடக்கயிறும் நினைவில் வந்து பயமுறுத்தின. கூரையில் செருகியிருக்கும் துவரம் கம்பும் நினைவுக்கு வந்தது. சுந்தரம் வண்டில் மாடுகளுக்குத் துவரங்கம்மால் ஓங்கி அடிக்கும்போது அவை முதுகை வளைத்துத் துடிப்பதும் நினைவு வந்தது.

“அப்பு இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன்” என் விழிகள் கலங்கின.

அப்புவின் கரப்பற்றுதல் நழுவியது. என்னைத் திரும்பிப் பார்த்தார். “இஞ்சை பாரடா, துரை... நாளைக்கு எனக்குப் பிறகு இந்தக் கிராமத்தில் விதானையாக வரப்போறவன் நீ. மறந்திடாதை. இப்படி நட்டாமுட்டித்தனமாக நடந்தால் ஊராக்கள் உனக்குக் கட்டுப்பட மாட்டார்கள். நீ சொல்கிறவற்றைக் கேட்டு நடக்க மாட்டார்கள். மற்றவைக்கு நாம் முன் மாதிரியாக இருக்க வேண்டும். இனிக் கோபுரத்தில் ஏறினதாகக் கேள்விப்பட்டன், மகன் என்றும் பாக்க மாட்டன். போடா...போய்ச் சாப்பிடு...”

படலையைத் திறந்துகொண்டு வீட்டிற்குள் ஓடிப் போனேன்.

பிள்ளையார் கோயில் கோபுரத்தில் புறாக்கள் இன்றும் அகவுகின்றன. ஏறிப் பிடிக்கத்தான் இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்குத் துணிவில்லை. துணிவில்லையா? ‘இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்குத் துணிவில்லையா?’

புறாப் பிடிக்க வேண்டிய வயதில் துப்பாக்கி ஏந்தி எல்லைப் புறங்களில் காவல் நிற்கின்ற சிறுவர்கள் மனதில் தெரிகின்றனர். அவர்களில் ஒருவனாக என் பேரன் ராகுலன் தெரிகிறான்.

ராகுலனுக்குப் பதினெட்டு வயதிருக்குமா?

தூரத்தில் மீண்டும் குண்டுகள் வெடிக்கும் சத்தம். இருந்தாற்போல மண்டைதீவுப் பக்கமிருந்தும் துப்பாக்கிச் சன்னங்கள் 'டப் டப் டுப் டுப்' எனச் சில கணங்கள் இடைவிடாது சடசடத்தன. யாராவது மீன் பிடிக்கக் கடலுக்குள் இறங்கியிருப்பார்களோ? அல்லது வலிகாமம் மேற்கில் நடக்கும் சண்டையின் எதிரொலியோ?

ராகுலன் ஏன் அவர்கள் எல்லோரையும் தவிக்க விட்டுவிட்டு இயக்கத்திற்கு ஓடிப் போனான்?

மனதில் ஏராளமான காரணங்கள் தொடர்ச்சியாகக் காட்சிப் படுகின்றன. கண்களின் முன்னால் அவமாகச் சரிந்து விழுகின்ற சடலங்கள் நித்தம் சந்திக்கின்ற அவமானங்கள், அவலங்கள் எல்லாம் இளம் சந்ததியின் இதயங்களில் மாறாத வடுக்களைத் தோற்றுவித்து விட்டன. மனங்களில் வன்மத்தின் திரட்சி சூல் கொண்டுவிட்டது.

என் மனம் அசைபோடுகின்றது.

## 2

# மீளாத்துயர்



**மு**ற்றத்திலிருந்து நோக்கும் போது வீதியில் சாரிசாரியாக மக்கள் அழுது புலம்பிக் கொண்டு செல்வது தெரிகிறது. கலைந்த தேனீக்களாக எவ்வித இலக்குமின்றி உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளும் ஆசையுடன் அவர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். யுத்த அரக்கனின் மரணக் கரங்களில் சிக்கி விடக் கூடாதென்ற பயம் அவர்களின் முகங்களில் அப்பிக் கிடந்தது. எனக்கு தேநீரைக் கொடுப்ப தற்காக முற்றத்தில் இறங்கிய யோகம் அப்படியே நிலைகுலைந்து வீதியைப் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டாள்.

வலிகாமத்தில் இராணுவம் தொடங்கிவிட்ட ஆக்கிரமிப்பின் எதிரொலியாக சண்டிலிப்பாய், சங்கானை, நவாலி, அராலிப் பக்க மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். கையில் அகப்பட்ட வற்றைத் தூக்கிக்கொண்டு மூட்டை முடிச்சுகளுடன் கண்களில் நீர் சோர அவர்கள் செய்வதறியாது சென்று கொண்டிருக்கிறார்கள்.

இந்த அவல வாழ்க்கை எத்தனை காலமாகத் தொடர்கிறது என எண்ணியபடி தலை நிமிர்ந்த என் கண்களில் முற்றத்தில் கரத்தில் பற்றிய

மூக்குப்பேணியுடன் யோகம் நிலைகுலைந்து நிற்பது தெரிகின்றது. ஒரு கணம் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை குளிரோடிய உணர்வு.

"என்ன பிள்ளை அப்படியே நின்றுவிட்டாய்?"

சுயநினைவு வந்த யோகம் திரும்பிப் பார்த்தாள். முகம் கலவரத்தால் இருண்டிருந்தது. கவலையுடன் தந்தையைப் பார்த்து, "தங்கச்சி பவளம் அராலியில எல்லோ...?" என்றாள்.

"அதைத்தான் நானும் நினைச்சன்..." யோகத்திடமிருந்து மூக்குப்பேணியை வாங்கிக் குடிக்க மனமின்றி வாங்கில் வைக்கின்றேன். விழிகள் ஆவலுடன் வீதியை நோக்கின. இரும்புக் கேற்றுக்களுக்கு அப்பால் மக்கள் வீதியில் கலக்கத்துடன் செல்வது தெரிகின்றது.

"பவளமும் பிள்ளைகளும் பக்குவமாய் வந்து சேருவினம்... இப்படித்தான் 1987 ஆனி மாதம் நீயும் பிள்ளையளும் வடமராட்சியிலிருந்து ஓடி வந்தியள்."

நீண்டதொரு பெருமூசசு யோகத்திடம் இருந்து எழுகின்றது.

நினைத்துப் பார்க்கவே நெஞ்சு பதறுகிறது. அவள் இந்த யுத்தத்துக்கு கொடுத்துவிட்ட விலை மிக அதிகம். இந்த யுத்தத்தின் விளைவாக சா நிழல் படியாத வீடுகள் யாழ்ப்பாணத்தில் எதுவுமில்லை. மாரிகாலக் கருமுகிலாக அது எங்கும் படிந்து பரவி வருகின்றது.

சாகும்வரை நெஞ்சைவிட்டு நீங்காத அந்த அவல நாள்...

1987, மே மாதம், 26.

செவ்வாய்க்கிழமை, அதிகாலை 5.45 மணி.

வானத்தில் இருந்தாற்போல் ஹெலிக்கொப்டர்களின் இரைச்சல் சன்னமாக எழுந்து அதிகரித்தது. வீட்டுக்குள் படுத்திருந்த யோகம் பதறிப்போய் எழுந்து முற்றத்திற்கு ஓடி வந்தாள். யந்திரக் கழுகுவின் விசிறிச் சுழற்றிச் சத்தம் மிக அருகில் படபடத்தது. இரண்டு ஹெலிக்கொப்டர்கள் கடல் பக்கமாக வானத்தில் மிதந்தன. அவள் ஒரு கணம் திடுக்குற்று எதுவும் செய்யவியலாது மரமாக நின்றாள்.

விமானச் சத்தமும் ஹெலிச்சத்தமும் அவளுக்குத் தாங்க முடியாத பயத்தையும் ஒருவித மனக்கிலேசத்தையும் கொடுத்தன. அவளுடைய வாழ்க்கையில் அவை ஏறப்டுத்திவிட்ட அனர்த்தங்களின் பின்னர் அவற்றின் சத்தம் எழுந்ததுமே அவள் செயலற்றுப் போய்விடுகிறாள்.

“அம்மா, உள்ளுக்கு வாருங்கோ” என்று சிவபுத்திரன் போர்ட்டிக்கோவில் இருந்து அழைத்தான். ஹெலியின் சத்தம் அவனையும் விழிப்படையச் செய்திருந்தது.

அவள் உள்ளே செல்லத் திரும்பியபோது விண்ணில் சுற்றி வட்டமிட்ட ஹெலிகளிலிருந்து துண்டுப்பிரசுரங்கள் காற்றில் பரவி நாலா பக்கங்களிலும் மிதந்து பறந்தன.

“நோட்டீஸ் போடுறாங்கள் அம்மா.”

சிவபுத்திரன் வானத்தை அண்ணாந்து பார்த்தபடி நிற்க, ராகுலன் கீழ்நோக்கி வரும் துண்டுப் பிரசுரம் ஒன்றினைப் பெறும் ஆவலுடன் விரைந்தான். விண்ணிலிருந்து கீழ்நோக்கி விழுபவை அவன் எதிர்பார்த்த இடத்திலிருந்து விலகி விலகிச் சென்றன.

“எல்லாம் கடலுக்கைதான் விழுந்திருக்கும்” என ஒருவர் கூறிச் செல்கிறார்.

ராகுலன் கடைத்தெரு மட்டும் ஓடி வந்தான். ஓடிக் களைத்ததுதான் மிச்சம். ஆனால், துண்டுப்பிரசுரத்தின் செய்தி அங்கு எப்படியோ பரவியிருந்தது.

“ஊரடங்குச் சட்டமாம். வீடுகளை விட்டு வெளியேறி கோயில்களிலும் சேர்ச்சுகளிலும் போய் இருக்கட்டாம்.”

“அப்ப ஆமி தொண்டமானாற்றுப் பக்கமிருந்து வெளிக்கிடப் போறாங்களோ?”

கடைத்தெருவில் பதற்றம் நிலவியது. ராகுலன் வீட்டுக்குத் திரும்ப முயன்றபோது எதிரில் சைக்கிளில் வந்த தவபாலன் அவனைக் கண்டான்.

“ராகுலா, ஏன் இங்க நிக்கிறாய்? கெதியாய் வீட்டை ஓடு. ஆமி வெளிக்கிட்டிட்டுதாம். வீட்டை ஓடு.”

அவன் சொல்லி முடிக்கவில்லை. விண்ணில் உறுமியபடி பொம்மர்கள் எழுந்தன. கடலில் தரித்து நின்ற கடற்படைக் கப்பல்கள் பீரங்கிகளைக் கரையில் உள்ள குடிமனைகளை நோக்கி வீசின.

குண்டுகள் வெடிக்கிற சத்தம் பயங்கரமாகத் தூரத்தில் எழுந்தது.

ராகுலன் கண்மண் தெரியாமல் விழுந்தெழும்பி ஓடி வீட்டுக்குள் புகுந்துகொண்டான். உடல் படபடவென நடுங்கியது. மூச்சு வாங்கியது. அறைக்குள் படுத்திருந்த தாரணி துடித்துப் பதைத்து எழுந்து வந்து தாயைக் கட்டிக் கொண்டாள்.

“ஐயோ” என யோகம் பதறினாள்.

“என்ன செய்யப்போறம்? அப்பா பருத்தித்துறைக்குப் போனவர் இன்னும் வரேல்லை.”

“தொண்டைமாற்றிலிருந்து ஆமி வெளிக்கிட்டிட்டுதாம் அம்மா.”

வானத்தில் இரைச்சலோடு பறந்த பொம்மர் ஒன்று குத்தித் தாழ்ந்து கிளம்பியது. யார் வீட்டிலோ... எவர் தலையிலோ... பெருஞ் சத்தத்துடன் குண்டு வெடிக்கின்ற ஒலி நிலத்தையும் அவர்களின் வீட்டையும் அதிரச் செய்தது.

வடமராட்சி அல்லோலகல்லோலப்பட்டது.

“அம்மா நாங்கள் செத்துப் போவோமா?” எனப் பத்து வயதுத் தாரணி உடல் நடுங்கக் கேட்டாள். யோகம் மகளைத் தன்னோடு அணைத்துக் கொண்டாள்.

“பயப்படாதை... ஒண்டும் நடக்காது...”

“பயப்படாதை தங்கச்சி. நானிருக்கிறன்” என்றான் சிவபுத்திரன். வார்த்தைகள் பதற்றத்துடன் வெளிவந்தன.

“யோகம்... யோகம்... என்ன செய்யிறியள்?” சிதம்பரம் மாமாவின் குரல் படலைக்கு வெளியே ஒலித்தது.

“ஓடுங்கோ... ஓடுங்கோ...”

ஊரெங்கும் விசக்காய்ச்சலாய் பரவிவிட்ட செய்தியால் அந்கிராமமே திக்குத்திசை தெரியாமல் சிதறி ஓடியது. பயப்பிராந்தி பிடரியைப் பிடித்து உந்தித்தள்ள அவர்கள் ஓடினார்கள். உடுத்த துணியோடு குழந்தைகளைக் கையில் பற்றியபடி எல்லாவற்றையும் அப்படி அப்படியே விட்டுவிட்டு அவள் வெளியில் ஓடி வந்தாள்.

தூரத்தில் துப்பாக்கிச் சன்னங்கள் சிதறிப் பாய்ந்து வெடித்தன. ஒரு கண இடைவெளியின்றி அவை வெடித்தொலித்தன. வானத்தில் பொம்மர்கள் இடையிடையே குண்டுகள் வீசின. காற்றினைக் கிழித்துக் கூவியபடி ஷெல்கள் தலைக்கு மேலாகச் சென்று எங்கோ காவு எடுத்தன. எங்கும் மரண ஓலம்.

பனை வடலிக்குள்ளாலும் பற்றைக்குள்ளாலும் அவர்கள் ஓடிஓடி இரைத்தார்கள். முட்கள், கற்கள் பாதங்களைக் கிழித்தன. தைத்தன.

“அம்மா, என்னால இனி ஓடமுடியாது” என்று தாரணி வீறிட்டு அலறினாள். அழுத பிள்ளையை வாரி இழுத்துக்கொண்டு யோகம் ஓடினாள். அவளாலும் ஓடமுடியவில்லை. சிவபுத்திரன் தம்பி ராகுலனைக் கரம் பற்றி இழுத்தபடி ஓடினான். அப்படியே ஒரு பனை மரத்துடன் ஒட்டிக்கொண்டார்கள்.

“பயப்படாதை அண்ணை” என்றான் ராகுலன்.

வானத்தில் ஹெலிக்கொப்டர் ஒன்றின் இரைச்சல் எழுந்தது. திடீரென கிழக்கில் தோன்றிய ஹெலிக்கொப்டர் அவர்கள் பதுங்கியிருந்த பக்கமாய் பிப்ரி கலிபர் சன்னங்களைப் பொழிந்து பொழிந்து கொண்டு விரைந்து வந்தது.

“அம்மா, கீழே படுங்கோ...” என்றபடி சிவபுத்திரன் அவர்களை இழுத்து நிலத்தில் விழுத்தி விட்டான். மண்ணில் குப்புற விழுந்து கிடந்த தாயினதும் தங்கையினதும் உடம்புகள் படபடவென நடுங்குவதைச் சிவபுத்திரன் கண்டான். ராகுலன் பதற்றமின்றிக் கிடந்தான். என்ன வாழ்வு? எங்கட மண்ணில் நிம்மதியாக வாழ முடியாத அவலம் ஏன் ஏற்பட்டது?

துப்பாக்கிச் சன்னங்கள் அவர்களின் அருகில் பனை மரங்களைத் தகர்த்துப் பிளந்தன.

“கடவுளே... கடவுளே...” என யோகம் கதறினாள்.

“அழாதை அம்மா... ஒண்டும் நடக்காது...” என்றான் ராகுலன்.

அவர்கள் விழுந்து கிடந்த இடத்திற்கு சற்று அப்பால் ஒரு மறைவிடத்திலிருந்து திடீரென துப்பாக்கி ஒன்று சன்னங்களை உமிழ்ந்தது. தாழப் பதிந்த ஹெலி வெருட்சியுடன் சடுதியாக விண்ணில் கிளம்பியது.

ஹெலி அவ்விடத்தைவிட்டு மறைந்து போனதும் சிவபுத்திரன் தன்னருகில் எவரோ நிற்பதை உணர்ந்து, தலையைத் தூக்கிப் பார்த்தான். கரத்தில் ஏ.கே.47 தாங்கியபடி தவபாலன் நின்றிருந்தான்.

“அண்ணை...”

“ஹெலி போட்டுது. சூடுபட்ட நரி மாதிரி ஓடறான். அம்மாவையும் தங்கச்சியையும் தம்பியையும் கூட்டிக்கொண்டு உப்பிடியே கெதியாய் போங்கோ. வீட்டுப்பக்கம் போகேலாது.”

பனங்கூடலிற்குள் மறைந்திருந்த பல இளைஞர்கள் தவபாலனிடம் வந்தனர்.

"தம்பிமார் தெய்வம் மாதிரி வந்தியள்" என்றாள் யோகம்: "அவர் பருத்தித்துறையில தம்பி..."

"நீங்கள் இப்படியே போங்கள் அக்கா. நான் அவரைக் கண்டால் அனுப்பி வைக்கிறன். இப்படியே இந்த வயல்ப்பாதையால போனா... புறாப்பொறுக்கி வரும். அப்படியே கவனமாக யாழ்ப்பாணத்துக்குப் போய்ச் சேருங்கோ. அங்கதான் உங்கட அப்பு ஆச்சியிருக்கினம்?" என்று தவபாலன் வினவினான்.

"ஓம் தம்பி..."

தூரத்தில் குண்டுச் சத்தங்கள் எழுந்து கொண்டிருந்தன. பலர் திக்குத் திசை தெரியாமல் ஓடி வருவதும் தெரிகிறது. அவர்களைக் கடக்கும்போது சின்னப்பர் சொன்னார்: "ஆமி ஊருக்கு வந்துட்டான்கள். யோகம் ஓடடி... ஓடடி..."

அவர்கள் மீண்டும் கதறிக்கொண்டு ஓடித் தொடங்கினார்கள். திறந்த வயல்வெளி. அவற்றின் ஊடாக ஓடுவது பயங்கரமாக இருந்தது. தூரத்தில் குண்டு வீசும் விமானங்கள் எந்த நேரத்திலும் இங்கு வரலாம். அவர்கள் ஓடி மீண்டும் ஒரு பனந்தோப்புக்குள் புகுந்து கொண்டனர்.

"அம்மா, தண்ணீர் விடாய்க்குது..." என்று தாரணி அழுதாள். சிவபுத்திரன் சுற்றும்முற்றும் பார்த்தான். சற்றுத் தூரத்தில் படர்ந்து கிளை பரப்பி வளர்ந்த ஆலமரம் தெரிந்தது. அதன் கீழ் மரத்தடி வயிரவர் சூலம் குத்தப்பட்டிருந்தது. யாரோ ஒரு பட்டுத்துண்டை சூலத்தில் சுற்றி யிருந்தனர். அந்த ஆலமரத்துக்கு அப்பால் கிணற்றுக்கட்டு ஒன்றும் துலாவும் தெரிந்தது.

தண்ணீர் அள்ளி அருந்திவிட்டு அடர்ந்த அந்த ஆலமரத்தின் மறைவில் ஒதுங்கியிருப்பது பாதுகாப்பு மாதிரிப் பட்டது. வானத்தில் இன்னமும் கழுகுகள் வட்டமிட்டன. குண்டுச் சத்தங்கள் ஓயவில்லை. அவ்விடத்துக்குப் பலர் அவலப்பட்டு வந்து சேர்ந்தனர். அவர்கள் எக் கிராமத்தவர்கள் என்பது தெரியவில்லை. வெள்ளத்தில் அள்ளுப்பட்டு வந்தொதுங்கியவர்களாக அங்கு வந்து சேர்ந்திருந்தனர். எல்லார் முகத்திலும் அவலத் தடங்கள். விழிகளில் பயமும், முகத்தில் ஏக்கமும் நிரம்பிக் கிலிபிடித்து இருந்தனர். பிள்ளைகள் பயத்தாலும், பசியாலும் அழுதன.

கையில் அகப்பட்ட மூட்டை முடிச்சுக்களுடன் அவர்களில் சிலர் காணப்பட்டனர். யோகத்தால் ஓடிவரும்போது எதனையும் எடுத்து வர முடியவில்லை. நகைகள், பணம், உடுப்புக்கள் எல்லாம் திறந்த வீட்டில்...

யோகம் கண்களை அழுத்தித் துடைத்துக்கொண்டாள்.

நள்ளிரவு தாண்டிய வேளையில் அவர்கள் வந்து கதவைத் தட்டினார்கள். துடித்துப் பதைத்து எழுந்து கதவைத் திறந்தேன்.

“வரமராட்சிக்கு ஆமி வந்திட்டுது அப்பு...” என்றான் சிவபுத்திரன்.

“மருமோன் எங்க, யோகம்?”

“பருத்தித்துறைக்குத் தாய் வீட்டிற்குப் போனவர், வரவில்லை. வருவார். நாங்கள் தப்பினது அருந்தப்பு...” என்று சோர்ந்தாள் யோகம்,



“அம்மம்மா, பசிக்குது. சரியாப் பசிக்குது...” தையல்முத்தாச்சி யிடம் ஒட்டிக்கொண்டாள் தாரணி,

“என்ர குஞ்சு... வாடா புட்டிருக்குது.”

“ராகுலன் உனக்குப் பசிக்கவில்லையா?”

“இல்லை அப்பு...”

எனக்கு அவன் கூறிய விதமும் நின்ற நிலையும் இன்றும் நினைவில் நிற்கிறது.

வீதியில் இன்னம் சனம் ஓயவில்லை. காற்றில் அள்ளுப்பட்ட சருகுகளாக அவர்கள் வீதியில் நடந்தார்கள்.

"நீயும் இப்படித்தான் பிள்ளையோட ஓடி வந்தாய். அப்ப ராகுலன் என்னிடம் கேட்டது, இப்பவும் நெஞ்சில இருக்குது. மரணங்களைக் கண்டு பிள்ளையள் பயப்படுகிறதுக்குப் பதிலாக பழிவாங்கும் வன்மத்தைப் பெறுகின்றன. ஆயிரக்கணக்கில் குழந்தை குட்டிகளோடு இப்படி இடம்பெயர நேர்ந்த வடு ஒருபோதும் மாறப்போவதில்லை. பிரச்சினைகளை ஆயுதங்கள் ஒருபோதும் தீர்க்கப் போவதுமில்லை. யோகம்..." என்ற நான் சற்றுத் தயங்கியபடி, "பவளத்துக்கும் பிள்ளைகளுக்கும் சுப்பிரமணியத்துக்கும் எதுவும் நடக்காது..." என்றேன்.

யோகம் அப்படியே திண்ணைக் குந்தில் அமர்ந்து விட்டாள். வடமராட்சி ஒப்பிரேசனின்போது அவளுடைய கணவன் தம்பிநாதன் அகப்பட்டு விட்டான். கண்ணீரும் கம்பலையுமாக அவனை எதிர்பார்த்து அவளும் பிள்ளைகளும் கடந்த பத்து வருடங்களாகக் காத்திருக்கிறார்கள்.

இன்னும் அவன் வந்து சேரவில்லை.

யோகத்தின் இதயம் கனக்கிறது. அப்படியே உறைந்துபோய்த் தூணோடு சாய்ந்து கொள்கிறாள்.

3

# அவல வாழ்வு



முற்றத்திலிருந்து நோக்கும் போது வீதியில் சாரிசாரியாக மக்கள் செல்வது தெரிகிறது. வலிகாமத்தில் ஸ்ரீலங்கா இரா ணுவம் தொடங்கிய யுத்தத்தின் எதிரொலியாக சண்டிலிப்பாய், சங்கானை, நவாலி, அராலிப் பக்க மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப் பான இடங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். கையில் அகப்பட்டவற்றைத் தூக்கிக் கொண்டு மூட்டை முடிச்சுக்களுடன் கண்களில் நீர் சோர செய்வதறியாது நடந்துகொண்டிருக்கிறார்கள்.

வெளிக் கேற்றைத் திறந்து கொண்டு வெளியில் வருகிறேன். வீதியில் மக்கள் சென்று கொண்டிருக் கிறார்கள். எல்லோரும் முகம் இருண்டு, விழிகளில் கவலை அப்பி, முகம் கறுத்து... எத்தனை வகையான சோகங்கள்... தாய்மார் கைக் குழந்தைகளைக் கரங்களில் ஏந்திய வாறு... கூடவே நடந்து வரும் குழந்தைகள். அந்தப் பிஞ்சுக் கால்கள் வலி காணாவா? நடக்க முடியாமல் தள்ளாடும் வயோதிபர்கள். தாகம், பசி...

எல்லாரிலும் தெரிந்தது. எவரும் எவருடனும் பேசவில்லை. தமது விதியைத் தமக்குள் நொந்துகொண்டார்களோ?

கவலையோடு பார்த்துக் கொண்டிருக்க இயலவில்லை. அக்கூட்டத்தினரிடையே எவரையோ என் விழிகள் தேடுகின்றன.

தூரத்தில் பலர் பெருங்குரலில் அழுது அலறுவது கேட்கிறது. இரண்டு, மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அலறி அரற்றியபடி வந்தார்கள். பெண்கள் சிலர் தலையிலும் மார்பிலும் அறைந்து கதறினார்கள்.

"ஐயோ... ஐயோ... என்ர ராசா... இனி எப்ப காணப்போறம்?"

"பாவிகள் பலியெடுத்திட்டான்களே... நல்லா இருப்பான்களா?"

அதிகாலை வீட்டின் மீது விழுந்து வெடித்த ஷெல்லிற்கு இரண்டு பிள்ளைகளைப் பறிகொடுத்த தாய்... காயம்பட்டு விழுந்து கிடக்கும் தகப்பனைத் தூக்கிவர வழியற்று ஓடிவரும் பிள்ளைகள்... பாரிச வாதத்தில் படுக்கையில் கிடக்கும் தாயை அப்படியே விட்டுவிட்டு வரும் மக்கள்... குண்டு வீச்சிற்கு இரையாகிப்போன சகோதரர்களை அடக்கம் செய்யவும் முடியாது ஓடிவரும் கூடப்பிறந்ததுகள்...

இது என்ன கொடுமை! மனிதர் வாழ்வதற்குத்தான் பிறந்தார்கள். ஒவ்வொரு உயிரும் எவ்வளவு கூடிய காலத்திற்கு வாழலாம் எனத்தான் விரும்புகின்றன. துளிராயும் மலராயும் உருவி வீசப்படுகின்ற இந்த உயிர்களுக்கு யார் பதில் சொல்லப் போகிறார்கள்?

"அப்பு குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணி தாருங்கோ..."

என் முன் கைக்குழந்தையோடு இளம்பெண்ணொருத்தியும் அவள் அருகில் மூன்று சிறு பிள்ளைகளும் நின்றிருக்கிறார்கள். பிள்ளைகளின் முகங்கள் பசியால் வாடி வதங்கியிருந்தன. கன்னங்களில் நீர் அடையாள மிட்டிருந்தது. உடுத்த துணிகளுடன் அவர்கள் நின்றிருந்தார்கள். கைகளில் ஒரு சிறு பொதிகூட எடுத்து வரவில்லை.

"உள்ளுக்கு வரச்சொல்லுங்கோ, ஐயா. தேத்தண்ணி ஊத்துறன். புட்டும் இருக்குது..."

அவளுக்குத் தானும் பிள்ளைகளும கம்பர்மலையிலிருந்து வடமராட்சி இராணுவ நடவடிக்கையின்போது ஓடிவந்தது நினைவில் சதிராடுகின்றது. எதுவுமற்ற ஏதிலிகளாக ஓடிவந்திருக்கிறார்கள். அழுது,



அழுது அந்தப் பெண்ணின் முகம் வீங்கியிருக்கின்றது. எத்தகைய இழப்புக்களோ!

"உள்ளுக்குப் போங்கோ..."

வலிகாமம் மேற்குப் பக்கமிருந்து இன்னமும் குண்டுகள் வெடிக்கின்றன. சண்டை ஓயவில்லைப்போலும். அவர்கள் தயங்கி நிற்கிறார்கள்.

"வெட்கப்படாமல் உள்ளுக்கை போங்கோ..."

"வாருங்கோ... பிள்ளையள்..." என்று அழைக்கிறாள் என் மனைவி தையல்முத்து.

என் மனைவி அழைத்ததும் அவர்கள் உள்ளே வந்தார்கள். யாழ்ப்பாணத்து வாழ்க்கையின் அடிவேர் எனக்குப் புரிகிறது. அன்ன மிடுபவள் அழைப்பு அவசியமாகிறது.

கிராமசேவகர் கணேசநாதன் சயிக்கிளில் வந்தார். நான் படலையில் நிற்பதைக் கண்டதும் சயிக்கிளை விட்டு இறங்கினார்.

“பெரிய விதானையார், என்ன வெளியில நிக்கிறியள்?” என்றார் ஒரு பேச்சிற்கு.

“நிலைமை நல்லா இல்லை, அம்மாள். வட்டுக்கோட்டைச் சந்தி மட்டு வந்திட்டுதாம் ஆமி. எங்கட பாடசாலைகள் எல்லாம் அகதிகளால் நிரம்பி வழியுது. அதுகளுக்கு சாப்பாடு தண்ணி கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது.”

“நல்லா அவர்களைப் பாருங்கோ, தம்பி. எல்லாவற்றையும் இழந்து வந்திருக்குதுகள். சந்தீல வைத்து லூசியனும் கொஞ்ச இளைஞர் களும் சேர்ந்து களைத்து வாறவைக்குத் தேத்தண்ணி கொடுக்க ஆயத்தம் செய்யினம்.”

“அவன் இந்தக் கிராமத்தில் வித்தியாசமானவன். இரக்க முடையவன்.”

“சிலர் வெளிப்படலையளை இழுத்துப் பூட்டிவிட்டுப் பதுங்கி இருக்கினம்.”

“ஏன்?...”

“யாராவது அகதிகள் வீட்டிற்குள்ள வந்திடுவினம் எண்டு. எளிய சனம், அம்மான். இந்த நேரத்தில் உதவாவிட்டால் எந்த நேரத்தில உதவப் போகினம்? நாளைக்கு நாங்களும் அகதிகளாக ஓடத்தான் போகிறம். அப்ப எங்களுக்கும் இந்தக் கதிதான்.”

கணேசநாதனின் விழிகள் என் வீட்டு முற்றத்தில் தரிக்கின்றன.

“என்ன அம்மான், உங்கட வீட்டிலும் ஆக்கள் நிக்கினம்? ஆராவது தெரிந்தவையே?”

“இல்லையடா தம்பி... ஆரெண்டு தெரியாது. தவிச்சு வந்ததுகள் தண்ணி கேட்டதுகள். தையல் தேத்தண்ணி கொடுக்கிறா... அது சரி உயிர்ச் சேதங்கள்...?”

“அதிகம் போலத்தான் இருக்குது. ஷெல்கள்தான் அதிகம் பலியெடுத்திருக்குதாம், அம்மான். ஈவிரக்கமின்றி குடிமனைகளை நோக்கி ஷெல் வீசிக்கொண்டிருக்கிறான்கள்.”

“அடக்குமுறைக்கு எதிரான கிளர்ந்தெழலை எந்தச் சக்தியாலும் அடக்கிவிட முடியாது தம்பி. பேரினவாதத்திற்கு எதிராக உலக நாடுகள் பலவற்றிலும் இன்று கிளர்ச்சிகள் தோன்றியுள்ளன. ஒவ்வொரு இனமும்

தத்தமது தனித்துவத்தைப் பேண விரும்புவதில் எந்தப் பிழையு மில்லை."

கணேசநாதனுக்கு வியப்பு வர வழியில்லை. அவனுக்கு என்னை நன்கு தெரியும். எண்பத்து மூன்று வயது எனக்கு. பல காலகட்டங்களை நேரில் கண்டு அனுபவித்த மனிதன். பத்திரிகை படிப்பதும் செய்திகளை ஒழுங்காகக் கேட்பதும் என் நிரந்தரப் பழக்கங்கள்.

கணேசநாதன் சயிக்கிளில் திரும்பி வந்தார்.

"அம்மான், உங்கட வீட்டில இருக்கிறதுகளை கொட்டடி நமசிவாயப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விடுங்கோ..."

"பரவாயில்லை... தாயும் பிள்ளைகளும்... பார்க்கப் பரிதாபமாக இருக்குது. சாப்பிட்டுட்டுப் போகட்டும். வேணுமெண்டால் கொஞ்சநாள் இங்க இருந்திட்டுப் போகட்டும்."

"அப்ப சரி... வாறன்."

யோகம் வாசலுக்கு வந்தாள்.

"தகப்பனும் மூத்த மகனும் வெள்ளனவே சீவலுக்குப் போனவையாம். போன கையோட ஷெல் அடிக்கத் தொடங்கி விட்டான்களாம். இவயின்ர வீட்டுக்கு முன்னாலும் விழுந்து வெடித்ததாம். முத்தத்திலே நின்றிருந்த இந்த மனிசியின்ர மாமன் அப்படியே உடல் சிதறிச் சரியாம். அந்த உடலை அடக்கம் கூடச் செய்யாமல் தாய்க்காரி பிள்ளைகளையும் இழுத்துக்கொண்டு ஓடி வந்திட்டுதாம்."

நான் மகளைத் திரும்பிப் பார்க்கிறேன்.

"பாவங்கள், ஐயா, நானும் அப்படித்தான். பருத்தித்துறைக்குப் போன அவரை விட்டுவிட்டு ஓடி வந்தன். எங்களைத் தேடி வீட்டுக்கு வந்தவர்..." யோகத்தின் நெஞ்சம் வெடித்தது. விம்மத் தொடங்கினாள்.

இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சைக் கவலை கவ்வி அரிக்கிறது. அவர் வருவார் என்ற நம்பிக்கை யோகத்திற்கு இன்னமும் இருக்கிறது நம்பிக்கையில்தான் மனித குலமே இயங்குகின்றது.

நான் உள்ளே வந்தபோது சற்று முன் தண்ணீர் கேட்ட பெண்ணும் பிள்ளைகளும் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்கள். முற்றத்து வேப்ப மரததின்கீழ் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். என் மனதுக்கு அது சரியாகப் படவில்லை.

“உள்ளுக்கு வாருங்கோ பிள்ளையள்.”

“இல்லை. இதில இருக்கிறம், ஐயா, அவர்கள் வந்தாலும் தெரியும்.”

“சாப்பிட்டியளே...”

“பிள்ளையள் சாப்பிட்டினம்...”

“நீ சாப்பிடவில்லையா?”

“சாப்பிட முடியவில்லை...” அவள் கண்களிலிருந்து சோகத்தின் திரளாகக் கொட்டியது. அவள் விம்மத் தொடங்குகிறாள்.

“அவரும் என்ர மூத்தவனும் என்னவானார்களோ? பாவிகள்... பாவிகள். கண்டபடி ஷெல் அடிச்சான்கள். முற்றத்திலிருந்த மாமா அப்படியே சரி. அவரை அப்படியே விட்டுட்டு ஓடி வந்திட்டம். அதுக்கு முதல் சீவலுக்குப் போன அவரும் மூத்தவனும் எங்கை? ஐயா, அவர்கள் வருவார்களா?”

“வருவினம் பிள்ளை, அழாதை... வருவினம்.”

“இப்படித்தான் யோகமும் ஓடி வந்தாள். தம்பிநாதன் பற்றிய எந்தத் தகவலும் பத்து வருடங்களாகியும் கிடைக்கவில்லை. கைதாகிக் கப்பலில் ஏற்றப்பட்டுக் கொழும்புக்குப் போனவனுக்கு என்ன நடந்தது?”

“வேற றோட்டால யாழ்ப்பாணத்து வந்திருப்பினம். என்ர பிள்ளை குடும்பத்துடன் அராலியில இருந்தது. அதுகளையும் இன்னமும் காணவில்லை” என்றபடி தையல்முத்து வருகிறாள்.

நெஞ்சு வலிக்கிறது.

“மனிசனுக்கு என்ன பெயர் பிள்ளை? நம்மட கணேசநாதன் கிராம சேவையாளரிடம் சொல்லி முகாம்களில விசாரிப்பம்.”

“இராசையா... மூத்தவன் பெயர் லக்சுமனன். சங்கானையில சேர்ச் ஒழுங்கை. ஒருக்கா விசாரித்துச் சொல்லுங்கோ. அந்த நன்றியை உசிருள்ளவரை மறக்க மாட்டன்.”

என் கவனம் திடீரெனக் கலைகிறது.

“ஐயா... என்ர அம்மா...” என்று அலறியபடி பவளம் பிள்ளைகள் தொடர ஓடி வருகிறாள். அவளின் பின்னால் சுப்பிரமணியம் சூட்சேசுகளைத் தூக்கிக் கொண்டு வருகிறான். ஓடி வந்த பவளம் தாயைக் கட்டிக்கொண்டு அழுகிறாள்.

“என்ன பிள்ளை.. என்ன நடந்தது? உங்களுக்கு ஒன்று மில்லையே?”

“எங்களுக்கு ஒண்டுமில்லை. தப்பி ஓடி வந்திட்டம். எங்கட வீட்டுக்கு அருகிலதான் ஷெல் விழுந்திட்டுது. ஒரு சாமானும் எடுக்க முடியவில்லை. நகைகள், பணம் ஒண்டும் எடுகேல எல்லாத்தையும் அப்படியே போட்டிட்டு ஓடி வந்திட்டம்.”

“போகட்டும் உசிர்தான் முக்கியம். அதுகளைத் தேடிக் கொள்ளலாம். போங்கோ உள்ளுக்கு... வந்த களைப்புக்கு தேத்தண்ணி குடியுங்கோ...”

என் அருகில் பவளத்தின் பிள்ளைகள் இரண்டும் வந்து நின்றிருக்கிறார்கள். சரசுவையும், சந்திரனையும் என்னுடன் நெருக்கமாக அணைத்துக் கொள்கிறேன்.

“எல்லாத்துக்கும் நானிருக்கிறன். ஒண்டுக்கும் பயப்படத் தேவையில்லை.”

“நாங்க பயப்படவில்லை அப்பு. அம்மாதான் சரியான பயம்” என்று சரசு சிரிக்கிறாள். முன்னர் பார்த்ததிலும் அவள் வளர்ந்திருப்பதாய் படுகிறது. தாய் மாதிரி கவர்ச்சியோடு சிரிக்கிறாள். கன்னங்களில் குழிகள் விழுகின்றன.

“அப்பாவுக்குப் பேய்ப் பயம். இதுகளுக்குப் பயப்படுறதே? நாங்கதான் ரெண்டு பேரையும் இங்க கூட்டி வந்தம்” என்று சந்திரன் சிரிக்கிறான். பன்னிரெண்டு வயதுச் சிறுவன். இளந் தலைமுறைக்கு குண்டுகள், ஷெல்கள், துப்பாக்கிச் சன்னங்கள் என்பன வாழ்க்கையின் நித்தம் சந்திக்கும் கருவிகளாகிவிட்டன.

பவளமும் சுப்பிரமணியமும் பயந்தளவிற்குப் பிள்ளையள் பயமோ பாதிப்போ அடையவில்லை என்பது தெரிகிறது.

தாரணி முற்றத்திற்கு வந்து, “வா சரசு...” என்று தங்கையைக் கரம் பற்றி அழைத்துச் செல்கிறாள்.

“பெரியம்மா எங்க...?”

“அடுப்படியில...”

“பெரியம்மா எப்பவும் அடுப்படிதானா?” என்கிறாள் சரசு.

4

# விண்ணில் அலையும் கழுகுகள்



இருள் கவிந்து கொண்டிருக்கின்ற மாலைப்பொழுதில் பிள்ளையார் கோயில் வெளி மண்டபத்தில் அமர்ந்திருந்தபோது, கிராம உத்தியோகத்தர் கணேசநாதன் அவ்விடத்துக்கு வந்தார். சைக்கிளை நிறுத்திவிட்டு என் அருகில் வந்தமர்ந்தபோது கோயில் கதவினை இழுத்துச் சாத்திப் பூட்டிவிட்டு குருக்கள் வெளியில் வருகிறார். சாம்பசிவக் குருக்களின் மகன் மகேஸ்வரக் குருக்கள் அவர். அவரை எனக்கு நன்கு தெரியும். நான் இளைஞனாக இக்கோயிலுக்கு வந்த காலங்களில் மகேஸ்வரக் குருக்கள் தகப்பனாருடன் கூடவே வந்து உதவிகள் செய்வதைக் கண்டிருக்கிறேன். என்னிலும் பார்க்க ஒரு ஐந்தாறு வயது இளமை. ஆனால் உருவத்தில் என்னிலும் பார்க்க வயதான தோற்றம்.

“என்ன ஐயா, புறப்பட்டுவிட்டீர்கள் போல இருக்குது.”

“ஓம் துரையப்பா... மாசியப்பிட்டியிலிருந்து மூத்தவன் குடும்பம் வந்திருக்குது. இருக்கேலாதாம். ஒரே செல்லடியாம்.”

“யோகம் ஒப்பிரேசன் லிபறேசனுடன் அகதியாக வந்தாள். இப்ப ஒப்பிரேசன் போவேர்ட்டுடன் மற்ற மகளும் வந்திட்டாள். ஒரு

லட்சம் மக்களுக்கு மேல் அங்காலயிருந்து இடம்பெயர்ந்திருக்கினமாம்..."

"வாறன் துரையர்... வாறன் விதானையார்..."

குருக்கள் விடைபெற்றுச் சென்றதன் பின்னர் நான் கணேசநாதனை ஏறிட்டுப் பார்க்கிறேன்.

"நீங்க கேட்ட இராசையாவைப் பற்றி எல்லாரிட்டையும் சொல்லியிருக்கிறன். எங்கட பிரிவில இருக்கிற காம்புகளில அப்படி ஒருத்தர் இல்லை. இன்னமும் சனம் வந்துகொண்டுதான் இருக்குது. இல்லாவிட்டால் நாளைக்குப் பேப்பரில் விவரம் கொடுப்பம்."

"பாவங்கள்... பாக்கியமும் பிள்ளைகளும் பரிதவிக்குதுகள்... அது சரி தம்பி, என்ன கோதாரிக்கு இவங்கள் இப்படிச் சனங்களை வருத்துறாங்கள்."

கணேசநாதன் என்னை ஏறிட்டுப் பார்த்தான். பிள்ளையார் கோயில் கோபுரத்தில் புறாக்களின் அகவல் சத்தம் கேட்கிறது. வீதியால் பலர் நடந்து செல்வது மாலைக்கருக்கலில் தெரிகிறது. தூரத்தில் குண்டுச் சத்தமும் கேட்கிறது.

"யுத்தங்கள் இப்படித்தான், அம்மான். ஆட்சியாளர்கள் தமது கதிரைகளைப் பாதுகாத்துக்கொள்ள யுத்தங்களையும் பிரச்சினைகளையும் ஒரு வழியாகப் பாவிக்கிறார்கள். அரசுக்கு ஒரு இராணுவ வெற்றி அவசியமாகிறது. தனது அரசியற் பிரச்சினைகளை மறைத்து, சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த இப்படியான ஒரு போர் நடவடிக்கை அவசியமாகிறது."

கணேசநாதன் இப்படிப் பேசுவது எனக்கு அதிசயமாயில்லை. கிராம உத்தியோகத்தர்களில் அவன் சற்று வித்தியாசமானவன். படிப்பவன். ஓ.எல். உடன் வேலையில் சேர்ந்து படித்து இன்று ஒரு பட்டதாரியாக விளங்குபவன். படிக்கின்ற காலத்தில் மார்க்சியச் சிந்தனைகளால் கவரப்பட்ட கம்யூனிஸ்ட் கார்த்திகேசுவின் நன்மாணாக்கனாக இருந்தவன். அவனது பேச்சில் அது சமூகமாயினும் அரசியலாயினும் ஒரு தெளிவு இருப்பதை நான் பல தடவைகள் அவதானித்திருக்கிறேன்.

"புலிகளின்ர எவ்வித எதிர்ப்புமின்றித் தாங்கள் வட்டுக்கோட்டை துணைவி வரை கைப்பற்றிவிட்டதாக ரேடியோவில அறிவிக்கினம். அப்படியெண்டால் ஏன் பொதுமக்களின் குடியிருப்புகள் மீது ஷெல்

மழையைப் பொழியினம்? கரையோரங்களைக் கப்பல்களிலிருந்து பீரங்கி குண்டுகளால் சுட்டுத்தள்ளுகினம்? எனக்கிது விளங்கவில்லை. அப்ப ஆரோட சண்டை பிடிக்கினம்?"

"இது தமிழ் மக்களின் போராட்ட உறுதியை மழுங்கச் செய்யும் நடவடிக்கை அம்மான். பொதுமக்களை அழிப்பதன் மூலம், அவர்கள் மீது வன்செயல்களைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் அவர்களின் உறுதியைக் குலைக்க முடியும்."

"மாறியும் பார்க்கலாம் தம்பி. கண் முன்னால உறவுகளை இழந்தவர்கள், தாயைத் தகப்பனைப் பிள்ளைகளைக் குண்டுகளுக்குப் பலி கொடுத்தவர்கள் உறுதி குலைவார்களா, உறுதி பெறுவார்களா?"

"நீங்கள் சொல்லுறதும் சரியாகத்தான் இருக்குது அம்மான்."

"ஒரு 'ப' வடிவத்தில சுத்திப் பிடிச்சிருக்கிறான்கள் அம்மான். மாதகலிலிருந்து ஒரு படையணி புறப்பட்டு பொன்னாலை, மூளாய் ஊடாக வட்டுக்கோட்டையை வந்தடைந்திருக்குதாம். துணைவியி லிருந்து வட்டுக்கோட்டையையும் இணைச்சிட்டாங்களாம். இப்ப அராலி நோக்கி நகரலாம் என்று சொல்லுகினம்."

"சனங்கள் அதுக்குள்ள அகப்பட்டிருக்கும்."

"ஓமோம்."

அவன் மௌனமானான். வானத்தில் விமானத்தின் இரைச்சல் கேட்கிறது. புலிகளின் விமான ஏவுகணைக்கு அஞ்சிய புக்காரா மிக்க உயரத்தில் பறந்து வட்டமிடுவது தெரிகிறது. முகில்களுக்கிடையில் மறைந்தபடி குடிமனைகளை நோக்கி இது இலக்கெடுக்கின்றது.

"புக்காரா, அம்மான்..."

புக்காரா வேகமாக இரைந்தபடி குண்டுகளை இடுகிறது. ஒன்று, இரண்டு... மூன்று... எட்டு... தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றாகக் குண்டுகள் வீசப்பட்டன. அவை சங்கிலித் தொடராக நிலத்தில் மோதி வெடிக்கின்ற பயங்கரச் சத்தம் யாழ்ப்பாணக் குடாநாட்டையே அதிர வைக்கின்றது. நான் பதற்றத்துடன் எழுந்திருக்கிறேன்.

கணேசநாதன் அப்படியே திக்பிரமை பிடித்தவன் போல அமர்ந்திருக்கிறான்.

"எங்க... எத்தனை பேர் மீதோ...?"

இதயம் படபடக்கிறது.

"நிச்சயமாக இது சனத்திரளுக்கு மேலதான் போட்டிருக்கிறான் அம்மான்."

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தொடங்கிய இராணுவ நடவடிக் கைகள் இன்னமும் முற்றுப் பெறவில்லை. அளவெட்டிப் பகுதிக் கூடாகவும் மாதகல் பகுதிக்கூடாகவும் படைகள் முன்னேறி வட்டுக் கோட்டைவரை வந்துவிட்டன. மக்கள் இடம்பெயர்ந்து செல்வதற்கு அவகாசத்தையோ அல்லது பிரதேசத்தையோ ஒதுக்காது அனைத்து திசைகளிலிருந்தும் எறிகணைகளைச் சூறாவளி மழையாகப் பொழிந்தபடி முன்னேறின. தம் கண் முன்னாலேயே பலியாகிச் சரிந்த உறவினர்களை அடக்கம் செய்யவும், காயமடைந்தோரைக் காப்பாற்றவும் வகையற்று மக்கள் சிதறி ஓடினர். எறிகணை வீச்சுக்கள் ஏற்படுத்திய கொடூர விளைவுகள் கொடுத்த அதிர்ச்சியால் அவர்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினார்கள்.

நூற்றுக்கணக்கான ஆட்டிலறி ஷெல்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டை அதிரவைத்தன. ஒன்றன்பின் ஒன்றாகப் பாய்ந்துவந்த ஷெல்கள் மக்களைப் பீதியும் வெருட்சியும் அடையச் செய்தன. இப்படி ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. ஐபிகேஎஃப் ஏவிய கணைகள் கூட சற்றுநேர இடைவெளிக்குப் பின்னரே ஒன்றினையொன்று தொடர்ந்தன.

ஆட்லறி ஷெல்கள் சிதறி வெடித்துப் பல மக்களைப் பலி கொண்டன. மனித அங்கங்களைச் சிதைத்தன. சண்டை நடந்த இடங்களில் மட்டுமன்றி யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் எறிகணைகள் பாய்ந்தன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் விளிம்புகளில் இராணுவ முகாம்களைக் கொண்டிருந்த படைகளுக்கு எல்லாத் திக்குகளிலிருந்தும் எறிகணைகளைக் குடியிருப்புகள் நோக்கி வீசுவது இலகுவாகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் எட்டு லட்சம் மக்களும் கதிகலங்கித் தவித்தனர்.

முகில்களிடையே மறைப்பெடுத்தபடி கப்பசொனிக் விமானங் களும் புக்காரா விமானங்களும் இலக்கின்றிக் குண்டுகளை வீசின. புலிகளின் விமான எதிர்ப்பு ஏவுகணைகளுக்கு இரண்டு புக்காராக்களை அடுத்தடுத்துப் பறிகொடுத்த நிலையில் விமானங்கள் தாழப் பறக்க அஞ்சின. விமானங்கள் வீசிய குண்டுகளினால் கட்டடங்கள் சிதைந்தன. மக்கள் சிதறிப் பலியாயினர். கணப்பொழுதில் பலியாகியோர் பாக்கியசாலிகள். காயம்பட்டு குற்றுயிராய்த் துடிதுடித்து இறந்தோர்... ஒரு

வாய் தண்ணீருக்காக வீதியில் கிடந்து துடித்துப் பதைத்துச் செத்தோர்... எங்கும் மனிதச் தசைத் துண்டுகள்... குருதி வெள்ளம்... குற்றுயிராகக் கிடந்து கதறும் வேதனைக் குரல்கள்...

ஷெல்லடிகள், விமானக் குண்டு வீச்சுகள், பீரங்கித் தாக்குதல்கள், ஹெலியிலிருந்து முழங்கப்பட்ட பிப்ரி கலிபர் சன்னங்கள், இயந்திரத் துப்பாக்கிகள் கக்கிய சுடு ரவைகள்... என அவை ஏற்படுத்திய அழிவுகள் மக்களை இடம்விட்டு ஓடவைத்தன. பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண்ணை விட்டு மக்கள் பாதுகாப்பான இடம் தேடி ஓடினர். உயிரைக் காப்பாற்றினால் போதும் என்ற நிலையில் கையில் அகப்பட்டதைத் தூக்கிக் கொண்டு சாரிசாரியாக மக்கள் நகர்ந்தனர். சீவியம் முழுவதும் தேடிய சொத்துக்களை விட்டு, நடக்க முடியாத வயோதிபர்களையும் நோயாளிகளையும் அப்படியப்படியே விட்டுவிட்டு அவர்கள் கண்ணீருடன் ஓடினர். சைக்கிள்கள், மாட்டு வண்டில்கள், மண்ணெண் ணெயில் ஓடும் மோட்டார் சைக்கிள்கள், ஆள்களையும் பொருள் களையும் சுமந்தபடி நகர்ந்தன. வேகமாகச் செல்ல முடியாத அளவிற்கு வீதிகளில் மக்கள் கால்நடையில் கொதிக்கும் வெயிலில் அசைந்து கொண்டிருந்தனர்.

பசியால் அழும் குழந்தைகள்... நாவறட்சியால் கதறும் பிள்ளைகள்... எதிர்ப்படுகின்ற பொதுக் கிணறுகளில் நீர் அள்ளிக் குடிப்பதற்கும் தயக்கம். எங்கே அவ்வேளையில் எதிரியின் ஷெல்கள் வந்துவிடலாம்... சாரிசாரியாக நகரும் மக்களிடையே ஷெல்கள் கூவிக்கொண்டு வரும்போது அப்படியே மக்கள் நிலத்தில் படுப்பதும், எழும்பி ஓடுவதும்... அப்படியிருந்தும் அந்த வரிசையில் பத்து பதினைந்து பேர் உடல் சிதறிக் காணாமற் போய் விடுவதும்... ஆயுத அரக்கன் மனிதர்களை அவ்விடத்தில் எங்கும் பலியெடுத்தான்.

வயல் வெளிகளில் கூட்டம் கூட்டமாக மாடுகளும் ஆடுகளும் சிதறிச் செத்துக் கிடந்தன. வயல்வெளிகளூடாக ஓடிவந்த மக்கள் வயல் கிணறுகளில் நீர் அள்ளிக் குடிக்கப் பார்த்தார்கள். வயல் கிணறுகளில் மனித அங்கங்கள், விலங்குகளின் உறுப்புகள் மிதந்தன. குருதி நீரில் கலந்திருந்தது.

நாடோடிகளாக மக்கள் அவலப்பட்டு ஓடிக்கொண்டிருக்க இராணுவம் மழையாகக் குண்டுகளை வீசியது. அவல ஓட்டத்தில் கணவனைப் பிரிந்த மனைவி, பிள்ளைகளைத் தவறவிட்ட தாய்மார், எடுத்து வந்த பொருள்களைப் பறிகொடுத்தவர்கள், ஆரம்பத்தில் பெரும்

சுமைகளோடு ஓடி வந்தவர்கள் தாம் கொண்டு வந்த பொருள்களை வழிவழியில் விட்டு விட்டு இறுதியில் உடுத்த உடுப்புடன் ஓடி வந்தார்கள்.

“பெரிய பரிதாபம் அம்மான். இப்படிப்பட்ட அவலம் எவருக்கும் வரக்கூடாது. போர் ஆரம்பித்தபோது புலிகளை மீளவும் அரசியல் பேச்சு வார்த்தைக்குக் கொண்டு வருவதற்கான இராணுவ அணுகுமுறை என்றார்கள். இப்ப போரை ஆரம்பித்துவிட்டு என்ன சொல்கிறார்கள் தெரியுமா?” என்றான் கணேசநாதன்.

நான் அவனைக் கவலையோடு பார்க்கிறேன்.

“இனிமேல் புலிகளுடன் பேசுவதற்கு எம்மிடம் எதுவுமேயில்லை என்கிறார்கள்.”

வீதியில் வாகனங்கள் சில விரைந்து செல்கின்றன. அம்புலன்ஸ் ஒன்றின் சைரன் ஒலி அவலமாக எழுகிறது.

“காயம்பட்டவர்களைக் கொண்டு செல்கினம்.”

நாங்கள் இருவரும் எழுந்து வீதியில் ஏற -

சைக்கிளில் வந்த லூசியன் எங்கள் முன் இறங்குகின்றான்.

அவன் உடல் படபடக்கிறது. குரல் தத்தளிக்கிறது.

“இந்த அநியாயத்தைக் கேட்டியளோ, அம்மான். நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் அகதிகளாய் பாதுகாப்பாகக் கூடியிருந்த மக்கள் மீது புக்காரா எட்டு குண்டுகளை வீசி விட்டுதாம். இருநூறு பேர் வரையில் உடல் சிதறிப் பலியாகிவிட்டனராம். நானூறு பேருக்கு மேலாக சரியான காயமாம். பாவிகள்... பாவிகள்... அடைக்கலம் தேடி ஒதுங்கிய இடத்திற்கு ஈவிரக்கமின்றி குண்டுகளை வீசிப் படுகொலை செய்திட்டான்களே.”

“ஐயோ...”

“கடவுளே...” என்றான் கணேசநாதன்.

நவாலி தேவாலயக் குண்டுவீச்சும் அதில் பலியாகியவர்கள் பற்றிய விபரங்களும் யாழ்ப்பாணம் எங்கும் வேகமாகப் பரவியது.

எட்டு குண்டுகளும் பொதுமக்கள் குழுமியிருந்த இடங்களில் விழுந்தன. விமான இரைச்சல் எழுந்ததும் மக்கள் அவதானமானார்கள். குண்டுகள் சரிந்ததும் நிலத்தில் விழுந்தோர்... ஓடியோர்... மறைவிடங் களில் ஒதுங்கியோர்... அப்படியிருந்தும்...

குண்டுத் துண்டொன்றை இடுப்பிலே ஏந்தி தன் கைக் குழந்தைக்குக் காயம் ஏற்படாமல் அதன்மீது சரிந்து உயிரைவிட்ட பராசக்தி... ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பதினாறு பேரை ஒருங்கே காவெடுத்த அநியாயம்...

தலை துண்டிக்கப்பட்டோர்... இறைச்சிக் குவியலானோர்... தேவாலய முன்றலில் எங்கும் சடலங்கள்... கட்டட இடிபாடுகளுக் கிடையில் சிக்கிக் கிடந்தோர்... பிணவாடை... குருதி நாற்றம். தலையிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு கதறி அழுவோர்... எங்கும் நிறைந் திருந்தனர். செத்தவர்கள் யார், தப்பிப் பிழைத்தவர்கள் யார் என்று தெரியாமல் அலமலந்து திரிந்தோர் பலர். துண்டித்த கரத்தை தன் கணவனுடையதென அடையாளங் கண்டு தூக்கி மடியில் வைத்தபடி ஓலமிட்டழும் பெண்... சிதறிக் கிடந்த உடுதுணியிலிருந்து தங்கள் உறவுகளை அடையாளங் கண்டு கத்தி அழுவோர்... குவிந்து கிடந்த தசைத் துண்டங்களிலிருந்து எவருடையதென அடையாளம் தெரியாமல் விம்மியோர் பலர்.

துணிச்சலும் வைராக்கியமுமுள்ளவர்கள் காயம்பட்டோரை முதலில் தூக்கி வாகனங்களில் ஏற்றி அனுப்பி வைத்தனர். எஞ்சிய உடல்களைத் தூக்கி வரிசையாக வளர்த்தினர். இனங்காணமுடியாத தசைத் துண்டுகளைப் பொறுக்கி ஓரிடத்தில் குவித்தனர்.

அவ்விடத்தின் துயரம் சொல்லும் தரமன்று. இனப் படுகொலை அவ்விடத்தில் நிகழ்ந்திருந்தது.

காற்றில் பிணவாடை பரவத் தொடங்கியது.

கனத்த நெஞ்சத்துடன் வீட்டிற்குத் திரும்புகிறேன்.

முற்றத்தில் மரத்தடியில் தலையில் கைகளை வைத்தபடி இராசையா அமர்ந்திருக்கிறான். அவனைச் சுற்றிப் பாக்கியமும் பிள்ளைகளும் ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் வந்ததைக் கண்டதும் பாக்கியம் பெருங்குரலில் கதறினாள். "ஐயோ என்ர பிள்ளையைச் சுட்டிட்டாங்கள், ஐயா. என்ற பெத்த வயிறு பற்றியெரியுதே... பாவிகள்."

"அம்மா" என்றபடி அவள் தன் அடிவயிற்றில் ஓங்கி அறைந்து கொண்டாள். பின் லவனும் மல்லிகாவும் "அம்மோ" என்றபடி அவளைக் கட்டிக்கொண்டனர்.

முற்றத்தில் இரசையாவின் தகப்பன் உயிரிழந்த வேளையில் இராசையாவும் லக்சுமணனும் சிவலிங்கத்தாரின் பனங்கூடலில்



நின்றிருந்தார்கள். எறிகணைச் சத்தமும் துப்பாக்கிச் சத்தமும் எழத் தொடங்கியிருந்தன.

"தம்பி, கெதியாய் ஏறி இருக்கிற கள்ளை எடுத்துக்கொண்டு இறங்கு" என்றபடி இராசையா வழக்கமான பனைகளில் ஏறி இறங்கினான். மூன்றாவது பனையில் ஏறி இறங்கித் தளநாரைக் கரத்தில் எடுத்தபடி நிமிர்ந்தபோது, இரண்டாவது பனைவட்டில் லக்சுமணன் நிற்பது தெரிகிறது.

துப்பாக்கிச் சூடுகள் அருகில் கேட்டன.

“கெதியாக இறங்கு தம்பி” என்று அவன் கூறியபோது அவன் பிடரியில் பலமான அடியொன்று விழுந்தது. “ஐயோ” என்றபடி திரும்பியபோது துப்பாக்கிப் பிடியால் அவன் பிடரியில் அடித்த இராணுவ வீரன் துப்பாக்கியை அவன் மார்பின் மீது அழுத்தினான். இராசையா அப்படியே தொப்பென நிலத்தில் இருந்துவிட்டான். பிடரி வெடித்தது, இரத்தம் கசியத் தொடங்கியது.

அந்தப் பனங்கூடலினுள் இராணுவத்தினர் பலர் திடுதிடுவெனப் புகுந்தனர்.

இராசையாவின் இதயம் நின்றுவிடுமாப்போல படபடத்தது. பயத்தால் அப்படியே உறைந்து போய் கரங்களைத் தலையில் வைத்தபடி மகன் ஏறியிருந்த பனையைப் பரிதாபமாகப் பார்த்தான்.

இராசையாவின் விழிகள் சென்றவிடத்தை அவன்மீது துப்பாக்கி முனையை அழுத்திய இராணுவ வீரன் அவதானித்தான். உயரமான பனையொன்றின் வட்டிற்குள் லக்சுமணன் பயத்துடன் அமர்ந்திருப்பது தெரிந்தது.

துப்பாக்கி உயர்ந்தது.

“ஐயா, சுட்டிடாதையுங்கோ, என்ர மகன் கள்ளுச் சீவ ஏறினவன்...”

இராணுவ வீரனின் கால்களை இராசையா பற்றிக் கொண்டான். கெஞ்சினான்.

அதற்குள் இன்னொரு இராணுவ வீரனின் துப்பாக்கியிலிருந்து விடுபட்ட சன்னம் லக்சுமணனின் தலையைத் துளைத்தது. “அம்மா...” என்ற வீரிடலுடன் பனை வட்டிலிருந்து லக்சுமணன் தலைகீழாக நிலத்தில் வந்து மோதிச் செயலற்றுப் போனான்.

“யாருமில்லாமல் அநாதையாக என்ர பிள்ளை பனைமரத்தடியில் செத்துதே! கடைசி நேரத்தில் அம்மாவை நினைச்சு அழுதாயாடா? சுற்றி நின்று அழுது துயர் நீக்க வகையற்று... சுருண்டு கிடந்த என்ர பிள்ளையை அப்படியே விட்டு கட்டை போட்டு எரிக்க எப்படியப்பா உங்களுக்கு மனம் வந்தது?”

இராசையா முகத்தில் அறைந்துகொண்டு அழுதான்.

5

# கரையோரச் சோகம்



**க**ரையோரமெங்கும் இனம் தெரியாத கவலை அப்பிக் கிடந்தது.

அடிவானத்தில் கடல் விளிம்பில் சரிகின்ற மாலைக் கதிரவன் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகப் பெருஞ் சோகத்துடன் தன் கதிர்களை ஒடுக்கிக் கொள்வதாக ஓர் உணர்வு. எப்படியிருந்த கடற்கரையோரம்! வத்தைகளும் தோணிகளும் கண்ணாடி நார்ப் படகுகளுமாக இக்கரையோரம் காட்சி தரும். விரித்துக் காயவிட்ட வலைகளும், இறக்கி வைத்த கூறைப்பாய்களுமாக காலையிலும் மாலையிலும் மீனவர்களால் நிரம்பி வழியும்.

இன்று எதையுமே காணோம். நின்ற இடத்திலிருந்து வடக்குப் பக்கமாக ஊன்றிப் பார்க்கும்போது காக்கைதீவுக் கடற்கரை வெறிச் சோடித் தெரிகின்றது. தெற்கு பக்கமாய்ப் பார்க்கும்போது பண்ணைக் கரையும் கோட்டையிலிருந்து தீவுகளை இணைக்கும் வீதிக்கோடும் ஆள் அரவமின்றி மயான அமைதியுடனும் நிகழ்ந்துபோன பயங் கரங்களை நினைவுபடுத்திக்கொண்டும் அவிந்துபோன எரிமலையாகக் காட்சி தருகின்றன.

என் முன் தேங்கிக் கிடந்த கடலையும் மேற்கு வானில் சரிந்து கொண்டிருந்த கதிரவனையும் ஆழமாகப் பார்க்கின்றேன். மாலை வேளைகளில் கடற்கரைக்கு வருவதும் பின்னேரப் பிடியில் வரும் மீன்களில் ஒன்றிரண்டை இரவுக் கறிக்கும் வாங்கிச் செல்வதும் நாற்பது ஆண்டுக்கு மேற்பட்ட பழக்கம். சரிந்துகொண்டிருந்த வட்டத் தகட்டின் பொன்னிற ஒளி அடங்கலில் அடிவானத்தில் கரைக் கீறுகள் தெரிகின்றன. அங்கெல்லாம் இராணுவம் நிலைகொண்டிருக்கின்றது. ஷெல்களும் பிஃப்ரி கலிபர்களும் சினைப்பர்களும் யாழ்ப்பாணத்தை நோக்கி எந்நேரத்திலும் பாய்வதற்குத் தயாராக இருக்கும்.

மாலைக் கதிர்களின் ஒடுங்கலின் பின்னணியில் காகங்கள் கரும் அரைவட்டக் கீறுகளாக நகர்கின்றன. இந்தக் கடற்கரையில் முன்னர் எப்பொழுதும் மீன்கண்ணிகளின் கூச்சல் எழுந்து நிறைந்திருக்கும். அவை கடல் நீரில் குத்தென இறங்கி மீன்களைக் குத்துவதற்கு அலுப்புப்படுவதில்லை. கடற்கரையில் வீசப்படும் மீன் குஞ்சுகளைக் காகங்களோடு போட்டியிட்டு எடுத்துச் செல்லாமல் உழைத்து உண்ணும் மீன் கண்ணிகள் எங்கு போயின?

இன்றுபோல என்றைக்கும் இப்படிப் பேய் அமைதியாகக் கடற்கரை இருந்ததில்லை. நேற்று நிகழ்ந்துபோன சம்பவந்தான் இந்தக் கரையோர உறக்கத்துக்குக் காரணம். நேற்று வத்தையோடு கடல்நீரில் துணிந்து சிலர் இறங்கியிருந்தனர். குடைவலைகளை முனை கிளம்பப் படுத்துவிட்டு, மடங்குப் பக்கத்தைப் பற்றி வலிக்கத் தொடங்கியபோது தீவுப் பக்கமிருந்து ஏவப்பட்ட ஷெல் காற்றைக் கீறிக்கொண்டு வந்து அவர்கள் மத்தியில் விழுந்து வெடித்தது. மூவர் அவ்விடத்தில் உடல் சிதறிப் பலியாகினர். இருவர் காயங்களோடு கரை வந்து சேர்ந்தபோது கடற்கரையே ஓலமிட்டலறியது.

அடிக்கடி நிகழ்கின்ற சம்பவங்களாக இவை மாறிவிட்டன. வயிறென்று ஒன்றிருக்கிறதே? கடலில் மீனவன் இறங்காவிடில் அவன் குடும்பத்திற்கு யார் உணவூட்டுவது? எட்டிலும் தொட்டிலுமாக அரசு கொடுக்கும் மீனவ நிவாரண உணவுப் பொருள்கள் எத்தனை நாட்களுக்குப் போதும்?

நேற்றைய பயங்கரம் இன்று எவரையும் கடலில் இறங்க விட வில்லைப் போலும் என எண்ணியவாறு திரும்பியபோது தோளில் வீச்சு வலையைச் சுமந்தபடி செபஸ்தியன் கடலில் இறங்குவது தெரிகிறது.

“கவனமடா செபஸ்தி...” என்று நான் குரல் கொடுத்தேன்.




அவன் வயிற்றைத் தொட்டுத் காட்டி, பின்னர் தூரத்தில் தெரிந்த அந்தோணியார் கோயில் குருசைச் சுட்டிக்காட்டினான். கால்களை அவதானமாக மிதித்து கடலில் நடந்தபடி அவரைத் திரும்பிப் பார்த்துப் பலத்த குரலில், "அந்தா லூசியன்ர வத்தை வருகுது" என்றான்.

வியப்புடன் அவன் சுட்டிக்காட்டிய திசையில் பார்த்தபோது முதலில் எதுவும் எனக்குத் தெரியவில்லை. வயதாகிவிட்டதோ?

இன்றும் கண்ணாடி எதுவுமின்றி பத்திரிகை வாசிப்பேன். கடலில் மீனவனின் விழிகள் சக்தி மிக்கவை. செபஸ்தியானுக்குத் தெரிந்தது. எனக்குத் தெரியவில்லை. சற்றுநேரக் கழிவின் பின்னரே வத்தையொன்று கரையை நோக்கி வருவது தெரிந்தது.

லூசியனாகத்தான் இருக்கவேண்டும். வேறு யாருக்கு இப்படியான துணிச்சல் இருக்கும்? இவனொரு பிடிவாதக்காரக் கரையான். குடும் பத்தில் தனி அக்கறை கொண்டவன். உழைத்து உழைத்து உரமேறிய உடலை முயற்சியின்றிச் சோர்ந்து கிடக்கவிடான். நேற்று இதே கடலில் மூவரின் செங்குருதி கடல்நீரில் கலந்துவிட்ட சோகம் இன்னமும் முற்றாக மாறிவிடவில்லை.

லூசியனின் வள்ளம் கரையை நெருங்கியது.

உறங்குவதற்காகக் கிளைகளில் தங்கிய காகங்கள் வள்ளமொன்று கரையை நோக்கி வருவதைக் கண்டு பறந்து வந்தன. வள்ளததைச் சுற்றிப் பறந்தன.

லூசியனின் வத்தை கரைக்கு வருவதற்கு முன்னரே எப்படி பத்துப் பன்னிரண்டு பேர் கரையில் சேர்ந்தனர். தனித்து நின்றிருந்த எனக்கு அருகில் பலர் கூடிவிட்டனர். லூசியன் வெறுங்கையுடன் வருப வனல்லன். கை நீட்டியவர்களை வெறுங்கையுடன் அனுப்புபவனு மல்லன்.

எனக்கு அவனை நன்கு தெரியும். அவனுடைய தகப்பன் அண்ணாவி சின்னர் யோசெப்பு என் நண்பர். மந்திரித்து நூல் கட்டுபவர். பிள்ளையார் கோயிலடிச் சைவர்கள் அவரிடம் மாலையில் வந்து நூல் கட்டிக் கொள்வார்கள். அப்படியொரு நம்பிக்கை. யோசெப்புவின் தலைமகன் லூசியன். பட்டினத்துப் பாடசாலையொன்றில் படிக்கும்போது கூடவே படித்த பாசையூர் பெண்ணிடம் மனதைப் பறிகொடுத்து விட்டான். விசயம் தெரிந்த யோசெப்பர் மகனுக்கு அவளையே கட்டியும் வைத்துவிட்டார்.

"அவனைத் தொடர்ந்து படிக்கவிட்டிருக்கலாமே யோசெப்..." என்ற நான் எவ்வளவோ கூறிப் பார்த்தேன்.

"படிக்கும்போது அந்த எண்ணம் வரக்கூடாது துரையர். அவனுக்கு வந்திட்டுது. ஒரு பெண்ணை வைத்துக் காப்பாற்றுவேன் என்ற திடம் இருக்கிறதாலதான் இந்த வயசில காதலித்தான். சரி கட்டிக் கொள்ளட்டும்."

"இளம் பிள்ளைகளுக்குக் கையில ஒரு தொழிலை நீங்க காட்டி விடுவதால, படித்து நல்லா வரவேண்டிய பொடியங்கள் இப்படிச் சின்ன வயசில கலியாணம் கட்டி பிள்ளைகுட்டியென்று... கலியாணத்துக்கு ஒரு வயசிருக்குது யோசெப். அவனுக்கு இப்ப பதினெட்டு அல்லது பத்தொன்பது என நினைக்கிறேன்..."

சின்னர் யோசெப் தலை குனிந்து கொண்டார். நான் சொல்வதில் இருக்கின்ற நியாயம் புரியாமலில்லை. இப்படி எத்தனை லூசியன்கள், இந்தக் கடற்கரை முழுவதும், அவன் கலியாணம் கட்டி இருபது வருடங்கள் இருக்கும். முந்தாநாள் போல இருக்கிறது. அவன் குடும்பமும் பெருகிவிட்டது. ஆறு பிள்ளைகள். மூத்தவள் கொன்வென்ரில் ஏ.எல். படிக்கிறாள்.

“அம்மான், நான் என்ர பிளையளைப் படிப்பிப்பன்...” என்பான் அடிக்கடி அவன். ஏதோ தவறிவிட்ட ஒன்றை பிள்ளைகள் மூலமாவது நிறைவேற்றிக் காட்டுவேன் என்ற சூளுரைக்குமாப் போல அவன் அவ்வாறு சொல்லும்போது என் முகம் மலரும்.

“கட்டாயம் செய். நீ ஒழுங்காய்ப் படித்திருந்தால் இண்டைக்கு நிச்சயமாக ஒரு டொக்டராக வந்திருப்பாய் தம்பி.”

“நல்லா சிறையா பட்டிருக்குது...”

“அந்தா இரண்டு மூண்டு கயலும்...”

“துள்ளுமண்டையும் கிடக்குது. எடோய் திருக்கையொன்றும் கிடக்குதடா...”

லூசியன் வலையை எடுத்து அணியத்தில் போட்டுவிட்டு கூடையில் மீன்களை அள்ளிப் போட்டான். ஓரிருவர் உதவி செய்தனர்.

கரையில் கூரையை வைத்தபோது தரகியர் செல்லையா மூன்று சையிக்கில் மீன் வியாபாரிகளோடு வந்தான்.

“கூறவோ...” என்று கேட்டான். கேட்டதோடு நில்லாமல் கூறல் பிடியாக பெரியதொரு கயலைப் பற்றி எடுத்தான்.

“போடுங்க அண்ணை...” என்றான் லூசியன்: “இது கூறவல்ல. இண்டைக்குப் பிடிக்கிற மீனை மரியாதைக்குத் தாறதாகச் சொல்லி யிருக்கிறன். அது சுடலைச் சந்தையில காத்திருக்கும்.”

தரகியர் செல்லையாவின் முகம் ஓடிக் கறுத்தது. முகத்தில் கோபம் மெல்லச் சிவப்பேறியது.

“நீ என்ன நினைச்சிருக்கிறாய்?” என்றான் குரல் படபடக்க.

லூசியன் அவரை ஏறிட்டுப் பாத்தான். எதுவும் பேசவில்லை.

“அம்மான் நீங்கள் கைவியளமா வாங்கிக் கொள்ளுங்கோ...” என்று ஒதுங்கி நின்றிருந்த என்னை அழைத்தான். லூசியன் கடலுக்குச் சென்று திரும்புகின்ற வேளைகளில் வெள்ளிக்கிழமை தவிர மற்றைய நாள்களில் கைவிசேஷ மீன் வாங்குவதும் பெரும்பாலும் நான்தான்.

நான் முன்னால வந்து இடுப்பில் செருகியிருந்த மடிசஞ்சை எடுத்துவிரித்துக் கீழடுக்கில் மடித்து வைத்திருந்த ஒரு தாளை எடுத்து விரிக்கிறேன். ஐம்பது ரூபா.

"இவ்வளவுக்குமே அம்மான். இண்டைக்குச் செவ்வாய்க்கிழமை ஆச்சி, அம்மன் விரதமெல்லோ?..." என்று லூசியன் கரிசனையாக விசாரித்தான்.

"பவளமும் பிள்ளையளும் வந்திருக்குது..."

"ஆர் சுப்பிரமணியமண்ணை குடும்பமோ..."

"ஓமோம்..."

லூசியன் கீழே குனிந்து கூடையின் நிரவலில் தரகியர் செல்லையா எடுத்துப் போட்டிருந்த பெரிய கயலை எடுத்து துரையப்பரிடம் நீட்டினான். அவர் வாங்கிக் கொள்ளும்போது அதன்மீது கண்ணாக இருந்த தரகியரின் முகம் சினத்தால் சிலிர்த்தது: "கள்ளன்ரை கையில கொடுத்தாலும் இண்டைக்கு நூறுக்கு மேல பெறும்."

நான் மடிசஞ்சை மீண்டும் திறந்தபோது லூசியன் தடுத்தான்.

"என்னம்மான் நீங்கள்...?"

நான் எதுவும் பேசாது சிறிது நேரம் அங்கு நின்றிருந்தேன். லூசியன் அங்கு நின்றிருந்த குடும்பஸ்தர்களுக்கு கறிக்கு மீன் ஒவ்வொன்றை எடுத்துக் கொடுத்தான். தரகியர் செல்லையா தனக்கும் அவன் ஒரு மீனைத் தருவான் என எண்ணியிருந்தான். லூசியன் அவரைப் பரவாய் பண்ணாது நடந்துகொண்டான்.

இப்பொழுது கூடையில் முக்கால் பங்கு இருந்தது. லூசியன் "அன்ரனி..." என்று கூப்பிட்டபோது இவ்வளவு நேரமும் தூரத்தில் ஒதுங்கி நின்றிருந்த அவன் மகன் முன்னே வந்தான்.

"தம்பி, சயிக்கிலிலை கட்டிக்கொண்டு போய் சுடலைச் சந்தையில மரியாத்தையிடம் கொடுத்திட்டு வா...! கெதியாச் சுணங்காமல் வா. படிக்க வேணும்..."

இரண்டு மீன்களைத் தன்னிரு கரங்களிலும் எடுத்துக்கொண்டு லூசியன் வீதியில் ஏறியபோது, தரகியல் செல்லையா பொருமித் துள்ளினார்.

"ஒண்டு அவரின் வீட்டுக்கு. மற்றது அவரின்ர வைப்புக்கு. ஆராவது ஷெல் பட்டுச் சாவான்கள். இவங்களைப் போன்றதுகள் அவங்களின்ரை பெண்டில்களை மேய்க்க வேண்டியதுதான்..."

லூசியனுக்கு அவர் கூறியவை கேட்கவில்லை. கடற்கரையில் நின்றிருந்த எனக்கு அவை தெளிவாகக் காதுகளில் வந்து விழுந்தன. அருவருப்போடு செல்லையாவை ஏறிட்டுப் பார்க்கிறேன்.

தரகியர் செல்லையாவின் வார்த்தைகள் எனக்கு வெறுப்பைத் தந்தன. சுவரிலிருந்த கரப்பான் பூச்சி சட்டெனப் பறந்து உடம்பில் இருந்தது போன்ற அருவருப்பான உணர்வு. அவனை வெறுப்போடு திரும்பிப் பார்த்தேன். என் பார்வையில் தெறித்த கோபத்தைச் செல்லையா உணர்ந்திருக்க வேண்டும். தலையைக் குனிந்தபடி விறுவிறுவென வீதியில் ஏறி மறைந்தான்.

செல்லையா சொன்னவற்றில் ஒரு பகுதி உண்மை என்பது எனக்குத் தெரியும். மூன்றாண்டுகளுக்கு முன்னர் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லிற்கு அழகம்மாவின் கணவன் பலியாகிப் போனான். லூசியனுடன் எடுபிடியாக வள்ளத்தில் சென்று வருபவன். லூசியனுக்காகக் கடலில் வலை படுப்பவன். ஒரு விதத்தில் லூசியனை நம்பித்தான் அக்குடும்பத்தில் உள்ள மூன்று குழந்தைகள் உட்பட அனைவரும் வாழ்ந்தனர். அழகம்மா தனித்துத் தவித்தபோது அவர்களுக்குக் கைகொடுத்து வருபவன் லூசியன் என்பது எனக்குத் தெரியாத சங்கதியல்ல.

ஊரறிந்த விசயம், ஆனால், தரகியர் செல்லையா கூறுவது போல தப்பாக நடக்கக்கூடியவன் லூசியனல்லன்.

மனம் கனக்கிறது. கடற்கரையிலிருந்து வீதியில் ஏறியபோது தெற்குப் பக்கமிருந்து மோட்டார் சயிக்கில் ஒன்றில் இருவர் வேகமாக வருவது தெரிகின்றது. மோட்டார் சயிக்கில் என்னை கடந்து சென்ற பின்னர் சட்டென நின்று வட்டமிட்டு என் அருகில் வந்து நின்றது. ஆயுதந் தரித்த இருவர் அதில் இருந்தனர்.

"அப்பு" என்றார் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந் திருந்தவன்.

அந்த குரலுக்குரியவனை எனக்குத் தெரியும். நான் தூக்கி வளர்த்த பிள்ளை. வியப்பால் என் விழிகள் விரிந்தன.

"ராகுலா?"

"அப்பு..."

எங்கள் இருவராலும் சில கணப்பொழுதுகள் எதுவும் பேச முடியவில்லை. அவன் மௌனத்தைக் கலைத்தான்.

"அம்மா சுகமாக இருக்கிறாவா? அப்பு? அண்ணை, அக்கா... ஆச்சி."

"ஓமோம்... வீட்டுக்கு வாவன் அப்பன்..."

"இன்னொரு நாளைக்கு வாறன்... இப்ப அவசரமாக வேலையிருக்குது. வாறன் அப்பு" என்று புறப்பட்டவன், "அப்பு பவளம் அன்ரி குடும்பம் இங்கால வந்திட்டினமா? அந்தப் பக்கத்தில ஆமி பிடிச்சிட்டுது..."

"எல்லோரும் என்னோடதான், ராகுலா..."

"வாறன் அப்பு... எல்லாரிட்டயும் சொல்லுங்கோ. ஆச்சியிட்ட சொல்லுங்கோ..." மோட்டார் சயிக்கில் காற்றினைக் கிழித்தபடி விரைந்து மறைந்தது. அப்படியே நிலைகுலைந்து நின்றிருந்தேன். என் பேரன். என் இரத்தம். இதயத்தில் வலியெடுக்கிறது.

"என்ன ஐயா, அப்படியே நிக்கிறியள்...?"

திரும்பிப் பார்த்தபோது இராசையா கவலையோடு நின்றிருந்தான். மகனைப் பலிகொடுத்துவிட்டு அவன் வந்தும் பத்து நாள்களாகின்றன. துரையப்பர் தன் வளவில் இருந்த பழைய மண் குடிசையில் அவர்களை இருக்க அனுமதித்தார்.

"அதில ராகுலன் போறான், இராசையா."

"உங்கட பேரனோ?" இராசையாவிற்கு எல்லா விவரங்களும் தெரிந்திருந்தன.

"ஓமோம்."

"அவன் இப்படிப் போனதிலை உங்களுக்குக் கவலையா, ஐயா..."

நான் அவனைத் திரும்பி ஆழமாகப் பார்த்தேன்.

இராசையா வானத்தில் எதையோ தேடினான். பின்னர், "அநியாயமாக என்ர பிள்ளையைச் சுட்டு விழுத்தினான்கள். இளம் பிள்ளை, வாழ வேண்டிய வயதில சுடப்பட்டு காக்கை குருவி போல சரிஞ்சது. அப்படிச் சாவதிலும் ரெண்டு மூண்டு பேரைச் சரித்துவிட்டுச் செத்துப்போக விட்டிருக்கலாம். இயக்கத்திற்கு ஓடிப்போன பிள்ளையை நான் அலைஞ்சு திரிஞ்சு கூட்டிக்கொண்டு வந்தேன். நீங்கள் அப்படிச் செய்து விடாதையுங்கோ... இளம் பிள்ளைகளுக்கு இந்த நாடு பாதுகாப்பானதல்ல."

நான் அவனை வியப்புடன் ஏறிட்டேன்.

6

# வாழ்வின் சுவை



படலையைத் திறந்து கொண்டு வளவிற்குள் காலடி வைத்த போது பிள்ளையார் கோயிலின் ஆயத்த மணி ஒலித்தது. "அப்பனே" என்றபடி வீட்டுக்குள் நான் நுழைந்தபோது, என்னை முதலில் கண்டவள் என் பேத்தி சரசு.

"அப்பு வாறார்... ஹாய் பெரிய மீன்... அப்பு எனக்கு, பொக்கிள்" எனச் சிரித்தாள். பேத்தியின் குதூகலம் எனக்கு இனிமையாக இருந்தது.

"இதைக் கொண்டு போய் ஆச்சியிட்டக் கொடு."

சரசு வாங்கிக்கொண்டு திரும்பியபோது பவளம் எதிர்ப் பட்டாள். "இஞ்ச தா சரசு. அம்மா விரதம். நான் சமைக்கிறேன்." என்று மீனை மகளிடம் இருந்து வாங்கிக் கொண்டாள். அடுக்களைக்குள் தேநீர் ஊற்றிக்கொண்டிருந்த தையல்முத்துவுக்கு இவை தெளிவாகக் கேட்டன. பக்கத்து வீட்டுக்காரன் எல்லை வேலியை அரக்கிப் போட்டதைக் கண்ட மாதிரியான எரிச்சல் எழுந்தது. உள்ளே இருந்தபடி குரல் தந்தாள்.

“அது விரதம் எனம்னாட, இஞ்ச கொண்டா பவளம். வடிவாய்ச் சமைக்க மாட்டாய். அந்த மனிசனுக்கு நான் சமைக்காவிட்டால் பிடிக்காது.”

பவளம் மீனைக் கோபத்தோடு தன் தாயின் முன் வைத்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். மகளின் கோபம் தாய்க்குப் புரிந்தது.

“நான் அதுக்குச் சொல்லவில்லைப் பிள்ளை. இப்பத்தான் அராலியிலிருந்து வந்திருக்கிறியள். நான் சமைச்சுத் தரத்தான்... சரி நீயே காச்சடி. கொஞ்சம் சொன்னாப் போதும். முகம் நீண்டிடும். வயது ஐம்பத்து மூன்றாகுது. பேரப்பிள்ளையும் கண்டிட்டாய். இன்னும் சின்ன பவா மாதிரி...”

பவளத்தின் முகத்தில் மலர்ச்சி படர்ந்தது.

“எனக்கு என்ன வயசானா என்ன? நான் உனக்குச் சின்ன பவாதான். இப்பவும் உன்ர மடியில தலை வைச்சு படுக்க ஆசையா இருக்கு...?”

“என்ன தாயும் மோளும் செல்லம் கொட்றியள்?” என்றபடி சரசு வந்தாள்.

“ஆச்சி ரீ ரெடியா?”

“ஓமடா ராசாத்தி...” என்றபடி தேநீர் நிறைந்த தம்ளர் ஒன்றை ஆச்சி எடுத்து அவளிடம் கொடுத்தாள். பேணி முட்டி வடிந்த தேநீரை எடுத்துக்கொண்டு ஹோலுக்குப் புறப்பட்டபோது, “ஆச்சி, ஆச்சி... இஞ்ச தாருங்கோ. நான் அப்புவுக்கு கொண்டு போறன்” என்று பறித்துக் கொண்டாள் சரசு. தையல்முத்துவுக்கு சிறிது ஏமாற்றமாகத்தான் இருந்தது.

தலைவாசலில் ஒரு பக்கமாக இடப்பட்டிருந்த வாங்கிலில் அமர்ந்திருக்கின்றேன். கதிரைகள் இருந்தாலும் எனக்கு என் வாங்கில் அமர்வது போலப்படாது. வெறும் பலகையில் துணியொன்றினை விரித்துவிட்டுப் படுப்பது போல வேறெதிலும் சுகம் கிடைப்பதில்லை. மூக்குப் பேணியை என்னிடம் கொடுத்துவிட்டு அருகில் சரசு அமர்ந்து கொண்டாள். நான் பேத்தியின் தலைமயிரைப் பாசத்தோ கோதிவிட்டேன். முதுகில் தடவி “என்ர ஆசைப் பேத்தி” என்றேன்.

அவள் நெகிழ்ந்து போய் என்னைப் பார்க்கிறாள்.

“அப்பு எங்களோட அராலிக்கு வந்திருங்கள்.”



"ஆமி போகட்டும். அது சரி ஆச்சியை விட்டிட்டோ..." என்று சிரிக்கின்றேன்.

"நீங்க எல்லோரும் எங்களோட வந்திருங்கள்."

"ஆச்சியையும் கூட்டிக் கொண்டுதான். இந்த வயதான காலத்தில் இங்க தனிய இருக்க வேண்டுமோ?"

"அதெப்படி அப்பு. அப்பா அங்கதானே ரீச்சர்... வீடு வளவு."

மௌனமாகப் பேத்தியை ஏறிட்டுப் பார்த்து விட்டு, அண்ணாந்து தேநீரை வாயில் விட்டுக் கொண்டேன். சரசுவும் கையிலிருந்த தம்ளரை வாய் உதடுகளில் வைத்து உறிஞ்சிக் குடித்தாள்.

"ஏன் அப்பு எங்களோட வாறியளா?"

"அது எப்படிச் சரசு? இந்த வளவு, காணி, வீடு..., இந்த ஊர், நான் பிறந்து வளர்ந்தது. இந்தப் பிள்ளையார் கோயில் சூழல்... கடற்கரை... இது ஓர் அற்புதமான கிராமம் பிள்ளை. இந்த மண்ணை விட்டு என்னால் எங்கும் செல்லமுடியாது. எனக்கு இப்ப எண்பத்துமூன்று வயது. இன்னும் கொஞ்சக் காலந்தான். அதுவரை இங்கேயே இருந்திடுறன்..."

அவள் எதுவும் பேசவில்லை. என்னுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டவள் போல அமைதியானாள். முற்றத்தில் மாமரத்தின் கீழ் சுருண்டு படுத்திருந்த நாய் படலை திறக்கும் சத்தம் கேட்டுத் தலை நிமிர்த்திப் பார்த்துவிட்டு மெதுவாக உறுமியது. பின்னர் அமைதியாகப் படுத்துக்கொண்டது.

“ஆரோ வருகினம்...” என்றபடி சரசு எழுந்து வெளியில் பார்த்தாள்.

“அப்பா வாறார், அப்பு.”

சுப்பிரமணியம் தாழ்வாரத்தில் சிலிப்பர்களைக் கழற்றிவிட்டு உள்ளே வந்து கதிரையில் அமர்ந்தான். ஐம்பத்தைந்து வயதிருக்கும். வெள்ளை வேட்டி, நஷனல் என்பன அவனை ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியன் என்பதைப் பறைசாற்றின. வயதுக்கு மீறிய முதிர்ச்சி அவனில் தெரிந்தது. நடந்து வந்த களைப்பு. வேட்டித் தலைப்பால் நெற்றியைத் துடைத்துக் கொண்டான்.

“அப்பா தேத்தண்ணி கொண்டு வரவா?”

“சரி பிள்ளை...”

அதற்குள் பவளம் தம்ளருடன் அங்கு வந்தாள். கணவனிடம் கொடுத்து விட்டு அவன் முன்னால் அமர்ந்து கொண்டாள்.

“என்னவாம் அப்பா?...”

“எதுக்கும் ஒருக்காக் கொழும்புக்குப் போயிட்டு வருவம். சிவகடாட் சத்தாற்றை இளையவன் கொழும்பால வந்திருக்கிறான். நாளையிண்டைக்குத் திரும்பப் போறானாம். அவன் அங்கதான் வேலை.”

“ஓமோம் லேபர் கந்தோரிலதான். அவனோட போனாச் சுகம்.”

“ஆர், சுந்தரமே?” என்றேன்.

“ஓம் மாமா... கனடாவில இருந்து மூத்தவளின்ர காகிதமும் வரவில்லை. நாலு மாதத்துக்கு மேலாகுது. லண்டனில் இருந்து மாணிக்கராசாவின்ர கடிதங்களும் இல்லை. அவனை அனுப்பப்பட்ட காசாவது... அனுப்புறதில்லை. அதனால ஒருக்காக் கொழும்புக்குப் போய் பிள்ளையோட கதைச்சிட்டு வரலாம் என்றிருக்கிறம். என்னாலும் ஏலாது. இந்த வரியத்தோடு பென்ஷனுக்கும் எழுதிப் போடலாம் என்றிருக்கிறன்....” என்றான் சுப்பிரமணியம்.

"சலரோகம் ஒரு வியாதியே தம்பி? கொஞ்சம் உணவில் கட்டுப்பாடாக இருந்தால் ஆரோக்கியமாக இருக்கலாம். அந்தக் காலத்து மணிசருக்கு உதெல்லாம் வந்ததே? அந்தக் காலத்துச் சாப்பாடுகளைக் கைவிட்டிட்டியள்."

அடுக்களைக்குள் மீன் பொரிந்து மணத்தது. சரசு எழுந்து அடுக்களைக்குள் ஓடினாள்.

"பொக்குள் கெலியில் ஓடுறாள்..." என்று நான் சிரிக்கின்றேன். "நாளைக்கு மரியாத்தையிடம் சொல்லி வெட்டுக்காரியிடமிருந்து பொக்கில் தொகையாக வாங்க வேண்டும்."

"ஐயா......" என்றாள் பவளம்.

"மாணிக்கராசன் பணம் அனுப்புறதேயில்லை. அவன் எங்களை மறந்திட்டான். இருந்த காணிபூமியளை வித்து அவனை அனுப்பி வைச்சம். உழைச்சுப் படிக்கிறன் என்றான். லண்டனுக்குப் போனதும் படிக்கிறதை விட்டுட்டு உழைச்சான். இப்ப ஒரு வரியமாக எதுவுமில்லை."

அவள் சேலைத் தலைப்பால் விழிகளைத் துடைத்துக் கொண்டாள்.

"அழாதை பிள்ளை... இங்க பொடியளை வைச்சிருக்கிறதுக்கு பயந்து போய் அங்கால அனுப்பி வைச்சிட்டு உன்னைப்போல எத்தனை பேர் தவிக்கினம்! உறவுகள் எல்லாம் சிதறிப் போய்விட்டுது. கொள்ளி வைக்கவும் சபை சந்தியில் நிக்கிறத்துக்கும் இப்ப உறவினர்கள் இங்கில்லை."

"அவனைப் பற்றி ஜெயா மச்சாள் ஒரு விதமாகக் கதைக்கிறா. லண்டனில் இருக்கிற சிவபாலன் எழுதியிருக்க வேணும்."

"ஆர் மூத்தவன் பெண்டிலோ?..... ஜெயாவோ?" என்றேன்.

என் மூத்தமகன் கந்தசாமி கோண்டாவிலில் பெண் எடுத்திருந்தான். ஜெயராணி நல்ல பெண். எண்பத்தேழில் இந்திய அமைதிப் படை பலியெடுத்த மூவாயிரம் பேர்களில் ஒருவனாகக் கந்தசாமி அழிந்து போனான்.

ஒருவரின் உதவியையும் எதிர்பார்க்காமல் தன் குடும்பத்தை அவள் சீராகக் கொண்டு நடத்தி வருகிறாள். அதில் எனக்குச் சந்தோஷம்.

பவளம் தன் முறைப்பாட்டைத் தொடர்ந்தாள். "ஜெயா மச்சாள் புவனத்துக்கு இப்ப வேறெங்கோ கலியாணம் பேசுகிறாளாம். அண்ணர் இருக்கேக்க மாணிக்கராசாவுக்குத்தான் புவனம் என்றவர். மச்சாள் இப்ப

மனம் மாறிவிட்டா. மாணிக்கராசாவுக்கு அவளில் வலு விருப்பம் இருந்தது. மோளுக்குப் பேச்சுக்கால் நடக்குது என்று கேள்விப்பட்டு மச்சாளிட்டக் கேட்டனான். மாணிக்கராசாவுக்கு இப்ப தன் பெண்ணைக் கொடுக்க விருப்பமில்லையாம். உறவு பிரியாமல் இருக்க வேண்டு மென்றால் சரசுவை சிவபாலனுக்குக் கொடுக்கட்டாம்."

நான் நிமிர்ந்து அமர்ந்து கொள்கிறேன்.

"நீ என்ன பிள்ளை சொன்னாய்? ஒரு நேரச் சோத்துக்கு வழியில்லாமல் வாடுகிற குடும்பங்கள் எவ்வளவு எனத் தெரியுமா? சைக்கிளில் விறகிழுத்துச் சீவிக்கின்ற குடும்பங்கள் எத்தனை தெரியுமா? தகப்பனை இழந்த எத்தனை சிறு பிள்ளைகள் படிப்பை இடையில் விட்டுட்டு விறகிழுக்குதுகள் தெரியுமா?"

மகளை ஆழ'மாகப் பார்க்கிறேன்.

"வாழ்க்கையை சுமையாக எண்ணிக்கொள்ளக்கூடாது. பிள்ளை. எதுக்கும் நீங்க முடிவெடுத்தது போல ஒருக்கா கொழும்புக்குப் போய் பிள்ளையோட கதைச்சிட்டு வாருங்கோ. அப்பதான் உங்களுக்குத் திருப்தியாக இருக்கும். சரசுப் பேத்தி எங்களோட இருக்கட்டும்."

"சரசுவையும் சந்திரனையும் இங்க விட்டுட்டுப் போகத்தான் வந்தம்" என்றான் சுப்பிரமணியம்.

"மெத்தச் சந்தோஷம்."

அடுக்களைக்குள் மீன் குழம்பு கொதிக்கின்ற வாசம் எழுந்தது. மெதுவாகப் பசி கிளம்புவதான உணர்வு. அப்போது அடுக்களையில் இருந்து தையல்முத்து சேலைத்தலைப்பால் நெற்றியைத் துடைத்துக் கொண்டு வந்தாள்.

"சங்கதி தெரியுமே! பத்மா இந்தியாவிலிருந்து வாறாளாம். உரும்பிராயிலிருந்து சின்னத்தம்பியர் வந்தவர். கடிதம் வந்திருக்காம். அங்க இருக்கேலாதாம். ஐந்தாறு நாளில வெளிக்கிடுகினமாம். உங்களுக்குச் சொல்லச் சொல்லி எழுதியிருக்கிறாளாம்."

ஆவலுடன் மனைவியைப் பார்க்கிறேன்.

"சின்னத்தம்பி எப்ப வந்தவன்?"

"மத்தியானம் போல, உள்ளுக்கும் வரவில்லை. வாசலில் கூப்பிட்டுச் சொல்லிவிட்டு நாளைக்கு ஆறுதலாக வாறன் என்று கூறிவிட்டுப் போனார்."

“அதை இப்பதானேப்பா சொல்லுறாள்? எவ்வளவு முக்கியமான விசயம்!”

“நீங்க இங்க இருந்தாத்தானே சொல்லுறது?”

“சரி சரி சண்டை பிடிக்காதைங்கோ” என்றாள் தாரணி.

“அன்ரிக்கு எத்தனை பிள்ளையள் அம்மா?”

“பத்மாவுக்கோ.... இரண்டு பேர்... மூத்தவன் ஜனார்த்தனன், மற்றவள் உமா.”

சில கணங்கள் அப்படியே எதுவும் பேசாமல் அமர்ந்து விடுகிறேன். என்னுடைய கடைசித் தங்கையின் மகள் பத்மா. எனக்கு மருமகள், அவளை எண்ணும்போது கவலைகள் இருளாக மூடுகின்றது. இந்தப் போராட்டத்துக்கு இக்குடும்பத்தினர் கொடுத்த விலை மிக அதிகம். என் குடும்பத்தில் மட்டும் கணவன்மாரைப் பறிகொடுத்துவிட்டு விதவைகளாக வாழ்கின்ற பெண்களின் எண்ணிக்கை மூன்று. தகப்பன்மாரை இழந்துவிட்ட குழந்தைகளின் எண்ணிக்கை மிக மிக அதிகம். இந்த இழப்புகள் தாங்கிக் கொள்ளக்கூடியவை அல்ல.

அர்த்தமில்லாத மரணங்கள். வெறி பிடித்த மானிடத்தின் குருதி வெறிக்கு ஆயிரமாயிரம் அப்பாவி உயிர்கள் நித்தம் பலியாகி வருகின்றன. குருதியால் குளிப்பாட்டப்படும் மண்ணின் தூய்மை நித்தம் அழிந்து வருகின்றது. மனிதனுள் இருக்கின்ற மிருகவெறி எல்லா நற்குணங்களையும் மீறிக் கிளம்பி விட்டதாக எனக்குப் பட்டது.

அடங்கிக் கிடந்த பிசாசுகளின் கட்டுக்கள் அறுந்தெறியப்பட்டு விட்டதால் அவை ஊரெல்லாம் இரத்தப் பலி கேட்டுப் புறப்பட்டு விட்டன. பிசாசுகளின் வெறிக்கு அரசியல் அயோக்கியர்கள் தூபம் போடுகின்றார்கள்.

“என்ன அப்பு, கடும் யோசனை. பசிக்குது. சாப்பிடுவம்....” என்றாள் சரசு.

“சாப்பிடுவம்.”

ராகுலனைச் சந்தித்த செய்தியைச் சொல்லிவிடுவோம்.

“ராகுலனைக் கண்டன், யோகம்.”

அவளிடத்தில் அளவிலா வியப்பும் கவலையும் நிறைந்தது.

“எங்கை.....? எப்ப....?” யோகம் துடித்துப் பதைத்துக் கேட்டாள்.

நான் மகளை நிமிர்ந்து பார்க்கிறேன். தாயின் பரிதவிப்பு, பாசம், ஆதங்கம் எல்லாம் அவளில் தெரிகிறது. அவள் முகத்தில் மகிழ்ச்சியும் துயரமும் உணர்ச்சிக் கலவை.

“எங்கை கண்டியள்?” எனத் தையல்முத்து பரபரத்தாள்.

“இப்ப வரேக்கத்தான். ஆரோடயோ மோட்டார் சைக்கிளில் வந்தான். என்னைக் கண்டிட்டு நிண்டான். நல்லா வளந்திட்டான். பிறகு வாறன் எண்டான்.”

“என்னை விசாரிக்கவில்லையா, ஐயா?”

“விசாரித்தான்.”

“என்னைக் கேக்கவில்லையா?” தையல்முத்தாச்சியின் கவலை.

“எல்லோரையும் கேட்டவன்....”

“இவ்வளவு தூரம் வந்தவன் ஒருக்கா வந்திட்டுப் போயிருக் கலாம்.”

மகளைக் கவலையுடன் ஏறிட்டேன். மீண்டும் குண்டுகள் வெடிக்கும் சத்தம் காதில் விழுகின்றது. முகத்தில் கவலை அப்பிக் கொண்டது. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இந்த மண்ணில் சிறிதும் அமைதி இல்லாமல் போய்விட்டது. எல்லைகளை வகுத்துக் கொண்டால்தான் பக்கத்து வீட்டுக்காரனுடன் ஒற்றுமையாக வாழலா மென்ற நிலை உருவாகி விட்டது. குந்தியிருக்க சொந்தமாக ஒரு நிலம் வேண்டும்.

தூரத்தில் விமானத்தின் இரைச்சல் சன்னமாக ஒலிக்கிறது. நீண்டதொரு பெருமூச்சுடன் எழுந்திருக்கிறேன்.

7

# அந்தக் காலத்துக் கதை



முழுநிலவு வானில் மிதக்கிறது. தையல் முத்தாச்சி முற்றத்தில் பாய் விரித்துப் பேரப்பிள்ளைகள் புடைசூழ அமர்ந்திருக்கின்ற காட்சியை தலை வாசலில் அமர்ந்து சுருட்டுப் புகைத்த படி நான் பார்த்து இரசிக்கின்றேன். யோகத்தின் பிள்ளை தாரணி, பவளத்தின் பிள்ளைகள் சரசுவும், சந்திரனும் ஆச்சியைச் சுற்றி அமர்ந்திருக்க மூத்தவன் சிவ புத்திரன் ஆச்சிக்கு அருகில் பாயில் படுத்திருந்தான்.

"இப்ப அம்மாவும் அப்பாவும் கொழும்புக்குப் போயிருப்பினம். அண்ணையோடும் அக்காவோடும் போனில் கதைச்சிருப்பினம்" என்றாள் சரசு.

"ஓமோம்.... அவனின்ரை பொச்சம் இப்ப அடங்கி இருக்கும்" என்றாள் ஆச்சி.

"சரசு, உன்ரை அத்தானோடும் அன்ரி கதைச் சிருப்பா...." என்று தாரணி தங்கையை வம்புக்கு இழுத்தாள். சரசுவின் முகம் ஒடிச் சிவந்தது. ஒரு கணம் லண்டனில் இருக்கும் சிவபாலனின் முகம் தோன்றி மறைந்தது. அவரைக் கண்டு எவ்வளவு காலம்? படங்களில் பார்த்ததோடு சரி. மாணிக்கராசா அண்ணன் மாதிரி அவர் தோற்றத்தில் மாற்றமில்லை. இங்கிருந்தது போலவே இருக்கிறார்.



மாணிக்கராசா அண்ணன்தான் தொந்தியும் ஆளுமாக பருத்து விட்டான்.

"தாரணி அக்கா... இதென்ன கதை?" என்று சரசு பொய்கோபம் காட்டினாள்.

"எல்லோரும் வெளிநாட்டுக்குப் போகப்போறனீங்கள்தான். அங்க தான் உங்கடை முறைப்பையன்கள் இருக்கின்றான்கள். ஆரார் வெளிநாட்டுக்குப் போகப்போறியளோ?" என்கிறேன் தலைவாசலில் இருந்தபடி.

தாரணி வேகமாகக் குறுக்கிட்டாள்.

"அப்பு நான் இங்கதான் இருப்பன். இந்த மண்ணை விட்டு எங்குமே போகமாட்டேன்."

சரசு எதுவும் பேசவில்லை. அவள் சிந்தனை சிவபாலனைச் சுற்றி வட்டமிட்டது. அத்தை சம்மதித்தாலும் அம்மா சம்மதிக்க மாட்டாளோ?

மாணிக்காராசா அண்ணருக்குப் புவனத்தைக் கொடுக்க ஜெயா அத்தை மறுத்து விட்டாவாம். அண்ணரின் நடத்தை வெளிநாட்டில் சரியில்லை எனச் செய்தி கசிவது அவளுக்குத் தெரியாமல் இல்லை. அவன் அவர்களை விசாரித்துக் கடிதம் எழுதி எத்தனை மாதங்களாகின்றன?

வானத்தில் நிலவின் பவனியைப் பார்த்தபடி நிமிர்ந்து படுத்திருந்தபடி சிவபுத்திரன், "ஆச்சி..... இவளவயள் வெளிநாட்டுக்குப் போக மறுத்தாலும் நான் வெளிநாட்டுக்குத்தான் போகப் போறன்" என்றான் சிரிப்புடன்.

"ஏன் ராசா?" என்று ஆச்சி எதுவுமறியாத அப்பாவி மாதிரிக் கேட்டாள்.

"கலியாணம் செய்ய ந்தான்."

"ஏன் உனக்கு இங்க பொம்பிளை இல்லையோ?"

"மச்சாள்மார் வெளிநாட்டிலதானே? அங்க போய்த் தேடப் போறன்..." சிவபுத்திரன் ஒரு பேச்சுக்குத்தான் அப்படிச் சொன்னான். ஆனால் உண்மையில் அவன் முறைப்பெண் இந்தியாவில் அகதியாக இருப்பதை மறந்துவிட்டான். ஆனால் சரசு பிடித்துக்கொண்டாள்.

"அண்ணை அப்படியா சேதி? நீ வெளிநாட்டுக்குப் போகவே தேவையில்லை. அவயளே இங்க வருகினமாம்....."

"எவையள்?....."

"பத்மா அத்தை... ஜனா அத்தான்.... உமா மச்சாள்..."

"ஐயையோ....." என்றபடி சிவபுத்திரன் எழுந்தமர்ந்து கொண்டான்.

"நான் பகிடிக்கடி சொன்னனான். அப்படியொண்டுமில்லை. உமா எவ்வளவு படிச்சவள்? பி.எஸ்.ஸி. நான்...... ஏ.எல். அது சரிவராது....."

நான் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தேன். இந்தப் பிள்ளைகள் எவ்வளவு சுதந்திரமாகவும் தயக்கமின்றியும் பேசிக் கொள்கின்றனர். தங்களது கலியாண விடயங்களைப் பேசிக்கொள்கின்ற அளவிற்கு இந்தக் காலத்துப் பிள்ளைகள் முன்னேறிவிட்டனர்.

அந்தக் காலத்தில் அப்படியா? தையல்முத்தாச்சிக்குத் தாலி கட்டும் வரை அவள் சிவப்பா, கறுப்பா, ஒல்லியா, குண்டா என்று தெரியாது. கலியாணம் பேசி முற்றாக்கி விட்டு அப்பு ஒரு நாள் காலை அறிவித்தார். மறுநாள் மாலை திருமணம். திருக்கை வண்டில்களில் புறப்பட்டுச் சென்று தையல்முததாச்சிக்குத் தாலி கட்டி அழைத்து வந்தேன். அதனால்

என் குடும்ப வாழ்க்கை ஒன்றும் அப்படிப் பிழைப்படவில்லை. எங்களிடையே எதுவித பிரச்சினைகளுமின்றி காலம் ஓடிவிட்டது. சந்ததி பெருகி விட்டது.

நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் சீவித்திருக்கிறோம் என்பது புரிகிறது.

முற்றத்தில் நிலவின் ஒளி மங்கிச் சிறிதளவு இருள் பரவியது. நிலவை முகில்திரள் ஒன்று மூடிக் கலைந்தது. சந்திரன் தூங்கி வழிந்தான். ஆச்சி அவனை அருகில் அழைத்து அவன் தலையைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டாள்.

"இன்னமும் சின்னப்பிள்ளை. பன்னிரண்டு வயதாகிறது... ஆச்சி மடியில கிடத்திக் கொஞ்சுறா..." என்றாள் சரசு.

ஆச்சிக்குச் சற்றுப் பெருமிதமாக இருந்தது. சந்திரனின் தலையைக் கோதிவிட்டான். தன் வலதுகரப் பெருவிரலையும் சுட்டு விரலையும் சேர்த்து சந்திரனின் மூக்கை மேலிருந்து கீழாக அழுத்தி, "நாய்க்கு மூக்குண்டு: நரிக்கு மூக்குண்டு: நான் பெத்த பிள்ளைக்கு மூக்கு வா... மூக்கு வா..." என்றாள்.

பேரப்பிள்ளைகள் ஆச்சியைப் பார்த்தார்கள்.

"இப்படி மூக்குப் பிடித்தால் மூக்கு வந்திடுமோ?" என்றாள் தாரணி.

"அப்படித்தான்... அந்தக் காலத்தில் பிள்ளை பெத்து வளக்கிறதெண்டால் எத்தனை பரிகாரங்கள் இருக்குது தெரியுமே? இப்ப மாதிரி சட்டுப்புட்டென்று ஆஸ்பத்திரிக்கு வயிறு நொந்ததும் ஓடிப்போய் வயிற்றைக் கீறிப் பெத்தெடுத்து வாற மாதிரியே?" என்றாள் ஆச்சி. நான் அவர்களைச் சிரிப்புடன் ஏறிட்டேன். ஆச்சி புதியதொரு சங்கதிக்குப் போய் விட்டாள். இனிக் கொஞ்ச நேரம் அந்த விடயத்தைச் சுற்றித்தான் பேச்சுக்கள் இருக்கப் போகின்றன.

"உங்கடை காலத்திலே நீங்க ஆஸ்பத்திரிக்குப் பிள்ளைப் பேறிற்குப் போகவில்லையோ? எங்கடை அம்மா எங்க பிறந்தவ?..." என்று வியப்புடன் தாரணி கேட்டாள்.

"வீட்டிலதான்... அதுவும் எங்கட அடுக்களையில..."

நான் அப்படியே சிந்தனையில் ஆழ்ந்து போகிறேன். என் பிள்ளைகள் எல்லாம் வீட்டில்தான் பிறந்தார்கள். தையல்முத்து மூத்த

மகனை வயிற்றில் சுமக்கின்ற செய்தி வெளியில் தெரிந்ததும் நான் முகச் சவரம் செய்வதை நிறுத்திவிட்டேன். சா வீட்டிற்குப் போனாலும் மயானத்திற்குப் போவதை நிறுத்தி விட்டேன்.

“துரை, வீட்டிலே மனிசி வாயும் வயிறுமாக இருக்கிறா. நீ சுடலைக்கு வரவேண்டாம்...” என்று என்னை அனுப்பி விடுவர்.

யாழ்ப்பாணத்துப் பழக்கவழக்கங்கள் விநோதமானவையாக இருந்தாலும் அவற்றில் எங்களை அடையாளம் காட்டும் தனித்துவம் இருந்தது. அவை நலன் பயப்பனவாயும் இருக்கின்றன.

ஏழாம் மாதத்தில் நல்ல நாள் பார்த்து பிள்ளைப்பேற்றிற்கான நாட்சரக்கு வாங்க என்னைக் கடைத்தெருவிற்கு அழைத்துப் போனார்கள். உள்ளி, சுக்கு, திப்பலி, மிளகு, மல்லி அவற்றில் இருந்தன. வீட்டிற்கு நாட்சரக்கினை எடுத்து வந்ததும் தலைவாசலில் அமர்ந்திருந்த அப்பு அழைத்தார்.

“இஞ்ச வா தம்பி...”

நான் நாட்சரக்கு உமலுடன் அவர் அருகில் சென்றேன்.

“மிளகை எடு... சரையைப் பிரி... ஒருக்கா எண்ணிச் சொல்...”

எனக்கு அது வியப்பாக இருந்தது.

“ஏன் அப்பு....?”

“சும்மா எண்ணடா... சொல்லுறன்...”

நான் மிளகுச் சரையைப் பிரித்து அவதானமாக எண்ணத் தொடங்கினேன். வீட்டிலிருந்த பலரும் எங்களை ஆவலுடன் சூழ்ந்து கொண்டனர். எண்ணி முடிப்பதற்கு வெகுநேரம் எடுத்தது. வாங்கிலிருந்து கீழே உருண்டு விழுந்த மிளகைக்கூட அப்பு கவனமாக எடுத்துக் கொடுத்தார்.

“ஆயிரத்து மூன்று....” என்றேன் நான்.

அப்புவின் முகம் மலர்ந்தது.

“பிறக்கிறது ஆம்பிளை பிள்ளைதான்....” என்றார் அப்பு பூரண மலர்ச்சியுடன்.

“எனக்கொரு பேரன் பிறக்கப்போறான்....”

அவ்விடத்தில் சற்று நேரம் ஆரவாரம் நிலவியது. திண்ணைத் தூணைப் பற்றியபடி நின்றிருந்த தையல்முத்தாச்சி என்னை ஏறிட்டுப்

பார்த்துவிட்டுப் பெருமிதத்துடன் சிரித்தபடி நிலம் நோக்கிய காட்சி இப்பவும் எனக்கு நினைவிலாடுகிறது.

நாட்சரக்கிற்கு வாங்கிய மிளகை எண்ணி ஒற்றையாயின் ஆண் குழந்தை என்றும் இரட்டை ஆயின் பெண் குழந்தையென்றும் முடிவு செய்தனர். அதிலுள்ள அறிவியல் உண்மை எனக்குப் புரியவில்லை என்றாலும் எங்களுடைய மூத்த பிள்ளை ஆண் குழந்தையாகவே பிறந்தது. இரண்டாம் பிரசவத்தில் ஒற்றை எண் வந்ததும் பிறந்தவள் யோகம்.

தையல்முத்தாச்சிக்கு வயிற்று நோக்காடு தொடங்கியதும் நான் மருத்துவிச்சியிடம் சென்று அழைத்து வந்தேன். சின்னாச்சி அக் காலத்தில் அந்தக் கிராமத்தில் கைதேர்ந்த மருத்துவிச்சி. அவள் வீட்டிற்கு வந்ததும் இராச உபசாரம் நடந்தது. அடுக்களை புதுச் சாணத்தால் மெழுகப்பட்டது. பனைமட்டை வரிச்சுவர் இடைவெளிக்குச் சேலை கட்டப்பட்டு மறைக்கப்பட்டது. நிறைநாழியில் நெல் நிரப்பி காம்புச் சத்தகம் காம்பு மேல் நிற்கத்தக்கதாகக் குத்தி வைக்கப்பட்டது. வேப்பெண்ணெய் விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது. நள்ளிரவில் மூத்தவன் பிறந்தான். அப்பு உலக்கை ஒன்றினை எடுத்துக் கூரையில் தட்டினார். ஆண் குழந்தை பிறந்த செய்தியை ஊருக்கு அறிவிப்பதற்கு அப்படிச் செய்தார். அடுப்படிக்கு ஓடு வேயாமல் இருந்தது கூரை தட்டுவதற் காகத்தான் என்பது எனக்குப் பின்னர்தான் புரிந்தது.

“கூரை தட்டினியள்.... பிறகென்ன நடந்தது ஆச்சி” சரசு தையல் முத்தாச்சியைக் குடைகிறாள்.

“நொச்சி, பாவட்டை, பருத்தி, ஆமணக்கு, வேம்பு ஆகியவற்றின் குழைகளை அவித்து குழை வெந்நீர் வார்த்தினம். ஒரு கரண்டி வேப்பெண்ணெய் குடிக்கக் கொடுத்தினம். உங்கடை கொம்மாமாரைப் பெறுவதற்கு நான் எத்தனை கரண்டி வேப்பெண்ணெய் குடிச்சன் தெரியுமா?” என்றாள் ஆச்சி.

“ஐய... உங்களுக்கு விசர் ஆச்சி.”

“அப்படித்தான் சொல்லுவியள்...!” பிறகு....

“கொத்திப் பேயை அகற்றுவது...” என்றேன் நான் வாங்கில் இருந்தவாறு. பேரப்பிள்ளைகள் என்னை ஆவலுடன் பார்த்தனர்.

“பிள்ளை பிறந்த ஐந்தாம் நாள் பிரசவ அறையில் மாலை நேரத்தில் படையல் செய்யப்படும். சோறு, பலவகைக் கறிகள்.... தென்னம்

பாளையைக் கீறிக் கட்டிய சூளை ஒன்றை மருத்துவிச்சி விளக்கில் கொளுத்தி தாயையும் பிள்ளையையும் சுற்றி வந்து, அந்த அறை முழுவதும் சுற்றி வந்து, 'செத்தேக்க பத்தேக்க நில்லாத கொத்தியாத்தா' என்று பாடி கொத்திப் பேயை மருத்துவிச்சி அழைத்துப் போவாள். படையலை ஒரு பழம் ஓலைப் பெட்டியில் இட்டு, பிரசவம் பார்த்த பாய், தலையணைகளையும் எடுத்துச் சென்று ஊருக்கு வெளியில் வைத்து விட்டு சூளையும் அணைச்சுப் போட்டு மருத்துவிச்சி போவா" என்றபடி சிரிக்கிறேன்.

"பெரிய முகப்பாத்திகள் நடந்திருக்குது, அப்பு..." என்ற தாரணியை ஆச்சி கோபத்துடன் பார்த்தாள்.

"நீ சின்னப்பிள்ளை உனக்குத் தெரியாது..."

"நீ சொல்லு ஆச்சி."

"துடக்குக்கழிவு அன்று, தாய்மாமன் பிள்ளைக்கு அரைஞாண் கயிறு, பஞ்சாயுதம் தொங்கும் சங்கிலி, காப்புகள் எல்லாம் செய்து போட வேண்டும்."

"அரைஞாண் கயிறு என்றால் என்ன ஆச்சி..."

"இடுப்பில் ஆம்பிளையன் கட்டுறது. சிலர் வெள்ளிச் சங்கிலி கட்டுவினம். அப்பு இப்பவும் கட்டியிருக்கிறார்" என்றாள் ஆச்சி வெட்கத்துடன்.

"ஆச்சிக்கு அது என்னெண்டு தெரியும்?"

"முத்தல் கதைகள் வேண்டாம்" என்றாள் ஆச்சி.

"அண்ணா நீ கட்டியிருக்கிறாயா?" என்று சரசு சிவபுத்திரனைக் கேட்டாள்.

"போடி..." என்றான் அவன்.

இருந்தாற்போல வாசலில் மோட்டார் சைக்கிள் ஒன்று வந்து நின்றது.

"அண்ணை... அண்ணை..." யாரோ அவசரமாகக் கூப்பிட்டார்கள்.

துரையப்பர் விரைந்து எழுந்து படலைக்கு வந்தார். அவர் பின்னால் சிவபுரத்திரனும் தொடர்ந்தான். வாசலில் இரு பையன்கள் நின்றிருந்தார்கள்.

"யோகம் அக்கா இங்கதானே....?"

"ஓமோம்... அவவுக்கென்ன?"

"அவவிட்ட ஒரு செய்தி சொல்ல வேணும்..."

"நான் அவவின்ர தேப்பன் துரையப்பர்... என்னட்டைச் சொல்லுங்கோ."

படலையடியில் பலர் கூடிப் பேசுவது தெரிந்ததும் யோகம் வெளியில் வந்தாள்.

அவன் சொன்னான். "ராகுலன் அண்ணைக்கு சண்டையில் காயம்பட்டு ஆஸ்பத்திரியில சேர்ந்திருக்கிறம். தாயைப் பார்க்க வேணுமாம்...'

"ஐயோ..." என்று யோகம் அலறினாள்.

"என்ரை பிள்ள்ளை... ராகுலா! அவனுக்கென்ன?..."

"உசிருக்கு ஆபத்தில்லை அக்கா! ஒப்பிறேசன் தியேட்டரில சேர்த்திருக்கினம். வாறம்..."

அவர்கள் சென்று விட்டார்கள். அவ்விடத்தில் விம்மல் ஒலியும் அழுகை ஒலியும் நிரம்பியது.

8

# அறுக்கையற்ற வேலி



கடற்கரையில் இருந்து பார்க்கும்போது வயல்வெளி தொடங்குமிடத்தில் ஓர் ஒதுக்காக அழகம்மாவின் குடிசை தெரியும். அவள் குடிசைக்கு முன் விரியும் கடற்கரையோரத்தில் மாநகரசபை, நகரத்தில் அள்ளுகின்ற குப்பை கூழங்களைக் கொட்டியிருந்தது. குடாக்கடலின் மணத்துடன் இந்தக் குப்பை கூழங்களின் நாற்றமும் சேர்ந்து அப்பிரதேசத்தில் வியாபித் திருக்கும். மாநகரசபை கொட்டி விடுகின்ற குப்பைகளுள் ஏதாவது பிரயோசனமான பொருள்கள் கிடைக் கலாம் எனக் கருதிக் கொட்டிய குப்பை களை மனிதரும் நாய்களும் வேறு கிளறி வைத்திருந்தார்கள்.

காகங்கள் எப்பொழுதும் அவ்விடத்தில் நிரம்பியிருக்கும். நகரப் புறமிருந்து சைக்கிளில் வருபவர்கள், எவருக்கும் தெரியாமல் உரப் பைகளில் கட்டிவரும் கழிவுகளை இவ்விடத்தில் எறிந்துவிடுவதை அழகம்மா பல தடவைகள் கண்டிருக்கிறாள். அப்பைகளுள் செத்துப் போன கோழிகள், வளர்ப்பு விலங்குகள் இருக்கும். மண்ணில் புதைத்து விடப் பஞ்சிப்பட்டு கடற்கரையில் வீசி விடுகின்ற பொறுப்பற்ற தன்மையை அவள் வெறுத்தாள். யாரிடம் சொல்வது?

சொல்லப்போய் பட்ட அவலம் ஒன்று அவளுக்கு நினைவு வருகிறது.

ஒரு நாள் அதிகாலை அவள் படலையைத் திறந்தபோது தரகியர் செல்லையா செத்த கோழி ஒன்றினைக் காவி வந்து அவள் குடிசைக்கு முன்னுள்ள வீதியில் வீசுவதைக் கண்டாள்.

"ஏன் அண்ணை இப்படிச் செய்யிறியள்? நாங்க இதில இருக்கிறதில்லையே?"

அவள் தன்னை அறியாமல் அப்படிக் கேட்டுவிட்டாள்.

தரகியர் செல்லையாவிற்குக் கோபம் மூக்கில் பொறி தட்டியது. அந்தப் பிரதேசத்தில் தான் ஒரு முக்கியமான புள்ளியாகக் கருதப் படுவதாக அவனுக்கு ஓர் எண்ணம். சந்தையில் மீன் குத்தகை அவனுக்கு இருந்தது. மீனவர் பிடித்து வரும் மீன்களைச் சந்தையில் வியாபாரி களுக்குக் கூறி விற்பது அவன்தான். கூறுபிடி, விற்றபிடி என வரும் வருமானமே சில நூறாகும். சந்தையில் அவனுக்கு ஒரு செல்வாக் கிருந்தது.

அவனைப் பார்த்து 'ஒண்டுக்கும் வக்கத்த' அழகம்மா இப்படிக் கேட்பதா?

"போடி உள்ள...." என்று தூசண வார்த்தைகளை உச்சரித்த தரகியர், "உனக்கெடி என்ர பிடிக்காது. லூசியன்ர பிடிக்கும்..." என்றான்.

அழகம்மா விக்கித்துப் போய்விட்டாள். கோட்டைச் ஷெல் அடிக்கு அவள் கணவன் கார்த்தியன் பலியாகிப் போன பின்னர் அவளுக்கு தெரிந்தும் தெரியாமலும் உதவப் பலர் முன்வந்தமைக்கு அவள் கட்டுக் குலையாத உடலில் இருந்த கவர்ச்சிதான் காரணம் என்பதை அவள் விரைவில் தெரிந்து கொண்டாள். அவளுக்கு உதவியவர்கள் அவளிடம் உதவிக்காகக் கூலியைக் கேட்டபோது அவளால் விம்மி விம்மி அழத்தான் முடிந்தது. ஆண் துணையில்லாமல் இருப்பதில் உள்ள கடினம் புரிந்தது.

தரகியர் செல்லையா மாலை நேரங்களில் அடிக்கடி அவள் குடிசைக்கு வந்தான். ஆரம்பத்தில் கௌரவமாகப் பேசியவன் வார்த்தைகள் முறைதவறியபோது "அண்ணை இனிமேல் இங்கை வாராதையுங்கோ..." என்று பக்குவமாகக் கத்திரித்து விட்டாள். அந்த ஏமாற்றத்தைத் தரகியரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. 'தளதள'

என்று வறுமையிலும் செழிப்பான அவள் அழகு அவனுக்குத் தூக்கத்தைக் கெடுத்தது.

கார்த்தியன் அவமாக மரணித்த பின்னர் பிரதிபலன் எதிர்பார்க்காது அவளுக்கு உதவ முன்வந்தார்கள் இருவர். ஒருவர் அக்கிராமத்தின் கிராம சேவையாளர் கணேசநாதன். மற்றவன் லூசியன். லூசியனுக்கு ஒரு விதத்தில் இக்குடும்பத்திற்கு உத்வ வேண்டிய கடமையுமிருந்தது. கார்த்தியன் அவன் வள்ளத்தில்தான் வேலை செய்தான்.

தரகியர் செல்லையாவின் ஏமாற்றம் தந்த விளைவால் வெளிப்பட்ட வார்த்தைகளை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. உள்ளே படலையைச் சார்த்தியபடி மறைந்து விட்டாள்.

தரகியர் செல்லையா என்ன நினைத்தானோ, வீதிக்கானில் வீசியிருந்த செத்த கோழியைக் கால்களில் பற்றித் தூக்கிக் கடற்கரைப் பக்கமாக வீசிவிட்டுக் கள்ளுத் தவறணை நோக்கி நடந்தான்.

இவை நடந்து சில மாதங்களாகின்றன. அழகம்மாவின் வாழ்க்கையில் பிரச்சினைகள் அதிகரிக்கத் தொடங்கின. விதானையார் கணேசநாதன் உதவியால் கிடைக்கின்ற நிவாரண உதவியும், லூசியன் செய்கின்ற உதவிகளும் பிள்ளைகள் இரண்டையும் பட்டினி போடாமல் காக்க உதவின. பிள்ளைகள் தக்க துணிமணியில்லாமல் திரிகிறார்கள். வீட்டுக் கூரை, மேய்ச்சலை எதிர்பார்த்து வானத்தை உள்ளிருந்து பார்க்கவிட்டிருக்கிறது.

படலையிலிருந்து பார்க்கும்போது கடற்கரைக்கு அப்பால் அலை எறியாது கடல் அடங்கிக் கிடக்கின்றது. முன்பென்றால் அக்குடாக் கடலில் வள்ளங்களும் வீச்சுவலையெறிவோரும் நிறைந்திருப்பார்கள். இப்பொழுது எவருமில்லை. கடலில் விளைந்து கிடப்பதை அறுவடை செய்ய எவருக்கும் துணிச்சல் இல்லை.

அவள் தன் கணவனை எண்ணிக் கொண்டாள். என்ன மழையானாலும் காற்றானாலும் துணிந்து வள்ளத்தைக் கடலிற்குள் இறக்கும் ஓர்மமுள்ள மீனவன் அவன். கடைசிவரை தொழிலாளியாகவே வாழ்ந்து சென்றுவிட்டான். அவன் இலட்சியக் கனவுகளில் ஒரு வள்ளமும் வலைகளும் நிறைந்திருந்தன. 'ஒரு நாள் தான் அவற்றை அடைவேன்' என அவன் நம்பியிருந்தான். அதற்காகச் சிறுகச் சிறுக மிச்சம் பிடித்து வந்தான்.



காலத்தை யார் தடுப்பது? அதற்குக் காரணம்தான் தேவை. கோட்டைப் பக்கமிருந்து வந்த ஷெல் கணப்பொழுதில் அவனையும் அவர்களின் கனவுகளையும் அள்ளிச் சென்றுவிட்டது. அவனுடைய சேமிப்புக்கள் அக்குடும்பத்தின் பசிக்கு உதவிக் கரைந்து போயின.

இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சு வெடிக்கும் துயரம் அழுத்துகின்றது.

அவள் உள்ளே செல்லத் திரும்பியபோது தூரத்தில் லூசியன் வருவது தெரிந்தது. அவன் தன் குடிசையை நோக்கித்தான் வருகிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. அவனுடைய உதவிகளை அவளால் தட்டிவிட முடியவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக அவன் இப்படிச் சில வேளைகளில் வருவதும் படலையைத் தாண்டாது வெளியில் நின்றபடி 'கார்த்தியன்' என அழைத்து அவளிடம் தான் வாங்கி வரும் பொருள்களை வழங்கிவிட்டுச் சென்றுவிடுவதும் வழக்கம். சில வேளைகளில் அவனுடைய மகன் அன்ரனி அவற்றினைக் கொண்டு வந்து தருவான்.

"அப்பா கொடுக்கச் சொன்னவர்."

அவளால் அவன் உதவிகளை மறுக்க முடியவில்லை. ஏற்காது விடவும் முடியவிலை. அவன் குடும்பத்திற்கு உதவாவிடில் அவர்கள் இருந்தவிடத்தில் புல் முளைத்திருக்குமெனச் சிலவேளைகளில் அவள் எண்ணமிடுவாள்.

அவன் அவள் குடிசையை நோக்கி வந்தான். அவன் வலக்கரத்தில் ஒரு மீன் தொங்கியது. இடது கரத்தில் சொப்பிங் பை ஒன்றில் அரிசி, தேங்காய். இன்றைக்கு வடிவாகக் கேட்டுவிட வேண்டும். இன்னமும் பொறுக்க முடியாது.

"இந்தா அழகம்மா..." என்று அவன் அவளிடம் தான் கொண்டு வந்தவற்றை நீட்டினான். அவள் கை நீட்டி அவற்றை வாங்கிக் கொள்ளவில்லை. மனம் சங்கடப்பட்டது. தயங்கி நின்றாள். எச்சிலை மென்று விழுங்கியவாறு, "ஒருக்கா உள்ள வந்திட்டுப் போங்கோ...." என்றாள். உடல் வியர்த்து விட்டது. உடலில் மெல்லிய நடுக்கம். லூசியனுக்கும் அவள் அழைப்பு கலக்கத்தைக் கொடுத்தது. அதைக் காட்டிக் கொள்ளாமல் உள்ளே வந்தான். குடிசையின் குந்தில் அமர்ந்து கொண்டான். அதற்குள் மண் குந்தில் ஓர் உரப்பையை அவள் விரித்து விட்டாள். உள்ளுக்கு வந்த பின்னர்தான் அவள் வறுமையின் அவலம் அவனுக்கு மூலையில் நின்றிருந்தன. கிழிசல் காற்சட்டையுடன் மூத்தவனும், ஜங்கியுடன் சிறுமியும் காட்சி தந்தனர்.

அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

"எனக்கு ஓர் உதவி செய்ய வேணும்..." என்றாள் அவள் தலையைக் குனிந்தபடி.

"சொல்லு."

"உங்கட உதவியாலதான் இரண்டு வரியமா நாங்க சீவிக்கிறம். அடுப்பில நெருப்பெரிவது உங்கட உதவியாலதான். ஏன் எங்களுக்கு உதவுறியள்? இந்தப் பட்ட கடனை நான் எப்படித் தீர்க்கப் போறன்?" என்றபடி அழகம்மா விம்மத் தொடங்கினாள்.

அவன் அவளைப் பார்த்தபடி இருந்தான்.

"கார்த்தியனுக்காகவும் அவன்ர பிள்ளைகளுக்குமாகத்தான் நான் உதவுறன் அழகம்மா. வேறொன்றுக்காகவுமில்லை."

"எங்களுக்கு நீங்க உதவுறதால ஊரில நாலுபேர் எப்படியெல்லாம் நாக்கு வழிக்கினம். எங்களால உங்களுக்கு அவமானம்."

"அந்த நாலுபேரைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. அழகம்மா, மனிதன் பிறந்தது மற்றவர்களுக்கு உதவுவதற்குத்தான். அப்படித்தான் நான் நினைக்கிறன். என்ர வீட்டில உலை கொதிக்க இங்க கார்த்தியன் குடும்பம் பட்டினியால வாடுறதை என்னால ஏற்க முடியவில்லை.

உனக்குத் தெரியுமா, அழகம்மா.... ஆறு வரியத்துக்கு முன்னம் நான் ஒன்பது மாதங்கள் படுத்த படுக்கையாகவிருந்தன்... அப்ப கடலுக்குச் சென்று மீன் பிடித்து விற்று எனக்கும் என்ர குடும்பத்திற்கும் சோறு போட்டவன் கார்த்தியன். என்ர வள்ளம் தான்... என்ர வலையள் தான்... ஆனா..." லூசியன் தன் விழிகளைத் துடைத்துக் கொண்டான்.

"அவன் மிகப் பெரிய மனிதன்... அவன்ர மனசு எவருக்கும் வராது... அவமாகச் செத்துப் போனான். நான் நினைக்கிறன். நல்லவங்கள் கனகாலம் வாழ்வதில்லைப் போல..."

அவ்விடத்தில் நீண்ட மௌனம் நிலவியது.

"அவற்றை விடு. ஏதோ உதவி வேணுமென்றாயே?"

அவள் தயக்கத்துடன் கேட்டாள். "நான் சந்தையில் மீன் விக்கப் போறன். அதுக்கு உதவி செய்யுங்கோ."

அவன் சற்று நேரம் எதுவும் பேசாதிருந்தான். அவள் கோரிக்கை நியாயமாகப் பட்டது. அவள் குடும்பத்திற்குப் பல தேவைகள் இருக்கின்றன.

"இப்பத்த சூழ்நிலையில சந்தையில மீன் விக்க முடியுமா, அழகம்மா? உன்னால அது முடியாது.... அந்தத் திறமை உனக்கில்லை. உனக்காக வேண்டுமென்றால் மரியாத்தையோட கடலைச் சந்தைக்குப் போய் வா. முதலில கழிவு நெளிவுகளை அறியப் பார். நான் மரியாத்தை யிடம் சொல்லி விடுறன்."

அழகம்மா அவசரமாகக் குறுக்கிட்டாள்.

"நான் மரியாத்தையுடன் கதைச்சிட்டன். அவதான் உங்களிட்ட கேட்கச் சொன்னவ. விற்க விற்க ஏமாத்தாமல் தந்திடுவன்...." தலையை ஆட்டி ஆர்வத்துடன் அழகம்மா பேசியது அவனுக்குச் சிறுபிள்ளை ஒன்றினை நினைவுபடுத்தியது. வாய் திறந்து சிரித்தான். அவன் சிரிப்பு அவளுக்குப் பயத்தைத் தந்தது.

"ஏன் சிரிக்கிறியள்?"

"உன்ர பேச்சு. உன்ன நம்பமாட்டனா?" அவன் குடிசையை அண்ணாந்து பார்த்தான்: "முதலில இந்தக் குடிசையை மேயப்பார்...'

"விதானையார் சொன்னவர்... யாரோ நிறுவனம் ஒன்று ஓலை கொடுக்குதாம். என்ர குடிசையையும் பதிஞ்சிருக்கிறாராம். தருவினமாம்..."

"அப்ப சரி தராட்டில் நான் ஓலை பறிச்சு விடுறன்..."

“வேண்டாம்... வேண்டாம்... உங்களைக் கஷ்டப்படுத்த மாட்டேன்.”

இருவரிடையேயும் பேச்சு தடைப்பட்டது.

“அம்மா அடுப்பிலே தண்ணி கொதிக்குது....” என்றான் சிறுவன்.

“தேத்தண்ணி குடிப்பியளா? வெறுந் தேத்தண்ணிதான். தொட்டுக் கொண்டுதான்...” அவள் பரிதாபமாக அவனைப் பார்த்தாள். வேண்டாம் என்றால் அவள் வாடி விடுவாள் போலப்பட்டது.

“சரி...” என்றான் அமைதியாக.

அவள் குடிசைக்குள் அவசரமாக நுழையப் படலையைத் திறந்து கொண்டு மரியாத்தை உள்ளே வருவது தெரிந்தது. அவன் குந்தில் அமர்ந்திருப்பதைக் கண்டதும் அவள் முகத்தில் வியப்புத் தெரிந்தது.

அவள் பார்வையில் தெறித்த வியப்பில் இருந்து அவனை அவள் அங்கு எதிர்பார்க்கவில்லைப் போலப் பட்டது. அவனை அவள் ஒரு பொழுதும் குடிசைக் குந்தில் எதிர்பார்க்கவில்லை. படலையோடு தன் உறவை நிறுத்திக் கொண்டவன். இன்று உள்ளே வந்திருக்கிறான்.

“லூசியனா?”

“வேறை யார் மரியாத்தை. நான்தான்.”

“அதிசயம்தான்... மழை வரப் போகுது...”

“ஓமோம்.... கெதியாகக் குடிசையை மேயணை...” என்று அவன் சிரித்தான்.

“வேலியையும் அடைக்க வேணுமோ?” மரியாத்தைக் கிழவியின் வக்கணை அவனுக்குப் புரியாமல் இல்லை. அவனுக்கு சிரிப்பு வந்தது.

“பாயிற மாடெண்டால் வேலியடைச்சுப் புண்ணியமில்லையணை. தோட்டத்திற்குக் காவலா நீ இருக்கும்போது வேலியென்னத்திற்கு?........”

மரியாத்தை திருப்தியுடன் சிரித்தாள். பேணிகளில் தேநீருடன் அழகம்மா வந்தாள். அவனிடமும் மரியாத்தையிடமும் கரங்களிலிருந்த தேநீரை வழங்கிவிட்டு உள்ளே சென்று சீனிப் போத்தலுடன் வந்தாள். அவர்கள் முன் வைத்தாள். அவர்கள் வலக் கரங்களில் சிறிது சீனியைக் கொட்டிக் கொண்டனர்.

“உவன் தரகியர் செல்லன் விசர்க்கதை கதைக்கிறான்...” என்றாள் மரியாத்தை.

“அவன்ர கதையை விடு. அவனுக்கு குடிச்சால் பேசுறதெது பேசாதது எதுவெண்டு தெரியாது. மூதேசிக்கு ஒரு உதை கொடுத்தால் தாங்கிக் கொள்ளாது. வாய் மட்டும் வலு பெரிசு. எனக்கு வேண்டாம் அவன்ர கதை” அவன் பேணியைக் குந்தில் வைத்தான். ஏதோ நினைவு வந்தவன் போல மீண்டும் பேணியை எடுத்து எஞ்சிய அடி மண்டியை முற்றத்தில் ஒதுக்காக வீசிவிட்டு வைத்தான்.

“வாறன் ஆச்சி. வாறன் அழகம்மா.”

“இண்டையக் காசை வாங்கிக் கொண்டு போவன்.....”

“என்னட்டையே தாறனி... வீட்டில றோசம்மாட்ட வழக்கம் போலக் கொடு...”

“எவ்வளவெண்டு கேக்கவில்லை....”

“முந்நூறு வந்திருக்கும்...”

மரியாத்தையின் விழிகளில் வியப்பு.

“என்னெண்டு சரியாகச் சொல்லுகிறாய்? ஆரையும் விட்டுப் பார்த்தனியே?”

லூசியன் சிரித்தான்.

“பிடிக்கிற மீனின் பெறுமதி தெரியாத கரையானே நான்....? வாறன்...”

அவன் படலையைத் திறந்தபடி வெளியில் வந்தான். மனதில் இனந்தெரியாத மகிழ்ச்சி நிறைந்திருப்பதாகப்பட்டது. அழகம்மாவின் பேச்சுக்கள் காதில் நர்த்தனமிட்டன. மரியாத்தைக் கிழவியின் வக்கணைப் பேச்சின் அர்த்தம் புரிந்தது. அழகம்மாவிற்குப் புரிந்திருக்குமோ?

இருள் கடற்கரையை விரைவாக மூடிக் கவிந்தது. அவன் சந்தையை நெருங்கியபோது, துரையப்பரின் பேரன் ராகுலன் சண்டையில் காயம்பட்ட செய்தி தெரிந்தது. கடும் காயத்துடன் ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாகவும் அறிந்து கொண்டான்.

மனம் ஒரு கணம் துணுக்குற்றது.

9

# காதல் கரம்



சந்தைக் குந்தில் அமர்ந்தபடி கடலையும் அடிவானத்தையும் சரியும் சூரியனையும் பார்த்தபடி அமர்ந்திருப்பது எனக்குப் பிடித்தமாக இருந்தது. கடற்கரையில் எவரையும் காணவில்லை. இப்பொழுது லூசியன் கூட மாலையில் கடலுக்குப் போவதில்லை. அதிகாலை நான்கு மணிக்கும் எட்டு மணிக்கும் இடையில் மீனவர்கள் கடலில் இறங்கிப் பிடித்துவிட்டுக் கரையேறி விடவேண்டும் என்ற கட்டுப்பாடு. அதனை மீற எவருக்கும் துணிச்சல் இல்லை. மீறியவர்கள் மண்டைதீவிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லிற்கு கடலில் காணாமற் போயினர்.

இவற்றிற்கெல்லாம் செபஸ்தியான் கட்டுப்படமாட்டான். இப்போதுகூட தன் வீச்சுவலை உடன் கடலில் நிற்கின்றன். அவனுக்கு இரவுக் குடிக்கு கையில் காசிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவனுக்கு நித்திரை வராது.

துணிச்சல்காரனென அவனை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை.

துணிச்சல் என்றதும் ராகுலன் நினைவு வருகிறது.

ராகுலன் வீட்டுக்கு வந்துவிட்டான். வலது கால் முழங்காலுடன் இல்லை. ஜெய்ப்பூர் பாதம் பொருத்தலாம் எனச் செல்கிறார்கள். அதற்குச் சிறிது காலம் செல்ல வேண்டுமாம். காயம் நன்றாக ஆறிமரக்க வேண்டுமாம். வலது காலை இழந்த கவலை அவனுக்கு இல்லை. அவனைச் சுற்றி அமர்ந்திருக்கும் யோகத்திற்கும், சகோதரர்களுக்கும் தான் அந்தக் கவலை பெரிதாகத் தெரிகின்றது. எனினும், அவனுக்குக் கால் இல்லாது போனதில் சிவபுத்திரனுக்கு ஒரு வித திருப்தி. அதை அவரிடம் மறைமுகமாகவன்றி நேரடியாகவே சொல்லிவிட்டான்.

"அப்பு இந்தமட்டில் திரும்பி வந்தானே? அதுவே போதும். இனிமேல் எங்கும் போகாமல் எங்களுடனேயே இருப்பான்."

ஆனால் ராகுலனின் எண்ணம் வேறாகவிருந்தது என்பதையும் நான் அறிந்தேன். எவருமில்லாத வேளையில் ஒரு நாள் அவன் என் அருகே வந்து வாங்கில் அமர்ந்து கொண்டான். அவனைப் பாசத்துடன் பார்த்துப் புன்னகைத்தேன்.

"அப்பு..." என்றான் அவன்: "நான் யுத்தத்தில் செத்திருக்கலாம்."

"அப்படிச் செல்லாதை..." என்றேன், பதறியபடி.

"ஒண்டுக்கும் உதவாமல் போயிட்டன். என்னால யாருக்கும் பயனில்லை."

அவனை ஆதரவோடு பார்த்தேன்.

"ஓர் அங்கம் குறைந்தால் வாழ்க்கை இல்லாது போய் விடுவது இல்லை. உலகத்தில் உன்னிலும் பார்க்க ஊனமான பலர் சந்தோசமாக வாழ்ந்து வருகின்றனர். இரண்டு கரங்கள் இல்லாதவர்கள், இரண்டு கண்கள் இல்லாதவர்கள். இரண்டு கால்களையும் இழந்தவர்கள் எத்தனை பேர் ஏதோ ஒரு நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்த யுத்தம் எத்தனை ஆயிரம் பேர்களை ஊனமாக்கி விட்டது தெரியுமா, ராகுலா? இந்தளவிலாவது தப்பினாயே என்று சந்தோசப்படுவதை விட்டு விட்டு...."

அவன் அவசரமாகக் குறுக்கிட்டான். "இல்லை அப்பு... நான் சுகம் வந்ததும் மீண்டும் போய்விடுவேன். அது எனக்குத் தெரியும். இராணுவம் யாழ்ப்பணத்தை எப்படியும் கைப்பற்றியே தீரும் என்பது தெரியும். அதற்கு முதல் நான் மீண்டும் சென்றுவிடவேண்டும். அம்மாவை நினைத்தால்தான் கவலையாக இருக்கிறது."

அவனை ஆழமாக ஊடுருவிப் பார்த்தேன். என் பார்வையின் காங்கையைத் தாங்க முடியாமல் அவன் முற்றத்தைப் பார்த்தான். ஐந்தாறு கோழிகள் மண்ணைக் கிளறிக் கொண்டிருந்தன. ஒரு சேவல் ஆணவமாகச் சுற்றி வந்தது.

"ராகுலா, இந்த உலகில் மனிதன், விலங்குகள் பிறந்தது எதற்காகத் தெரியுமா? வீணாகச் சண்டையிட்டுச் சாவதற்கல்ல."

"பின்ன எதற்கு....?"

"இந்த உலகத்தில் சந்தோஷமாக வாழ்ந்து உண்பதற்கும் உறவு கொள்வதற்கும்தான்."

"உண்பதும் உறவு கெள்வதும்தான் வாழ்க்கையா?" என ராகுலன் சிரித்த ான்.

"மனிதன் விலங்கல்ல, அப்பு...."

"பைத்தியக்காரா, உனக்கு இது விளங்காது. இனப்பெருக்கம்தான் உயிர் வாழ்வின் ஆதாரம். நாகரிகமாம்.... கலாசாரமாம்... மனிதன் நாடென்றும், மதமென்றும் மொழியென்றும் பிரிந்து, அறிவியல் மேம்பட்டால் கண்டெடுத்த ஆயுதங்களைக் கொண்டு ஒருவனை ஒருவன் அழித்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டான். மிலேச்சர்களாக மாறி விட்டம். நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள், நல்ல குடும்பம், நல்ல உறவினர்கள்.... இதற்கு அப்பால் ஒருவனுக்கு எதுவும் தேவையில்லை. பச்சைப்படியே சொல்லுவதாக இருந்தால் சாதாரண படிப்பற்ற மனிதனும், படித்துப் பட்டங்கள் பெற்று உயர்நிலையில் இருப்பதாக எண்ணும் மனிதனும் உழைப்பது, உத்தியோகம் பார்ப்பது எதற்குத் தெரியுமா? உண்பதற்கும், தங்கள் துணையுடன் படுத்து எழும்புவதற்கும்தான். ஆயுதம் ஏந்திய உன் கரத்திலிருந்து அதனைச் சற்றுக் கீழே வைத்து விட்டு ஓர் இளம் பெண்ணின் கரத்தைக் காதலோடு பற்றிப் பார்.... அப்ப உனக்குத் தெரியும்; இந்த உலகம் எவ்வளவு இனிமையானது என்பது புரியும்; இந்த உலகத்தில் கொட்டிக் கிடக்கின்ற இன்பங்கள் எவ்வள வெனத் தெரியும். வாழ்க்கையின் அர்த்தம் புரியும். இந்த மனிதர்கள் ஏன் சாவைக் கண்டு இப்படிப் பயப்பிடுகிறார்கள் தெரியுமா? இந்த இன்பங்களை இழக்க விரும்பாமல்தான் ராகுலா..."

ராகுலன் உண்மையில் திக்கித்துப் போனான். நான் இப்படி யெல்லா ன்னுடன் பேசுவேனென அவன் எதிர்பார்க்கவில்லை.

“அப்பு...” என்றான் வியப்புடன். “நமக்கென ஒரு நாடு... சுதந்திரம்... இவையெல்லாம் தேவையில்லையா?”

அன்போடு பேரனின் கரத்தைப் பற்றினேன்.

“தேவைதான். ஆனால் இவற்றினைப் பெறுவதற்காக மனித இரத்தத்தால் இந்த மண்ணைக் குளிப்பாட்ட வேண்டுமென்றால் அவை எனக்கு வேண்டாம். இவ்வளவு இளம் பிள்ளைகளின் மரணத்தின் சமாதி மேட்டில்தான் இவை கிடைக்குமென்றால் எனக்கு அவை வேண்டாம்....”

ராகுலன் மௌனத்தில் ஆழ்ந்தான்.

சந்தைக் குந்தில் அமர்ந்திருக்கும்போது அவ்வேளை ராகுலனின் முகத்தில் பரவிய உணர்ச்சிக்கோலம் நினைவில் சதிராடுகிறது.

ராகுலன் கேட்டான்.

“அப்பு, சரி காதல்... கலியாணம் அது முடிந்த பிறகு?”

“பிறக்கின்ற குழந்தையைக் கரங்களில் ஏந்தி வைத்துப் பார்... அந்த மழலையின் மணம்.... அதன் களங்கமில்லாத சிரிப்பு... இந்த உலகம் எவ்வளவு இனிமையாதென்பதைப் புரியவைக்கும்.”

அவன் சிரித்தான். “அப்பு இப்ப ஆச்சிக்கு வயதாகி விட்டது. உங்கள் பிள்ளைகளும் வளர்ந்துவிட்டார்கள்....”

“ராகுலா, உலகம் எப்பொழுதும் இளமையானதுதான். என் பேரப்பிள்ளைகள்.... ராகுலா, உன்னைத் தூக்கிக் கொஞ்சிய இனிமை என்னில் இன்னமும் இருக்கிறது. நீ உன் பிஞ்சுக் கால்களால் என் மார்பில் உதைத்த இன்ப நோ இன்னமும் இருக்கிறது....”

“அப்பு...” என்றவாறு ராகுலன் நெகிழ்ந்து போனான்.

“இந்த உலகத்தில் வாழவேண்டும் என்பதற்குரிய அர்த்தங்கள் அந்த அந்த வயதில் வெவ்வேறு உறவுகளாகவிருக்கும். பேரா, எப்படிப் பார்த்தாலும் மனிதன் சந்தோசமாக வாழத்தான் பிறந்தவன். அவலமாகச் சாவதற்கல்ல. என் மரணம் எப்படி நிகழ வேண்டும் தெரியுமா?”

“சொல்லுங்க அப்பு...”

“இயற்கையாக மரணம் சம்பவிக்க வேண்டும். உறவுகள் சுற்றி நின்று ஒப்பாரி வைத்து அழ வேண்டும். என் பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைகளும் என் சடலத்தைச் சுற்றி நின்று நெய்ப்பந்தம் பிடிக்க வேண்டும். அவர்களின் விழிகள் என் மரணத்துக்காக நீர் சொரிய

வேண்டும். என் மகன் கொள்ளிக்குடம் உடைத்து...'' நான் தளர்ந்து தடுமாறினேன். என் தளர்ச்சிக்குரிய காரணம் அவனுக்குத் தெரியும்.

“அப்பு நான் இருக்கிறன்'' என்றான் பரிவோடு.

“நீ இருக்க வேண்டும் பேரா! நல்லா இருக்க வேணும்.... சொர்க்கம் இந்த மண்ணில்தான் இருக்கிறது.''

இப்போது நினைத்தாலும் அவன் தந்த உறுதி இனிமையாக இருக்கிறது.

“நானிருக்கிறன் அப்பு.... நானிருக்கிறன் அப்பு....''

**செ**பஸ்தியான் கரையேறி வருகிறான். இடுப்பில் கட்டியிருந்த பறிக்கூடு கனத்திருக்கிறது. தோளில் வலையை அள்ளிப் போட்டபடி கரையேறி என் பக்கமாக வருகிறான். என் அருகில் வந்ததும் வலையையும் பறியையும் கீழே வைத்துவிட்டு என் முன் நின்றான்.

நான் அவனை நிமிர்ந்து பார்த்தேன்.

“என்ன நல்லாய்ப் பட்டிருக்குதா?''

“கீலிதான்.... வேணுமா?'' என்று செபஸ்தியான் கேட்டான்.

“ஊரில வீண் பிரச்சினை வரும் போலவிருக்குது. நேற்று இரவு நடந்த சங்கதியால ஊரே இரண்டு பட்டிடும்போல கிடக்குது.''

“எதைச் சொல்லுறாய் செபஸ்தி?''

“என்ன தெரியாதது மாதிரிக் கேக்கிறியள். நேற்றிரவு லூசியன் சயிக்கிலில் வந்து கொண்டிருக்கிறான். அப்ப அழகம்மா வீட்டில இருந்து ‘ஐயோ! ஐயோ!' என்ற அவலக்குரல் கேட்டிருக்கிறது. சைக்கிளை றோட்டில் போட்டுவிட்டு லூசியன் உள்ளே ஓடியிருக்கிறான். அங்க தரகியர் செல்லையாவும் அழகம்மாவும் இழுபறிப்பட்டிருக்கினம். லூசியன் செல்லையருக்கு வாட்டிட்டான்.''

அந்தச் சம்பவத்தை கிராமமே அறிந்திருந்தது. இரு விதமாகவும் மக்கள் அபிப்பிராயப்பட்டுக் கொண்டார்கள்.

“லூசியன் ஏன் அங்க போனவன்?''

“அவனுக்கும் அழகம்மாவுக்கும் வெகுநாட்களாகத் தொடுப்பு.....''

“அவன் நல்ல ஆள்.... உவன் தரக்கியன்தான் அழகம்மாவிடம் ஒரு கண்....''

“இல்லையாம். இரண்டு பேரும் ஒரே நேரத்தில் எக்கச்சக்கமாகப் போயிட்டினமாம். அதுதான் சண்டையாம்.”

இப்படிப் பேசிக்கொண்டதை அறிந்திருந்தேன். ஆனால் இப்பொழுது செபஸ்தியான் கூறுவது வேறு விடயமாக இருக்கிறது. தரகியர் செல்லையா பகுதியும் லூசியன் பகுதியும் மோதிக்கொள்ளப் போகிறார்களோ?

“என்ன செபஸ்தி....?” என்று கவலையோடு கேட்கிறேன்.

“தரகியர் செல்லையா தங்கட ஆக்களோட ஆயத்தமாக நிற்கிறானாம். வேதக்காரக் கரையான் என்ர மேல கை வைக்கிறதோ என்று நிற்கிறானாம். அவன் ஆக்களோட இங்க லூசியனை அடிக்க வந்தால் நாங்க பார்த்துக் கொண்டிருக்க முடியுமோ? பதிலுக்கு ஏதாவது செய்யத்தானே வேணும்.”

இப்படியொரு நிலைமை உருவாகும் என்று அவர் எதிர்பார்க்க வில்லை. வேலியில்லாத தோட்டத்திற்குள் புகுந்த மாடு கல்லடி படத்தான் செய்யும். தரகியருக்கு லூசியன் மீது ஏற்பட்ட கோபத்திற்குக் காரணம் அழகம்மாதான் என்பது இப்பொழுதுக்குப் புரிகிறது.

சந்தைக் குந்தைவிட்டு எழுந்திருக்கிறேன்.

“செபஸ்தி, அப்படியொன்றும் இந்த ஊரில் நடந்துவிடக்கூடாது. முன்னம் அப்படி நடந்து பட்ட அவலம் போதும். இதை எப்படியாவது நிப்பாட்டியாக வேண்டும். வாறன் செபஸ்தி....”

கடற்கரை வீதியில் ஏறி தெற்குப் பக்கமாக நடக்கும்போது வீதியோரத்தில் திக்குத்திக்காகப் பலர் நின்றிருந்தார்கள். பிள்ளையார் கோயில் பக்கத்தில் தரகியர் செல்லையா சிலருடன் நின்றிருப்பதும் தெரிந்தது. செல்லையாவிடம் எல்லாரையும் கூட்டிக்கொண்டு திரும்பிப் போகச் சொல்ல வேண்டும். வீட்டுப் படலையைக் கடக்கும்போது படலையடியில் ராகுலன் ஊன்றுதடிகளின் உதவியுடன் நின்றிருந்தான்.

“என்ன அப்பு....”

“இவங்கள் இண்டைக்கு அடிச்சுக்கொள்ளப் போறாங்கள் போலிருக்குது.... நீ உள்ள போ... நான் பார்த்திட்டு வாறன்....”

“அப்பு இந்தக் காலத்தில நீங்கள் செல்லிக் கேட்க மாட்டான்கள். நானும் வாறன்....”

ராகுலன் தொடரப் பிள்ளையார் கோயிலடிக்கு வருகிறேன். எங்களைக் கண்டதும் அவர்கள் தமக்குள் முணுமுணுத்துக் கொண்டனர்.

“உது என்ன வேலை, செல்லையா?”

“அம்மான், உவங்கள் செய்தது சரியோ? சும்மா வந்த செல்லையா அண்ணையை உவன் லூர்சியன் இழுத்து அடிக்கிறதோ? உது என்ன நியாயம்?” என்றான் ஒருவன். நல்ல வெறி. செல்லையர் நன்றாக வார்த்துக் கொடுத்துத் தயாரித்திருப்பது தெரிந்தது.

“தயவுசெய்து போங்கோ... கலவரத்தை உண்டாக்க வேண்டாம். நான் விசாரித்து ஆரில பிழையெண்டு அறிந்து....”

“உந்தக் கதையை விட்டிட்டு, துரையப்பர்... நீர் வீட்ட போம். எங்கட அலுவல் எங்களுக்குத் தெரியும். உவன் லூசியனைச் சரிக்காமல் விட மாட்டேன்” என்றான் தரகியர் செல்லையா.

ராகுலன் அவசரமாகக் குறுக்கிட்டான்: “நான் சொல்லுறன் எல்லாரும் உடனே போயிட வேணும்... நிண்டியள் எண்டால் நடக்கிறது வேறை....”

எல்லாரும் அவனைப் பயத்துடன் பார்த்தார்கள். தமக்குள் குசுகுசுத்துக் கொண்டனர்.

“தம்பியவை சொன்னால் சரி.”

அவர்கள் கலைந்து போனார்கள். எனக்கு உண்மையில் வியப்பாகத்தான் இருந்தது.

10

# முத்தல் கதைகள்



**வெ**ளிக் கேற் திறக்கின்ற சத்தம் எழுந்தது. வாங்கிலிருந்த படி எட்டிப் பார்க்கிறேன். சைக்கிளை உருட்டிக்கொண்டு என் பேத்தி புவனம் உள்ளே வந்தாள். கோண்டாவிலிலிருந்து வருகிறாள். ஏதாவது முக்கியமான அலுவல்கள் இருந்தால்தான் சைக்கிளில் வருவாள். அவளுடைய தாய் ஜெயா - என்னுடைய மருமகள் - புவனத்தைக் கண்காணிப்புடன் வளர்த்து வருகிறமை எனக்கு தெரியாததல்ல.

"அப்பு...... அப்பம்மா........" என்று பாசத்துடன் குரல் தந்தாள் புவனம்.

"வா. பிள்ளை.... வாடி என்ர குஞ்சு...." என்றேன் மகிழ்ச்சியுடன். அவள் சைக்கிளை முற்றத்தில் நிறுத்திவிட்டு என் அருகில் வந்து அமர்ந்தாள்.

பேத்தியை அன்போடு முதுகில் தடவி மகிழ்ந்தேன். புவனம் நன்றாக வளர்ந்து விட்டாள். முன்னர் பார்த்ததிலும் உடலில் சற்றுப பருமனேறி சிவந்திருந்தாள். தகப்பனைப் போல நல்ல உயரம். வட்டமான முகத்தில் சிரிக்கும்போது தெத்தி நிற்கும் இடது மூலைப் பல்

அவளுக்குத் தனிச்சோபை கொடுக்கிறது. ‘என்னுடைய பேத்திகள் எல்லாரும் இலட்சணமான பிள்ளைகள்’ என எனக்குள் பல தடவைகள் பெருமைப்பட்டிருக்கிறேன்.

குசினிக்குள்ளிருந்த தையல்முத்தாச்சிக்கு புவனம் வந்திருப்பது தெரிந்தது.

கழுவிக்கொண்டிருந்த பேணிகளை அப்படியே விட்டுவிட்டு ஓடி வந்தாள்.

“என்ர குஞ்சு, எப்ப வந்தாய்?”

“இப்பத்தான் அப்பம்மா....”

கிழவி பேத்தியைத் தன்னுடன் இழுத்து உச்சியில் முத்தமிட்டாள்.

“நாங்கள் நாளையிண்டைக்கு அங்க வாறதெண்டு இருந்தம் புவனம்” என்றபடி யோகம் மருமகளை ஏறிட்டுப் பார்த்துச் சிரித்தாள்.

“அப்ப நான் வந்தது எதற்கெண்டு தெரியும்....”

“அதை எப்படி மறக்கிறது பிள்ளை. எனக்குக் கொள்ளி வைக்க வேண்டிய உன் அப்பனுக்கு நான் கொள்ளி வைச்சிட்டுத் தவித்து நிக்கிறன். அவன் இறந்து எட்டு வருடமாகிறது. தருமலிங்கத்தின்ரை துவசம்.... ஆண்டு திவசம்..... ம்....”

இந்திய அமைதிப்படை இந்த மண்ணில் தன் கால்களை அழுத்திப் பதித்து, அடாவடித்தனமானத் தமிழ்ப் பிரதேசங்களை ஊடுருவிய போது, கோண்டாவிலில் பலியான பலரில் புவனத்தின் தந்தை தருமலிங்கமும் ஒருவர். கனத்த அசுர வாகனங்களுடன் யுத்த மேகம் கவிந்தபோது, அந்தக் காரிருளில் அந்தக் குடும்பத்தின் தலைவனும் புதைந்து போனான்.

சைக்கிளில் வரும்போதும் அந்த மரண அவலக் காட்சிகள் கண்முன் புவனத்திற்கு விரிந்தன.

“அம்மா, தம்பிமார் எல்லாரும் எப்படி, புவனம்...?

“சுகமாகவிருக்கினம், அத்தை உங்களுக்குத் தெரியும்தானே? அம்மா இருந்தாற்போல அப்பாவை எண்ணி அழத் தொடங்கி விடுவா. அவ்வளவுதான். வேறை ஒரு குறையுமில்லை. எல்லாரையும் முதல் நாளே வரட்டாம். ராகுலன் எங்கை அத்தை? ஜெய்ப்பூர்க் கால் போட்டாச்சா.....?”

"இல்லை, புவனம்.... இனித்தான். அவன் இப்பத்தான் வெளியில் போனான்."

"இனி அவனை எங்கும் விடாதையுங்க அத்தை."

"அவன் கேட்க மாட்டான்" என்று கண்களை யோகம் துடைத்துக் கொண்டாள்.

"அவனால எதையும் மறக்க முடியவில்லை. உடல் சிதறிக் காணாமல் போன லதாவையும், மணிவண்ணனையும் காணாமற் போன அப்பாவையும் அவனால் மறக்கமுடியவில்லை. அவர்களை நினைக்கும் போது வெறி பிடித்தவனாகி விடுகிறான். பழி வாங்கும் உணர்ச்சி மேலோங்கி நிற்கிறது...."

புவனம் சிரித்தாள்.

"யார் யாரைப் பழிவாங்கிறது அத்தை? எய்தவர்கள் யாரோ? அம்பை நொந்தென்ன பயன்? அப்பாவை இந்தியன் ஆமி கட்டுது அவர்கள் போய்விட்டார்கள். ஆனால் என்னைப் போல தகப்பன் இல்லாத பிள்ளைகள் தவிக்கிறம். நான் யாரைப் பழிவாங்குறது? புரியவில்லை. எங்கட அப்பு சொல்லுற மாதிரி, காலந்தான். காலம் வந்தால் காரணம் ஒன்றுதான் மரணத்திற்குத் தேவை. அது எந்த வடிவிலும் வரலாம்...."

பேத்தியை வியப்போடு பார்க்கிறேன். இந்தக் காலத்துப் பிள்ளைகள் எப்படியெல்லாம் பேசப் பழகிவிட்டார்கள்? எப்பொழுதோ கூறிய ஆறுதல் வார்த்தைகளை அவள் மீண்டும் எனக்கே கூறுகிறாள்.

தாரணி, சரசு எல்லாரும் புவனத்தைச் சுற்றிக் கொண்டார்கள்.

சரசு, புவனத்திடம் வெடுக்கென ஒரு கேள்வியைக் கேட்டாள். "ஏன் மச்சாள், நீ அண்ணனைக் கலியாணம் செய்யமாட்டன் என்றியளாம்...."

புவனம் இக்கேள்வியை எதிர்பார்க்கவில்லை. முகத்தில் கவலை சூழ்ந்து கொண்டது. என்னைப் பரிதாபமாகப் பார்த்தாள். பின்னர் யோகத்தை ஏறிட்டாள். அவளின் சங்கடம் யோகத்திற்குப் புரிந்தது.

"என்ன சரசு, தனியக் கேட்க வேண்டிய கேள்வியை எல்லார் முன்னிலையிலும் கேட்பதா?"

"இது எங்கட குடும்ப விவகாரம்தானே பெரியம்மா. இங்க என்ன பிறத்தியாட்களா இருக்கிறம்?"



நான் மௌனமாக இருந்தேன். புவனத்தின் பதில் எப்படி அமையும்?

மாணிக்கராசன் மீது அவளுக்கு ஏதாவது பிடிப்பு, அன்பு இருக்கலாம்.

தையல்முத்தாச்சி பேத்தியைப் பார்த்து, "அவள் கிடக்கிறாள் விடு பிள்ளை" என்றாள்.

"இல்லை அப்பம்மா... நான் மாட்டன் எண்டு சொல்லவில்லை. அம்மாவை இங்க தனிய விட்டிட்டு நான் ஒருக்காலும் வெளிநாட்டிற்குப் போகமாட்டன். அண்ணனும் லண்டனில், நானும் அங்க போகமாட்டன். இங்க அம்மா தனிச்சிடுவா. எங்களுக்கு ஒரு கடன் இருக்குது. அப்பாவில்லாமல் எங்களை அம்மா இவ்வளவு தூரம் வளர்த்து ஆளாக்கி விட்டிட்டா. அவவை இங்க விட்டிட்டு நான் சத்தியமாக எங்கும் போகமாட்டன். அத்தான் மாணிக்கராசா பற்றிப் பல கதைகள் கேள்விப்படுகிறம். நான் அவற்றைப் பெரிதுபடுத்தவில்லை. அப்பா இருக்கேக்க பவளம் அத்தையிடம் சொன்ன வாக்குறுதியை நான் இப்பவும் நிறைவேற்றத் தயார். ஆனால், அவர் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வரவேண்டும். இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிடச் சம்மதிக்க வேணும். அவ்வளவுதான்."

புவனம் தன் மனக்கிடக்கையைக் கொட்டித் தீர்த்துவிட்டாள்.

"அப்படியெண்டால் அண்ணா நிச்சயம் வருவான்...." என்றாள் சரசு மகிழ்ச்சியுடன்.

"இந்தக் காலத்துப் பிள்ளைகள், தங்கட கலியாணங்களைத் தாங்களே பேசித் தீர்த்து விடுகுதுகள். கலிகாலம்..." என்று தையல் முத்தாச்சி வாய்விட்டுச் சிரித்துக்கொண்டாள்.

அவர்கள் பலவற்றைப் பேசிக்கொண்டார்கள். கொழும்புக்குப் போன பவளத்தையும் சுப்பிரமணியத்தையும் பற்றிப் பேசிக்கொண்டனர். இந்தியாவிலிருக்கும் பத்மாவையும் பிள்ளைகளையும் பற்றிப் பேசிக் கொண்டனர்.

அவர்கள் விரைவில் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வரவிருக்கின்ற செய்தியையும் பேசிக் கொண்டார்கள்.

சரசு அல்பத்தைக்கொண்டு வந்து புவனத்திடம் கொடுத்தாள்.

"இதென்னப்பா.... மாலினி மச்சாள் இப்படி சைஸ்.... குண்டாகி யிருக்கிறா?"

"கனடாப் பெண்கள் இப்படித்தான்.... யாழ்ப்பாணத்திலிருந்து போகேக்க ஒல்லியாக இருப்பினம். அங்க போனதும் பூசணிக்காய் மாதிரி பருத்திடுவினம். அங்கத்த கிளைமேற் அப்படியாம்."

'விசர்.... அங்க இருக்கிற பொம்புளையள் இப்படியே? அங்க போனதும் சொக்கிலேட், கண்டோஸ், ஐஸ்கிறீம் என்று கண்டபாட்டிற்குச் சாப்பிடுகிறது. கொழுக்காமல் என்ன செய்வினம்?"

"மெல்லிசா உயரமா தனக்கு ஒரு பொம்பிளை தேவையெண்டு தேடித்தான் மாலினி அக்காவை அத்தான் கட்டினவர். பாவம்.... இப்ப அவர் கனவுகள் குலைஞ்சு போயிருக்கும்......."

"முத்தல் கதையளை விடுங்கோ. எல்லாப் பொம்பிளைகளும் ரெண்டு பிள்ளைகளைப் பெத்தால் கோலம் மாறுகிறதுதான்" என்றாள் தையல்முத்து.

"அப்படியென்றால் அப்பம்மா, நீங்க ஆறு பிள்ளையளைப் பெத்தும் கட்டுக்குலையாமல் இருப்பதன் இரகசியம் என்னவோ?"

இவ்விடத்தில் சிரிப்பொலி பலமாக எழுந்தது.

ஆச்சிக்கு வெட்கம். என்னைப் பெருமிதத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

“இரகசியம் இதுதான், பிள்ளையள். ஆச்சி ஒரு கணமும் சும்மா இருப்பதிலை. உரலில் இடிப்பது, அம்மியில் அரைப்பது, சமைப்பது, கிணற்றில் தண்ணி அள்ளுவது எண்டு ஓயாமல் ‘எக்ஸஸைஸ்’ செய்து கொண்டுதான் இருக்கிறா.... அதனால உடம்பு கயிறு மாதிரி இருக்குது” என்று நான் சிரித்தேன்.

அவர்கள் எல்லாரும் வீட்டிற்குள் புகுந்து கொண்டார்கள். சிரிப்பும் சத்தமுமாக வீடு விளங்கியது. நான் கேற்றைத் திறந்துகெண்டு புறப்பட்டேன்.

எதிரில் விதானையார் கணேசநாதன் சைக்கிளில் வந்தான். என்னைக் கண்டதும் இறங்கி என் அருகில் வந்தான்.

“விசயம் தெரியுமோ, பெரிய விதானையார்? லூசியனைக் காவற்துறை அரஸ்ற் பண்ணிக்கொண்டு போயிட்டாங்களாம். தரகியர் செல்லையா தன்னை அவன் அடித்துக் காயப்படுத்தி விட்டான் என்று முறைப்பாடு செய்திட்டாராம்...”

“அது பரவாயில்லைத் தம்பி. ரெண்டு பகுதியும் அடிதடி படவிருந்தாங்க. இப்படி விசாரணைக்குப் போறது நல்லது.”

“இன்னொரு விசயம், அம்மான்.”

கணேசநாதனை ஏறிட்டேன்.

“அழகம்மா அரளி விதைகளை அரைச்சுச் சாப்பிட்டுத் தற்கொலை செய்யப் பார்த்திருக்கிறாள். மரியாத்தை சரியான நேரத்தில் வந்ததால தட்டிவிட்டுட்டா. செத்திருந்தால் அவளின்ர ரெண்டு பிள்ளையளும் அநாதைகளாயிருக்கும் உண்மையில அழகம்மா ஒரு நெருப்பு... எனக்குத் தெரியும். தரகியர் தவறாக நடக்கப் பார்த்தார். லூசியன் அவளுக்கு உதவுவதால் வீண் கதையளைக் கட்டிவிட்டார்.... லூசியனை எனக்குத் தெரியும் அம்மான். உத்தமமான மனுசன். நான் காவல் துறைக்குப் போகப் போகிறேன். லூசியனை வெளியில கொண்டுவர வேணும். எப்படியாவது லூசியனை உள்ளை தள்ளுறன் என்று செல்லையர் நிக்கிறாராம்.”

“அப்படியே செய் தம்பி. நானும் இதைப்பற்றித்தான் பார்க்கிறன். அழகம்மாவுக்குப் புத்தி சொல்ல வேணும். பொன்னாலை, சங்கானைப் பக்கம் எல்லோரும் மீண்டும் குடி போயிற்றனம், என்ன? பவளம் கொழும்பில... அவளின்ர வீடும் அங்க அராலியிலதான்.”

"எல்லாரும் போயிட்டினம் உங்கடை வீட்டில முதலில அடைக்கலம் புகுந்த இராசையா குடும்பமும் போய்விட்டுது."

"என்ன அம்மான்?"

"இராசையாவின் மச்சான் ஒருவன் அரசடியில் இருக்கிறான். வசதியாக இருக்கிறான். கச்சேரியில கிளாக். பெரிய வீடுவாசல். இராசையா இங்க அகதியா இருந்த மூட்டம் அங்க ஒருக்காப் போயிருக் கிறான். அங்க தங்க இடம் கிடைக்கும் என்ற நப்பாசையும் இருந்தது. மச்சான்காரன் மறுத்திட்டானாம். நல்லவை பெரியவை நாலு பேர் வாறவிடம் என்றிட்டானாம். அவன் ஒரு புதுச் சாதிக்காரன்."

"நானும் இப்படிப் பலரைப் பார்த்திருக்கிறன்."

"நான் சாதி பார்க்கிற ஆளில்லை. மனிசத் தன்மை பார்க்கிறவன்."

"அப்படியெண்டா உங்களிட்ட ஒரு கேள்வி கேக்கப்போறன்."

அவனை திரும்பி ஆழமாகப் பார்த்தேன்.

கணேசநாதன் தொடர்ந்தான்.

"சாதி சமயம் பார்க்கிறதில்லை என்றியள். சாதியத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள், கல்வியாலும் தொழில் மார்க்கத்தாலும் உயரலாம் என்றியள். சரி. அப்படி அவர்கள் உயர்ந்தால் சாதி பாராமல் உங்கட குடும்பத்தில திருமணம் செய்வியளோ?"

எண்பத்துநான்கு வயது பழைமை இவ்விடத்தில் சற்றுத் தயங்குவதாக கணேசநாதனுக்குப் படுகிறது. சற்றுச் சிந்தனையில் ஆழ்ந்தது.

"உண்மையைச் சொல்லவா?"

"அதுதான் எனக்குத் தேவை."

"நான் என் பேத்திகளுக்கும் பேரப் பிள்ளைகளுக்கும் திருமணம் பேசிச் செய்வதாகவிருந்தால் எங்கட ஆக்களுக்குதான் பேசிச் செய்வன். அவரவர் ஒருத்தரையொருத்தர் விரும்பிக்கொண்டால் பிள்ளையார் ஆணையாகச் சொல்லுறன் தம்பி, நான் தடுக்க மாட்டன். அவன் நற்குணம் உள்ளவனாக, ஒழுங்கானவனாக, ஒரு பெண்ணை வைத்துக் காப்பாற்றக்கூடிய தொழில் உள்ளவனாக இருக்க வேண்டும்."

கணேசநாதன் சிரித்தபடி விடைபெறுகிறான்.

நான் வீடு நோக்கிச் செல்லும்போது நினைவில் பல காட்சிகள் விரிகின்றன. என் தகப்பனார் நினைவில் விசுவரூபம் எடுக்கிறார்.

அப்பு பார்த்த சாதி, ஆசாரங்கள் எழுகின்றன. எவ்வளவு காட்டுமிராண்டித்தனமாகச் சாதியைப் பேணியிருக்கிறார்கள்.

கணேசநாதன் விடைபெறும்போது மெதுவாகச் சொன்னான்.

"அம்மான், நாங்க எல்லாரும் விரைவில் வலிகாமத்தை விட்டு ஓட வேண்டி வரும். யாழ்ப்பாணத்தை ஆமி கைப்பற்றும். நாங்க எல்லாரும் தென்மராட்சி, வடமராட்சிப் பக்கமாக இடம்பெயர நேரிடுமாம். இரகசியமாக இச்செய்தி பரவியிருக்கிறது. பலர் இப்பவே தென்மராட்சி, வடமராட்சிப் பக்கங்களில் வீடு பாக்கினமாம். பொடியளும் மெதுவாக அங்கால ஏத்துறாங்களாம்..."

எனக்குச் சிறிது கலக்கம் ஏற்பட்டது.

11

# தூண்டில்மீன்



சுடலையடி மீன் சந்தை வெகு காலமாகக் களையிழந்து விட்டது. கடற்றொழில் பாதிக்கப்பட்டதால் போதியளவு மீன் சந்தைக்கு வருவதில்லை. காலை வேளையில் மட்டும் மீன் பிடிக்க முடியும் என்பதால் பதினொரு மணிக்குப் பின்னர்தான் சந்தைக்கு மீன் வரும். மாலை நேரங்களில் வரும் மீன் கரையோர வீச்சு வலைகளில் அகப்பட்டவையாகவும் சிலவேளைகளில் பருத்தித்துறையிலிருந்து மோட்டார் சைக்சிளில் வந்து சேரும் மீன்களாகவும் இருக்கும்.

பின்னேர மீன் சந்தைக்கு இப்பொழுது வருகின்றவர்களின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது. சந்தைக்கு வருகின்ற சொற்ப மீன்களின் விலையும் அதிகரித்திருப்பதால் வாங்கும் திறன் மக்களிடம் இல்லை.

மரியாத்தை வெறும் கடகத்தின் மீது இட்ட தட்டில் செபஸ்தியான் பிடித்து வந்த பறிக்கூட்டு மீன்களைக் கொட்டிவிட்டு சுருடடொன்றை வாயில் வைத்துப் பற்றவைத்துக்கொண்டாள். செபஸ்தியான் அவள் அருகில் அமர்ந்து அவசரப்பட்டான்.

"எணை... எனக்கேதாவது தந்து முதலில் அனுப்பணை. தவறணை மூடப்போறான். அந்தா பார்..." எதிரில் சற்றுத் தள்ளியிருந்த கள்ளுத் தவறணையைச் சுட்டிக்காட்டினான். கும்பலுக்கு அங்கு குறைவில்லை.

தவறணைக்கு வந்த கள் முடிந்துவிடும் என்ற பயம் செபஸ்தியானின் அவசரத்தில் தெரிந்தது.

“உன்னோடு கொஞ்சம் கதைக்க வேணும் இரு செபஸ்தி.”

“கதைக்க வாறன். அங்க முடிஞ்சிடும். முதல்ல இருவது முப்பது ரூபா தா.”

“ஏன்ரா இப்படிக் கஷ்டப்பட்டு உழைக்கிறதை குடிச்சுத் தொலைக்கிறாய்?” என்றபடி முப்பது ரூபாவை எடுத்து அவனிடம் நீட்டினாள். அதனை வாங்கிக்கொண்ட அவன், அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவன் பார்வையின் அர்த்தம் அவளுக்குப் புரிந்தது. அவனுக்கு முப்பத்தைந்து வயது என்பது அவ ்குக்கு நன்றாகத் தெரியும் நாற்பத்தைந்து வயதுக் கோலத்தில் அவன் இருநதான். சவரம் செய்யாத தலையும், தாடி வளர்த்த முகமும், அவனை உருமாற்றியிருந்தன. எல்லாரையும்போல அவனும் ஒழுங்கான மனிதனாகத்தான் இருந்தான். தாழையடி அந்தோனியார் திருவிழாவிற்கு மனைவியுடனும், ஒரே குழந்தையுடனும் உல்லாசமாகப் பயணப்பட்டு திரும்பி வரும்போது தனியனாக வந்தான். தாழையடி விமானக் குண்டுவீச்சில் கண் முன்னால் மனைவியையும் பிள்ளையையும் பறிகொடுத்துவிட்டு நடைப்பிணமாகத் திரும்பி வந்தான்.

“எனக்கு இங்க என்ன இருக்கிறது? எல்லாம் போச்சுது” என்பான். கிராமத்தில் வீடு இருக்கிறது. அவன் தனிக்கட்டை. கரையில் வீச்சு வலையில் அகப்பட்டவற்றை விற்றுக் கிடப்பதை குடிப்பதற்கும், உயிர் எஞ்சுவதற்குச் சாப்பிடுவதற்கும் பாவித்தான். சொந்தமாக இருந்த வள்ளத்தையும் வலைகளையும் விற்றுவிற்றான். காசு தேவைப்படும் போது கடலில் இறங்குவான்.

செபஸ்தியான் மீண்டும் வந்து மரியாத்தையின் பின்னால் இடப்பட்டிருந்த கல்லில் அமர்ந்துகொண்டான். பனங்கள்ளின் நாற்றம் அவனில் இருந்தது. காறித் தூர ஒரு தடவை துப்பிவிட்டு ஒரு பீடியை வாயில் செருகிக்கொண்டு நெருப்புப்பெட்டிக்காக அவளிடம் கரம் நீட்டினான்.

மரியாத்தை நெருப்புப் பெட்டியை அவன் கரத்தில் கொடுக்கும் போது அவன் கேட்டான், “உவள் ஏன் அரளி விதை சாப்பிடப் பார்த்தவள்?”

“அழகம்மாவோ?”



"ஓமோம்... அவளும் என்னைப்போல ஒரு அநாதை. அதுக்காகச் சாகத் துணியிறதோ... நான் இவ்வளவு காலமும் இருக்கவில்லை?... என்ர கண் முன்னாலே என்ர ஆசை மனிசியையும், என்ர ஒரே புள்ளையையும் பறிகொடுத்திட்டிருக்கல..." அவன் அழுதான்.

"நானும் அப்பவே செத்திருக்கலாம். எனக்குத் துணிச்சல் வரேல்ல. அழகம்மா துணிச்சல்காரி..."

"விசர்க்கதை, செபஸ்தி, அப்படி எல்லாரும் முடிவெடுத்தால் இந்த உலகத்தில அதுவும் யாழ்ப்பாணத்தில ஆக்கள் இராது. சாகிறதுதான்... அதுக்காக துயரங்களைக் கண்டு பயந்து, ஒளிந்து சாகக்கூடாது. எனக்கு இப்ப எத்தனை வயது? வாழத்தான் இப்பவும் விரும்புறன்... வாழ வேணும்... இஞ்ச பார் செபஸ்தி, கடந்தவையை மறந்துவிட்டு வாழப் பழகு..."

"இனியோ? என்னைப் பாரணை... எனக்கு இனி வாழ்க்கையோ? எத்தனை பேர் எனக்குக் கல்யாணம் பேசி வந்தினம். என்னால சம்மதிக்க

முடியல்லை. அந்தோனியார் கோயிலடியில் எவ்வளவு ஆர்வமாகச் சுற்றித் திரிந்தாள். அவளும் பிள்ளையும் கேட்ட அத்தனையையும் ஆசையாக வாங்கிக் கொடுத்தன். அண்டைக்கு மட்டும் குறைஞ்சது அஞ்சு ஐஸ்கிரீம் குடிச்சிருப்பாள் சின்னப்பிள்ளை போல. கணப் பொழுதில் போயிட்டாள் பிள்ளையோட...''

செபஸ்தியான் விம்மி விம்மி அழுதான்.

''அழாதையடா ஆக்கள்...''

வாடிக்கையாளர் ஒருவ்ர் மரியாத்தையிடம் மீன் வாங்கிக் கொண்டார். அவர் நகர்ந்ததும் செபஸ்தியானை அவள் திரும்பிப் பார்த்தாள்.

''அழகம்மாவைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

அவன் மரியாத்தையைக் கேள்விக்குறியுடன் பார்த்தான்.

''ஏன் கேக்கிறாயணை?''

''சும்மா சொல்லு...''''

''நல்ல ஒழுங்கான பெட்டை. வேறை ஆக்கள் என்றால் அவளுக்கிருக்கிற அழகுக்கு எத்தனையோ பேருக்கு பாய் விரிச்சிருப் பினம். அவள் அடக்கமாக நெருப்புப்போல இருக்கிறாள். இவ்வளவு உதவிகள் செய்தும்கூட லூசியனால் அவளை நெருங்க முடியவில்லை.''

மரியாத்தை அவசரமாகக் குறுக்கிட்டாள்.

''லூசியனை அப்படிச் சொல்லாதை. அவனுக்கு அப்படியொரு எண்ணமில்லை. அவனை எனக்குத் தெரியும். அவன் அந்தக் குடும்பத்திற்குச் செய்யிற உதவிகளுக்கு அவன் ஒருபோதும் பிரதியுபகாரம் எதிர்பார்க்கிறவனல்லன். உதவுறது தன்ர கடமை எண்டு நினைக்கிறவன்...''

''ஓமோம் ஆத்தை. எனக்கு அது தெரியும். தரகியர்தான் வாங்கிக் கட்டிக்கொண்டார். அழகம்மா இப்படியே இருக்கப் போறாளாமோ? யாரையாவது பார்த்துக் கட்டிக் கொண்டால் என்ன?''

மரியாத்தை போட்ட தூண்டிலில் சரியாக இரை கவ்வப்படுகிறது.

''அழகம்மாவிற்கு யார் இருக்கினம்... என்னைத் தவிர. அவள் இப்பவும் லூசியனைத்தன் அண்ணனாகத்தான் நினைக்கிறாள். அவளுக்கு அப்படியொரு தப்பான எண்ணம் இல்லை. தன்னால

அவனுக்கு அவப்பெயர் வந்திட்டுது என்றதாலதான் மருந்து குடிக்கப் பார்த்தாள். விசர்ப்பெட்டை. அவள் கௌரவமாக வாழத்தான் விரும்புகிறாள். கொஞ்ச வயதுதானே? யார் அவளைக் கட்டுவினம்? எல்லாருக்கும் அவளில் கண்தான். ஆனால், அவளையும் இரண்டு பிள்ளைகளையும் முறைப்படி ஏற்க இந்தக் கிராமத்தில் எவன் இருக்கிறான்? லூசியன் கலியாணம் செய்யாதவனாக இருந்தால் நிச்சயம் ஏற்றிருப்பான்...''

மரியாத்தை செபஸ்தியானை ஏறிட்டாள். செபஸ்தியான் திக்கித்துச் சிந்தனையில் ஆழ்ந்திருப்பது தெரிந்தது.

சோகத்தோடு சடலத்தைக் காவிக்கொண்டு கோம்பயன்மணல் கடலைக்குச் சென்றவர்கள் தகனம் செய்துவிட்டுச் சிரித்துப் பேசிக் கொண்டு திரும்பி வந்தார்கள். அவர்களில் சிலர் கள்ளுத் தவறணைக்குள் நுழைந்து கொண்டனர்.

“வாழ்க்கையடா செபஸ்தி, ஒருவரின் மரணத்துடன் முடிந்து விடுவதில்லை.''

அவன் எதுவும் பேசவில்லை. தலையைத் தன்னிரு கரங்களிலும் ஏந்திக்கொண்டான். தலை ‘விண் விண்’ணெனக் கனத்தது. பேசா திருந்தான். மரியாத்தை அவனை அப்படியே யோசனையுடன் இருக்க விட்டுவிட்டு மீனை விற்று முடித்தாள். அதுவரை அவன் எதுவும் பேசவில்லை. தனிமை அவனை மிக வருத்தி விட்டது உண்மைதான். வாய் இனிக்கச் சாப்பிட்டுப் பல வருடங்களாகிவிட்டன. இப்படியே நடைப்பிணமாக உலாவி அழிந்து போகத்தான் வேணுமா?

கடகத்தைத் தூக்கி தலையில் வைத்தபடி மரியாத்தை கிராமத்தை நோக்கி நடக்க அவன் அவளைப் பின் தொடர்ந்தான். வெகு நேரம் இருவரும் பேசிக்கொள்ளவில்லை.

மேற்கில் சூரியன் மறைந்து கொண்டிருந்தான். வானம் செக்கராகத் தெரிந்தது. கடல் அமைதியாகக் கிடந்தது, ஊரின் துயர நெஞ்சம் போல.

கடற்கரை வீதியில் திரும்பியபோது செபஸ்தியான் கேட்டான்.

“நீ இப்ப என்ன ஆத்தை செய்யச் சொல்கிறாய்?''

“அழகம்மாவைக் கட்டிக்கொள் என்கிறன்...''

அவன் அப்படியே வீதியில் நின்றுவிட்டான். மனதில் இனந் தெரியாத உணர்வுக் கொந்தளிப்பு.

"அவள் சம்மதிப்பாளா?..."

மரியாத்தையின் முகம் மலர்ந்தது.

"செபஸ்தி... அவள் சம்மதிப்பாளடா. அவளை எனக்குத் தெரியும் நீ ஓமெண்டால் மற்றதை நான் பார்க்கிறன்."

"சரி ஆத்தை..." என்றான் அவன்: "நான் இனிக் குடிக்க மாட்டேன் எண்டு அவளிடம் சொல்லு..."

மரியாத்தை அழகம்மாவின் குடிசைக்குள் ஆவலுடன் நுழைய அவன் அப்படியே நடந்து சந்திக்கு வந்தான். சலூனைப் பூட்டிக்கொண்டு சிவலிங்கம் புறப்பட ஆயத்தமாகிறான்.

"தம்பி, சிவலிங்கம் எனக்கொருக்காத் தலைமயிர் வெட்டி.... சேவ் எடுத்துவிடு..."

சிவலிங்கம் அவனை வியப்புடன் பார்த்தான்.

"மெய்யாத்தானோ?"

"ஓமடா..." என்றான் செபஸ்தியான் வெட்கத்துடன்.

"நேரம் போனாலும் பரவாயில்லை. உங்களுக்கு வெட்டிப் போட்டுத்தான் கடையைப் பூட்டப் போறன். என்ன அண்ணை, ஏதாவது விசேஷமோ?"

செபஸ்தியான் மகிழ்ச்சியுடன் சிரித்தான். அவன் அப்படி மலர்ந்து சிரித்ததை சிவலிங்கம் எப்பொழுதும் கண்டதில்லை. வீதியில் போகும்போது விசரன்போல தன்பாட்டுக்குச் செல்லும் செபஸ்தியான், நினைத்த போது வீச்சு வலையுடன் கடலில் இறங்கும் செபஸ்தியான், குடிவெறியுடன் தன்பாட்டிற்கு அலையும் செபஸ்தியான் இன்று முகம் மலர்ந்து சிரிப்பது வியப்பாக இருந்தது.

செபஸ்தியானுக்குத் தன்னையே நம்பமுடியவில்லை. சடை பற்றிக் கிடந்த தலைமயிர் சீராக வெட்டப்பட்டு அரும்பு மீசையுடன் முகம் களைகட்டியிருந்தது. அவனால் நம்பமுடியவில்லை. 'தான்தானா?' என்ற சந்தேகம் வந்தது. கண்ணாடியில் ஆழமாகப் பார்த்துக் கொண்டான்.

"என்ன விசயம் அண்ணை...?"

"தெரியவரும்தானே? இந்தா பிடி காசை..."

"அண்ணை மெய்யாத்தான் எனக்கு வேண்டாம். உங்களை இந்தக் கோலத்தில பார்க்கிறது எனக்குச் சந்தோசமாகவிருக்கிறது."

சிவலிங்கம் காசை வாங்கிக் கொள்ளவில்லை. அவன் எவ்வளவு வற்புறுத்தியும் மறுத்துவிட்டான்.

"சரியடா..."

செபஸ்தியானின் கோலம் எதிரில் வந்தவர்களுக்கு வியப்பைக் கொடுத்தது. அவனை அர்த்தத்துடன் பார்த்தனர். அவன் தன் வீட்டுக்கு வந்து கதவைத் திறந்து பக்கத்து வீட்டு ஆசீர்வாதத்தையும் அவன் மனைவியையும் உரிமையுடன் கூப்பிட்டு, "ஒருக்கா என்ரை வீட்டைத் துப்பரவாக்கி விடு தங்கச்சி..." என்று கூறியதும் அவர்களின் வியப்பு பன்மடங்காகி விட்டது.

"என்ன அண்ணை விசேஷம்?"

அவன் எதுவும் சொல்லவில்லை. சிரித்து மழுப்பிவிட்டுக் குளிப்பதற்காகக் கிணற்றடிக்குச் சென்றான். ஆசீர்வாதமும் அவன் மனைவியும் வீட்டைக் கூட்டித் துப்புரவாக்குவதில் ஈடுபட்டனர். அயலட்டை இந்தப் புதினத்தைப் பார்க்கக் கூடிவிட்டது.

அப்பொழுது மரியாத்தை அங்கு வந்தாள்.

விசயம் அம்பலமானது.

"செபஸ்தி அண்ணைக்கு கலியாணம்... கலியாணம்..." என்ற செய்தி படுவேகமாகக் கிராமமெங்கும் பரவியது.

செபஸ்தியான் ஆவலோடு மரியாத்தையின் முகத்தைப் பார்த்தான்.

"ஓமெண்டிட்டாள். கரும்பு தின்னக் கூலியாடா? அழகம்மா கொடுத்து வைத்தவள்... உண்மையாகத்தான் செபஸ்தி, உன்னைக் கணவனாக அடைய அவள் கொடுத்து வைத்தவள்."

12

# ஏமாற்ற இருள்



கடற்கரை வீதியில் மெதுவாக நடந்து கொண்டிருக்கும் லூசியனின் மனதில் குழப்ப மான சிந்தனைகள் ஆக்கிரமித்திருந்தன. காவற்றுறையினர் அவனை விசாரித்து எச்சரிக்கை செய்துவிட்டு அனுப்பி விட்டனர். லூசியனை பங்கரில் இடவில்லையென்பதில் தரகியர் செல்லையாவுக்கு மனத்தாங்கல்தான்.

“இனிமேல் ஒரு சோலிக்கும் போகக் கூடாது. செல்லையாண்ணை நீங்கள் அழகம்மா வீட்டுப்பக்கம் போகக்கூடாது. லூசியனும் அப்படித் தான். கிராமத்தில் வீண் சண்டை சச்சரவை ஏற்படுத்தக்கூடாது. ஏதாவது நடந்தால் இரண்டு பேரையும் உள்ளுக்கு போட்டிடுவம்” காவற்றுறையில் ஒரு பதினெட்டு வயது இளைஞன் எச்சரித்து அனுப்பி விட்டான்.

வெளியில் வரும்போது செல்லையா, “உன்னை நான் பார்க்கிற இடத்தில பார்த்துக் கொள்கிறன்” என்று லூசியனை எச்சரித்தான். தரகியரின் எச்சரிக்கையை அவன் பரவாய்ப் பண்ணவில்லை. ஆனால் அவனால் அழகம்மாவுக்கும் தொடர்ந்து பிரச்சினைகள் உருவாகலாம் என அவன் பயந்தான்.

ஆனைக்கோட்டைக்கு ஓர் அலுவலாய் போய்விட்டு வரும்போது அழகம்மா குடிசையில் அவலக்குரல் கேட்டது. சைக்கிளை வீதியில்

போட்டுவிட்டு உள்ளே ஓடிச்சென்றான். இப்படிச் செல்லையா அவளைக் கைகளில் பற்றிப் பலாத்காரம் செய்யும் நிலையில் நிற்பானென லூசியன் எதிர்பார்க்கவில்லை. எட்டிப்பிடித்து அறைந்த போது செல்லையா நல்ல வெறியில் இருந்தான். ஓர் அறையோடு வெறி முறிந்துவிட்டது. அப்பொழுதுதான் அவனுக்கு நடந்தது புரிந்தது.

செல்லையாவின் வாய் மிகக்கூடாது. அதனால் லூசியனிடம் நன்றாக அறை வாங்கிக் கொண்டான். லூசியன் அவனை அப்படியே கட்டாகத் தூக்கி வந்து கடற்கரை வீதியில் எறிந்து விட்டான். மாநகர சபைக் குப்பைக்குள் செல்லையா கிடந்தான்.

இப்பொழுது நினைத்தாலும் தானா அப்படி அவனைத் தூக்கி உதைத்துத் தூக்கி வெளியில் எறிந்தது என்பது லூசியனுக்கு வியப்பாகவே இருக்கின்றது.

அழகம்மா அவனைப் பார்த்து விம்மிவிம்மி அழுதாள். அழுகைக்கிடையே "பாவி என்னிடம் வந்து இப்படி நடந்திட்டான். என்னைத் தன்ர வைப்பா இருக்கட்டாம். பார்க்கிறானாம். நான் மறுத்தன். விடமாட்டன் எண்டு..." கூறினாள்.

"அழாதை அழகம்மா அவன் இனி வரமாட்டான்."

"அவன் வருவான். இனி நான் இங்க வாழமுடியாது. என்ர பிள்ளையளுக்கும் எனக்கும் சாகிறதைத் தவிர வேறு மார்க்க மிருப்பதாகத் தெரியவில்லை. என்னால் உங்களுக்கு வீண் அவமானம். உங்களோட சேர்த்து வைச்சுப் பேசுறான். 'நீ சைவம், வேதக்காரனோட உனக்கென்ன தொடுப்பு?' எண்டு கேட்கிறான். என்ர மனிசன் செத்த பிறகு எனக்கு அவங்கள்தான் சொந்தம் பந்தம் எல்லாம், அப்பவெல்லாம் நீங்கள் எங்க போனியள்? எண்டன்" அவள் குமுறினாள்.

மரியாத்தை வந்ததும் லூசியன் சைக்கிளை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான். அதற்குள் கதை வேகமாகப் பரவிவிட்டது. வதந்திகள் சிறகடித்தன.

லூசியனின் மனைவி றோசம்மா அவனிடம் நடந்து கொண்ட முறை அவனுக்கு இப்பவும் நம்மமுடியாமல் இருக்கிறது.

"ஏன் செல்லையாவைக் கைநீட்டி அடிச்சியள்? சும்மா விலக்குப் பிடிச்சு விட்டிருக்கலாமே? அல்லது பேசி விட்டிருக்கலாமே? இரண்டு பகுதிகளுக்கிடையில் வெட்டுக்குக் கொத்தெல்லே இதால வரப்போகுது.

மூண்டு வரியத்துக்கு முதல் இப்படி இரண்டு பகுதியும் மோதிக் கொண்டதை மறந்திட்டியள். இரண்டு பக்கத்திலும் ஒவ்வொருவர் சரிந்த பின்தான் கலவரம் அடங்கியது. இப்ப உங்களால் மீண்டும் வந்திட்டால்...”

அவன் மனைவியை ஆதரவாகப் பார்த்துக் கூறினான். “நான் என்ன செய்ய? அந்த நேரத்தில என்ன செய்தன் எண்டு எனக்குத் தெரியவில்லை. நீ என்னைச் சந்தேகப்படுகிறாயா றோசம்?”

“சீச்சி... அப்படியல்ல. உங்களை எனக்குத் தெரியாதா? நாங்கள் ஒருத்தரையொருத்தர் நல்லாப் புரிஞ்சுகொண்ட பின்னர்தான் கலியாணம் செய்தம். ஊரார் எப்படிக் கதைச்சாலும் நான் நம்பமாட்டன்.”

“என்ன கதைக்கினம்...?”

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். பின்னர் சிரித்தாள்.

“நீங்கள் அழகம்மவை வச்சிருக்கிறியளாம்...”

“விசர்க் கதையள்...”

“எனக்குத் தெரியும். கார்த்தியன் எங்களுக்காக எங்கட வள்ளத்தில வேலை செய்தான். அவன் செத்ததிலிருந்து நீங்கள் அந்தக் குடும் பத்துக்கு உதவி வாறியள். நான் எப்பவாவது தடுத்திருக்கிறேனா? கேட்டிருக்கிறேனா? எனக்கு உங்களைத் தெரியும். என்னுடைய நினைப்பயையும் மீறி நீங்கள் அவளை வைச்சிருந்தால் கூட நான் அதைப் பிழை எண்டு சொல்லமாட்டன்...”

அவன் துடித்துப்போய் அவளைத் தன்னுடன் அணைத்துக் கொண்டான். கணவனின் தோளில் பூரிப்புடன் தலையைப் புதைத்தபடி அவள், “நான் சும்மா சொன்னனான்” என்றாள் பரவசத்துடன்.

“றோசம்மா நான் எப்பவும் துரோகம் செய்ய மாட்டன்” என்றான் அவன்.

இப்பொழுது மேற்கு வானில் கதிர்கள் ஒடுங்குகின்ற வேளையில் வீதியில் நடக்கும்போது அழகம்மாவின் நினைவு மேலோங்கித் தெரிகிறது. அவன் மனம் சற்றுச் சலனப்படத் தொடங்கியிருந்தது. அழகம்மாவின் இளமையும் கவர்ச்சியும் தன்னை றோசம்மாவிற்குத் துரோகம் செய்ய வைத்துவிடலாம் என அச்சப்பட்டான்.

“அழகம்மா இனிமேல் தனிய இருக்கிறது நல்லதல்ல. கொஞ்ச வயசுதானே. அவளுக்கு ஒரு கலியாணத்தைக் கட்டி வைச்சிட்டால்

பிரச்சினையில்லை. நீங்கள் ஓமெண்டால் உங்களுக்கே அவளைக் கட்டி வைச்சிடுவன். என்னால் இனி உங்களுக்கு ஈடுகொடுக்க முடியாது...'' என்று றோசம்மா கலகலவெனச் சிரித்தாள். உண்மையாகச் சொன்னாளோ, பேச்சுக்குச் சொன்னாளோ தெரியவில்லை. அவன் கோபத்துடன் அவள் முதுகில் ஓங்கி அறைந்துவிட்டான்.

'நீங்கள் ஓமெண்டால் உங்களுக்கே அவளைக் கட்டி வைச்சிடுவன்' என்ற றோசம்மாவின் குரல் காதுகளில் ஒலிக்கிறது. பேச்சுக்காகச் சொன்னாளோ? அல்லது தன்னை ஆழம் பார்க்கிறாளோ?

திண்ணைப் கப்பைப் பிடித்தபடி அழகம்மா நின்ற அழகு அவனுக்கு நினைவு வருகிறது. கட்டுக் குலையாத தேகம். வறுமையில் மெலிந்து கயிறுபோல இருந்தாலும் அவள் உடலின் மேடு பள்ளங்கள், வளைவுகள் அவனை இப்பொழுது போதை கொள்ள வைத்தன. அவனுக்குத் தன்னை நினைக்க வெட்கமாக இருந்தது. சீச்சி... என்ன மனம்? வெட்கமில்லாமல் இன்னொருத்தன் மனைவியை எண்ணுகிறது... எனக்காக ஒருத்தி இருக்கும்போது... ஓ... றோசம்மா எவ்வளவு உயர்ந்த பண்பினள். அவளுக்கு ஒருகாலும் துரோகம் செய்யக்கூடாது.

வயது வந்த மகனும், மகளும் இருக்கும்போது இப்படியான தப்பெண்ணம் மனதில் வந்திருக்கக்கூடாது. மகனின் வயதில் அவன் கலியாணம் கட்டியிருந்தான். படிப்பை இடைநடுவில் குழப்பிக்கொண்டு றோசம்மாவைக் கட்டிக்கொண்டான். கையில் தொழில் இருந்தது. பிரச்சினை இருக்கவில்லை.

அவன் காக்கைத்தீவு மட்டும் நடந்துவிட்டுத் திரும்பி வந்தான். வரும்போது பொம்மைவெளி வீதியில் மரியாத்தையும் செபஸ்தியானும் நடந்து வருவது தெரிந்தது. அவர்களுக்காகக் காத்திருக்காமல் அவன் நேராக நடந்து பிள்ளையார் கோயில் முன்றலுக்கு வந்தான்.

நான் இப்பொழுதுதான் கும்பிட்டுவிட்டு கோயில் வெளி மண்டபத்தில் அமர்ந்திருந்தேன். செல்லையாவின் ஆட்கள் சிலர் கோயிலடியில் நிற்பது தெரிந்தது. என்னைக் கண்டதும் அவன் என்னை நாடி வந்தான். அவன் என்னை நோக்கி வருவதைக் கண்டவுடன் நான் எழுந்து அவனை நோக்கிச் சென்றேன்.

“வா லூசியன். போய்க்கொண்டே கதைப்பம்...''

அவனை அவ்விடத்திலிருந்து விலத்திக் கூட்டிச்செல்ல விரும்பினேன்.

செல்லையாவின் ஆட்கள் கோயிலடியில் நிற்பதை நான் கவனித்திருந்தேன். ஒன்றும் நடக்கப் போவதில்லை. சில வேளை களில் வாய்த்தர்க்கம் ஏற்படலாம். கைகலப்பாகவும் மாறிவிடலாம். செல்லையா பகுதியில் இன்னமும் சாம்பல் பூத்த கனலாகத்தான் நிலைமை இருக்கிறது.

"வீண் சோலி கரட்டுக்குப் போகாதையடா தம்பி!"

"நான் போகவில்லை அம்மான். அவன்தான்."

"எனக்கு எல்லாம் தெரியும். பெண் பிரச்சினை எதையும் செய்ய வைச்சிடும் லூசியன்..."

வீட்டில் லூசியன் வெகுநேரம் எங்களுடன் பேசிக்கொண் டிருந்தான். ராகுலன் அவர்களின் பேச்சில் கலந்து கொண்டான். யோகம் வழங்கிய தேநீரைப் பருகிவிட்டு லூசியன் வீட்டுக்குப் புறப்பட்டபோது இருள் கவிந்திருந்தது.

"வாறன் அம்மான்" என்று லூசியன் புறப்பட்டபோது, ராகுலன், "நானும் கூட வாறன் அண்ணை" என்றான்.

"வேண்டாம் தம்பி. நான் போயிடுவன் எனக்குப் பயமில்லை."

"அதுக்கில்லை. அப்புவையும் உங்களையும் தொடர்ந்து கோயிலடியிலிருந்து வந்த கனரகத்தினமும் தங்கராஜாவும் இன்னமும் திரும்பிப் போகவில்லை அதனாலதான்... நான் வாறன்."

எனக்குப் பேரனின் வார்த்தைகள் சரியாகப் பட்டன.

"வீட்டில விட்டிட்டு வா, ராகுலா. நீ போனால் அவையள் பேசாமல் நழுவி விடுவினம்."

லூசியனுக்குக் கவலையாக இருந்தது. காவற்றுறை விசாரணையுடன் பிரச்சினை தீர்ந்து விடவில்லை. செல்லையா அவனுக்கு அடிகாயம் ஏற்படுத்தாமல் விடமாட்டான் போலத்தான் இருக்கிறது. அவன் அவர்களுக்குப் பயப்படவில்லை. ஆனால், கிராமத்தில் சாதிக் கலவரமாக மாறிவிடக்கூடாது எனப் பயந்தான். செல்லையாவிடம் "அண்ணை, நான் அடிச்சது பிழை, மறந்திடுங்க" என்று கேட்கலாம். அப்படிக் கேட்டால் யாருமற்ற பெண்ணின் கரத்தைப் பற்றி இழுத்ததை நியாயப்படுத்தியதாக முடிந்துவிடும். அவன் பிழை செய்யவில்லை. அவ்வளவுதான்.

அவர்கள் வீதியில் இறங்கி நடந்தனர். ஒழுங்கை ஒன்றின் இருளில் சில உருவங்கள் தெரிந்தன. ராகுலன் பெரிதாகக் குரல் தந்து பேசினான்.

"அண்ணை, அன்ரனி ஏ.எல். எடுத்திட்டார். இனி என்ன செய்யப் போறாராம்? தொடர்ந்து படிக்க விடுங்கோ..."

ராகுலன் குரல் மந்திரமாக செயற்பட்டது. ஒழுங்கை முகட்டில் நின்றவர்கள் அப்படியே விரைந்து நடந்து இருளில் மறைந்து போயினர்.

இயக்கப் பையன்களுக்கு இந்தச் சமூகம் எவ்வளவு மரியாதை கொடுக்கிறது என்பதை லூசியன் தெரிந்து கொண்டான்.

லூசியன் வீட்டை அடைந்தபோது அவனது மனைவி அலங்காரமாக எங்கோ வெளியில் புறப்பட ஆயத்தமாக நின்றிருந்தாள். அவனைக் கண்டதும், "எங்கையப்பா, போயிட்டியள்? உங்களுக்காகத் தான் காத்திருக்கிறன். கெதியில் உடுப்பை மாத்திக் கொண்டு புறப் படுங்கோ..." என்று அவசரப்படுத்தினாள்.

"ஏன்... எங்க இப்படி அவசரமாக... கலியாணத்துக்குப் போறது மாதிரி வெளிக்கிட்டு நிக்கிறீர்..."

"கலியாணத்துக்குத்தான் அப்பா..." என்றாள் மகள் பிலோமினா. உள்ளுக்குள் இருந்து அவள் வெளியில் வந்தவள், தகப்பனுடன் ராகுலனைக் கண்டதும் உள்ளே போகப் பார்த்தாள்.

"அது ராகுலன், பிலோ!... வா தம்பி..." என்று அவனை லூசியன் உள்ளே அழைத்தான்.

"ஆருக்குக் கலியாணம்?"

"தெரியாதோ?"

"ஆவலைத் தூண்டாமல் கெதியாய்ச் சொல்"

"செபஸ்தியானுக்குத்தான்..."

அவன் விழிகள் விரிந்தன.

"ஆர் பொம்பிளை?"

"அழகம்மா. இரவைக்குச் சோறு கொடுக்கப் போகினம், மரியாத்தைதான் சொல்லி அனுப்பியிருக்கிறா.

அவன் சில கணங்கள் அப்படியே திக்கித்து நின்றிருந்தான். முகம் கழுவக் கிணற்றடிக்குப் போய நீரை அள்ளி முகத்தில் ஊற்றிக்கொண்ட போதும் இதயத்தின் ஒரு பக்கம் வலித்தது. செபஸ்தியன் மீது இனந்தெரியாத பொறாமை ஏற்பட்டது. 'கொடுத்து வைத்தவன்' எனத் தனக்குள் கூறிக்கொண்டான். ஏமாற்றம் அவனில் கவியத் தொடங்கியது. தன்னை மறுகணம் சமநிலைப்படுத்திக் கொண்டான். விறுவிறென முகத்தைக் கழுவினான்.

"கெதியாக வாருங்கோ..." என்று றோசம்மா குரல் தந்தாள். அவள் குரலிலும் என்றுமில்லாத நிம்மதியும் திருப்தியும் இருப்பதாக அவனுக்குப் பட்டது.

## 13

# மனதுள் புகுந்த கள்ளம்



**கா**லையிலிருந்தே சோனாவாரியாக மழை பொழியத் தொடங்கியிருந்தது. வெள்ளம் வீதிகள், ஒழுங்கைகளூடாக ஓடிக் கொண்டிருந்தது. கனத்த மழை, தொடர்ந்து பெய்து தான் ஓயும் என நான் எண்ணிக் கொண்டேன்.

"மாரி தொடங்கி விட்டது..."

வானம் இரண்டுபடும் போல மின்னல்கள் கிளைவிட்டுப் பாய்ந்தன. பலத்த இடிச்சத்தம் காதுகளைச் செவிடாக்கும் வகையில் ஒலித்து. இவற்றோடு வடக்குப் பக்கமாகப் பலாலி இராணுவம் யாழ்ப் பாண நகரத்தை நோக்கி முன்னேறத் தொடங்கிவிட்டதென்ற செய்தி பரவி யிருந்தது. குண்டுகள் வெடிக்கின்ற சத்தங்கள் இடியோசையை மீறிக் காற்றில் பரவி வந்தன.

"ஆமி யாழ்ப்பாணத்துக்கு வரப் பெடியள் விடமாட்டினம்" என்று எனக்கு மூக்குப்பேணியில் தேநீர் வழங்கும்போது தையல்முத்தாச்சி கூறித் திருப்தப்பட்டுக்கொண்டாள். அந்த நம்பிக்கை எனக்கும் இருந்தது.

எல்லா அலுவல்களும் யாழ்ப்பாணத்தில் வழமைபோல நடந்து கொண்டிருந்தது. கந்தசஷ்டி இறுதிநாள் பூசை கோயில்களில் நடந்து

கொண்டிருந்தது. யாழ்ப்பாணக் கந்தோர்கள் எல்லாம் இயங்கின. பாடசாலைகள் நடந்தன.

யாழ்ப்பாணத்தை நோக்கி இராணுவம் நகரத் தொடங்கிவிட்ட தென்ற செய்தி யாழ்ப்பாண மக்களை அவ்வளவு தூரம் பாதிக்கவில்லை.

'என்னதான் தலைகீழாக நிண்டாலும் கட்டுவனைக் கடக்க முடியாது' என்ற என் திடமான நம்பிக்கை அன்று நண்பகல் தரை மட்டமாகியது. கோண்டாவிலிலிருந்து ஜெயாவும் பிள்ளைகளும் லாண்ட் மாஸ்ரர் ஒன்றில் அவசியமான பொருள்களை ஏற்றிக்கொண்டு என் வீட்டு வாசலில் வந்திறங்கியபோது என் நம்பிக்கை தகர்ந்து போனது.

"கோண்டாவிலில் இருக்கமுடியாது மாமா. ஷெல்கள் உரும்பிராயைக் கடந்து வருகின்றன. கோண்டாவில் சந்தியில் இரண்டு விழுந்து வெடிச்சிட்டுது. பொடியளின்ர காம்ப் வேறு பக்கத்தில் இருக்குது. உரும்பிராய்ச் சனங்கள் வீடு வாசல்களை விட்டு வெளியேறத் தொடங்கி விட்டினம். அங்க இருந்து என்ர பிள்ளையளைப் பறிகொடுக்க நான் தயாராகவில்லை. இந்திய ஆமி வரேக்க செய்த தவற்றினை செய்ய மாட்டன். அதுதான் வந்திட்டன், மாமா."

பிள்ளைகள் பயந்து போய் நின்றிருந்தனர்.

"ஒண்டுக்கும் பயப்பிடவேண்டாம், பிள்ளையள், வாருங்கோ. இங்க பயமில்லை... உள்ளுக்கு வாருங்கோ..."

எல்லாரும் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்.

"கண்டபாட்டிற்குக் குண்டுகளை வீசிக்கொண்டு வாறான்கள். கோப்பாய்ச் சந்திக்கு வந்திட்டான்கள் எண்டு கேள்வி. யாழ்ப் பாணத்துக்கு வராமல் விடமாட்டான்கள் என்கினம். கோண்டாவில் காம்ப் எல்லாத்தையும் ஏத்திக்கொண்டு தென்மராட்சி போறான்கள். எங்கட வீட்டிற்குப் பக்கத்திலிருக்கும் காம்பை அப்படியே பிடுங்கிக் கொண்டிருக்கிறான்கள். அவங்களே இடம் மாறேக்க... நாங்க எம்மட்டு, மாமி?" ஜெயா விவரித்தாள்.

மருமகளுக்கு தையல்முத்தாச்சி ஆறுதல் கூறினாள்.

"மழையில் நனைஞ்சு போனியள். தலையைத் துடையுங்கோ... உடுப்புக்களை மாத்துங்கோ..." என்றபடி கடைசிப் பேரனை அருகில் இழுத்துத் தன் சேலைத் தலைப்பால் அவன் தலையைத் துடைத்து விட்டாள்.

என் விழிகள் சுவரில் மாட்டியிருந்த கலண்டரில் பதிந்தது. ஒக்டோபர் 30-1995.

நண்பகல் கழிந்திருந்த வேளையில் வெளியிலிருந்து ராகுலன் வந்தான். அவனை ஒரு மோட்டார் சைக்கிளில் இருத்தி ஓர் இளைஞன் அழைத்து வந்திருந்தான். அவன் முகம் வாடியிருந்தது.

இங்கு வருவதற்கு முதல் அவன் லூசியன் வீட்டுக்குச் சென்றிருந் தான். வாசலில் நின்றபடி மோட்டார் சைக்கிள் ஹோர்ண் இரைந்தது. வீட்டிற்குள்ளிருந்து பிலோமினா வெளியில் ஓடி வந்தாள். அவர்கள் இருவர் மோட்டார் சைக்கிளில் அமர்ந்திருப்பதைக் கண்டு "அப்பா இல்லை. அம்மாவும் இல்லை" என்றாள் தட்டுத் தடுமாறி.

அவள் விழிகள் ஒருகணம் ராகுலனில் மொய்த்தன. அவன் அவளை ஆவலுடன் பார்த்தான். சில கணங்கள் அவளால் எதுவும் பேச முடியவில்லை.

"லூசியன் அண்ணரிடம் சொல்லுங்கோ நான் வந்ததாக. நான் போகப் போறன் எண்டு சொல்லுங்கோ..."

"எங்க...?" என்ற அவள் பயத்துடன் கேட்டாள்.

"இனி நீங்க போகமாட்டியள் என்று அப்பா சொன்னார்..."

ராகுலனின் நெஞ்சில் வலி கண்டது. அவனும் பிலோமினாவும் ஒரே பாடசாலையில் ஆரம்பக்கல்வி கற்றிருந்தார்கள். அவள் அவனுக்குப் புதியவளல்லள். சிறு வயதில் அவர்கள் ஒருவருடன் ஒருவர் பாடசாலையில் சேர்ந்து விளையாடியும் இருக்கிறார்கள். சண்டையும் பிடித்திருக்கிறார்கள். அவன் இயக்கத்திற்குப் போன பின்னர் அன்றுதான் பிலோமினாவைச் சந்தித்தான். அவள் இப்படி அழகாக வளர்ந்து மலர்ந்து நிற்பாளென அவன் எதிர்பார்க்கவில்லை.

"நான் போகத்தான் வேணும்... வாறன், பிலோ" என்றான் மெதுவாக. அவள் பெயரை அவன் வாத்சல்யத்துடன் உச்சரித்தான்.

"கவனம்..." என்றாள் அவள் கலங்கிய விழிகளுடன், இப்படி யொரு உறவு முடிச்சு தன் வாழ்வில் விழும் என ராகுலன் ஒருபோதும் எண்ணியவனல்லன். அப்புதான் அவன் மனதைக் குழப்பிவிட்டார். அவளைப் பற்றி எண்ணுவதற்கே இவ்வளவு இனிமை இருக்கிறதா? அவளுடன் இரு வார்த்தைகள் பேசுவதில் இவ்வளவு நிம்மதியும் திருப்தியும் இன்னும் கொஞ்ச நேரம் பேசவேண்டுமென்ற அடங்கா ஆசையும் ஏற்பட முடியுமா?

லூசியனிடம் சொல்லிக்கொண்டு போகவா வந்தான்? இல்லை, அவளிடம் கூறி விடைபெறத்தான் வந்தான்.

"என்ன மச்சான் இப்படியொரு விசயம் இருக்கிறதா?" என்றான் மோட்டார் சைக்கிளை ஓட்டிய சத்தியன்.

"போடா..."

அவர்கள் வீட்டிற்கு வந்தபோது கோண்டாவிலிருந்து ஜெயா குடும்பத்தினர் இடம்பெயர்ந்து வந்திருந்தனர். ராகுலனின் முக வாட்டத்தை நான் அவதானித்தேன். யோகம் அவனிடம் விரைந்து வந்தாள்.

"அம்மா, போயிட்டு வாறன்..."

யோகம் திடுக்கிட்டுவிட்டாள். இனி ராகுலன் செல்ல மாட்டான் என எண்ணிய எண்ணம் தவிடுபொடியாகியது. நான் ஏக்கத்துடன் பேரனைப் பார்த்தேன்.

"நான் போகத்தான் வேணும். யாழ்ப்பாணத்துக்கு ஆமி வரும்போது நான் இங்க இருக்க முடியாது."

"ஆமி யாழ்ப்பாணத்துக்கு வருமா?"

ராகுலன் எதையும் பேசவில்லை. எதையோ மறைப்பது போலப் பட்டது.

இராணுவம் யாழ்பபாணத்திற்கு வரும்போது அவன் இங்கிருக்க முடியாது என்பது அனைவருக்கும் புரிந்தது. யோகம் விழிகளில் நீர் தாரை தாரையாக வழிய நின்றிருந்தாள். ராகுலன் தன் உடுப்புக்களை ஒரு பாக்கில் எடுத்துக் கொண்டான்.

"ராகுலா..."

யோகம் அப்படியே அவனைக் கட்டிக்கொண்டாள். இருவரும் சில பொழுது அழுதனர். அவன் தன்னை திடப்படுத்திக் கொண்டான்.

"அப்பு... நீங்க இங்க தொடர்ந்து இருக்க முடியாது. போலப்படுகுது. எல்லாரும் தென்மராட்சிக்கு அல்லது வடமராட்சிக்கு இடம் பெயரத்தான் வேணும். வலிகாமம் முழுவதையும் கைப்பற்றிவிடும் வேகத்துடன் ஆயிரக்கணக்கான ஆமியுடனும் நவீன யுத்த தளவாடங்களுடனும் எதிரி வருகிறான். சில காலத்துக்கு வலிகாமத்தைக் கைவிடத்தான் வேண்டி இருக்கும். நீங்க எல்லாரும் கெதியாக சாவகச்சேரிக்குப் போறது

நல்லது. நான் முதலில போய் அங்க ஒரு இடம் எடுத்து வைக்கறன். பிரச்சினை எண்டால் எல்லாரும் வந்திடுங்கோ. இங்க நிண்டு பலியாக வேணாம்."

எனக்கு நிலைமை இப்பொழுது தெளிவாகியது. ஒரு மாபெரும் இடப்பெயர்வு எந்தக் கணத்திலும் நிகழலாம். இன்றோ, நாளையோ, நாளை மறுநாளோ?

என் நெஞ்சு கனத்தது. இந்த மண்ணை விட்டு ஓடுவதா? வாழ்ந்த வீட்டை விட்டு அகதிகளாக ஓடுவதா? நினைக்கவே முடியவில்லை.

"ராகுலா... நிச்சயமாக நாங்க இடம்பெயர வேண்டி வருமா?"

"வரும், அப்பு."

"நான் இவ்விடத்தை விட்டு எங்கும் இடம்பெயர மாட்டேன்."

"அப்பு விசர்க்கதை கதையாதையுங்கோ, இவ்வளவு பேரையும் இங்க வைச்சிருந்து பலிகொடுக்கப் போறியளா? அவங்கள் வரும்போது சில நிமிட இடைவெளிகூட விடாமல் குண்டுகளைப் பொழிஞ்சு தள்ளிக் கொண்டு வருவான்கள்... எல்லோரும் இங்கிருந்தால் பலியாக வேண்டியதுதான்."

"எல்லாரையும் சாவகச்சேரிக்கு எங்கோ பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறன். ஆனால், நிச்சயமாக நான் இந்த இடத்தை விட்டு அசைய மாட்டன். ஆமி வந்தால் அங்கினேக்க கிட்டடியாக இடம்பெயர்ந்து இருந்திட்டு வருவன்."

"அந்த மனிசன் இங்கயெண்டால் நானும் வரமாட்டான்."

என் பிடிவாதம் எல்லோருக்கும் தெரிந்த சங்கதி. ராகுலன் கவலையோடு பார்த்தான். எதுவும் மேற்கொண்டு பேசவில்லை.

"வாறன்..."

ஊன்றுகோல்களை ஊன்றி அவன் நடந்தான். மோட்டார் சைக்கிள் புறப்பட்டுச் சென்றதன் பின்னரும் அவ்விடத்தில் அமைதி நிலவியது.

தூரத்தில் சன்னங்கள் சிதறி வெடிப்பது ஈரவளியில் இலகுவாக மிதந்து பரவியது. வானம் மீண்டும் சிணுங்கத் தொடங்கியது. மத்தியானச் சாப்பாடு மூன்று மணிக்கு மேல்தான். எவராலும் நன்றாகச் சாப்பிட முடியவில்லை. ராகுலனின் பிரிவும், யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர வேண்டி வரலாம் என்ற பயமும் அவர்களின் நிம்மதியைக் காவு எடுத்திருந்தன.

**வீ**தியில் யாவரும் கலகலப்பாக இயங்கினர். புதிதாக வீடு கட்டி இன்று குடிபுகுகின்ற சினனராசா வீட்டிலிருந்து 'லவுட்ஸ்பீக்கர்' அலறியது. வீட்டுத தளபாடங்கள் ஏற்றிக்கொண்டு லாண்ட் மாஸ்ரர் வீதியில் செல்கிறது. இப்பொழுதுதான் பெரிய கடையில் புதிதாக வாங்கியவை. தேநீர்க் கடை வேலுப்பிள்ளையர் இன்று அக்கிராமத்தில் வாங்கிய நான்காவது வீட்டிற்கான உறுதிப் பத்திரத்தில் பிரசித்த நொத்தாரிசு முன்னிலைமில் கையொப்பம் வாங்கிக் கொண்டார். அறாவிலையில் சீமெந்து வாங்கித் தன் வீட்டினை மரியநாயகம் திருத்துவித்துக் கொண்டிருந்தான்.



எல்லாம் வழமை போல நடந்து கொண்டிருந்தன.

ராகுலன் பொய் சொல்லமாட்டான். இன்னமும் மக்களுக்குச் செய்தி பரவவில்லை.

நான்கு மணிபோல கிராமமே அல்லோலகல்லோலப்பட்டது.

".. உடனடியாக வலிகாமத்து மக்கள் அனைவரும் தென் மராட்சிக்கோ வடமராட்சிக்கோ இடம்பெயருமாறு கோரப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தை நோக்கி இராணுவம் வந்து கொண்டிருக்கிறது. பெரும்

யுத்தம் நடக்கவிருக்கிறது. உடனடியாக இடம் பெயருமாறு கேட்கப் படுகின்றனர்...”

ஓட்டோவொன்றில் கட்டப்பட்ட ‘லவுட்ஸ்பீக்கர்’ வீதிவீதியாக அறிவித்தல் செய்தது.

வலிகாமத்திலிருந்து அங்கால் செல்வதற்கு நாவற்குழிப் பாலத்துப் பாதை ஒன்றுதான் இருந்தது. அதுவும் இரவு பன்னிரெண்டு மணிக்கு மேல் தகர்க்கப்பட்டு விடும் என்ற செய்தி எல்லாரையும் கலக்கி விட்டது. கிராமமே வீதியில் இறங்கி நின்றிருந்தது. கொட்டும் மழையில் குழந்தை குட்டிகளுடன், அவர்கள் காவக்கூடிய பொருள்களுடன் விழிகளில் நீர் சொரிய வீதியில் இறங்கினர்.

என்னையும் மனைவியையும் தவிர எல்லாரும் ஆயத்தமாகி விட்டனர். ஒவ்வொரு சைக்கிளில் கட்டக்கூடிய பொருட்கள், நகைகள், உடுப்புகள், சாப்பாட்டுச் சாமான்கள் அவ்வளவுதான். பெண்கள் சைக்கிள ஓட்டப் பழகியிருப்பது எவ்வளவு நல்லதாகிவிட்டது.

சிவபுத்திரன் முன்னால் நிற்க, எல்லாரது சைக்கிள்களும் வரிசையாக முற்றத்தில் நின்றன. விழிகளிலும் நீர். சோகம் அப்பிக் கிடந்தது. நிலைகுலைந்து வாங்கிலில் அமர்ந்திருக்கிறேன்.

இப்படியொரு துயரம் வரக்கூடாது. எங்கு செல்வது? யாரிடம் போவது? இலக்கு இல்லாத இடப்பெயர்வு ஏற்படுத்தப்பட்டு விட்டது. எந்த மண்ணை வேண்டி இந்தப் போராட்டம் ஆரம்பித்ததோ அந்த மண்ணை விட்டு வெளியேற நேர்ந்து விட்டது.

“வாறம்... அப்பு...”

“கவனமாக இருங்கோ...”

“நீங்களும் வந்திருக்கலாம்... சாமான் போனால் போகுது. உசிர்தான் முக்கியம்.”

“வாறம்... வாறம்.. அப்பு, அம்மம்மா...”

“அம்மம்மா வாறம்...”

தூறிக்கொண்டிருந்த மழையில் அந்தக் குடும்பத்தினர் வீதியில் இறங்கினர்.

என் விழிகள் நீரைச் சொரியப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

பெரும் இடப்பெயர்வு தொடங்கிவிட்டது.

14

# தனிமையின் பயங்கரம்



மழை சற்று ஓய்ந்திருந்தது. காட்டாற்று வெள்ளமாக கடற்கரை வீதி வழியாக நாவற்குழி நோக்கிச் சென்ற சனக்கூட்டம் வடிந்திருந்தது. அந்தக் கிராமத்தில் என்னையும் என் மனைவி தையல் முத்தாச்சியையும் தவிர வேறு எவரும் இல்லை. ஐந்தாம் நாள் நான் கடற்கரை வீதி வழியாக நடந்துவந்தேன். கட்டாக்காலி மாடுகளும் நாய்களும் தெருவில் பசியுடன் அலைந்தன. கடற்கரை வெறிச்சோடிக் கிடந்தது. சாவகச்சேரிக்குச் சென்றவர்களில் ஒருசிலர் சைக்கிள்களில் எப்படியோ திரும்பிவந்து சாமான்கள் எடுத்துச் சென்றனர். அவர்களும் என்னைக் கண்டதும் விரைந்து மறைவதாக எனக்குப் பட்டது.

சனசந்தடியற்ற வீதியில் தன்னந் தனியனாக நடப்பது எனக்குக் கலக்கத்தையும் பயத்தையும் தந்தது.

தூரத்தில் குண்டுகள் வெடித்தன.

விசர் வேலை பார்த்து விட்டேனோ? செபஸ்தியான் குடும்பம், லூசியன் குடும்பம் எல்லாரும் ஓடிவிட்டார்கள். செல்லையா பகுதியினர் எவருமில்லை. எல்லாரும் பாதுகாப்பாக இடம்பெயர்ந்த பின்னர் நானும் தையலும் இங்கு தங்கிவிட்டோம். யாழ்ப்பாணத்தில் கடைகள் எதுவும் இல்லை. இருக்கும் பொருள்கள் எத்தனை நாள்களுக்குப் போதும்?

என்னுடைய பிள்ளைகள் சாவகச்சேரியில் என்னவானார்களோ. இருக்க இடம் கிடைத்திருக்குமோ? ராகுலன் இருக்கிறான். ஏதாவது செய்திருப்பான் நல்லவேளை பவளம் கொழும்பில் இருப்பதால் இந்தக் கஷ்டங்களுக்குள்ளாகவில்லை. பவளமும் சுப்பிரமணியமும் கிளாலியில் இறங்கியபோது வலிகாமத்துச் சனம் முழுவதும் தென்மராட்சியில் குவிந்திருந்த சங்கதி எனக்கு முதலில் தெரிந்திருக்கவில்லை.

வீட்டிற்குத் திரும்பி வந்தேன்.

ஆறாம் நாள் டிரக்டர் ஒன்று என் வீட்டு வாசலில் நின்றது. ஐந்தாறு பேர் கேற்றை அலட்சியமாகத் திறந்தகொண்டு உள்ளே வந்தனர். என்ன எதுவென விசாரிக்காமல் வீட்டிற்குள் புகுந்தார்கள். நான் அவர்களைக் கோபத்துடன் ஏறிட்டுப் பார்த்தபடி நிற்பதைக் கண்டதும் திகைத்து விட்டனர்.

“ஐயா, நீங்க போகவில்லையே?” என அசடு வழிந்தனர். முகத்தில் பயம் படர்ந்தது.

“நான் போறது இருக்கட்டும். நீங்க இப்ப எங்க வந்தியள்? கேள்வி ஞாயமில்லாமல் திறந்த வீட்டுக்கு நாய் நுழையிற மாதிரி வந்திட்டுக் கேள்வியே கேட்கிறியள்? போங்கடா வெளியில... எரியிற வீட்டில பிடுங்க வந்திட்டான்கள். கள்ளப்பயல்கள். போங்கடா...”

அவர்கள் விரைந்து வெளியேறி டிரக்டரில் ஏறிச் சென்றனர்.

“கடவுளே... பிள்ளையாரே...”

இந்த ஒழுங்கீனங்களை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தங்கள் சொத்துக்களை அப்படியப்படியே விட்டுவிட்டு உயிரைக் காப்பாறிக்கொள்ள மக்கள் ஓடிவிட்ட நிலையில் அவர்களின் சொத்துக் களைக் கொள்ளையிட ஒரு கூட்டம் புறப்பட்டு விட்டது. ‘நாங்கள் எங்கை போகிறம்?’

எட்டாம் நாள் வீதியிலேறிப் படலையடியில் நின்றபோது மோட்டார் சைக்கிளில் இருவர் வந்தனர்.

“அப்பு என்ன போகாமல் நிக்கிறியள்?”

“ஏலாது பிள்ளையள்.”

“நிண்டு சாகப் போகிறியளே?”

அவர்கள் என்னைக் கோபத்துடன் பார்த்தனர்.



“ஒருத்தரும் நிக்கேலாது. எல்லாரும் போயிட வேணும்...”

“போங்கடா... அது எனக்குத் தெரியும்” என்றேன் மிகுந்த எரிச்சலுடனும் உரிமையுடனும்.

“உது ராகுலன்ர அப்பு. பேசாமல் வா...” என்றான் ஒருவன். அவர்கள் மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்றுவிட்டனர்.

ஒன்பதாம் நாள் படலையில் நின்றிருந்தேன். அப்பிரதேசத்தில் மனித சந்தடியைக் கண்ட கடைசி நாள் அதுதான். பிள்ளையார் கோயில் முன் வீதியில் சைக்கிளில் லூசியன் வியர்த்து விறுவிறுத்து வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் எனக்கு மகிழ்ச்சியும் அதே வேளை கவலையும் உண்டாயிற்று. என்னைக் கண்டதும் அவன் என் அருகில் இறங்கினான்.

“நான் தாழையடியிலிருந்து வாறன். எனக்கு இப்ப நல்ல தேத்தண்ணி வேணும். ஆச்சியிருக்கிறாவே?” என்றான் களைப்புடன்.

“உள்ளே வா... இருக்கிறதில தாறம் சாப்பிடலாம்.”

லூசியன் உள்ளே வந்து முற்றத்தில் சைக்கிளை நிறுத்தினான்.

“அங்கால இருக்கேலாது அம்மான். ஒரே சனத்திரள்... இருக்க இடமில்லை. சனம் பள்ளிக்கூடங்களிலும் மரங்களுக்குக் கீழும்... வசதியானவைக்கு வீடுகள்... சொந்தக்காரர் உள்ளவர்கள்... தப்பி

விட்டினம்... நாங்க தாழையடியில... பரவாயில்லை.. குடிசையொண்டு கிடைச்சிருக்குது. நம்ப மாட்டியள். அண்டைக்கு நாங்க இங்கிருந்து புறப்பட்டு நாவற்குழிப் பாலத்தை அடுத்த நாள்தான் கடந்தம். தண்ணிவென்னி இல்லை. மழைக்குடையில வழிஞ்ச தண்ணியைக் குடிச்சம். பெரும் அவலம் அம்மான். அப்படியான மனித வேதனையை நான் எங்கும் காணேல்ல. காலடியை எடுத்து வைக்க இடமில்லாமல் வீதியில சனம் நின்றபடிதான். வயோதிபர்கள் பட்ட கஷ்டம். அவர்களைப் பிள்ளைகள் தூக்கிக்கொண்டு... சைக்கிளில் ஏத்தி உறுட்டியபடி... குழந்தைகள் பசியால் தவிச்சுப் போச்சுதுகள். சொல்ல முடியாது. அவ்வளவு கஷ்டம்" லூசியன் இடம்பெயர் அவலங்களை விவரித்தான்.

தையல் முத்தாச்சி தேத்தண்ணியுடன் வந்தாள்.

"வெறுந் தேத்தண்ணிதான், பாலில்லை..."

லூசியன் ஆவலுடன் கரம் நீட்டி வாங்கிக்கொண்டான். அவன் குடித்த வேகத்தில் அவன் பசியும் களைப்பும் தெரிந்தது.

"இருந்து சாப்பிட்டுவிட்டுப் போ..."

"நீங்க கேக்காவிட்டாலும் இருந்து சாப்பிட்டுவிட்டுத்தான் போகப்போறன்."

"எங்கட பிள்ளையளை எங்கையாவது கண்டியளே?" தையல் முத்தாச்சி அவனை ஏக்கத்துடன் பார்த்தாள்.

"ஓமோம்... ராகுலன் சாவகச்சேரிச் சந்தையில இலங்குகிற ஒபிசில இருக்கிறான். காணாமல் போனவை பற்றித் தகவல் சொல்லுற இடம். அவனைக் கண்டன். அவன்தான் எனக்கு இங்கால ஒருக்கா வீட்டிற்கு வர பாஸ் எடுத்துத் தந்தவன். அப்புவையும் ஆச்சியையும் பாத்திட்டு வரச் சொன்னான்..."

"அது சரி தம்பி... மற்றவை எங்க...?"

லூசியன் சிரித்தான்.

"உங்கட அவசரம் விளங்குது அம்மான்... உங்கட ஆக்கள் எல்லாரும் மீசாலையில் இருக்கினமாம். ஒரு வீடு எடுத்துத் தான் கொடுத்திருப்பதாக ராகுலன் சொன்னான். எல்லாரும் அங்கதான் இருக்கினமாம். பவளமும் மருமோனும் கிளாலியில இறங்கி வந்தவை யாம். அவயும் இப்ப மீசாலையிலதானாம். உங்களை ஒண்டுக்கும் கவலைப்பட வேணாமாம். உடனை புறப்பட்டு வரட்டாம். அல்லது

அராலிக்குப் போய் பவளத்தின் வீட்டில் இருக்கட்டாம். அந்தப் பக்கத்தில் பலர் இருக்கினமாம். அங்க போகட்டாம்."

துரையப்பர் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார். தையல்முத்தாச்சி விழிகளைத் துடைத்துக்கொண்டாள்.

"எல்லாரும் பாதுகாப்பாக இருக்கினம்..." என்று தையல்முத்தாச்சி தனக்குள் கூறிக்கொண்டாள்.

"பாதுகாப்பாத்தான் இருக்கினம். ஆனால் அங்கால சனம்படுகிற கஷ்டங்களைப் பார்க்கேக்கை இங்கேயே இருந்திடலாம் போல இருக்குது. மாவீரர் குடும்பங்கள், போராளி குடும்பங்கள் எல்லாம் வன்னிக்குக் கிளாலியால போய்க் கொண்டிருக்கினம். யாழ்ப்பாணத் திற்கு வரப்போகிற இராணுவம் சாவகச்சேரிக்கு வராதென்று என்ன நிச்சயம்...? அம்மான் நீங்கள் என்ன செய்யப் போறியள்?"

நான் லூசியனைக் கவலையுடன் பாத்தேன்.

"ஆமி இந்தப் பக்கம் வருமெண்டு தெரிஞ்சால் ராகுலன் சொன்ன மாதிரி அராலிக்குப் போயிட்டு வருவன். அவன் தெரிந்துதான் சொல்லி அனுப்பியிருக்கிறான். அந்தப் பக்கத்தில் கனபேர் இடம்பெயர வில்லையாம். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கன சனமாம். இங்கயும் யாழ்ப்பாணத்தில சென்பற்றிக்சில சனம் அடைக்கலம் புகுந்திருக்கலாம். இருக்கிற இடத்தில் இருந்தால் நிம்மதி. இருந்த வீட்டை, ஊரை விட்டு ஓடினால் அவலம்தான் லூசியன்... நான் என்ர முடிவில திடமாத்தான் இருக்கிறன். தையல்முத்து ஒண்டுக்கும் இலேசில பயப்பிடாது.மரணங்களைப் பார்த்து மரத்துப் போச்சுது. அவலப்பட்டு ஓடித்திரிய மனிசி தயாரில்லை."

"இன்னமும் ஆமி யாழ்ப்பாணத்துக்கே வரேல்லை. எனக்கு நம்பிக்கை இல்லை. அம்மான் ஆமி இங்கால வருமெண்டு.. வரேக்க பார்த்தன். ஒவ்வொருத்தனும் ஊரான் பொருள்களைத் தங்களுடையது போல சைக்கிள்களில் கட்டிக்கொண்டு போறதை. வீட்டுச் சீற்றுக்களை எல்லாம் கழட்டிக்கொண்டு போறான்கள். பார்த்தன். கொள்ளையடிக் கிறவன்களுக்கு வசதியாகப் போயிட்டுது. அங்கால போனவர்கள் இங்கால வராமல் தடுக்க வேணும். அல்லாவிடில் எல்லாரையும் திரும்ப ஒருக்கா வீட்டை போய்ப் பெறுமதியானவற்றை கட்டிக்கொண்டு திரும்ப இங்கால வரவிடவேணும். நான் ஒருக்கா வீட்டை போய் பெறுமதியான வற்றைக் கட்டிக்கொண்டு திரும்பப் போறன். இங்க வந்தபிறகு பயமாகக்

கிடக்குது. கள்ளரைத் தவிர வேறு ஒருத்தரும் இல்லை. வீதியெல்லாம் வெறிச்சுக் கிடக்குது. வீதியெல்லாம் ஆடுகள், மாடுகள் செத்துக் கிடக்குது. நாய்கள் குதறிக் கொண்டிருக்கின்றன. பயந்து பயந்து வந்தன். கெதியாக வீட்டைப் பார்த்திட்டு வாறன் அம்மான். கெதியாக ஏதாவது செய்யுங்கோ சாப்பிட...”

லூசியன் எழுந்து சைக்கிளை உருட்டிக்கொண்டு வீதியில் ஏறினான். அவன் போகிறதைப் பார்த்துக்கொண்டு நான் நின்றிருந்தேன்.

இருந்தாற்போல வடக்கிலிருந்து ஷெல்கள் கூவிக்கொண்டு வானத்தில் பாய்ந்தன. அமளிதுமளியாய் வெடிச்சத்தங்கள் கேட்டன.

“உள்ளுக்குள் வாருங்கோ...” என்று தையல்முத்தாச்சி கத்தினாள். வீட்டிற்குள் ஓடினேன். ஓர் அரைமணிநேரம் வரையில் தொடர்ந்து ஷெல்கள் யாழ்ப்பாணப் பக்கமாகத் தொடர்ந்து வெடித்தன. இராணுவம் முன்னேறத் தொடங்கிவிட்டதென எண்ணிக்கொண்டேன்.

‘இந்த நேரத்தில் இவன் லூசியன் விசரன் மாதிரி வந்திருக்கிறான். அவனுக்கொண்டெண்டால் அந்த குடும்பம் அந்தரித்துப் போகும்.’ மனம் லூசியனை நினைத்துக் கவலைப்பட்டது.

“போனவனை இன்னமும் காணவில்லை...” என்று தையல் முத்தாச்சி விசனப்பட்டாள்.

“இராணுவம் முன்னேறி வந்து சில வேளைகளில் நாவற் குழிப்பாதை தடைப்பட்டிடும் என்ற பயத்தில் அப்படியே சென்று விட்டானோ? போய் ஒருக்காப் பாத்திட்டு வரட்டே?”

“ஷெல் அடிக்கிறான்கள்...போறன் என்கிறியள். சும்மா ஓரிடத்தில் இருங்கோ. லூசியன் வருவான்.”

ஷெல்கள் குத்தப்படும் சத்தங்கள் தொடர்ந்து கேட்டன. இவை சீறிக்கொண்டு பாயும் ஒலியும் விழுந்து வெடிக்கும் சத்தமும் கேட்டபடி இருதந்து.

அன்று லூசியன் வரவேயில்லை. இரவு முழுவதும் எனக்கு அவன் நினைவாகவே இருந்தது. அவன் அவசரப்பட்டு சைக்கிளில் ஏறி ஓடிச் சென்றிருப்பான என எனக்குள் ஆறுதல் கூறிக்கொண்டான்.

“உவன் பொடி ஒருக்கா எட்டிச் சொல்லிப்போட்டுப் போயிருக் கலாம்” என்ற தையல்முத்தாச்சியும் அவனைப் பற்றி எண்ணியபடி

படுத்திருப்பது தெரிந்தது. இரவிரவாக ஷெல்கள் கூவின. அப்படியே ஹோலில் படுத்திருந்தோம்.

நள்ளிரவு கடந்தும் வெடிச்சத்தங்கள் ஓயவில்லை. மிக அருகில் குண்டுகள் விழுந்து வெடித்தன. அப்படியே கிடந்தோம்.

"யாழ்ப்பாணத்துக்கு இராணுவம் வரேக்க நாங்க இங்க இருக்கக் கூடாது தையல். நாளைக்குக் காலமை நாங்கள் அராலிக்குப் போவம். சனசந்தடியில்லாத இந்த ஊரில் இனியும் இருக்க முடியாது. நாங்க அங்க போவம். அந்தப் பக்கத்தில ஆக்கள் இருக்கினமாம்."

தையல்முத்தாச்சிக்கு என் முடிவு சரியாகப் பட்டது. அராலியில் பவளத்தின் வீடு இருக்கிறது. தங்குவதற்குப் பிரச்சினை இல்லை. ஆனால் இங்கு இந்த வீட்டில் இருக்கும் யோகத்தின், பவளத்தின், ஜெயாவின் வீட்டுச் சாமான்கள் எவ்வளவு? இவ்வளவையும் விட்டிட்டுப் போவதா?

அவளின் தயக்கம் எனக்குப் புரிந்தது.

"யாழ்ப்பாணத்தை ஆமி பிடிச்சால் அங்கிருந்து ஒருத்தரும் இங்கால வரமுடியாது.கள்ளர் வரமாட்டினம். அப்படியே கிடக்கும். அதைப் பார்த்து நாங்க ஆமியிடம் சிக்கிக்கொள்ளக்கூடாது... போவோம்..."

அந்த முடிவெடுத்த பின்னர் எங்களுக்கு நித்திரை வரவில்லை.

அதிகாலைவரை குண்டுச் சத்தங்கள் கேட்டபடி இருந்தன.

15

# இடம்பெயர் வாழ்வு



மீசாலை .பழைய புகையிரத நிலையத்திலிருநது தென்புறமாக ஒரு கிறவல் வீதி செல்கின்றது. அதில் பயணப்பட்டு சில முழங்கை வளைவு ஒழுங்கைகளினூடாகச் சென்றால் பிள்ளையார் கோயில் ஒன்று வரும். அக் கோயிலுக்கு முன்னுள்ள ஒழுங்கையில் அவர் களுக்கு வீடு கிடைத்திருந்தது. இரண்டு சிறிய அறைகளையும் மண் சுவர்களையும்சாணத்திண்ணையை யும் கொண்ட பதிவான வீடு. அதன் முன் பத்தடி முற்றத்திற்கு இப்பால், முப்பதடிக்குப் பத்தடியில் அரைக் குந்துடன் கூடிய சீமெந்துத் தரையிலான தலைவாசல் கிடுகுக்கூரை.

தலைவாசலில் அழுத்தமான சீமெந்து தரையில் குந்தியிருப்பது இளம் பிள்ளைகளுக்குக் கடினமாக இருந்தது. யோகத்திற்கும் ஜெயாவிற்கும் பிடித்தமானதாகவிருந்தது. அந்தத் தலைவாசல்தான் அவர்களுக்கு அங்கு மிகப்பிடித்த இடமாக இருந்தது. நான்கு பக்கங்களும் மறைப்பின்றி இயற்கையான காற்றினை அனுபவித்தபடி அமர்ந்திருப்பதும் இரவில் வரிசையாகப் பாய்களையும் துண்டுகளையும் விரித்துப் படுத்துறங்குவதும் வித்தியாசமான அனுபவம்.

இப்பொழுது நினைத்தாலும் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த அவலம் உடலை நடுங்க வைக்கிறது. இப்படியொரு கஷ்டம்

இடப்பெயர்வில் இருக்குமென்பதை அவள் உணராதவளல்லள். வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசன் போது வயல்வெளிகளூடாகவும் தரவைகளூடாகவும் பயப்பிராந்தி பின்னின்று தள்ள ஓடி வந்திருக்கிறாள். அந்தக் கொடுமையிலும் பார்க்க இலட்சக்கணக்கான சனங்களுடன் ஒவ்வொரு பாதமாக எடுத்து நகர்ந்த அவலம் மிகத் துயரமானது. சேற்றுவயலூடாகவும் கொட்டுகின்ற மழையில் நனைந்தும் விழுந்தெழும்பி அவலப்பட்டு அவர்கள் நாவற்குழிப் பாலத்தைக் கடந்து மிதந்தனர்.

கைதடி, நாவற்குழிப் பகுதியில் இடித்து நெருக்கி அசைய முடியாமல் மணிக்கணக்கில் அல்லற்பட்டதை நினைக்க மனம் என்னவோ செய்கிறது.மக்கள் இந்த இடப்பெயர்வில் அனுபவித்தவை எவர்க்கும் வாழ்க்கையில் வரக்கூடாத துன்பங்களாகும். யாழ்ப்பாண நகரத்திலிருந்து மீசாலைக்கு வந்துசேர அவர்களுக்கு இரண்டு நாள்கள் எடுத்தன. அதிர்ஷ்டவசமாக ராகுலன் அவர்களைச் சந்தித்து முன்னமே ஒழுங்கு செய்திருந்த வீட்டில் அவர்கள் எல்லோரையும் இருக்க விட்டதால் இடப்பெயர்வின் துயரத்தின் மறுபக்கம் அவர்களுக்குத் தெரியவில்லை. இருக்க இடமின்றி அலைகின்ற மக்கள் படும் சோகங்கள் கதை கதையாகப் பரவின. மரங்களின் கீழ் அடைக்கலம் புகுந்த மக்கள், வீட்டு விறாந்தைகளிலும் மாட்டுத் தொழுவங்களிலும் ஒதுங்கிக் கொண்ட மக்கள் படும் துயங்கள் விவரிக்க முடியாதவை.

அந்த வகையில் மீசாலையில் அவர்களுக்கு இடம் கிடைத்தமை பெரும் புதையல் கிடைத்தமைக்குச் சரியென யோகம் எண்ணினாள். வசதியாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர்களுக்கு இப்படி ஒட்டுக் குடியாக வாழ்வது பெரும் சுமைதான்.

முதல்நாளே பிரச்சினை உருவாகியது. ஒரேயொரு கக்கூசின் முன் வரிசையாகக் காத்து நிற்க நேர்ந்தது. கிணற்றில் தண்ணீரை அள்ளிய தாரணி, "அம்மா, இதென்ன இந்தத் தண்ணி ஒறேஞ் பார்லி மாதிரியிருக்கிறது. இதையா குடிப்பது?" எனப் பதறினாள். உண்மையில் அவ்விடத்தின் தண்ணீரைக் கிளாசில் விட்டால் ஒறேஞ் நிறத்தில் காட்சி தந்தது.

அந்தத் தண்ணீர் இன்று பழகி விட்டது. சில நேரங்களில் சிவபுத்திரன் சாவகச்சேரிக்குச் சென்று சிவன்கோயிலில் வரிசையாக நின்று நல்ல தண்ணீர் அள்ளி வந்தான். அவ்விடத்து நீர் யாழ்ப்பாணத்து நீராகத் தெளிந்திருந்தது.



அந்தப் பிரதேசக் கிராமசேவையாளர் வந்து எல்லாரையும் பதிந்து தனித் தனிக் குடும்ப அட்டை வழங்கினார். உலர் உணவுப் பொருள்கள் கிடைத்தன. அம்மாப்பச்சை அரிசியும் மாவும் சீனியும் கிடைத்தன. பின்னர் மைசூர்ப் பருப்பும் கிடைத்தது. ஏதோ ஒரு தொண்டர் நிறுவனம் வந்து குடும்ப அட்டைக்கு ஒரு சிங்கப்பூர் பாய் வீதம் வழங்கிச் சென்றது.

கூட்டுச் சமையல் சில நாள்கள் சுவையாகவிருந்தன.

“நாங்களும் இனித் தலைவாசலில்தான் படுப்போம்” என்று தாரணி குரல் எழுப்பினாள். அவளுடன் சரசு, புவனம் ஆகியோரும் சேர்ந்து கொண்டனர்.

“அறைக்குள்ள படுக்க முடியாது. ஜன்னலில்லை. ஒரே வெக்கை. இங்க தலைவாசல் எப்படி இருக்குது. இங்கதான் படுப்பம்.”

சுப்பிரமணியத்திற்குப் பிள்ளைகளின் கோரிக்கை சரியாகப் பட்டது. சம்மதம் அளிக்கப்பட்டது.

இரவுச் சாப்பாட்டுக்காக எல்லாரும் தலைவாசலில் அமர்ந்திருக் கின்றனர்.

“பாவம் அந்த மாப்பிள்ளை...” என்றாள் சிரித்தபடி சரசு.

“எந்த மாப்பிள்ளை, மச்சாள்?” என்று புவனம் கேட்டாள்.

“அம்மாவோடு போன துளசியைச் சொல்லுறன்... அவர் அங்க காத்திருக்க இங்க...” அவர்கள் கொல்லெனச் சிரித்தார்கள்.

“சரசு இதென்ன கதை?” என்று பவளம் உறுக்கினாள்.

“ஊர்ச்சனங்கள் இடம்பெயர்ந்து ஒண்டுக்கும் வழியில்லாமல் தவிக்குதுகள். நீங்கள் கும்மாளமடிக்கிறியள்...” என்றாள் யோகம்.

“அதுக்காகப் பிள்ளையளையும் அழச் சொல்லுறீங்களா, மச்சாள்? பிள்ளைகள் இடம்மாறி இங்க வந்து தவிக்குதுகள். எப்படியிருந்ததுகள். இப்படி வந்திட்டுது. இதுகளைத் தங்கட பாட்டிற்குச் சிரிக்க... கும்மாளமடிக்க... விடுங்கோ...” என்றாள் ஜெயா. இரகசியமாகத் தன் விழிகளில் வழிந்த கண்ணிரைச் சேலைத் தலைப்பால் ஒத்திக் கொண்டாள்.

“அப்படிச் சொல்லுங்கோ அத்தை...” என்றான் சிவபுத்திரன்.

“நீங்கள் சரியான கண்டிப்பு எண்டு கேள்விப்பட்டன். இங்க வந்து செல்லம் கொடுக்கிறியள் மச்சாள்...” என்றாள் யோகம்.

“நாளைக்கு நாங்கள் சோலையம்மன் கோயிலுக்குப் போறம்...”

“ஆர் ஆர் வாறியள்...?”

“நான் அண்ணை...” என்றான் சந்திரன் முந்திக்கொண்டு.

“நானும்... புவனம் மச்சாளும் சரசுவும்... வாறம்.”

“நானும் வாறன்...” என்றாள் ஜெயா.

“அப்ப நாங்களும் வாறம்” என்றனர் பவளமும் யோகமும்.

“அப்ப நாங்கள் போகவில்லை...” என்றான் சிவபுத்திரன்.

“உங்களோட அங்க போக முடியாது... அசைய விட மாட்டியள்.”

“சரி... சரி... அதுகள் போயிட்டு வரட்டும் நாங்க இன்னொரு நாளைக்கு போவோம்...” என்றார் சுப்பிரமணியம்.

புட்டைச் சம்பலுடன் பிசைந்து வாயருகில் கொண்டுபோன யோகம் சாப்பிடாமல் அப்படியே வெகுநேரம் வைத்திருந்தாள். அவளைச் சரசு கவனித்து விட்டாள்.

“என்ன பெரியம்மா?”

“ஒண்டுமில்லை. ஐயாவையும் அம்மாவையும் நினைச்சுக் கொண்டன்.”

"ஓம் அக்கா, அவர்களையும் நீங்க கூட்டிக்கொண்டு வந்திருக் கலாம். வீட்டுக்குக் காவலாக விட்டிட்டு வந்த மாதிரி இருக்குது..." என்ற பவளத்தை யோகம் கோபத்துடன் பார்த்தாள்.

"என்ன பவளம் கதைக்கிறாய்? உனக்கு ஐயாவைத் தெரியாதோ? அவரின்ர குணம் தெரியாதோ? அவர் முடிவெடுத்தால் முடிவுதான். ஆராலும் மாற்ற முடியாது. அவர் அங்க விட்டிட்டு வரமாட்டன் என்றிட்டார். அவரின்ர பிடிவாதத்தால நாங்க எல்லாரும் அங்க சாகிறதே?"

"மச்சாள் சொல்லுறது சரி. நாங்க எவ்வளவோ கேட்டுப் பார்த்தம். மாமா மறுத்திட்டார்... இஞ்ச படுகிற கஷ்டத்திலும் அங்க இருந்திருக் கலாம். ஆனால் அங்க இளம் பிள்ளையளை வைச்சுக் கொண்டு இருக்கிறது சரியாகப் படவில்லை."

"யாழ்ப்பாணத்தை ஆமிபிடிச்சிட்டுது. இனி அங்கால ஒருத்தரும் போகேலாதாம். வரவும் முடியாதாம்."

"ஆனால் நவாலி, அராலிப் பக்கங்களில் கனபேர் இருக்கினமாம். பொடியள் எவ்வளவோ சொல்லியும் வராதிருக்கினமாம். அந்தப் பக்கத்திற்கு ஆமி இன்னமும் போகவில்லை..." என்றான் சிவபுத்திரன்.

அவர்களின் நடுவில் லாந்தர் ஒன்று ஒளிவிசிக் கொண்டிருந்தது. வீட்டுத் திண்ணையில் சிக்கன விளக்கொன்று மினுமினுத்துக் கொண் டிருந்தது. முற்றத்தில் இரண்டு நாய்கள் அவர்கள் போடும் எஞ்சிய சாப்பாட்டிற்காகக் காத்திருந்தன.

"அப்பாவும், அப்பம்மாவும் நான் நினைக்கிறன் அராலிக்கு அத்தையின்ர வீட்டுக்குப் போயிருப்பினம் எண்டு. யாழ்ப்பாணத்தில ஆமி பிடிச்சதும் ஒரு சனமும் இல்லையாம். ஆக சென்பற்றிக்சில கொஞ்சப் பேர் இருப்பதாக ரேடியோவில சொல்லிச்சினம்...!" என்றபடி புவனம் தலைநிமிர்ந்தாள். அவள் முகத்தில் லாந்தரின் ஒளி படர்ந்தது. நிழலும் ஒளியும்படிந்த முகத்தில் சிவபுத்திரனின் பார்வை தறசெயலாகப் பட்டது. நல்லதொரு ஓவியத்தைப் பார்க்கின்ற உணர்வு எழுந்தது. அதன் பின்னர் சாப்பிடும்போது அவன் அடிக்கடி தன்னைப் பார்ப்பதைப் புவனம் உணர்ந்தாள். அவன் பார்வை தன்மீது இருக்கிறதென்பதை உணர்ந்த அவள் சட்டெனத் தலை நிமிர்ந்து பார்த்தபோது அவன் தலையைக் குனிந்து கொண்டான்.

அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

தலைவாசலில் ஒதுக்கமாகப் பெண்களைப் படுக்க விட்டுவிட்டு வாசல் பக்கங்களில் ஆண்கள் படுத்துக் கொண்டனர். ஒரு வாசல் பக்கத்தில் சிவபுத்திரனும் மறுபக்கத்தில் சுப்பிரமணியமும் பாய் விரித்துப் படுத்திருந்தனர். சுப்பிரமணியம் படுத்த சிறிது நேரத்தில் குறட்டைவிடத் தொடங்கி விட்டார். சரசு பக்கத்தில் படுத்திருந்த புவனத்திடம் ஏதோ கிசுகிசுக்க இருவரும் மெதுவாகச் சத்தமின்றிச் சிரித்துக் கொள்வது கேட்கிறது. சந்திரன் தாய்க்கு அருகில் படுத்தபடி, தாயிடம் எதையோ கேட்டான்.

"சரி வா..." என்று அவனை அழைத்துக்கொண்டு பவளம் முற்றத்திற்கு இறங்கினாள். நின்றபடியே அவன் காற்சட்டையைப் பதித்து சிறுநீர் கழிக்கத் தொடங்க தாரணி இருந்தாற்போல 'கூய்' என்றாள். சந்திரன் பயத்தில் கையைவிட காற்சட்டை ஈரமாகி விட்டது.

பவளத்திற்கு கோபம் கோபமாக வந்தது.

"என்ன தாரணி...?" என்ற சினந்து கொண்டாள்.

சிவபுத்திரன் நித்திரையின்றிப் படுத்திருந்தான். தலைவாசல் வாசல் முகப்பில் படுத்திருந்ததால் நட்சத்திரங்களின் சிதறல் தெளிவாகத் தெரிந்தது. என்றும் பார்க்கின்ற வானந்தான். ஆனால் இவ்வளவு பொறுமையுடன் அவன் வானத்தைப் பார்த்தது கிடையாது. சிதறிக் கிடந்த உடுக்களில் சிலவற்றினை அவன் அடையாளம் காண முயன்றான். 'எங்களை மாதிரி அங்கெல்லாம் ஆட்கள் இருப்பார்களோ? இப்படிப் போராட்டங்கள் நடக்குமோ? ஆமிக்குப் பயந்து பிறந்த மண்ணையும் வளர்ந்த வீட்டையும் விட்டுவிட்டு எதிலிகளாக ஓடுவார்களோ? வடக்கே வானத்தில் கருமுகில் படர்ந்திருந்தது.

"காற்சட்டை ஈரமம்மா..." என்று சிணுங்கினான்.

"இனி எங்க எடுக்கிறது. இந்தத் துவாயைக் கட்டிக்கொண்டு படுராசா."

"பூனை ஒண்டு திரியுது... கவனம். சுண்டெலி எண்டு..." என்றாள் யோகம். எல்லாரும் கொல்லெனச் சிரித்தனர். சந்திரனுக்கு விளங்க வில்லை.

"மச்சாளுக்குப் பகிடி விடத் தெரியுது..." என்று ஜெயா சிரித்தபடி மறுபக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டாள்.

வானம் இருந்தாற்போல் கருமை பெறத் தொடங்கியது.

குளிர் காற்று வீசியது.

மூன்றாம் சாமம் மாதிமழை சோனாவாரியாகக் கொட்டத் தொடங்கியது. தூவானம் மறைப்பற்ற தலைவாசலை நனைத்தது. கூரையில் சில இடங்களில் பட்பட்டென்று ஒழுக்கு நீர் விழுந்து எல்லாரையும் எழுப்பி விட்டது. எல்லாரும் அவசரம் அவசரமாக எழுந்து ஒழுகாத இடங்களில் ஒதுங்கிக் கொண்டனர்.

"என்னவானாலும் இந்த தலைவாசல் கூரையை மேயத்தான் வேணும். இல்லாட்டில் மழையுக்க இருக்க முடியாது..." என்றார் சுப்பிரமணியம்.

"சித்தப்பா கிடுகின்ர விலை தெரியுமே? ஒரு சோடி கிடுகு நாற்பது ரூபா... அதுவும் அந்த விலையில் எடுக்கிறது வலு கஷ்டம்..."

அதிகாலைதான் மழை ஓய்ந்தது. தலைவாசலின் சீமேந்துத்தரை எங்கும் நீர் கசிந்திருந்தது.

# 16

# அநாதையாகிவிட்ட சூழல்



**வ**யல் வெளியை அண்டி அமைந்திருந்த மேட்டுக் காணியில் பவளத்தின் வீடு அமைந்திருந்தது. நான்கு அறைகள் கொண்ட கல்வீடு. ஷெல் பட்டுக் கிழக்குப் பக்கக் கூரை சற்று சிதைந்திருந்தது. வீட்டின் பின்புறம் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேலென நெற்பயிர்கள் செழித்துக் காட்சி தந்தன. மாரிக்கு விதைத்து விட்டு குடலைப் பருவத்தில் அப்படியே விட்டு விட்டு எல்லாரும் இடம்பெயர்ந்து ஓடிவிட்டார்கள். வீட்டிற்கு முன் ஒழுங்கை வளைந்து, வளைந்து குண்டுங் குழியுமாக நீர் தேங்கிக் கிடந்தது. பிரதான வீதியை அடைய குறைந்தது இரண்டு கிலோ மீற்றராவது இப்படியான சிறவல் ஒழுங்கை ஊடாக விழுந்தெழும்பிச் செல்ல வேண்டும்.

அங்கு வந்து ஒரு வாரமாகின்றது. வெளியில் வீட்டிற்குள்ளேயே கூடியவரை முடங்கிக் கிடந்தோம். எங்களின் வீட்டிற்கு ஆறாவது வீடொன்றில் நான்கு வயோதிபர்கள் இடம்பெயராமல் இருந்தனர். அவர்கள்தான் 'வெளியில் வராதீர்கள்' என எச்சரித்தனர். பொடியன்கள் வீடு வீடாக வந்து இடம்பெயராதிருப்பவர்களை லொறிகளில் ஏற்றிச் செல்கிறார்கள் என்ற வதந்தி நிலவியது.

"நாவற்குழிப் பாலம் மூடியாச்சுது. ஆமி யாழ்ப்பாணத்திற்கு வந்திட்டுது. இனி எப்படி அங்கால சாவகச்சேரிக்குப் போறது?" என்றாள் தையல்முத்து.

“நீர் சொல்வது சரிதான். ஆனால் பெடியளுக்கு ஓராயிரம் பாதை தெரியும். எதற்கும் இங்க நிம்மதியாய் இருப்பம். பொறுமையா கண்டபாட்டிற்கு வெளியில் திரியாமல் இருப்பம். அராலியில இருபது முப்பது குடும்பங்கள் இருக்காம். எல்லாரும் எங்களைப் போல வயோதிபர்கள்... நோயாளிகள்... அவர்களைப் பார்க்கவெனத் தங்கிவிட்ட பிள்ளைகள்...”

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென் மேற்குக் கரையில் அராலிக் கிராமம் அமைந்திருக்கின்றது. நெல் வயல்களும் தோட்ட நிலங்களும் பனை வடலிகளும் கடற்கரையும் கொண்ட அழகான கிராமம். மாரி கால வயல்கள் கோடையில் தோட்டங்களாக மாறி இருக்கும். வீட்டுக்கு விடு மாடுகளும் ஆடுகளும் கோழிகளும் வளர்க்கப்படும். பனைபடு திரவியங்கள் முறையாகப் பேணப்பட்டு வரும். ஒடியலும் பனாட்டும எல்லா வீடுகளிலும் எப்பொழுதும் இருக்கும். கோயில் திருவிழாக்கள் அராலிக் கிராமத்தில் இரவிரவாக நிகழ்ந்த காலமுள்ளது. இன்று மனித சஞ்சாரமற்று வெறிச்சோடிப் போய்விட்டது. ஆட்களின்றி வயல்கள் கதிர் தள்ளி நிற்கின்றன. வீடுகள் எவருமில்லாமல் மூடப்பட்டும், திறந்தும் கிடக்கின்றன. பனை மட்டைகளும் கங்குகளும் வளவெல்லாம் வீழ்ந்து சிதறிக் கிடக்கின்றன. மாடுகளும் ஆடுகளும் நாய்களும் வளர்த்தவர் களைத் தேடி அலைகின்றன. வழக்கம் போல மாலையில் திரும்பி வந்து பட்டியில் அடைக்கப்படாமையால் அவை படிப்படியாகக் குழுவேறி வருகின்றன. சில மாடுகள் வயலிலேயே கன்றுகளை ஈன்று வளர்த் தெடுத்து நாய்களுக்கு எதிராகக் கன்றுகளைப் பாதுகாத்து மூசித்திரி கின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து அராலி நோக்கிய இடப்பெயர்வை ஒரு கணம் நினைத்துப் பார்க்கிறேன்.

அதிகாலையிலே நாங்கள் அராலி நோக்கிப் புறப்பட்டோம். எனது பழம் சைக்கிளில் ஓரேயொரு சூட்கேசைப் பின் கரியரில் கட்டி, ஒரு உரப்பையில் வீட்டிலிருந்த அரிசி சாமான்களில் கொஞ்சத்தைக் கொட்டிக்கொண்டு அதையும் சைக்கிளில் கட்டிக்கொண்டு புறப் பட்டோம்.

இப்பொழுது நினைத்தாலும் உடல் நடுங்குகிறது. கடற்கரை வீதியால் உருட்டிக்கொண்டு நடக்கும்போது எவரும் வீதியில் இல்லை. சந்தை மடத்தை அடைந்தபோது நாய்கள் எங்களைப் பின்தொடரப் பார்த்தன. அவற்றினைத் துரத்திவிட்டு நடந்தோம். தூரத்தில் லூசியனின்



வீடு தெரிந்தது. போய்ப் பார்த்தால் என்ன என்ற ஒரு மன அவசம் ஏற்பட்டது. சென்றவன் திரும்பி வரவில்லை. என்ன நடந்ததோ?

தையல்முத்தாச்சிக்கு என் எண்ணம் புரிந்தது. கண்களால் 'வேண்டாம்' என்றாள். சற்றுவேளை சந்தியில் தயங்கிவிட்டு வடக்குப் புறமாகச் சைக்கிளை உருட்டினேன்.

மயான அமைதி எங்கும் நிலவியது. குண்டு வெடிச்சத்தங்கள் ஓய்ந்திருந்தன. பொம்மைவெளி வயல்களில் வெள்ளம் தேங்கிக் கிடந்தது. கடற்கரையோரத்தில் கொட்டிக் கிடந்த குப்பைகளுள் ஏதாவது கிடைக்குமா எனச் சில நாய்கள் கிளறிக்கொண்டிருந்தன. அழகம்மாவின் குடிசையைக் கடந்து நடந்தோம்.

'செபஸ்தியான் பொறுத்த தருணத்தில் அவளுக்கும் பிள்ளைகளுக்கும் வாழ்வு கொடுத்தான்' என நான் எண்ணிக்கொண்டேன்.

"இதுதான் அழகம்மாவின் குடிசை" என்றேன் மனைவியிடம் ஒரு பேச்சுக்கு.

என் மனைவிக்கு நடந்து பழக்கமில்லை. கால்கள் காக்கைதீவை அடைவதற்கு முன்னமே கெஞ்சத் தொடங்கிவிட்டன.

நாங்கள் வாடிமடத்தில் சற்றுத் தங்கி இளைப்பாறினோம்.

அராலிப் பாலத்தடியில் வந்தபோது நண்பகலாயிருந்தது. எங்கு பார்த்தாலும் பசுமையாகவிருந்தது. ஆனால், ஒரு சந்தடியையும் காணவில்லை. வயல்களில் வயிறு நிறைய மேய்ந்த மாடுகள் மர நிழல்களில் படுத்து அசைபோட்டுக் கொண்டிருந்தன. கல்லுண்டாய் வெளியெங்கும் மாடுகளும் ஆடுகளும் நிறைந்திருந்தன. அவை வழக்கத்திலும் பார்க்க, வேலியற்ற வயல்களிலும் தோட்டங்களிலும் மேய்ந்து கொழுத்திருந்தன.

பால மரத்தடியில் நாங்கள் மீண்டும் அமர்ந்து கொண்டோம். பூவரச மரத்தின் அருகில் பஸ்தரிப்புக்காகக் கட்டப்பட்ட சிறு கட்டடத்தில் நாங்கள் காலாற அமர்ந்துகொண்டோம். பிளாஸ்ரிக் போத்தலில் எடுத்து வந்த நீரைப் பருகினோம்.

"அங்க இருக்கேக்க மனசில இருந்த பயம் இங்க இல்லை. இப்ப தூரத்திலதான் குண்டு வெடிக்கிற சத்தம் கேட்கிறது... நான் நினைக்கிறன் ஆமி இந்தப் பக்கம் வராதெண்டு..." என்றாள் தையல்முத்தாச்சி.

"ஒரு சனத்தையும் காணேல்லை. பவளத்தின்ர வீட்டுப் பக்கமும் இப்படித்தான் இருக்குமோ?..."

"இருக்காது... அராலியில ஆக்கள் இருக்கினம் என்று லூசியன் சொன்னான்" எனற் அவள், "லூசியனுக்கு என்ன நடந்திருக்கும்?" என்று ஏறிட்டுப் பார்த்தாள்.

நான் ஏதோ சொல்ல வாயெடுத்தபோது ஓர் ஆட்டினை ஐந்தாறு நாய்கள் விடாப்பிடியாகத் துரத்துவது தெரிந்தது. வயலில் விழுந்தடித்து 'ம்மே' என்றலறியவாறு ஓடிய ஆடு பயத்துடன் வீதியில் ஏறியது. நாய்கள் பசியால் வேட்டையாடத் தொடங்கி விட்டன. தார் வீதியில் அந்த ஆடு சறுக்கி விழுந்தபோது ஒரு நாய் அதன் பின் தொடையில் கவ்வியது. அது மீண்டும் எழுந்து ஓடி நாங்கள் நின்ற பக்கமாக வந்தது.

"சூய்... சூய்... அடிக்... அடிக்..."

ஆடு எங்கள் பக்கம் வந்து பரிதாபமாக நின்றது. அதன் உடல் பதறி நடுங்கியதைத் தையல்முத்தாச்சி பார்த்தாள். மனிதர்கள் இருவரைக் கண்ட நாய்கள் உறுமின. பின்னர் சற்றுக் கலைந்து போயின.

இனி என்னென்னவெல்லாமோ நடக்கப் போகுது. நாய்கள் பசிக்கு வேட்டையாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன.

சைக்கிளை உருட்ட தையல்முத்தாச்சி பின்தொடர்ந்தாள். சைக்கிளை இடைக்கிடையே பின்னால் பற்றித் தள்ளிவிட்டாள். நாங்கள் பாலத்துச் சந்தியிலிருந்து அராலிப் பாதையில் திரும்பி நடந்தோம். சற்றுதூரம் நடந்த பின்னர் தையல்முத்தாச்சிக்குத் தன் பின்னால் ஏதோ நடந்து வருவது போலவிருந்தது. பயத்துடன் திரும்பிப் பார்த்தாள். நாய்களினால் துரத்தப்பட்ட அந்த வெள்ளாடு அவளுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தது.

“இஞ்சை பாருங்கோப்பா, இந்த ஆட்டை...”

நானும் பார்த்தேன்.

“சரி வரட்டும்.”

அந்த ஆடு இன்று எங்கள் வீட்டு முற்றத்தில் படுத்திருக்கிறது. அது வளவை விட்டு வெளியில் போகப் பயந்து கிடந்தது. எங்களுக்கும் அந்த வெள்ளாட்டிற்கும் எதுவித வித்தியாசமும் இல்லை.

தூரத்தில் வாகனம் ஒன்று விரைந்து செல்லும் சத்தம் கேட்டது. வெகுநாள்களுக்குப் பின்னர் ஒரு வாகனத்தின் சத்தம் கேட்கிறது. இராணுவமாக இருக்க முடியாது.

வயல் கரையோரத்தில் குச்சொழுங்கைகளூடாக எங்களைத் தேடி எவரும் வரவில்லை. முற்றத்தில் போர்டிக்கோக் குந்தில் அமர்ந்திருந்து சிந்தனை வயப்பட்டிருந்தேன். பிள்ளைகள் அங்கு என்ன செய் கின்றனவோ? இங்கு சனமில்லை. சாவகச்சேரியில் அசைவதற்கு இடமில்லாமல் சனத்திரள்.

ஒழுங்கை முகட்டில் ஒரு வயோதிபர் என் வீட்டை நோக்கி வருவது தெரிந்தது. ஐந்தாறு வீடு தள்ளி இருக்கின்ற நான்கு வயோதி பர்களில் அவர் ஒருவர். மயில்வாகனம் என்று பெயர். படலையைத் திறந்து கொண்டு வந்தார்.

“வாருங்கோ...” என்று அவரை நான் வரவேற்றேன். பேச்சுத்துணை கிடைப்பதென்பது இந்தச் சந்தர்ப்பத்தில் அற்புதமானது.

“எப்படிச் சமாளிக்கப் போறம் எண்டு தெரியேல்லை. ஏதோ கொஞ்ச நெல் கிடக்குது. குத்திக் குத்திக் காய்ச்சுறம். அது முடிஞ்சதும்... தேயிலை ஒரு சொட்டும் இல்லை. சீனி கிடையாது...”

“இதுக்குப் போய் பயப்பிடுகிறியள், மயில்வாகனத்தார், அராலியில ஏதோ ஒவ்வொரு வீட்டிலும் நெல் இருக்கும்... நாங்க இப்போ

கொஞ்சப் பேர்தான் இருக்கிறம். எங்கட வீட்டில முடிஞ்சவுடன் தேடிச் சேகரிப்பம். வயல் கதிர் தள்ளி இருக்கு. அறுவடை செய்வம். தேயிலை இல்லாவிட்டால் என்ன... மாடுகளைப் பிடிச்சுப் பால் கறப்பம். மோர் தயாரிப்போம்... சாப்பாட்டிற்கு இங்க பஞ்சமா? தேங்காய் சொரிஞ்சு போய்க் கிடக்குது... வளவுகளில் வாழைக்குலைகள் கிடக்குது. வெல்லலாம்..." என்றேன்.

"அப்ப மற்றாக்களின்ர வீடுகளில் இருக்கிற உணவுப் பொருள்களை எடுக்கலாம் என்கிறியள்...?"

"அதிலை பிழையில்லை. உணவுப் பொருள்களை மட்டும் எடுக்கலாம்."

"ஒரேயொரு கடை வட்டுக்கோட்டையில இருக்காம்."

"அங்க காய்கறி, தேங்காய்... அவ்வளவுதான்."

"என்னெண்டு விளக்கெரிக்கிறியள்?"

"தேங்காய் எண்ணைதான்... மூனறு தேங்காயைத் திருவிக் காச்சினம்."

"அதுசரி துரையப்பர், நெருப்புப் பெட்டிக்கு என்ன செய்யறியள்?"

"அதைக் கேளாதையுங்கோ... உங்களுக்கு இப்பத் தேவை யெண்டால் ஐந்தாறு குச்சி தாறன்."

மயில்வாகனம் சற்று நேரம் அமைதியாகவிருந்தார்.

"கடற்கரைப் பக்கம் இண்டைக்கு ஒரு கிழவி செத்துப் போச்சுதாம். காய்ச்சல்தான். மருந்தில்லை. சரி... எங்களுக்கு அப்படி ஏதாவது வந்தால் மருந்து தண்ணியில்லாமல்..." அவர் குரல் கம்மியது.

எனக்கும் பிரச்சினை தெரிந்தது.

மயில்வாகனம் தொடர்ந்தார்.

"என்னோட இருக்கிற என்ர சகலனுக்கு சலரோகம். எதோ பில்ஸ் போடுறவன். இப்ப ஒண்டுமில்லை. என்ன செய்யிறான் தெரியுமோ? வீடு வீடாகக் குறிஞ்சா இலை தேடிப் பிடுங்கி ஆடு குழை சப்பிற மாதிரிச் சப்பிறான். பிரச்சினை இல்லையென்கிறான்."

"பாருங்கோ... மருந்து கண்டுபிடிச்சிட்டம்..." என்ற நான் சிரித்தேன். என் ஆச்சிக்குத் தெரிந்த கைவைத்தியங்கள் எனக்குத் தெரிந்திருக்க வில்லை எனக் கவலையாக இருந்தது.

இப்பொழுது அவை தெரிந்திருந்தால் எவ்வளவு நல்லாக விருக்கும்?

“வட்டுக்கோட்டைப் பக்கம் கன ஆக்கள் இருக்கினமாம்... அங்க ஒரு யூனிவேசிற்றி டாக்குத்தர் இருக்கிறதாம்.”

“வைத்தியம் பார்க்கிற டாக்குத்தரோ?”

“ஓமோம்... அவர் மருந்து கொடுக்கிறவர். மருந்துதான் இல்லை. அராலியிலும் ஒரு டாக்குத்தர் வந்திருக்கிறார். அவரின்ர சொந்தவிடம் அராலிதான். ஆனால் அவர் வரலாற்றுக் கலாநிதி... பேராசிரியர்... மருந்து தரமாட்டார். லெச்சர் தருவார்...”

“எனக்கு அவரைத் தெரியும். கரைப்பிட்டி விநாயகர் கோயில் அவரின்ரை தானே?...”

“ஓமோம்.”

வெகுநேரம் இருவரும் பேசிக்கொண்டோம். தையல்முத்தாச்சி இரு பேணிகளில் தேநீர் தந்தாள். சீனியில்லாத கசாயம். இருவரும் திருப்தியாக அருந்தினோம்.

“இன்னும் இரண்டு நாளைக்கு தேயிலைத் தூள் இருக்குது.”

“பயப்படாதை தங்கச்சி. நாளைக்குப் பக்கத்து வீடுகளுக்கு புகுந்து குசினிகளில் தடவிப் பார்ப்பம். இல்லாமலா போகப்போகுது?” என்ற மயில்வாகனத்தார் சிரித்தபடி விடைபெற்று எழுந்தார். படலைவரை சென்றவர் திரும்பி வந்தார்.

“துரையப்பர் கெதியில இங்க ஆமி வந்திட வேணும்...”

மயில்வாகனத்தார் ஏன் அப்படிச் சொன்னார் என்பதற்குரிய அர்த்தம் எனக்குப் பல நாள்கள் புரியவில்லை.

# 17

## இடம்மாறிய இதயங்கள்



இடப்பெயர்வு நிகழ்ந்து இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன. வலிகாமத்தி லிருந்து தென்மராட்சிக்கும் வட மராட்சிக்கும் இடம் பெயர்ந்த மக்களில் பலர் அடிக்கடி இடம் மாறிக்கொண்டிருந்தனர். குடியிருக்கும் இடத்தில் ஏற்பட்ட சிற்சில பிரச்சினைகள் அவர்களை வேறிடம் பார்க்கத் தூண்டின. வசதி குறைந்த, நாளாந்தம் கூலிப் பிழைப்பில் தங்கியிருந்த மக்கள் வீதியோரக் காணிகளில் சிறு சிறு குடில்களை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். இரண்டு மாதக் கழிவில்தான ராகுலனுக்கு செம்பியன்பற்றுக்குச் செல்கின்ற ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது.

சாவகச்சேரியிலிருந்து எழுதுமட்டுவாள் வரை வீதியின் இரு மருங்குகளிலும் மக்களின் தற்காலிகக் குடியிருப்புகள் தோன்றியிருந்தன. முழத்திற்கு ஒரு கடை அமைந்திருந்தது. தேநீர்க் கடைகள், காய்கறி விற்கும் கடைகள், சைக்கிள் பஞ்சர் ஒட்டும் கடைகள், மண்ணெண் ணெய்க் கடைகள், புத்தகக் கடைகள் எனப் பல தோன்றியிருந்தன. வீதியெங்கும் கடைகள், எங்கிலும் மக்கள் குழுமி நின்றிருந்தனர். மண்ணெண்ணெய் வாகனங்கள் புகையைக் கக்கியவாறு குறுக்கும்

நெடுக்குமாக ஓடிக்கொண்டிருந்தன. சைக்கிள்கள்தான் பெரும் எண்ணிக்கையில் காணப்பட்டன.

சத்தியன் மோட்டார் சைக்கிளை ஓட்ட, பின்னால் ராகுலன் அமர்ந்திருந்தான். ஊன்றுகோல்களின்றி அவனால் இப்பொழுது நடக்கமுடியும். ஜெய்ப்பூர் கால் பொருத்தப்பட்டு விட்டது. மோட்டார் சைக்கிளில் அமர்ந்திருப்பது ராகுலனுக்குச் சிரமமாகவில்லை.

"சாவகச்சேரி கொள்ளாத சனம்...?"

"தென்மராட்சியில் மூலை முடக்கெல்லாம் சனம்... அதுகள் படுகிற கஷ்டங்களைப் பார்க்கக் கவலையா இருக்கிறது. கச்சேரி கொடுக்கின்ற உலர் உணவு நிவாரணத்தில் மட்டும் நம்பிதான் பெரும்பாலான குடும்பங்கள் உள்ளன. ஆஸ்பத்திரிகள் மந்திகையும் சாவகச்சேரியும் நிரம்பி வழிகிறது...."

அவர்கள் எழுதுமட்டுவாள் சந்தியை அடைந்தனர். சந்தை கலகலப்பாக விளங்கியது. அங்கும் வீதியோரங்களில் கடைகள் முளைத்திருந்தன.

சத்தியன் சந்தியிலிருந்து வடக்காக அமைந்த வீதியில் மோட்டார் சைக்கிளைத் திருப்பினான். இரண்டு பாகங்களிலும் தென்னந் தோட்டங்கள் காட்சி தந்தன. வீதியோரக் காணிகளில் வீடுகள் காணப் பட்டன. அதற்கப்பால் உவர்தரை விரிந்து கிடந்தது. முட்செடிகளும் கொடிகளும் ஈச்சம் பற்றைகளும் ஆங்காங்கு குட்டையான மரங்களும் கொண்ட களப்பு விரிந்தது. வீதி கிறவலாக மாறிப் பின்னர் வெறும் உவர் மண்தரையாக மாறியது. வழியில் பல அறுத்தோடைகள் குறுக்கிட்டன. அவற்றில் மோட்டார் சைக்கிளை இறக்கி ஏற்றினர். அந்தப் பாதை வெறிச்சோடிக் கிடந்தது. ஓரிரு சைக்கிளில் செம்பியன் பற்றிலிருந்து சிலர் வந்துகொண்டிருந்தனர். அந்த வீதி நாகர்கோயிலுக்கு முன்புற வீதியில் சென்று ஏறியது.

புதுக்காட்டுச் சந்தியிலிருந்து பருத்தித்துறைக்குச் செல்கின்ற வீதியில் அவர்கள் ஏறி நின்றிருந்தனர். சற்றுத் தூரத்தில் நாகதம்பிரான் கோயிலும் சடைத்து முற்றி நிலத்தோடு சரிந்திருக்கும் மருத மரமும் தெரிகின்றன. மருத மரத்தின் பாரிய வடிவமும் தனிமரம் பெரும் சோலையாகப் படர்ந்திருக்கும் தன்மையும் இங்கிருந்து பார்க்கும்போது தெரிகின்றன. அதன் முன் பல வைரவ சூலங்கள் நேர்த்தியாகக் குத்தப் பட்டிருந்தன. மருத மரத்தின் தரை தழுவிய கிளையில் பலர் அமர்ந்திருப் பதும் தெரிகிறது. வலிகாமத்து மக்கள் ஊர்காண் பயணிகளாக மாறி

விட்டார்கள். கவலையால் முடங்கிக் கிடக்கின்ற மக்கள் ஒருபக்கம். நித்தம் ஊர்சுற்றிக் காலத்தைக் கழிக்கின்ற இளைஞர்கள் இன்னொரு பக்கம்.

நாகர்கோயிலுக்கு அப்பால் பரந்த மணல்வெளியும் மணல் கும்பிகளும் தெரிகின்றன. இடையிடையே நாவல் மரங்கள் பச்சைத் தன்மையிழந்து கறுத்துக் கிடக்கின்றன.

நாகர்கோயில் மணல்கும்பிகள் எல்லாம் வலிகாமத்து இளம் பிள்ளைகளும் சிறுவர்களும் ஏறி இறங்கி விழுந்து புரண்டு திரிகிறார்கள். அவர்களுக்கு இப்படியான இடங்கள் புதியவை.

“போவமா?” சத்தியன் கேட்டான்.

“போவம்... இடையில ஒருக்காத் தாழையடிக்குப் போவம்...” என்ற ராகுலனை அர்த்தத்துடன் பார்த்துச் சத்தியன் சிரித்தான்.

அவன் சிரிப்பின் அர்த்தம் புரிந்ததும், “அப்படியொன்றுமில்லை, சும்மா... ஒருக்கா... அயலவர்கள் எப்படியிருக்கிறார்கள் என்று பார்க்க...” என்றான் ராகுலன். அவன் குரலில் சற்று வெட்கம் கலந்திருந்தது.

“சரி... சரி...”

மோட்டார் சைக்கிள் தெற்குப் பக்கமாகத் திரும்பி செம்பியன் பற்றுப் பாதையில் விரைந்தது. இடையில் இடப்புறமாக ஒருமணல் ஒழுங்கையில் சத்தியன் திருப்பினான்.

“இது தாழையடிக் கடற்கரைக்கு நேராகப் போகுது... குறுக்கு வழி.”

அந்தப் பாதையில் பயணப்பட்டவர்களுக்கு அவ்விடத்தில் இயற்கை அழகு புரியும். கண்ணுக்கெட்டிய தூரம்வரை வெண்மணல் பரந்திருக்கும். வடக்கே கடற்கரையோரமும் ஆங்காங்கு ஓரிரு தென்னைகளுடன் கூடிய வாடிக் கொட்டில்களும் எல்லையிடப்பட்ட வாடி வளவுகளும் வித்தியாசமான காட்சி அனுபவங்கள். வெயில் கொளுத்தும் வேளையில் ராகுலனும் சத்தியனும் அப்பாதையில் பயணப்பட்டனர். பல தடவைகள் அவர்கள் பார்த்த இடங்களாயினும் புதிதாகப் பார்ப்பது போலத் தாகத்துடன் ராகுலன் பார்த்தான்.

“முழுநிலவு எறிக்கின்ற இரவில் இந்த வெண்மணற் கடந்கரையில் அமர்ந்திருக்க வேண்டும். அற்புதமாயிருக்கும். பொங்கியெழுந்தபடி அலைகள் கரையில் வந்து மோதும். வீறான கடல்... சமுத்திரமல்லவா? நீ அப்படியோரு இரவு இருந்திருக்கிறாயா?” என்று ராகுலன் கேட்டான்.

“இல்லை...” என்றான் சத்தியன்.

“நீ இப்பவெல்லாம் ரசிகனாகி விட்டாய். உன் பேச்சில் வித்தியாசமான சாயல் பட்டிருக்கின்றது.”

ராகுலன் மௌனமானான். விரைந்து கொண்டிருக்கும் மோட்டார் சைக்கிளை வேகமாக வீசிய வாடைக்காற்று சரிக்கப் பார்த்தது. பயிற்சி பெற்ற சத்தியன் அதற்கேற்ப மோட்டார் சைக்கிளைச் செலுத்தினான்.

அவர்கள் தாழையடி வீதியில் ஏறினர். கடற்கரையை அண்டி அமைக்கப்பட்டிருந்த சிலுவைக் கோயிலடியில் மோட்டார் சைக்கிளை நிறுத்தினர். பக்கத்திலிருந்த சனசமூக நிலையத்திலிருந்து சிலர் அவர்களைப் பார்த்தனர். ஓர் இளைஞன் அவர்களை நோக்கி எழுந்து வந்தான். ராகுலனின் முகம் மலர்ந்தது. லூசியனின் மகன் அன்ரனி. லூசியனின் வீட்டினை எப்படிக் கண்டுபிடிப்பது என்ற கவலை அவனுக் கிருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் லூசியன் குடும்பம் எங்கென அறிவதில் சிரமம் இருக்குமென ராகுலன் எண்ணியிருந்தான்.

அன்ரனி அவர்களை நோக்கி வந்தான்.

“எங்க இருக்கிறியள்?”

“கிட்டடியிலதான்... வாருமன்” என்றபடி அன்ரனி முன்னால் நடக்க அவர்கள் இருவரும் பின்தொடர்ந்தனர். அன்ரனியின் முகத்தில் சோகம் அப்பிக்கிடந்தது. இடப்பெயர்வின் கவலையாயிருக்கலாம் என்று ராகுலன் நினைத்துக் கொண்டான். நாவாந்துறையில் சுதந்திரமாக வாழ்ந்து பழக்கப்பட்டவர்களுக்கு தாழையடியின் விரிவும், ஆர்ப்பரிக்கும் கடலும் வித்தியாசமானவை. நாவாந்துறையின் குடாக்கடல் மணமும் சேற்றுக் கடற்கரையும் பொங்காத கடலும் அவர்களது வாழ்வினைப் போன்று அமைதியானவை. தாழையடிக் கடல் அப்படியல்ல. கடல் எப்பொழுதும் ஆர்ப்பரித்துத் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கும். அது நித்தம் புதிது புதிதாக ஒவ்வொரு கரைக் கோட்டை வரைந்து கொண்டிருக்கும்.

இழுத்து விடப்பட்ட கட்டுமரங்களில் பிள்ளைகள் ஏறி விளையாடிக் கொண்டிருந்தார்கள். பலர் கடலில் குளித்துக் கொண்டிருந்தார்கள். பெரும்பாலோனோர் வேறிடங்களில் இருந்து குளிப்பதற்காக இங்கு வந்தவர்களாக இருக்கவேண்டும். சனசமூக நிலையக் கட்டடத்தோடு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்கள் அதனை நிரூபித்தன.

கடற்கரையோரமாக நடந்து, முதலில் எதிர்பட்ட மணல் ஒழுங்கையால் திரும்பி நடந்தனர். பனை மட்டைகளால் வரியப்பட்ட

வளவும், குடிசையும் தெரிந்தன. பனை மட்டைப் படலையைத் தூக்கித் திறந்தபடி அன்ரனி முன் சென்றான். அன்ரனியும் அவனைத் தொடர்ந்து ராகுலனும் இன்னொருவனும் வருவதை முதலில் கண்டவள் பிலோமினா.

நோசம்மா அவசரமாக எழுந்து வந்தாள். அறிந்தவர்களைக் கண்டதும் துயரம் பீறிட்டுக்கொண்டு வந்தது. ஓடிவந்து அப்படியே ராகுலனின் கால்களைக் கட்டிக்கொண்டு பெருங்குரலில் அழத் தொடங்கினாள்.



"யாரிடம் சொல்லி ஆறுவன் இந்தத் துயரத்தை..."

பிலோமினா முற்றத்தில் நின்றபடி விம்மினாள். அன்ரனி துயரத்துடன் கண்களைக் கசக்கிக் கொண்டான். ராகுலனுக்கு என்ன நடந்தது. ஏன் இவர்கள் அழுகிறார்கள் என்பது தெரியவில்லை. திகைத்துப்போய் மரமாகச் சில கணங்கள் நின்று விட்டான்.

"என்ன? என்ன நடந்தது?" என்று கவலையுடன் கேட்டான்.

"அப்பா யாழ்ப்பாணத்திற்கு இடையில ஒரு நாள் போனார். எல்லாரும் போய் வருகினம் என்று கேள்விப்பட்டுப் போனார்..."

"ஓம், எனக்குத் தெரியும்... அவர் போகேக்க என்னைச் சந்தித்தவர்..."

"அவர் இன்னமும் திரும்பி வரேல்லைத் தம்பி" என்று றோசம்மா விம்மினாள். அவளைப் பார்க்க முடியவில்லை. அவ்வளவு தூரம் மெலிந்து கறுத்திருந்தாள். அவளால் தாங்கிக் கொள்ளக்கூடிய இழப்பு அன்று. லூசியன் வித்தியாசமானவன். அவனைப்போல எவருக்கும் கணவன் வாய்க்க முடியாது என்பது றோசம்மாவுக்குத் தெரியும்.

"அப்படியொண்டுமிருக்காது. நாவற்குழிப் பாலத்தை இராணுவம் கைப்பற்றிவிட்டது. அதனால அவர் இங்க வரமுடியாமல் அங்கால தங்கியிருப்பார். அப்பு, ஆச்சி அவை அங்க இருக்கினந்தானே?..."

"அப்படியிருக்காது தம்பி. அவர் போய் ஆறாம் நாள்தான் ஆமி நாவற்குழிப் பாலத்தைக் கைப்பற்றியது. அதுதான் பயமாயிருக்குது. அவர் எங்களை விட்டு நிற்கக்கூடியவருமல்லர்."

"அப்பா, எங்களை விட்டிட்டு நிக்க மாட்டார்..." என்று அழுத பிலோமினாவை அவன் ஏறிட்டுப் பார்த்தான். அவள் விழிகளில் நீர் சொரிவது அவனுக்கு மிகுந்த வேதனையைத் தந்தது.

அவர்களுக்கு எப்படி ஆறுதல் கூறுவதென்பது அவனுக்குப் புரியவில்லை. அவன் வந்த நோக்கம் உள்ளத்தின் கள்ளம் சம்பந்தமானது. பிலோமினாவைச் சந்திக்கும் ஆவல் அவன் மனதில் விஸ்வரூபம் எடுத்திருந்தது. அவளுடன் கல்வி கற்ற கால வேளைகள் நினைவில் அடிக்கடி எழுந்து அவளைக் காணவேண்டுமென்ற ஆவலைத் தூண்டி அலைக் கழித்தன. அவன் மனதில் ஒரு சிறுமியாகக் காட்சியளித்த பிலோமினா இப்படி வளர்ந்து மலர்க்கொடியாக நிற்பாளென அவன் கருதவில்லை. அப்படியொரு வளர்ச்சி. யௌவனத்தின் அழகுகள்

முழுவதும் அவளின் மேனியில் நன்றாகப் படர்ந்திருந்தன. விம்மிப் பூரித்த மார்பகங்கள், மிக ஒடுங்கிய இடை, அகன்ற கீழ்ப்புறங்கள் அவளின் சௌந்தரியத்துக்கு மெருகேற்றின. அவள் சிரிக்கும்போது அந்த இளைஞன் தன்னை முற்றுமுழுதாகப் பறிகொடுத்தான். அவளை நினைக்கும்போது அவனுக்கு அப்புவும் அவரின் வார்த்தைகளும் அடிக்கடி நினைவு வரும். அவன் ஆழ்மனதில் உறங்கிக் கிடந்த மானிடக் காதலை அவர் தூண்டிவிட்டார்.

அவன் அவர்களுக்கு ஆறுதல் கூறினான்.

"ஒண்டும் நடந்திராது. பயப்படத் தேவையில்லை. அவர் அங்க அகப்பட்டிட்டாரென்று நினைக்கிறன். பயப்படவேண்டாம். கன பேர் அங்கால அகப்பட்டிருக்கினம்தானே?"

"இங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒருக்காப் போக முடியாதோ தம்பி?"

"ஒரு பாதையும் நீங்க போறதுக்கு இல்லை. நான் நிச்சயமாக அங்கால போவன். அவரை விசாரித்துப் பார்த்து வருவன். எனக்கொரு நம்பிக்கை அவரும் எங்கட அப்புவோட அராலிக்குப் போயிருப்பா ரென்று."

"அப்படி அவரைக் காப்பாற்றி வைத்திருக்கும் ஆண்டவருக்கு நன்றி" என்றாள் தோத்திரத்துடன் றோசம்மா.

அவர்கள் ஒரு மணிநேரம் வரை அங்கிருந்தனர். பிலோமினா சுடச் சட தேநீர் தந்தாள். வாங்கிப் பருகினர்.

"எப்படிச் சீவிக்கிறியள்?" என்று கடைசியாக விடைபெறும்போது அவன் கேட்டான்.

"நிவாரணப் பொருள்கள் இருக்குது. சமாளிக்கிறம். நான் செபஸ்தி அண்ணையுடன் கடலுக்குப் போறன்" என்றான் அன்ரனி.

"கடவுள் ஒரு வழியை அடைத்துவிட்டு ஒரு வழியைத் திறந்து விட்டிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் அழகம்மாவையும் பிள்ளைகளையும் நாங்க பார்த்தம். இங்க என்னையும் பிள்ளைகளையும் அழகம்மாவும் அவள் புரியனும் பார்க்கினம். அவர்கள் பக்கத்தில்தான் இருக்கினம்."

அவர்கள் விடைபெறும்போது இரண்டு உள்ளங்கள் கனத்திருந்தன. இதயங்கள் இடம்மாறியிருந்தன.

18

# இழந்த சொர்க்கம்



**வா**னத்தில் ஹெலிக்கொப்டர் ஒன்றின் இரைச்சல் எழுந்தது. நான் பயத்துடன் முற்றத்திற்கு வந்தேன். வீட்டிற்குள்ளிருந்த தையல்முத்தாச்சி, "உள்ளுக்கு வாருங்கோ... சுட்டுவிடப் போறான்" என்று குரல் தந்தாள். நான் அவள் பேச்சினைச் சட்டை பண்ணாமல் முற்றத்தில் நின்றபடி வானத்தை அண்ணாந்து பார்த்தேன். ஹெலியிலிருந்து வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் காற்றில் அசைந்து மிதந்தன. அவை நாலாபக்கங்களி லிரும் பரவி பறந்து கீழிறங்கின.

"ஏதோ நோட்டீஸ் போடு றான்கள்..." என்றபடி கீழே விழும் துண்டுக் காகிதம் ஒன்றினைப் பெறு வதற்காக ஒழுங்கையில் இறங்கினேன். தையல்முத்தாச்சியும் முற்றத் திற்கு ஓடி வந்தாள். காற்றில் அள்ளுப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் விழுந்த இடத்திலிருந்து விலகிச் சிதறியிருந்தன. வயலில் இறங்கி வரப்பில் நடந்து ஓரளவு வெள்ளத்தில் நனைந்த துண்டுப் பிரசுரத்தோடு நான் வீட்டுக்கு வந்தேன். என்னைப் போல வீடுகளுள் பதுங்கி யிருந்தவர்கள், வளைகளை விட்டு வரும் எலிகளாக வெளியே தலையை நீட்டினர்.

"என்னவாம்?..." என்று ஆவலுடன் கேட்டாள்.

“ஆமி வருகுதாம்... எல்லாரையும் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு வரட்டாம். ஒவ்வொரு ஊர்க்காரருக்கு ஒவ்வொரு பாடசாலை...”

“எங்களை எங்க வரட்டாம்?”

“யாழ்ப்பாணக் கல்லூரிக்கு... வட்டுக்கோட்டைக்கு...”

“என்ன செய்யப் போறான்களாம்?”

“ஆருக்குத் தெரியும்? சிலவேளைகளில யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிக் கொண்டுபோய் சென்பற்றிக்ஸ்காம்பில் வைக்கப் போறான் களோ? அங்கதான் ஒரு காம்ப் இயங்குதாம். சாப்பாடு, மருந்து, பிஸ்கட் எல்லாம் கொடுக்கிறதாக றேடியோவில சொன்னான்கள்.”

“எக்கணம் எல்லாரையும் பிடிச்சுக்கொண்டு போய்க் கப்பலில் ஏற்றிக் கொழும்புக்கு அனுப்புறான்களோ தெரியாது... நான் அப்பவே சொல்ல நினைச்சன். பிள்ளையளோடு அங்கால சாவகச்சேரிப் பக்கமாக ஒடித் தப்புவம் எண்டு. பயந்து சொல்லவில்லை. இப்ப ஆமி எல்லாரையும் கப்பலில ஏற்றிக் கொழும்புக்குக் கொண்டுபோய் சிறையில வைக்கப்போகுதோ என்னவோ...”

நான் தையலைக் கோபத்துடன் பார்த்தேன்.

“ஏனப்பா, விசர்க்கதை கதைக்கிறீர்? அப்படியொண்டும் நடக்காது. கூடினா இப்ப வரச்சொல்கிற பாடசாலைகளில வைச்சு நிவாரணம் தந்து பராமரிப்பாங்கள்... அவ்வளவுதான்... வெளிக்கிடும், வட்டுக்கோட்டைக் கல்லூரிக்குப் போவம். அவர்கள் அறிவிச்ச பிறகு இங்கு இருக்கிறது சரியில்லை. ஆமி வரேக்க சும்மா வராது. குண்டு, ஷெல் அடிச்சுக் கொண்டுதான் வருவான்கள். குறிச்ச பள்ளிக்கூடங்களைத் தவிர்த்து அடிப்பாங்கள்...போவம்...”

“இவங்களை நம்ப முடியாது...”

நாங்கள் படலையைத் திறந்துகொண்டு புறப்பட மயில்வாகனத் தாரும் அவருடன் இருந்த மூவரும் வீதியில் ஏறினர். நாங்கள் அன்று பிற்பகல் பாடசாலையை வந்தடைந்தோம். நாங்கள் வருவதற்கு முன்னரே அங்கு முப்பது குடும்பங்கள் வரையில் வந்து குடியேறி இருந்தன. சிலர் மாட்டு வண்டிகளில் பொருள்களையும் ஏற்றிக் கொண்டு வந்திருந்தனர். சைக்கிள்களும் நிரம்பிக் கிடந்தன. அக் கும்பலில் நடுத்தர வயதிற்கு மேற்பட்டோரே கூடுதலாகக் காணப்பட்டனர். ஓரிரு குடும்பங்களில் பிள்ளைகள் இருந்தனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் வகுப்புத் திண்ணையில் மனைவியுடன் அமர்ந்தேன். எனக்குச் சற்று அப்பால் தெரிந்த வயதான ஆசிரியர் மனைவியுடன் இருப்பது தெரிந்தது. நினைவுபடுத்த முயன்றேன்.

நினைவு வரவில்லை.

நாங்கள் இராணுவத்திற்காக அங்கு காத்திருந்தோம். இயல்பான பயம் எல்லார் முகத்திலும் படர்ந்திருந்தது. ஒரு நாள் கழிந்தது. கொண்டு வந்திருந்த உணவுப் பொருள்களை ஆக்கி உண்டனர். சிலர் பட்டினி கிடந்தனர்.

‘இப்படி எத்தனை நாள்களுக்கு இங்க இருக்கிறது? வீட்டிற்குத் திரும்பிப் போகலாம்...’ என்று சிலர் முடிவெடுத்தனர்.

‘விசர் வேல செய்யாதையுங்கோ...’ என்ற பலரும் எச்சரித்ததால் நின்று விட்டனர்.

எனக்குப் பலரும் அறிமுகமாயினர். நான் வந்தபோது அவதானித்த ஆசிரியர் என்னிடம் வலிய வந்து பேச்சுக் கொடுத்தார்.

“நீங்க பழைய விதானையார் துரையப்பர் எல்லோ...? நான் சுந்தரம் பிள்ளை மாஸ்ரர். பென்சன் எடுத்திட்டன்.”

“நாடகங்கள் எழுதுற சுந்தரம்பிள்ளையோ?”

“சரியாகக் கண்டுபிடிச்சிட்டியள்... எங்க இருக்கிறியள்...?”

“அராலியில... கரைப்பிட்டி விநாயகர்கோயிலுக்குக் கிட்ட...”

“நானும் அராலியிலதான். ஒருத்தரையொருத்தர் காணவில்லை. எல்லாரும் வெளியில தலைகாட்டாமல் இருந்திருக்கிறம்.”

“ஓமோம், தம்பி. நீர் இங்க வந்த பிறகு யாழ்ப்பாணம் போயிருக்கிறீரோ?” என்ற அவரைக் கேட்டேன்.

“ஓமோம்... ஒருக்காப் போனன்.” சுந்தரம்பிள்ளையின் குரல் எப்பொழுதும் சற்றுப் பலமாக ஒலிக்கும். நாங்கள் இருவரும் உரையாடு வதைக் கேட்கவெனப் பலர் அங்கு குழுமிவிட்டனர். சுந்தரம்பிள்ளை அராலியிலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தன் வீடு பார்க்கப் போன அனுபவத்தை விவரித்தார்.

“... நானும் நண்பர் ஒருவரும் யாழ்ப்பாணத்திற்கு இரண்டு சைக்கிளில் புறப்பட்டோம். என்ர சைக்கிளுக்கு அடிக்கடி காத்திறங்கும். நாம் வழியில் எவரையும் சந்திக்கவில்லை. ஓட்டு மடத்தடியில் சில

போராளிகளைச் சந்தித்தம். எங்களைக் கண்டதும் 'ஏன் போகாமல் இருந்தனீங்கள்? அவன் நாவற்குழிப் பாலத்தை மூடிவிட்டான். இனிப்போக முடியாது. திரும்பிப் போங்கோ' என்றனர்."

"யாழ்ப்பாண ரவுணில எங்கட வீடுகள் இருக்கின்றன. அதுகளிலே யிருந்து அத்தியாவசியச் சாமான்கள் சிலவற்றை எடுத்து வரப்போறம்" எண்டு நாங்கள் சொன்னம்.

"ஆமி இப்ப நல்லூரில் நிக்குது. ரவுண் முழுக்க ஷெல் அடிக் கிறான்கள். உங்கால போறது ஆபத்து" என்று அவர்கள் கூறினார்கள்.

"அதையும் மீறிப் போனம். வீதிகள், ஒழுங்கைகள் எல்லாம் குறுக்காக வெட்டப்பட்டிருந்தன. பெரும் அகழிப் பள்ளங்கள். இலகுவில் கடக்கமுடியாதவை. விழுந்தால் தூக்கிவிட வேறொருத்தர் உதவி தேவை. ஒரு விதமாக வளவுகளுக்குள்ளால விழுந்தெழும்பி நீராவியடிக்கு வந்தம். என் வீடு அப்படியேயிருந்தது. வீட்டு வாசலில் நான் வளர்த்த இரு நாய்களும் சந்தோச முணுகல் செய்தன. கொண்டு வந்த சோற்றை அவற்றிற்குப் போட்டன். வீட்டுக் கதவுகள் எல்லாம் திறந்து கிடந்தன. புத்தகங்கள், உடுப்புகள், அரிசி சாமான்கள் இவை அங்கிருந்தன. இவற்றில் எதைக்கொண்டுபோவது? அரிசிதான் தேவை. சைக்கிள் கரியரில அரிசி மூடையைத் தூக்கிக் கட்டியபோது வடக்கிலிருந்து ஷெல் மழையாகப்பொழியத் தொடங்கியது. ஓடிவந்து ஓட்டுமடத்தடிச் சந்தியில் ஏறியபோதுதான் நெஞ்சில் நீர் சுரந்தது... யாழ்ப்பாணத்தில் வெறும் கொன்கிறீட் கட்டடங்கள். காடாய்க் கிடக்கின்றன. அழிந்த பேய் நகரம் போலக் காட்சி தருகின்றது. மக்கள் நடமாடிய பூமி வெறிச்சிட்டுக் கிடக்கிறது. எத்தனை ஆயிரமாண்டுகளாக எங்கள் முன்னோர்கள் வாழ்ந்த பூமி இப்படி மயானமாக மாறிவிட்டது. வளவுகள் பற்றைக் காடாகி விட்டன. வீதிகளில் நாய்களும், மாடுகளும் செத்துக் கிடக் கின்றன. கோழிகள் எதுவுமில்லை... தனித்து நிற்பது மகா பயங்கரமாகத் தெரிந்தது."

சுந்தரம்பிள்ளைச் சிரித்தார்.

"என்ர வீட்டுப்பக்கம் போனியளோ?" என்ற சமய சந்தர்ப்பம் அறியாமல் ஒருவர் கேட்டார். அவரை எல்லாரும் பரிதாபமாகப் பார்த்தனர்.

அன்றும் இராணுவம் அவ்விடத்திற்கு வரவில்லை. நான்காம் நாள் அதிகாலை சித்தன்கேணி வழியாக இராணுவம் வட்டுக்கோட்டைக்கு



வந்து சேர்ந்தது. விடிந்தும் விடியாத காலைப் பொழுதில் பாடசாலையைச் சுற்றி ஏந்திய துப்பாக்கிகளுடன் இராணுவத்தினர் நின்றிருந்தனர். பலர் முதன்முதல் இராணுவத்தைப் பத்தாண்டுகளின் பின்னர் அன்று; தான் கண்டனர்.

உணவுப் பொருள்கள் லொறிகளில் கொண்டு வரப்பட்டிருந்தன.

"இவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்காக உணவுப் பொருள்கள் கொண்டு வந்திருக்கிறம். பெயர் பதிந்து..."

"முதலில் உணவுப் பொருள்களைக் கொடுங்கள். அவர்கள் பலர் நன்றாக வயிராறச் சாப்பிட்டுப் பல நாட்களாகின்றன. நோயாளிகள் உள்ளனர். டொக்டர் ஒருவரும் வரவில்லையா? மருந்துகள் இல்லையா?..." என்று ஒருவர் கேட்டார்.

அவர் கூறுவது இராணுவ அதிகாரிக்குச் சரியாகப்பட்டது. பெயர்கள் பதியப்படவில்லை. முதலில் எல்லாரையும் வரிசையாக நிற்க வைத்து விட்டு உணவுப் பொருள்களை வழங்கத் தொடங்கினர்.

பொருள்கள் தனித்தனியாகப் பொதி செய்து கொண்டு வரப்பட்டிருந்தன. முதலில் அரிசி, மைசூர் பருப்பு, சீனி, தேயிலை என்பன வழங்கப்பட்டிருந்தன. சிலர் இரண்டாம் முறையும் வரிசையில் நின்று பெற்றதை அவதானித்தேன். அதைத் தவறாகச் சொல்ல, என்ண முடியவில்லை. ஒவ்வொருவருக்கும் நிவாரணம் கிடைத்தது.

ஒரு வகுப்பறையில் நோயாளிகள் டாக்டர் ஒருவரால் பரிசோதிக் கப்பட்டனர். மருந்துகள் வழங்கப்பட்டன. அங்கும் கியூ வரிசை காத்திருந்தது. ஒரு லொறியிலிருந்து சவர்க்காரம் வழங்கத் தொடங்கிய போது டாக்டரின் வரிசையில் நின்றவர்கள் வரிசையைக் குழப்பிக் கொண்டு ஓடி வந்தனர். சவர்க்காரம் பெறுவதற்காக அவர்கள் நெருக்கி யடித்தனர். ஒருவர் மீதொருவர் விழுந்தனர். சவர்க்காரம் அவர்களுக்கு அவசியமான ஒரு பொருளாக மாறியிருந்தது. இரு மாதங்களாக உடுப்புகளும், உடம்புகளும் சவர்க்காரத்தைக் காணவில்லை.

“இவை நாங்களாகத் தேடிக்கொண்டவை.”

“வேறென்ன வேண்டும்...?”

“இங்க வராமல் பயந்து வீடுகளில பட்டினியோடகனசனம் இருக்குது. ஒருக்கா நாளைக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். கேள்விப் பட்டு வருவினம். மற்றது தீப்பெட்டி ஒவ்வொண்டு வழங்க வேண்டும்...”

அந்த அதிகாரி ஒப்புக்கொண்டான். நெருப்புப் பெட்டி கொண்டுவர எண்ணவில்லை என்று மன்னிப்புக்கோரும் வகையில் கூறினான். அடுத்த தடவை நிச்சயமாகக் கொண்டு வருவோம் என்றான். வீடுகளுக்குள் பதுங்கியிருந்த சனங்கள் மெல்ல மெல்ல நிவாரணம் கொடுப்பதைக் கேள்விப்பட்டு ஓடி வந்தனர்.

மூன்றாம் நாள் இராணுவம் அவ்விடத்திலிருந்து சென்று விட்டது.

“நான் நினைச்சன். இவங்கள் இங்க காம்ப் போட்டு இருப்பான்கள் எண்டு...” என்றார் மயில்வாகனம்.

எல்லோரும் மீண்டும் தங்கள் தங்கள் வீட்டிற்குத் திரும்பும்போது, ‘அடுத்த நிவாரணம் எப்பொழுது?’ என்ற எண்ணம்தான் மனதில் இருந்தது.

# பழங்கிடுகு வாழ்க்கை



**ம**ழைக்கு ஒழுகிய தலை வாசல் கூரையைச் சீர்செய்வதில் சுப்பிரமணியமும் சிவபுத்திரனும் வேறு இரு கூலியாட்களும் ஈடுபட்டிருந்தனர். நான்கு நாட்களாகக் கிடுகுக்கு அலைந்து பார்த்தனர். நல்ல கிடுகும் கிடைக்கவில்லை. ஒரு சோடிக் கிடுகுகளின் விலை நாற்பத்து இரண்டு ரூபாவாக ஏற்றங் கண் டிருந்தது.

'ஆயிரத்து ஐநூறு கிடுகுகள் வேண்டும் இந்தத் தலைவாசல் மேய, முகட்டிற்கு வேணுமெண்டால் பழைய கிடுகு களைப் பாவிக்கலாம்' என்று வேய்ச்சல்காரர் மதிப்பிட்டனர். அவர்கள் தலைவாசலை வேயப் போகிறார்கள் என்ற செய்தி அயலில் எப்படிப் பரவியதோ தெரியாது. மூன்று குடும்பங்கள் அவர் வீட்டு முற்றத்தில் நின்றிருந்தன. அவர்களின் வறிய கோலத்திலிருந்து அவர்களின் நிலை புரிந்தது.

"கூரை மேய்ந்தால் அந்தப் பழங்கிடுகுகளில எங்களுக்குக் கொஞ்சம் தாருங்கோ. நாங்க தடியால கூரை போட்டு பழஞ் சாக்குகளைக் கட்டியிருக்கிறம். தந்தீங்கெண்டால் அதால மேய்ஞ்சிருப்பம்..."

சுப்பிரமணியத்திற்கு நெஞ்சு வலித்தது. இடப்பெயர்வின் துயரத்தை அவர்கள் அறியவில்லை. கையில் சம்பளப் பணம் இருந்ததும் வசதியாக ஓர் இருப்பிடம் கிடைத்ததும் அவர்களுக்கு மக்கள் படும் கஷ்டத்தினை உணரவிடவில்லை.

“மேய்ஞ்சால் நிச்சயமாகத் தாறம்” என்றார் அவர்.

வலிகாமத்திற்குத் தேவையான தென்னங்கிடுகுகள் தென்மராட்சியிலிருந்துதான் வரும். தோட்டங்களுக்குத் தேவையான குழைவண்டில்களும் இப்பிரதேசத்திலிருந்துதான் வரும். நான்கு இலட்சம் மக்கள் திடீரென இங்கு இடம்பெயர்ந்து விட்டதால் ஒரு வகையில் கடும் சிரமங்களைத் தென்மராட்சி மக்கள் அடைந்தாலும் அவர்களின் உற்பத்திப் பொருள்களுக்கு என்றுமில்லாத விலை கிடைத்தது. தேங்காய் முப்பதுரூபா வரையும் கிடுகுகள் நாற்பது ரூபா வரையும் விலையுயர்ந்தன. மாம்பழங்களை முன்னர் விற்கமுடியாத நிலை இருந்தது. இன்று அவை நன்கு விலை போயின.

எப்படியிருந்தாலும் தென்மராட்சி மக்களின் விருந்தோம்பும் பண்பினை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. அவர்கள் பெரு மனது படைத்தவர்கள். முகஞ்சுழிக்காது வலிகாமத்து மக்களை ஏற்றுக் கொண்டவர்கள்.

சுப்பிரமணியமும் சிவபுத்திரனும் கையிலிருக்கும் பணத்தைப் பொறுத்து தேவையான கிடுகுக்கு எவ்வளவு செலவாகும், வேய்தல் கூலிக்கு எவ்வளவு செலவாகும் எனக் கணக்கிட்டுப் பார்த்தனர். கட்டுப்படியாகவில்லை. குறைந்தது ஆறாயிரம் ரூபாய் தலைவாசல் வேயத் தேவைப்பட்டது.

“அம்மாடி... அந்தக் காலத்தில் ஒரு வீடே கட்டலாம். கல்வீடு... இந்தக் காலத்தில் ஓடே போட்டிடலாம் இந்தப் பணத்திற்கு...” என்றார் சுப்பிரமணியம் கவலையுடன்.

“அப்ப மேயாமல் இப்படி ஒழுக்குக்க இருக்கிறதே?” என்றாள் பவளம்.

“கூரையே இல்லாமல் எத்தனைக் குடும்பங்கள் இருக்குது தெரியுமா?” பவளம் அதற்குப் பின்னர் பேசவேயில்லை.

சாவகச்சேரிக்குப் போய்விட்டு வந்த சிவபுத்திரன் நல்ல ஒரு தகவல் கொண்டு வந்தான்.

"சித்தப்பா, யூ.என்.எச்.சி.ஆர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு வெள்ளைப் பிளாஸ்ரிக் தளப்பார் கொடுக்கினமாம். எங்க, எப்பக் கொடுக்கிறதென்று சாவகச்சேரி யாழ்ப்பாணக் கச்சேரியில எழுதிப் போட்டிருக்கினம். மீசாலைக்கு வியாழக்கிழமையாம்... எங்களுக்கு மூன்ற தளப்பார் கிடைக்கும். பெரிசாம்... அதை நாங்க இந்தக் கூரைக்கு மேல போட்டு இழுத்துக் கட்டிவிடுவம்."

அந்த தளர்பார்களைத்தான் தலைவாசல் கூரைக்கு மேலாக விரித்துக கட்டுகின்ற வேலை நடந்துகொண்டிருந்தது.

"தம்பிமாரே கிழியாமல் போடுங்கோ... கிழிந்தால் ஒரு பிரயோசனமும் இல்லை."

இரண்டு தளப்பார் தலைவாசலுக்குப் போதுமானதாக இருந்தது. மூன்றாவது தளப்பாரை தூவானம் உள்ளே தட்டாமல் இரண்டாக்கிக் கட்டலாமென யோகம் ஆலோசனை தெரிவித்தாள். ஏற்றுக்கொள்ளப் பட்டது.

கூரையில் இழுத்துக்கட்டிய தளப்பார்கள் காற்றில் படபடத்தன. பிய்த்துக்கொண்டு போய்விடலாமென்ற நிலை.

"மாமா, குறுக்கும் நெடுக்குமாகக் கயிறு வரிந்து கட்டாவிடில் காத்துக்குத் தளப்பாய் பிய்த்துக்கொண்டு பறந்திடும்."

"நானும் அதைத்தான் நினைச்சன்..." என்றான் சிவபுத்திரன். அவளைப் பார்த்தபடி. புவனம் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அவன் மனதில் முன்னம் நிலவிய அமைதியிருக்கவில்லை. கள்ளம் புகுந்துவிட்டது. மனம் சஞ்சலமும் சலனமும் படத் தொடங்கிவிட்டது. 'இப்படியொரு சொந்த மச்சாள் இருப்பதை இவ்வளவு காலமும் மறந்திருந்து விட்டேன்' என எண்ணமிட்டான். அவளைப் பற்றி அவன் எண்ணாதிருந்தமைக்கு லண்டனில் இருக்கும் மாணிக்கராசாவுக்கு அவள் நிச்சயிக்கப்பட்டிருக்கிறாள் என்ற முடிவும் காரணமாயிருக்கலாம்.

"டேய், சிவா.... என்ன யோசனை? இருந்தாற்போல... எறியுற கயிற்றைப் பிடித்துக் கட்டு..."

அவன் கயிற்றை எறியத்தான் செய்கிறான். பிடிபடி வேண்டுமே!

"எனக்கொரு கவலை" என்றார் சுப்பிரமணியம்.

"என்ன?"

"பழங்கிடுகு கேட்டதுகளுக்கு கொடுக்க முடியவில்லை."

"அதுகளுக்கும் தளப்பார் கிடைச்சிருக்கும்..." என்ற பவளம் சிரித்தாள்.

தலைவாசல் கூரையைச் செப்பமிட்டு முடிய நண்பகலாகி விட்டது. எல்லோருக்கும் நல்ல பசி. சாப்பிட அமர்ந்தார்கள். வரிசையாக எல்லோரும் இருக்க யோகமும் பவளமும் பரிமாறினர்.

அவர்கள் சாப்பிட்டு முடிய திடீரெனத் தூறல் விழத் தொடங்கியது.

"நல்லா மழை பெய்யட்டும்..." என்றாள் பவளம் சிரித்தபடி. தளப்பாரில் படபடவெனத் தூறல்கள் விழுகின்ற சத்தம் எழுந்தது. வந்த மழை திடீரென நின்று போனது.

அதேவேளை சிதம்பரம் மாமா உள்ளே வருவதை யோகம் கண்டாள். அவரைப் பார்த்ததும் அவளுக்குப் பழைய நினைவுகள் எழுந்தன. கம்பர்மலையில் அவள் குடும்பம் எவ்வளவு சந்தோசமாக வாழ்ந்தது? பொம்மரும் ஹெலியும் வானத்தில் வட்டமிட்டுப் பொழிய ஆரம்பமான 'ஒப்பறேசன் லிபரேசன்' என்ற இராணுவ நடவடிக்கை யுடன் அவர்களின் வாழ்வின் இனிமை அழிந்து போனது. அவள் பிள்ளைகளை இழுத்துக்கொண்டு வயல் வரப்புகள் ஊடாக யாழ்ப் பாணத்திற்கு ஓடிவந்தாள். தாயைப் பார்த்து வரச் சென்ற அவளுடைய கணவன் தம்பிநாதன் இராணுவத்திடம் பிடிபட்டுக் கப்பலில் ஏற்றப்பட்டுக் காணாமற் போனான். இவை நடந்து பத்து வருடங்களுக்கு மேலாகி விட்டன.

கம்பர்மலையில் அவள் குடும்பத்திற்குப் பெரிதும் உதவியாக விருந்த சிதம்பரம் மாமா வருகிறார். தம்பிநாதனின் தாயின் சகோதரர். உண்மையில் தம்பிநாதனுக்கு மாமன் முறையானவர். ஆனால், எல்லோருமே அவரை மாமா என்றே அழைத்தனர்.

"என்னம்மா யோகம், திகைச்சுப்போய் நிக்கிறாய்?" என்றபடி திண்ணையில் அமர்ந்தார். சால்வையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு எல்லாரையும் பார்த்துப் புன்னகைத்தார். "நீங்கள கம்பர் மலைக்கு வந்திருக்கலாம். ஆனால், இப்பத் தொண்டமானாற்றில் இருந்து கம்பர்மலைக்கு ஒரே செல்லடி. நாங்கள் பயந்து கொண்டிருக்கிறம்."

யோகம் அவரைக் கவலையுடன் பார்த்தாள். மீண்டும் மழைத் தூறல்.

"எப்படி மாமா, எங்கட வீட்டைக் கண்டுபிடிச்சியள்?"

“ராகுலன் சொன்னான். எல்லாருக்கும் இப்படியொரு அவலம் வந்திட்டுது. ஐயாவையும் அம்மாவையும் அங்க விட்டிட்டு வந்திட்டியளாமே?”

“அவர்கள் வர்மாட்டம் என்றிட்டினம். ஐயாவின்ர பிடிவாதம்தான் உங்களுக்குத் தெரியுமே!”

அவர்கள் பலவற்றையும் பேசிக்கொண்டனர். தாரணி தேநீர் வழங்கினாள். இருந்தாற்போல சிதம்பரம் எதையோ சொல்ல விரும்புகிறவர் போலக் காணப்பட்டார்.

“யோகம், ஒரு விசயம், முக்கியமான விசயம் அறிஞ்சன். எப்படிச் சொல்றது எண்டுதான் யோசிக்கிறன். அதில எவ்வளவு உண்மை பொய் இருக்கொண்டு எனக்குத் தெரியவில்லை. உண்மையாகவிருந்தால் எவ்வளவு நன்றாகவிருக்கும்.”

“சொல்லுங்க மாமா...” என்று ஆவலுடன் யோகம் வினவினாள். சிதம்பரம் எல்லாரையும் ஆழமாகப் பார்த்தார்.

“தம்பிநாதன் உசிரோட இருக்கிறான் போலப்படுகுது, யோகம்.”

அவ்விடத்தில் வியப்பும் ஆனந்தக் களிப்பும் ஏற்பட்டன.

“கடவுளே... எங்க மாமா? அவர் எங்க மாமா இருக்கிறார்? நான் கும்பிட்ட தெய்வங்கள் என்னைக் கைவிடவில்லை” யோகத்தின் விழிகள் பொலபொலவென நீரைச் சொரிந்தன.

தாரணியும் சிவபுத்திரனும் நெஞ்சு படபடக்க சிதம்பரத்தை ஏறிட்டனர்.

வானம் இரங்கி அழத்தொடங்கியது. தூரத்தில் மின்னல் கிளைவிட இடிமுழக்கம் கேட்டது. காலவேளை தெரியாமல் அண்டங்காகம் ஒன்று கத்தியவாறு தலைவாசலுக்கு மேலாகப் பறந்து சென்றது.

“ஏன்ர மூத்தவன் கொழும்பில் டாக்குத்தராயிருக்கிறான் தெரியுந்தானே?”

“ஓமோம் மாமா, சிகாமணி... வெள்ளவத்தையில் பிறைவேற் ஆஸ்பத்திரியில இப்ப வேலை செய்யிறார்.”

“அவன் ஒரு நாள் ஏதோ அலுவலக அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறான். அங்க தம்பிநாதனைப்போல ஒருத்தர் இருந்திருக்கிறார். பத்து வருடங்களாக அங்க இருக்கிறதாக அறிக்கை இருக்காம். பதிவில் அவர் பெயர் இல்லை. மனநிலை குழம்பிய

நிலையில் இருக்கிறாராம். மிக மோசமான மனநோயாளி அல்லவாம். தான் யார் எனத் தெரியாத நிலையாம். அவர்தானோ என்பது சந்தேக மாகவும் இருக்காம் யோகம்! தான் அவருடன் பேசிப் பார்த்தானாம். எல்லாத்துக்கும் தலையை ஆட்டுகிறாராம். முந்தநாள் சிகாமணி கடிதம் போட்டிருந்தான். பார்க்கப் போறியே?"

அவர் தன் மடியில் செருகியிருந்த கடிதம் ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினாள். அவள் வாங்கிச் சிவபுத்திரனிடம் கொடுத்தாள்.

யோகத்தின் நிலை விவரிக்க இயலாதது. அவள் இதயம் மகிழ்ச்சியால் படபடத்தது. அவளுக்குக் கடைசிவரை நம்பிக்கை இருந்தது தன் கணவன் எப்போதாவது திரும்பி வருவான் என்று. 'அப்படியொருவரை நாங்கள் கைது செய்யவில்லை' என இராணுவம்



அறிவித்திருந்தும் அவளது நம்பிக்கை அழிந்துவிடவில்லை. அந்த நம்பிக்கையில் அவள் நெற்றியில் குங்குமம் இட்டே வந்தாள். அவளுடைய நம்பிக்கை பொய்த்து விடவில்லை.

சிகாமணி தன்து கடிதத்தில் எழுதியிருந்தான்... 'எதற்கும் யோகம் அன்ரியை கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு வாருங்கோ. அவளின் துன்பங்களுக்கு ஒரு விடிவு இதன்மூலம் கிட்டலாம். தம்பிநாதன் மச்சானை அவதான் சரியாக அடையாளம் காண முடியும்.'

யோகத்தால் எதுவும் பேச முடியவில்லை. அவள் உள்ளம் நிச்சயமாக அது அவராகத்தான் இருக்குமென அறுதியிட்டது. பக்கத்தில் நின்றிருந்த தாரணியைத் தன்னுடன் இழுத்து அணைத்துக்கொண்டு விம்மினாள். தாரணியும் தாயைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

"இதென்ன அம்மா, அப்பா உசிரோட இருக்கிறார்... அழுகிறியள்..."

"இல்லையடா சிவா, அப்பா இத்தனை காலமாக எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்?" என்றாள் யோகம் விம்மியபடி.

பவளம் தமக்கையின் அருகில் வந்து பாசத்துடன் அவள் தோளில் கரம் பதித்தாள்.

"அழாதை அக்கா... அத்தான்தான் இருக்கிறாரே. நிச்சயமாக அவராகத்தான் இருக்கவேணும். நீங்க கொழும்புக்கு ஒருக்காப் போங்கோ. உங்களைக் கண்டால் அவருக்கு எல்லாம் சரியாகி விடும்."

"கொதியாகப் போய் அப்பாவைப் கூட்டி வாம்மா..." என்ற தாரணியை சிதம்பரம் இரக்கத்துடன் பார்த்தார்.

"இஞ்சை பாருங்கோ... எல்லாருக்கும் ஒன்று. தம்பிநாதனாகத்தான் நிச்சயம் இருக்கும். யோகம் அப்படியில்லையெண்டால் எங்களைப் பிழை சொல்லக்கூடாது."

"ஏன் மாமா அப்படிச்சொல்லுறியள்? ஒருக்காலும் அப்படிச் சொல்ல மாட்டம். அவராக இருந்தால் எங்களை விட இந்த உலகத்தில் கொடுத்து வைத்தவர்கள் வேறு எவரும் இருக்கமாட்டினம்."

"கொழும்புக்குப் போறதுக்குப் பாஸ் எடு யோகம். நானும் எடுக்கப் போறன். சிகாமணியையும் பேரப் பிள்ளைகளையும் கண்டு கனகாலம்."

அவர் விடைபெற்றுச் சென்றார்.

எல்லாரது முகங்களிலும் மகிழ்வின் பிரகாசம் நிலவியது. யோகமும் பிள்ளைகளும் மகிழ்ச்சியில் பரபரத்தார்கள். யோகத்திற்கு இப்பொழுதே கொழும்புக்குச் சென்று தம்பிநாதனைப் பார்த்துவிட வேண்டும்போல ஆவல் எழுந்தது.

பிள்ளையார் கோயில் பூசை மணி ஒலித்தது.

"நான் ஒருக்காக் கோயிலுக்குப் போயிட்டு வாறன்" என்று எழுந்த யோகத்தை எவரும் தடுக்கவில்லை.

"கடவுளே அது எங்கட அப்பாவாக இருக்கவேண்டும்" என்றான் சிவபுத்திரன் வாய்விட்டு.

"மாமாவாகத்தான் இருப்பார். கவலைப்படாதையுங்கோ சிவா" என்றாள் புவனம் நம்பிக்கையுடன்.

வானம் மீண்டும் கருக்கட்டியது.

## 20

# நெஞ்சில் விழுந்த அடி



முழு நிலவின் ஒளியில் முற்றம் பட்டப் பகல் போலக் காட்சி தந்தது. தலை வாசல் தரையில் வானத்தைப் பார்த்தபடி சிவபுத்திரன் படுத்திருந்தான். தலை வாசலின் இருண்ட மூலையில் புவனமும் தாரணியும் படுத்திருக்கிறார்கள். அவன் படுத்திருக்கிற அதே தரையில்தான் புவனம் துயில்கிறாள்.

அவளைப் பற்றி இனி எண்ண மிடக் கூடாது. அது அழகல்ல.

வானத்தில் முகில்திரள் ஒன்று நிலவை மறைத்தது. முற்றத்தில் வெளிச்சம் மறைத்து இருள் மெல்லியதாகக் கவிந்தது. சிவபுத்திரனின் இதயத்தின் ஒரு பக்கம் வலித்தது. அவள் திடமாகச் சிரித்தபடி கூறி விட்டாள். தன் முடிவினை அவள் தயங்காமல் அவன் முன் வைத்து விட்டாள்.

“புவனம் நான் உம்மிடம் ஒன்று கேட்க வேண்டும்” என்றான் அவன் தயங்கியபடி. அவள் அவனை அவதானமாக ஏறிட்டுப் பார்த்துப் புன்னகைத்தாள்.

“சரி... கேளுங்க சிவா...”

அவனால் அதன் பின்னர் எதுவும் பேசமுடியவில்லை. அவன் தன் இதயத்தை அவளிடம் அப்படியே கொட்டிக் கவிழ்த்துவிட விரும்

பினான். அவன் உள்ளத்து யாழை அவள் மீட்டிவிட்டாள் எனக் கூற நினைத்தானா? வார்த்தைகள் வரவில்லை.

அவன் எதுவும் பேசாமல் நின்றதைப் பார்த்துப் புவனம் தனக்குள் சிரித்துக் கொண்டாள். அவனுடைய தயக்கம் அவளுக்கு வியப்பாக இருந்தது. ஓர் ஆடவன் இப்படி நிலம் பார்த்துத் தயங்கி நிற்பான் என அவள் எண்ணவில்லை.

"அப்ப நான் வாறன்..."

"பொறும் புவனம்..." அவன் நெற்றி வியர்த்தது; குரல் கம்மியது.

"நான் ஒன்று சொல்லட்டுமா, சிவா?"

அவன் அவளை ஏக்கத்துடன் பார்த்தான்.

அவள் தொடர்ந்தாள்: "நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறன். உங்கட மனசில ஏதாவது என்னைப் பற்றித் தப்பெண்ணம் இருந்தா தயவுசெய்து மறந்திடுங்க... நான் உங்களோட அப்படிப் பழகவில்லை சிவா!"

"புவனம்..." அவன் குரல் ஏக்கத்துடன் வெளிப்பட்டது.

அவள் துயரத்துடன் வெறிக்க எங்கோ பார்த்தாள். அவனைப் பார்க்காமலேயே விழிகளைத் துடைத்துக் கொண்டாள்.

"சிவா, என்னால் அத்தான் மாணிக்கராசாவை மறக்க முடியவில்லை. எல்லாரும் அவர் எனக்குத்தான் என்று முடிவு செய்த பிறகு... அப்படிக் கூடிக் கதைச்ச பிறகு.... இரண்டு பேரையும் சிறு வயதிலிருந்தே சேர்த்துக் கதைத்த பிறகு என்னால அவரை மறக்க முடியவில்லை. என் இதயத்தைத் திறந்து பார்த்தால் அவர்தான அங்கிருக்கிறார் சிவா..."

அவன் துடித்துப் போனான். செந்தழலான ஷெல் துண்டொன்றில் கால் வைத்ததுபோலத் துவண்டு போனான்.

"நீங்க இப்ப சொல்லலாம், அவர் இப்ப கெட்டுப் போனார் என்று. எனக்குத் தெரியும் அவர் இப்ப குடிக்கப் பழகிவிட்டார். பேறு பல பழக்கங்களுக்கும் உள்ளாகிவிட்டார், கேள்விப்படுகிறேன். அம்மா அடிக்கடி சொல்றா. லண்டனில் இருக்கிற சிவபாலன் அண்ணை விரிவாக எழுதுகிறார். அப்படியிருந்தும் அவரை என் இதயத்திலிருந்து தூக்கி எறிய என்னால் முடியவில்லை. நான் என்ன செய்ய?"

மாணிக்கராசன், அவனின் ஒன்றுவிட்ட சகோதரன். அவனுக்குப் போட்டியாக அப்படியோர் எண்ணம் வந்திருக்கக்கூடாது. ஆனால்



மாணிக்கராசாவிற்குப் புவனத்தைக் கொடுப்பதில்லை என்ற முடிவு தெரிந்ததும்தான் இவன் மனதில் அவள் இடங்கொண்டாள். அவன் தோற்றுப் போனான். காதல் என்பது அவன் நினைப்பதுபோல பச்சோந்தித்தனமானதல்ல. கருங்கல்லில் செதுக்கிய நினைவு அழியாதது என்பது இப்பொழுது புரிகின்றது. கட்டாந்தரையிலும் மணல் பரப்பிலும் மலை முகட்டிலும் மலரும் மலர். முட்செடியோடு படருவதற்கு விரும்பும் புவனத்தை நினைக்க அவனுக்குப் பரிதாபமாக இருந்தது.

“புவனம்... உண்மை எனக்குப் புரிகிறது. ஆனால் மாணிக்கரா சண்ணை உமது குணத்திற்குப் பொருத்தமானவரல்லர்... கெட்டுப் போனார்...”

“அந்தந்த வயதில அப்படி நடக்கத்தான் செய்யும். நான்தான் பிழை விட்டிட்டன்...”

“எப்படி?”

“நான் அவருக்குக் கடிதங்கள் எழுதியிருக்க வேணும். ‘உங்களுக்காக இங்க ஒருத்தி காத்திருக்கிறாள்’ எனத் தெரியப்படுத்தி இருக்க வேணும். அப்படி நான் செய்யத் தவறிவிட்டன். லண்டனில் தனிமை அவரை அப்படி நடக்க விட்டிட்டது. நான் அவருடன் கடிதத் தொடர்பு வைத்திருந்தால் அவர் நன்றாக, ஒழுக்கமாக இருந்திருப்பார், என்னால முடியவில்லை. அம்மாவிற்கும் அண்ணாவிற்கும் பயந்து, நான்

எழுதுகிற கடிதம் அவருடன் ஒரே அறையில் இருக்கிற அண்ணனிடம் அகப்பட்டு விடுமோ என்ற பயத்தில்... நான் என்ன செய்ய சிவா?" அவள் விழிகள் கலங்கின. அவளை இப்பொழுது எண்ணும்பொழுது சிவபுத்திரனுக்குப் பச்சாதாபம் ஏற்பட்டது. அவளின் காதலை அவன் மதித்தான். அவளைப் புரிந்துகொள்ள முயன்றான். மாணிக்கராசன் உண்மையில் கொடுத்து வைத்தவன்.

"மன்னித்துகொள்ளும்... நான் உம்மைத் தப்பாக நினைத்து விட்டன்...."

"அதொண்டுமில்லை சிவா. நீங்கள் அப்படிக் கேட்க விரும்பியதில் அப்படியொரு தப்புமில்லை. நான் உங்கள் மச்சாள்... அப்படி எண்ணியதில் தவறில்லை" என்றபடி அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"ஒரு உதவி செய்வியளா, சிவா?"

"சொல்லும்... ஏலுமெண்டாச் செய்யிறன்..."

அவள் தயங்கிவிட்டுச் சொன்னாள்.

"அத்தானுக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும்."

"எப்படி?"

"அவருக்காக இங்க ஒருத்தி காலமெல்லாம் காத்திருக்கிறாள் எண்டு எழுதவேண்டும். அவரை நினைச்சு அழிஞ்சு கொண்டிருக்கிறாள் எண்டு எழுதவேணும். அவர் இல்லாமல் அவளுக்கு வேறு வாழ்வில்லை என எழுத வேண்டும்..."

"எழுதுறன், புவனம். நிச்சயமாக எழுதுவன்..."

நிலவை மூடிய முகில் விலகிவிட்டது. வானம் ஒளிர்கிறது. சிவபுத்திரன் அப்படியே நிலவைப் பார்த்தபடி படுத்திருந்தான். மேகங்களின் விலகல் நிலவு ஓடுவது போன்ற தோற்றத்தைத் தந்தது.

புவனமும் சிவபுத்திரனும் பேசிக்கொண்டதையும் புவனம் கண்களைக் கசக்கிக் கொண்டதையும் பவளம் அவதானித்ததை இருவரும் அறியவில்லை. அன்று மாலை பவளம் சிவபுத்திரனிடம் விசாரித்தபோது சிவபுத்திரனால் மறைக்க முடியவில்லை. புவனம் எவ்வளவு தூரம் மாணிக்கராசனின் மீது காதலாக இருக்கிறாள் என்பதை அவன் பவளத்திடம் கொட்டிவிட்டான். அதைக் கேட்ட பவளம் பூரித்துப் போனாள். வாயெல்லாம் பல்லாக, "மெய்யாத்தான் சொல்கிறாயா, சிவா?" என்று மீண்டும் மீண்டும் கேட்டாள்.

“மெய்யாத்தான் அன்ரி...”

“நான் அந்தப் பிள்ளையைப் பிழையாக நினைச்சிட்டன். தாயோடு சேர்ந்து என் பிள்ளையை நாக்கு வழிக்கிறதாக...”

அன்றே பவளத்தில் மாற்றம் தெரிந்தது. புவனம் குந்தில் அமர்ந்து தலைவாரிக் கொண்டிருந்தாள். பவளம் அங்கு சென்று அவள் சீப்பை வாங்கிப் பேன் பார்த்து தலைவாரிப் பின்னிவிட்டாள். எல்லோருக்கும் அதிசயமாக அவளின் செயல் பட்டது.

“என்ன மருமகளில் உருகிறா?” என்று சரசு சிரித்தாள்.

புவனத்திற்கும் அத்தையின் நடத்தையில் மாற்றம் தெரிந்தது. சிவபுத்திரன் எல்லாவற்றையும் சொல்லிவிட்டானெனப் புரிந்தது. அத்தைக்குத் தெரியத்தான் வேணும்.

புவனத்திற்கு அத்தைக்காரி தலைவாரிவிட்டதை ஜெயா பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஓர் இயல்பான விஷயமாகக் கொண்டாள்.

இப்பொழுது நினைத்தாலும் பவளம் சித்தியின் முகத்தில் ஏற்பட்ட ஆனந்தமும் புவனத்தின் மீது உடனடியாக ஏற்பட்ட கரிசனமும் சிவபுத்திரனுக்கு ஆச்சரியமாகவிருந்தது.

அவனுக்கு நித்திரை வரவில்லை.

இருந்தாற்போலத் தாயின் நினைவு எழுந்தது. அம்மாவும் சிதம்பரம் மாமாவும் இப்பொழுது கொழும்புக்குச் சென்றிருப்பார்கள். எந்த நேரத்திலும் நல்ல தகவல் வரலாம். எப்படி அங்கிருந்து தகவல் அனுப்ப முடியும்? கொழும்பிலிருந்து தபால் பருத்தித்துறை துறைமுகத் திற்குப் கப்பலில் வந்து விலாசக்காரரைத் தேடி வந்தடைய மாதக் கணக்கில் எடுக்கும். அப்பா அங்கிருந்தால் நிச்சயமாக அம்மா அங்கு தாமதிக்க மாட்டாள்.

அப்பாவின் இருப்பிடம் தெரியாமல் எவ்வளவு துடித்துப் போனாள்! அவள் கடந்த பத்து வருடங்களாக நித்தம் அனுபவித்து வரும் துயரத்தை அவன் அறிவான். அவளின் ஒவ்வொரு செயலிலும் அப்பாவின் பிரிவின் ஏக்கம் தெரிந்தது. அவரைக் கைது செய்து கப்பலில் ஏற்றிச் சென்றதைக் கண்டவர்கள் சாட்சி சொன்னார்கள். ஆனால் அவரைத் தாங்கள் கைது செய்யவில்லை என்றது இராணுவம்.

இன்று...?

சிவபுத்திரன் அப்படியே எப்பொழுது உறங்கிப் போனான் என்பது தெரியவில்லை. அதிகாலைதான் அவனைத் தூக்கம் தழுவியிருக்க வேண்டும். சந்திரன் அவன் மேல் விழுந்து, "அண்ணா எழும்பு.... எழும்பு..." என்று ஆர்ப்பாட்டம் செய்த பின்னர்தான் விழித்துக் கொண்டான்.

"இப்ப என்ன நேரம் தெரியுமோ?" என்றாள் தாரணி.

முற்றத்தில் வெயில் ஏறியிருந்தது.

எழுந்து பாயில் அமர்ந்துகொண்டான். புவனம் தம்ளரில் கோப்பியைக் கொண்டு வந்து அவனிடம் நீட்டினாள்.

வாங்கிக்கொள்ளும்போது அவளைச் சலனமின்றி ஏறிட்டுப் பார்த்தான்.

"இண்டைக்குக் கடிதம் எழுதப் போறன்..." என்றான் சிவபுத்திரன்.

"ஆருக்கு அண்ணை?' என்று கேட்டாள் சரசு.

"என்ர பெட்டைக்கடி..." என்று சிரித்தான். சுப்பிரமணியம் திண்ணையிலிருந்து அவனைத் திரும்பிப் பார்த்தார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வாசலில் வந்து நிற்கின்றது. ராகுலனாகத்தான் இருக்க வேண்டும். அவர்கள் மீசாலைக்கு வந்த பின்னர் ஓரிரு தடவைகள்தான் அவன் அங்கு வந்திருந்தான்.

"அம்மா..." என்றழைத்தபடி வந்தான். விஷயமறிந்ததும் அப்படியே சந்தோஷத்தில் உறைந்து முற்றத்தில் நின்று விட்டான்.

"அம்மா எப்ப வருவா?"

எல்லோருக்கும் அந்த ஆவலிருந்தது. யோகம் தம்பிநாதனுடன் திரும்பி வரவேண்டும். பத்தாண்டுகளாகக் காணாமற்போன அப்பாவுடன் வாழ வேண்டும்.

"அண்ணை...." என்று சிவபுத்திரனை ராகுலன் அழைத்தான்:

"யாழ்ப்பாணத்திற்குப் போன லூசியன் அண்ணை திரும்பி வரேல்லையாம். என்ன நடந்ததோ தெரியவில்லை. அவர் போனது எனக்குத் தெரியும். அதுக்குக் கனகாலத்திற்குப் பிறகுதான் நாவற்குழிப் பாலம் மூடப்பட்டது. ஏதோ நடந்திட்டுது." அவன் குரலில சோகம் மண்டிக் கிடந்தது.

அவர்கள் பலவற்றையும் பேசிக்கொண்டனர். விடைபெறும்போது ராகுலன் சொன்னான்: "நான் அங்கால போகப் போறன். வலிகாமத்துக் குத்தான்..."

சிவபுத்திரன் அவசரமாகக் குகறுக்கிட்டான்: "ஏன்ரா?"

"அடிபாட்டிற்கு இல்லை அண்ணை. சும்மாதான். நான் இனி அடிபாட்டிற்குப் போகமாட்டன்."

"அங்கால நீ போறது ஆபத்தெல்லே?"

ராகுலன் மௌனமாக நின்றான்.

"அப்படிப் பயமில்லை. போயிட்டு கெதியில வந்திடுவன். அப்புவையும் அம்மம்மாவையும் பார்க்க வேணும். எப்படியிருக் கிறார்களோ? லூசியன் அன்னையைப் பற்றியும் விசாரிக்க வேணும்."

"கவனம்..." என்றாள் சரசு.

"கவனமடா தம்பி..." என்றாள் தாரணி கவலையுடன்.

21

# அவல மரணம்



கரைப்பிட்டி விநாயகர் கோயில் மணி ஒலித்து ஊரெல்லாம் நிறைகின்றது. நான் கோயிலை நோக்கி நடந்தேன். பூசகர் இல்லாத நிலையில் அக்கோயிலிற்குத் தினமும் விளக்கேற்றி, மலர் சூட்டி, மணி ஓசை ஒலித்து, திருமுறை ஓதி வழிபாடு செய்து வந்தார் சிற்றம்பலம் என்பது எனக்குத் தெரிந்திருந்தது.

ஒழுங்கையினூடாக நடந்து செல்லும் போது சுந்தரம்பிள்ளை மாஸ்ரர் பசு மாடு ஒன்றுடன் எதிரில் வந்தார். அராலியில் சிலர் கட்டாக் காலிகளாகி விட்ட பசுமாடுகளைப் பிடித்துப் பால் கறந்தார்கள். விற்பனை செய்தார்கள். சுந்தரம்பிள்ளைக்கு ஒருவர் தான் பிடித்த பசுமாடுகளில் ஒன்றினைப் பால்பெற வழங்கி யிருந்தார். காலையில் அந்த மாட்டினைப் புற்றரைக்கு அழைத்துச் சென்று மேய்ப்பது மாஸ்ரருக்கு நல்ல பொழுதுபோக்காக அமைந்தது.

“என்ன மாஸ்ரர், மாட்டோட வாறீர்?” என்று முகமன் விசாரித்தேன்.

“ஓமோம். வேற வேலை? இப்படியாவது பொழுதுபோகட்டும்.”

வயல்வெளிகள் விரிந்து கிடந்தன. ஆட்களில்லாத வீடுகள் திறந்து கிடந்தன.

கோயிலை அடைந்தபோது கோயில் மண்டபத்தில் சிற்றம்பலம் அமர்ந்திருந்தார். நான் கோயிலின் முன்னின்று வணங்கிவிட்டு சிற்றம் பலத்தை ஏறிட்டேன்.

“வாருங்கோ.... நாளைக்கு மாதகலில் நிவாரணம் கொடுக்கப் போகினமாம். ரேடியோவில சொன்னார்கள்” என்றார் சிற்றம்பலம்.

மயில்வாகனத்தார் சொன்னார். “பற்றறி இல்லாததால ஒண்டும் கேட்க முடிவதில்லை. சுந்தரம்பிள்ளை மாஸ்ரர் இருக்கிற பற்றறிகளை வெளியில் வைத்து செய்திகளை மட்டும் கேட்கிறார்...”

“நாங்களும் அப்படித்தான். விதானையார், யாழ்ப்பாணத்தின் ஆத்மா இழக்கப்பட்டுவிட்டது.”

“எதற்கு அப்படிச் சொல்லுறியள்?”

“கந்தபுராண கலாசாரத்தில் திளைத்த நாங்கள், நாவலரின் போதனைகளில் வாழ்ந்த நாங்கள், பிறரின் வீட்டிற்குள் நேராக நுழைவதில்லை. படலையில் நின்று குரல் எழுப்பி மறுமொழி கிடைத்த பின்னர்தான் வளவுக்கு போவம். இப்போவெனில் எதுவித கூச்சமும் இன்றி மற்றவர்களின் வீடுகளுக்குள் சென்று பரிசோதனை நடாத்தி தேவையானவற்றை அள்ளிக்கொண்டு வருகினம். நம்மை நம்பி இடம் பெயர்ந்த நம்மவர்களின் பொருள்களுக்குத் தமது முத்திரையைக் குத்திய பெருமக்கள் சிலர்... இப்படித்தான் வாழவேண்டும் என்ற நியதி போய் எப்படியும் வாழலாமென்ற நிலை வந்திட்டுது...” உண்மையில் சிற்றம்பலம் துயரத்துடன் கூறியவற்றை நான் கவலையுடன் செவி மடுத்தேன். அவரின் வார்த்தைகள் எனக்கு மனச் சங்கடத்தைக் கொடுத்தன.

“நானும் ஒரு தவறு செய்துவிட்டன்.”

“என்ன?”

“பக்கத்துவீட்டு வளவில கிணற்றடியில பழுக்கத் தொடங்கியிருந்த வாழைக்குலையொன்றினை வெட்டி எடுத்திட்டன்....”

சிற்றம்பலம் என்னை ஏறிட்டார்.

“உணவுப்பொருள்கள் உயிர் வாழ்வதற்கு அவசியம். நீங்கள் எடுக்காவிட்டால் பறவைகள் அதனைச் செய்திருக்கும். நான் அதைச் சொல்லவில்லை. வயலில் முற்றிய தானியங்களைச் சிலர் அறுத்துக் கொண்டு போயினம். அது பிழையல்ல. சொரிந்து மண்ணோட போகிறதை எடுத்துக்கொண்டு போகலாம். ஆனால், மற்றவன் வீட்டுக் கதிரை, மேசை, ரி.வி. என்பன இப்ப இவர்களுக்குத் தேவைதானா? அதைத்தான் சொன்னன்.”

எனக்கு மனதில் சற்று நிம்மதியும் ஆறுதலும் பிறந்தது.

"முந்தநாள் உகங்கட பக்கத்தில ஆமிச் சுற்றிவளைப்பாமே? உங்களைச் சுடப் பார்த்தாங்களாம்..."

சிற்றம்பலம் என்னை வியப்புடன் பார்த்துவிட்டுச் சிரித்தார்.

"யார் சொன்னது விதானையாரா?"

"கேள்விப்பட்டம்..."

சிற்றம்பலம் கோயிலின் முன் வளர்ந்திருந்த வாகை மரத்தினை வெறிக்கப் பார்த்தார். அம்மரத்தின் அடியில் படுத்திருந்து அசைபோடும் மாடுகளில் பார்வை நிலைத்தது.

இராணுவம் சில வேளைகளில் வலிகாமத்தில் தேடுதல் என்ற போர்வையில் சுற்றிவளைப்புகளில் ஈடுபட்டது. ஆயிரம் பேர் கொண்ட படையணி ஒரு வாரத்திற்கு ஓரிடத்தில் தங்குவதற்கான ஒழுங்குகளுடன் முன்னேறி வரும்.

"ஓமோம்.... விதானையார்.. காலை எட்டுமணியிருக்கும். வீட்டு விறாந்தையில் அமர்ந்திருந்தோம். அப்போது சிப்பாய் ஒருவர் வந்து இராணுவ உயர் அதிகாரி எல்லோரையும் பிரதான வீதிக்கு வரும்படி அழைக்கிறார் என்று கூற, எல்லாரும் உடுத்த உடுப்புடன் போனம். நம்மை அந்நிலையிற் கண்ட இராணுவ அதிகாரி, 'ஆங்கிலம் தெரியுமா?" என்று கேட்டார். 'ஓம், நான் பேராசிரியர்' என்றேன். அவர் உடனே எழுந்து கைகுலுக்கி வீடு செல்லுமாறு சொன்னார். நாங்கள் திரும்பி வந்திட்டம். இதனை அறியாத சிப்பாய்கள் சிலர் வீட்டிற்குள் வந்து எல்லாரையும் பார்க்க வேண்டுமென்றனர். நான் விறாந்தையில் இருக்கிறன். எனது மனைவி, இரு பிள்ளைகள் எனக்குப் பக்கத்தில் நிற்கின்றனர்."

"வந்த சிப்பாய்களில் ஒருவன் புலிகளின் போர்ப் பயிற்சித் தழும்புகள் உண்டா என்று பார்ப்பதற்காக எனது மகளின் கழுத்துப்பக்க மேலங்கியை அசைக்க முயன்றான். எனக்குக் கோபம் வந்துவிட்டது. 'நிற்பாட்டும். ஸ்ரொப் தற்' என்று கத்தினேன். 'இவள் யார் தெரியுமா? ஒரு பேராசிரியரின் மகள். இவளை ஒரு பெண்தான் சோதனை யிடலாமே தவிர நீரல்ல' என்றேன். அவன் என்னைச் சுடப்போவதாக மிரட்ட, சுட முடியும் என்றால் சுட்டுப்பார் என்று நான் கத்த... மரணம் என்ன நம் கையிலா இருக்கிறது?" என்று சிற்றம்பலம் சற்று நிறுத்தினார்.

“பிறகு...?”

“இராணுவ உயர் அதிகாரி ஓடிவந்தார். விசயத்தை அறிந்ததும் என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். ‘பேராசிரியர் அவர்களே, நமது இராணுவம் 1983இல் இருந்த இராணுவமல்ல. இன்று இது கட்டுப்பாடான இராணுவமாக வளர்ந்தும்கூட இத்தகைய சம்பவங்கள் நடக்கின்றன. குற்றவாளிகளுக்குக் கடுந்தண்டனை வழங்கப்படும். நடந்ததையிட்டு மனம் வருந்துகிறேன்’ என்றார். எல்லாருக்கும் தேநீர் கொடுத்தம். அந்தச் சிப்பாய்க்கும் கூடத்தான். அவன் தலைகுனிந்தபடி நின்றிருந்தான். போகும்போது ‘சமாவென்ன சேர்’ என்றான்.”

“அப்படியெண்டால்...”

“மன்னியுங்கள் ஐயா என்பதாகும்...”

“சாதாரண ஆக்கள் எண்டால் வேறுவிதமாகவே நடந்திருக்கும்...”

நான் எழுந்திருந்தேன்.

“நாளைக்கு மாதகலுக்கு நிவாரணம் பெறப்போகிறதோ?”

“ஓம்... போகத்தான் வேணும். போகாமல் என்ன செய்யிறது...”

அடுத்த நாள் அதிகாலையே வீதியில் மக்கள் இறங்கிவிட்டனர். சைக்கிளில் செல்வோர், மாட்டுவண்டில்களில் செல்வோர், பாதசாரிகளாகச் செல்வோர் என அராலியில் தங்கிவிட்ட சனம் வீதியில் நடந்தது. பண்டத்தரிப்பிலிருந்து மாதகல் வரை காடு பற்றியிருந்தது. வீடுகள், கட்டடங்கள் தெரியாதளவிற்கு செடி கொடிகள் வளர்ந்திருந்தன. மாதகல் பாணாவெட்டி அம்மன் கோயிலடியில் நிவாரணம் வழங்கப்பட்டது. மாலை மூன்று மணி வரை வழங்கப்பட்டது. திரும்பி வரும்போது பக்கத்துத் தோட்டங்களில் காணப்பட்ட வாழைக்குலைகள், பப்பாசிப் பழங்கள் என பலவற்றையும் காவிக்கொண்டு திரும்பி வந்தார்கள்.

நான் எனது சைக்கிளில் மெல்லமெல்ல ஊர்ந்துபோய் நிவாரணத்தைப் பெற்றுத் திரும்பி வந்தேன். வீட்டுக்குத் திரும்பியதும் பெரும் களைப்பாக இருந்தது. நாங்கள் அங்கு தங்கியிருந்த காலத்தில் நான்கைந்து தடவைகள் இப்படி ஊருக்கு ஊர் சென்று நிவாரணம் பெற்று வந்தோம். பொன்னாலை, கோண்டாவில், நாச்சிமார் கோயிலடி ஆகிய இடங்களில் நிவாரணம் வழங்கப்பட்டது. நாச்சிமார் கோயிலுக்குப் போனபோது ஒரு தடவை வீட்டிற்குச் சென்று பார்த்து வந்தால் என்ன என்ற எண்ணம் எழுந்தது. சுந்தரம்பிள்ளை மாஸ்ரரிடம் சொல்லிப் பார்த்தேன்.

"அங்கால போகமுடியாது. கலட்டிச் சந்தியிலிருந்து நாவாந்துறை வரை ஒரு நேர்கோட்டில் தட்டாதெரு சந்தியூடாக பெரியதொரு அணை. 'பண்ட்' கட்டப்பட்டுள்ளது. அந்தப் பாதையிலுள்ள எல்லா வீடுகளும், கட்டடங்களும் தரைமட்டமாக்கி 'பண்ட்' அதாவது இராணுவ வேலி இடப்பட்டுள்ளது. நாங்க இப்ப அந்த பண்டிற்கு இங்கால... அங்கால... போக முடியாது" என்றார் சுந்தரம்பிள்ளை.

நாவாந்துறை வரை உள்ள வீடுகள் எல்லாம் தரைமட்டம் என்றதும் நெஞ்சு 'திக்'கென்றது. என்னைத் தேற்றிக்கொண்டேன்.

கோண்டாவிலில் இராணுவம் பேக்கரி ஒன்றைத் திறந்திருந்தது. கோண்டாவில் நிவாரணத்தின்போது ஓர் இறாத்தல் பாண் வாங்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அன்றிரவு நானும் தையல்முத்தாச்சியும் வெகு காலத்திற்குப் பின்னர் பாண் சாப்பிட்டோம்.

"நல்லா இருக்குது..." என்றாள் தையல்முத்தாச்சி.

"கனகாலத்துக்குப் பிறகு சாப்பிடுகிறம் அதுதான்... இந்த மனிசன் மயில்வாகனம் அராலியிலிருந்து கோண்டாவில் வரை நடந்து வந்திருக்குது. நிவாரணத்தை வாங்கித் தலையில் வைத்துக் கொண்டு திரும்பி வந்திருக்குது... நினைச்சுப் பார்க்க பாவமாகவிருக்குது."

முற்றத்தில் படுத்திருந்த நாய்கள் தாங்கள் இருப்பதை முனகிக் காட்டின. என் வீட்டிற்கு எங்கிருந்தோ நான்கு ஐந்து நாய்கள் வந்து விட்டன. நவாலிப் பாலத்தடியிலிருந்து எங்களைத் தொடர்ந்து வந்த ஆடு குட்டி ஈன்றுவிட்டது. மூன்று குட்டிகள். ஆச்சிக்கு அவற்றுடன் பொழுது போகின்றது. காலையிலும் மாலையிலும் ஆட்டுப்பால் கிடைக்கின்றது. முற்றத்தில் நாய்கள் நிற்பதை விரும்பாத ஆடு மூசித் தன் எதிர்ப்பைக் காட்டியது. ஆட்டுக்குட்டிகளை அவை கவ்விவிடலாம் என்ற பயம். எனக்கு நிலைமை புரிந்தது. எழுந்து வந்து நாய்களை வளவுக்கு வெளியில் துரத்திவிட்டேன்.

முற்றத்திற்கு வந்து போர்டிகோ குந்தில் அமர்ந்து கொண்டோம்.

"ஐந்து மாதங்கள் எப்படி ஓடிச்சென்றதோ தெரியவில்லை" என்றேன் நான்.

"பிள்ளையளைப் பற்றி ஒரு தகலுவம் இல்லை... எப்படி யிருக்குதுகளோ?"

"எனக்கொன்னவோ பயமாவிருக்கு.... இப்படியே அதுகளைக் காணாமல் நாங்கள் கண்மூடிவிடுவோமோவென ராத்திரிக்கூட நான்

கனவு கண்டன். மூத்த மருமகன் தம்பிநாதன் என்னிடம் வந்து சாப்பாடு கேட்கிறதாக... பயந்து கண் விழிச்சிட்டன்."

"அவனை நினைச்சுக்கொண்டு படுத்திருப்பாய்... அதுதான்..."

அவள் எதுவும் பேசவில்லை. ஏக்கத்துடன் நெடுமூச்சுக்களை விட்டாள். நிலவில் முற்றம் குளித்துக்கொண்டிருந்தது. உள்ளே செல்ல எழுந்த வேளை, மயில்வாகனத்தார் வீட்டிலிருந்து கூக்குரல் எழுந்தது.

"ஐயோ... என்ர ராசா..."

அது சாக்குரல் என்பதை நான் புரிந்து கொண்டேன். இருவரும் அவர் வீட்டிற்கு ஓடிச்சென்றோம்.

பேசிக்கொண்டிருந்த மயில்வாகனத்தார் நெஞ்சு வலிக்குதென்று பாயில் சரிந்தவர் எழுந்திருக்கவில்லை. அப்படியே மரணமாகிவிட்டார்.

நாம் அப்படியே சிலையாக நின்றுவிட்டோம். சற்றுமுன்தான் மயில் வாகனம் பற்றி நாங்கள் பேசினோம். வயயோதிப காலத்தில் நிவாரணத்திற்காகப் பல மைல் நடந்து களைத்து அவர் செத்துப் போனார். கடந்த நான்கு மாதங்களில் அப்படிப் பலர் இறந்திருக்கிறார்கள். அவர்களை வெகுதூரம் காவிச்செல்ல ஆட்களில்லாமல் பக்கத்துக காணிகளில் போட்டு பிறகு அடுக்கி எரித்திருக்கிறார்கள். சுடலைக்கு அவர்களைக் காவிச் செல்ல எவருமில்லை.

மறுநாள் மயிர்வாகனத்தையும் பக்கத்து வயல்வெளியில் கட்டையடுக்கி அதன்மீது வளர்த்தி தேவாரம் பாடி எரியூட்டினர். வேலிகளில் கிடந்த பட்ட மரங்கள், தடிகள், மட்டைகள் எல்லாம் போட்டு அவர் சடலத்தை எரித்து முடித்தனர்.

மயில்வாகனத்தின் மரணம் என்னைப் பெரிதும் பாதித்தது. அடிக்கடி என் வீட்டிற்கு வந்து தனிமையைப் போக்கி பேச்சுத் துணையாக இருந்தவர், சொல்லிக்கொள்ளாமல் ஓடிவிட்டார்.

சடலத்தை எரித்துவிட்டு வீடு திரும்பியயோது போர்டிகோ குந்தில் ராகுலன் அமர்ந்திருந்தான்.

இதயம் ஒரு கணம் 'பக்'கென்று அடித்துக்கொண்டது.

22

# வயற்கரையில் சங்கமம்



பிள்ளையார் கோயில் வயல் விளிம்பிலிருந்து பார்க்கும்போது கண்ணுக்கு எட்டிய தூரம்வரை வயல் வெளி பரந்து கிடக்கின்றது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் பச்சைப் பசேலென்றிருந்த வயல்கள் கதிர்களுடன் சாய்ந்து கிடந்தன. அறுவடை செய்ய எவருமில்லாத நிலை. சில சில வயல்களில் ஓரிருவர் தனியாகக் கதிர்களை வெட்டிச் சென்றனர். கூட்டங் கூட்டமாக பறவைகள் வயல்களில் விழுந்து தானியங்களைப் பொறுக்கிச் சென்றன.

பார்த்துக்கொண்டு நிற்கும்போது ஒரு கூட்டம் புறாக்கள் சிறகுகளைப் படபடவென அடித்துக்கொண்டு வயலின் வரப்புகளில் இறங்கின. கட்டாக்காலி மாடுகள் அவற்றைப் பார்த்து மூசிவிட்டு மேய்ந்து கொண்டிருந்தன. மாடுகள் நன்றாக மேய்ந்து கொழுத்துத் திமிர் பிடித்திருந்தன. கன்றுகள் தாயிடம் நன்றாகப் பால் குடித்து மதமதர்த்து வளர்ந்திருந்தன. அவற்றிற்கான பாலைக் கறந்தெடுப்பதற்கு இந்த ஊரில் மனிதர்களில்லை.

தூரத்தில் சங்கரத்தை பத்திரகாளி கோயில் நிழலாகத் தெரிகின்றது.

நான் கவலையுடன் லூசியனை எண்ணிக்கொண்டேன். ராகுலன் என்னிடம் திடமாகக் கூறிவிட்டான்.

“அப்பு, யாழ்ப்பாணத்திற்கு வீடு பார்க்க வந்த லூசிரியன் அண்ணை திரும்பி வரவில்லை. நாங்க அவர் வீட்டிற்குப் போய்ப்

பார்த்தம். அவர் வீட்டு வாசலில் எலும்புக்கூடொன்று கிடந்தது. வீட்டிலும் ஷெல் பட்டிருக்கிறது. அவருக்கு ஷெல் பட்டிருக்க வேணும். அந்த எலும்புக்கூடு அவராகத்தான் இருக்க வேண்டும். வளவுக்குள்ள கிடங்கு வெட்டி அடக்கம் செய்தம். பிள்ளைகள் பாவம்" அவன் குரல் வேதனையில் தளதளத்தது. அவன் பிலோமினாவை எண்ணிக் கொண்டான். அவளுக்கு அவன் என்ன சொல்வான்? எப்படி அவள் ஆறுதல் படுத்துவான்?

தென்மராட்சியிலிருந்து ராகுலன் எப்படி இந்தக் கட்டுக் காவல்களை மீறி இங்கால வந்தான் என்பதை எண்ணி நான் அதிசயப் படவில்லை. இந்த இளைஞர்கள் காதால் நுழைந்து மூக்கால் வரக் கூடியவர்கள். எதுவும் இவர்களின் ஊசாட்டத்தைத் தடுக்க முடியாது.

லூசியனின் மரணத்துடன் அவன் நல்ல செய்தி ஒன்றினையும் கொண்டு வந்திருந்தான். என்னால் அதனை நம்ப முடியவில்லை.

"அம்மா கொழும்பால வந்திட்டா. அங்க அங்கொட ஆஸ்பத்திரியில அப்பாவை சித்த சுவாதீனமற்ற நிலையில் சிதம்பரம் மாமான்ர மகன் பார்த்திருக்கிறாராம். அப்பு! அப்பாதான்அவர் என்பதில் அவருக்குச் சற்றுச் சந்தேகம். அம்மாவை வரச்சொல்லி எழுதியிருதார். போயிட்டு அப்பாவோடு வந்திட்டா. அம்மாவைக் கண்டதும் ஓரளவு தெளிவு வந்திட்டுது."

"பிள்ளையார் கைவிட மாட்டார். யோகம் பட்ட துயரம் கொஞ்ச நஞ்சமல்ல, ராகுலா! தம்பிநாதன் பத்து வரியமாக என்ன கஷ்டப் பட்டானோ? அவன் இருந்திருந்தால் நீயும் இப்படிப் போயிருக்க மாட்டாய்..."

அவன் மௌனமாக இருந்தான். ஆச்சி வழங்கிய தேநீரைக் குடித்து விட்டு நிமிர்ந்து பார்த்தான்.

"இருக்கும்... அப்பாவை அவர்கள் அடித்து உதைத்துக் கப்பலில் ஏற்றிச் சென்றார்கள். கண்டவர்கள் சாட்சி. அவர் காணாமற் போனார். என் உடன்பிறப்புக்கள் இரண்டு ஷெல்லிற்குக் காணாமற் போயினர். இவை மாத்திரமல்லாமல் அப்பு, அவர்களைப் போல எத்தனை பேர் அநியாய மாகப் பலியாகினர் தெரியுமா? கேள்வி நியாயமில்லை."

"கேள்வி நியாயம் எங்குமில்லை..." என்றேன். ராகுலன் என்னை ஏறிட்டுப் பார்த்தான்.

"என்ன சொல்லிறியள்?"

நான் பேசவில்லை. அவனும் பின்னர் வற்புறுத்தவில்லை. இந்த மண்ணில் மரணம் என்பது கேள்வி நியாயத்திற்கு உட்பட்டதாகவில்லை. ஒருவனின் உடலைச் சன்னம் ஒன்று துளையிட்டு உயிரைப் பறித்துக் கொண்டு வெளியேறின் ஒரு பகுதியினர் ‘பயங்கரவாதி’ எனப் பெயரிட்டனர். இன்னொரு பகுதியினர் ‘துரோகி’ எனப் பெயரிட்டனர். ஒவ்வொரு வரும் தங்களது செயற்பாட்டிற்கு நியாயம் கற்பித்தனர். நியாயம் எப்பக்கம் என்பதல்ல முக்கியம். இறந்துபோன மனிதன் இந்த மண்ணில் வாழவேண்டிய உயிர் என்பதும் இந்த உலகத்தின் சகலத் திற்கும் உரிமையுடைய மானிடன் என்பதும்தான் எனது எண்ணம்.

ஓர் உயிரைப் பறிக்க எவருக்கும் உரிமை கிடையாது.

லூசியனின் மரணம் ஏற்படுத்தியிருக்கும் துன்பச்சுமையும், தம்பி நாதன் உயிருடன் இருக்கிறான் என்ற செய்தி ஏற்படுத்தியிருக்கும் அளவிலாத மகிழ்ச்சித் துளிர்ப்பும் வெவ்வேறான உணர்ச்சிகளை ஏற்படுத்தின. தம்பிநாதன் உயிருடன் இருக்கின்ற மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாமல் லூசியனின் மரணம் தடுத்தது. எவ்வளவு அற்புதமான மனிதன்அவன்! அந்தக் கிராமத்தின் ஆத்மாவாக இருந்தான். எவருக்கும் பிரதிபலன் பாராமல் உதவ அவனால்தான் முடியும்.

அத்தனைக்கும் அவன் பெரும் வசதி படைத்தவனல்லன். கடலில் இறங்குவதற்குத் தடை வந்தபோது தன்னந்தனியாகக் கடலில் வள்ளத்துடன் சென்று திரும்பி வந்தான். கடற்கரையில் ஏக்கத்தோடு அவனைப் பார்க்கும் ஊரவர்களுக்குத் தான்பிடித்து வந்தவற்றில் முகஞ் சுழிக்காது தூக்கிக்கொடுக்கும் பெருந்தன்மையை நான் பல தடவைகள் கண்டிருக்கிறேன். பிடித்து வரும் மீன்களில் ஒரு பங்கினை வழங்கி அவன் அந்தக் கிராமத்தின் பல வீடுகளில் அடுப்பெரிய உதவியிருக் கிறான். தன்னிடம் வேலை செய்த கார்த்தியன் செத்துபபோனதும் அவனின் குடும்பத்தைப் பட்டினியில் சாகவிடாது காத்துப் பேணியவன் அவன். லூசியனைப் போல ஒருவன் இருக்கமுடியாது. அவ்வளவு இரக்க சிந்தனை உடையவன்.

வீட்டிற்குத் திரும்பி வந்தபோது தையல்முத்து நிலத்தில் சேலைத் தலைப்பினை விரித்துப் படுத்திருந்தாள். மத்தியான வேளையில் இப்படிப் படுத்திருப்பவளல்லள்.

இன்று சமையல் எதுவும் ஆகவில்லையோ?

அவள் அருகில் வந்தேன். நான் வந்ததை அவள் கவனிக்க வில்லை. நெற்றியில் கை வைத்துப் பார்த்தேன். நெருப்பாகச் சுட்டது. நல்ல காய்ச்சல்.

"என்ன தையல்.... என்ன செய்யிறது?"

அவள் கண்விழித்துப பார்த்தாள்.

"ஒண்டுமில்லை அப்பா. இருந்தாற்போல தலைவலியும் குத்தும், காய்ச்சலும் காயுது... அவ்வளவுதான்."

"வாரும்.. வட்டுக்கோட்டைக்குப் போவம். அங்க யூனிவேசிறறி டாக்குத்தர் பிரசாத் இருக்கிறாராம். காட்டுவம்...."

"ஒண்டும் வேண்டாம். நீங்க போய் அடுப்பில சுடுதண்ணி வையுங்கோ. சூடா ஏதாவது குடித்தால் சரியாகிவிடும்."

அடுக்களைக்குள் சென்று அடுபபு மூட்டி வெறுந்தேநீருடன் அவளருகில் வந்தேன். அவள் எழுந்து உட்கார்ந்தாள். பாசத்துடன் பேணியை வாங்கிக்கொண்டாள்.

"எனக்குச் சாகிறதுக்குப் பயமில்லை. உங்களை இங்க தனிய விட்டிட்டுப் போறன் எண்டுதான் வருத்தமாக இருக்குது. பிள்ளை யளிடம் உங்களை ஒப்படைச்சிட்டன் எண்டால் எனக்குப் பயமில்லை. நான் எப்பவும் சாகத் தயார்..." அவள் விழிகள் பொலபொலவென நீரைச் சொரிந்தன.



நான் நெகிழ்ந்து போனேன். அன்போடு மனைவியைப் பார்த்தேன். விழிகள் கலங்கத் தொடங்கின.

"சும்மா விசர்க்கதை கதையாதை, தையல். உனக்கேன் இப்படி யொரு நினைவு வந்தது? நான் சித்தங்கேணி டாக்குத்தர் சதாசிவத்தாரிடம் ஒருக்காப் போய் வருத்தத்தைச் சொல்லி மருந்து வாங்கி வாறன்."

"நீங்க ஒரு இடமும் போக வேண்டாம். என்னோட இருங்கோ..."

எனக்கு எதுவும் தெரியவில்லை. அடிக்கடி மனைவியின் நெற்றியைத் தொட்டுப் பார்த்துகொண்டேன். இரவு அவளின் உடல் நெருப்புப் போல கொதித்தது.

பயப்படத் தொடங்கினேன். மயில்வாகனத்தார் வீட்டுக்குப் போய் அங்கிருந்தவர்களிடம் மருந்து ஏதாவது கிடைக்குமா என விசாரித்தேன். அங்கிருந்தவர்களிடம் எதுவும் கிடைக்கவில்லை.

காய்ச்சல் நிற்கவில்லை. தையல் இரவில் தன்னை அறியாமல் பிதற்றத் தொடங்கினாள். பிள்ளைகளின் பெயர்களையும் பேரப் பிள்ளைகளின் பெயர்களையும் அடிக்கடி கூப்பிட்டாள்.

"நீங்கதான் பாவம்... என்ன செய்யப் போறியள்?" என்று நிமிடத்திற்கு ஒரு தடவை கூறிக்கொண்டாள். அவளின் அருகில் அமர்ந்து துயரத்துடன் அவளைக் கவனித்தேன். 'நான்தான் பிழை விட்டிட்டன். உன்னையும் பிள்ளைகளோட சாவகச்சேரிக்கு அனுப்பி யிருக்க வேண்டும். உனக்கு ஏதாவது நடந்திட்டால் பிள்ளைகளுக்கு நான் என்ன பதில் சொல்லுவன்?' என எனக்குள் குமைந்தேன்.

'இரவு முழுவதும் நான் உறங்கவில்லை. மனைவிக்கு அருகில் அமர்ந்து அடிக்கடி அவளுக்குச் சூடாகத் தேநீர் பருக்கி வந்தேன். வேறெதுவும் எனக்குப் புரியவில்லை.

காலை துயரத்துடன் விடிந்தது.

மயில்வாகனத்தார் வீட்டிலிருந்த ஒரு வயோதிபப் பெண் காலையில் வந்தாள்.

"வைச்சுக் கொண்டிருக்காமல் ஒருக்காகக் கொண்டுபோய்ப் பரியாரிட்ட காட்டவேணும்."

"எப்படிக் கொண்டு போறது?"

"கொட்டைக்காட்டில பரமசாமியின்ற மாட்டுவண்டில் நிக்குது. போய்ச் சொன்னியள் எண்டால் வருவான். கொண்டுபோய் வட்டுக்

கோட்டைப் பரியாரியாரிட்ட காட்டுங்கோவன்.” இப்படிச் சொன்ன அப்பெண், “தையலுக்கு எல்லாம் ஒடுங்கிட்டது...” என்றும் சொன்ன போது துடித்துப் போனேன். வாங்கில் அறிவுநினைவில்லாமல் கிடக்கும் மனைவியைப் பார்த்தேன்.

“நான் பார்க்கிறன். நீங்க போயிட்டு வாருங்கோ...”

சைக்கிளை எடுத்துக்கொண்டு கொட்டைக்காட்டிற்குப் புறப் பட்டேன். பரமசிவத்தின் வீடு எனக்குத் தெரியவில்லை. வீதியில் விசாரிக்கவும் மனிதரில்லை. பரமசாமி எந்த மூலையில் ஒதுங்கிக் கிடக்கிறானோ?

எங்கு சென்று அவனைத் தேடுவது? மனம் படபடத்தது. வீட்டில் தையல் எப்படியோ? அவளுக்கு எதுவும் ஆகாது. ஆகக்கூடாது. பிள்ளையார் விடமாட்டார்.

கொட்டைக்காடு ஒழுங்கைக்குள் அலைந்து எதிர்ப்பட்ட ஒருவரிடம் விசாரித்து பரமசாமியின் வீட்டைக் கண்டுபிடித்தேன். விஷயத்தைக் கேள்விப்பட்ட அவன், மேய்ச்சலிற்கு அவிழ்த்துவிட்ட நாம்பன்களைத் தேடிப்பிடித்து வண்டில் கட்டிக்கொண்டு புறப்படப் பன்னிரெண்டு மணியாகி விட்டது. சைக்கிளை வண்டிலில் ஏற்றிக் கொண்டு அராலிக்கு வந்த போது என் வீட்டு வாசலில் மூன்று, நான்கு பேர் நின்றிருந்தனர். அவர்கள் நின்றிருந்த கோலத்திலிருந்து ஏதோ நடந்துவிட்டதெனப் புரிந்தது. அவசரமாக வண்டிலிலிருந்து குதித்து வீட்டிற்குள் வந்தேன்.

வாங்கில் தையல்முத்தாச்சி வளர்த்தப்பட்டிருந்தாள். தலைமாட்டில் குத்துவிளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது.

அப்படியே மௌனச் சிலையாகி விட்டேன். வாங்கில் வளர்த்தப் பட்டுக் கிடக்கும் என் மனைவியைக் கண் கொட்டாமல் பார்த்தேன். விழிகள் மௌனமாக நீரைச் சொரிந்தன. அப்படியே நிலத்தில் அமர்ந்து கொண்டேன்.

தையல்முத்தாச்சி செத்துப் போனாள். பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், சுற்றம், அயலவர் என அவளைச் சூழ்ந்து நின்று அழுவதற்கு நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எவருமின்றி என் மனைவி வாங்கில் வளர்த்தப்பட்டிருக்கிறாள். தலையிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு தையலின் பெருமைகளைச் சொல்லி அரற்றுவதற்கு இங்கு எவருமில்லை.

'தையல் நான் தனிச்சுப் போனனடி... தனிச்சுப் போனன். பிள்ளைகளுக்கு என்ன பதில் சொல்லப்போறன்.'

ஓரிரவு தையல்முத்தாச்சியின் சடலம் வாங்கில் காத்திருந்தது. மறுநாள் அதிகாலை, விறகு, தடி என்பவற்றைப் பொறுக்கி பக்கத்து வயலில் அடுக்கி தேவாரத்துடன் அவளைத் தூக்கிச் சென்று கட்டையில் வளர்த்தி தீ மூட்டியபோது "ஐயோ என்ர தையல்..." என்று தலையில் அறைந்து கொண்டு கதறினேன். "உனக்கு நான் கொள்ளி வைக்க நேர்ந்து விட்டதே?"

என்னை ஒருவர் வீட்டிற்கு அழைத்து வந்தார். சவக் கிரியைகள், சடங்குகள் எதுவுமின்றி, பாடை, பறை எதுவுமின்றி, பேரப்பிள்ளைகள் நெய்ப்பந்தம் பிடிக்காமல், இளைய மகன் கொள்ளிக்குடம் தூக்காமல், முறையாக மயானத்திற்கு எடுத்துச் செல்லாமல், பக்கத்திலுள்ள வயல் கரையில் என் உயிரானவள் தீயுடன் சங்கமமாகிவிட்டாள்.

அப்படியே திண்ணையில் அமர்ந்து விட்டேன்.

இருந்தாற்போல அராலி பரபரப்படைந்தது. வாகனங்கள் விரைந்து வந்தன. மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் மனிதருடன் ஓடி வந்தன.

"சாவகச்சேரியை ஆமி பிடிச்சிட்டுது... இப்ப எல்லாச் சனமும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்ப வந்துகொண்டிருக்கினம்."

இடம்பெயர்ந்து திரும்பி வந்தவர்கள் உண்மையில் சந்தோசமாகத் தான் கூச்சலிட்டார்கள்.

நான் அவற்றினைக் கவனிக்கும் நிலையிலில்லை.

## 23

# ஆச்சி வளர்த்த ஆடு



காலையில் எழுந்ததும் சிவபுத்திரன் தாயிடம் கூறிவிட்டான்.

“அம்மா, நான் அப்புவைப் பார்க்கப் போறன்...”

“பண்டுக்கு அங்கால போகப் போறியோ? பேசாமல் இரு தம்பி.”

“ஒரு பயமுமில்லை அம்மா. அப்புவைப் பாத்திட்டு உடனை வந்திடுறன்.”

சாவகச்சேரியிலிருந்து அவர்கள் திரும்பி வந்தபோது வீட்டில் நானும் தையல் முத்தாச்சியும் தங்களை வரவேற்கக் காத்திருப்போம் என நம்பியிருந்தார்கள். வீடு திறந்து கிடந்தது. பொருள்கள் களவாடப்பட்டிருந்ததோடு கண்ட பாட்டிற்கு இழுத்து எறிந்து சிந்திக் கிடந்தன. ஆறு மாதங்களாக ஆட்களில்லாததால் வீடு தூசி படிந்து பாழடைந்து கிடந்தது.

“ஐயாவும் அம்மாவும் அராலியில போல. இனித்தான் வருவினம்...” என்று அவர்கள் ஆறுதல் கூறிக்கொண்டனர். இரண்டாம் நாள் பவளம் குடும்பம் அராலிக்குப் புறப்பட்டது.

"நான் போய்ப் பார்த்து அவர்களை அனுப்பி வைக்கிறன் அக்கா" என்று புறப்பட்டுப்போன பவளம் அன்று உடனேயே சுப்பிரமணியத்தைத் திருப்பி அனுப்பி வைத்தாள். தையல்முத்தாச்சி மரணமான செய்தி அவர்களுக்கு அப்பொழுதுதான் தெரிந்தது. எல்லாரும் அராலிக்குப் ஓடிப் போனார்கள்.

ஆச்சியின் சடலம் சாம்பலாகி நான்கு நாள்கள் கழித்திருந்தன. துயரங்களைச் சொல்லித் தாய்க்காகக் கண்ணீர் விடுவதைத் தவிர அவர்களுக்கு வேறெதுவும் இருக்கவில்லை.

"நான் இங்க வைச்சிருந்து அவளைச் சாக்காட்டிப் போட்டன்."

"அதுக்கு என்ன செய்யிறது ஐயா? எல்லாம் விதி...." என்று எனக்கு ஆறுதல் கூறினாள் யோகம்.

தம்பிநாதன் என்னைப் புரிந்துகொண்டான்.

"அம்மான்" என்றான் புன்னகையுடன்.

"தம்பி... உன்னைக் கண்டதில பெரும் சந்தோசம்..." என்றேன் மன நெகிழ்வுடன்.

சிவபுத்திரன் சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

கோண்டாவிலிலிருந்து கலட்டிச் சந்தி, தட்டாத்தெருச் சந்தி என்பவற்றினூடாக நாவாந்துறை வரை இராணுவ வேலி இடப்பட்டிருந்தது. அந்த வேலி அமைந்த பாதையிலிருந்த வீடுகளும், கட்டடங்களும் தரை மட்டமாகி வரம்பணையாகக் குவிக்கப்பட்டு, தகரங்கள், அஸ்பெஸ்ரர் சீற்றுகள் என்பவற்றினால் மறைப்பிடப்பட்டிருந்தன. யாழ்ப்பாண நகரத்திலிருந்து வலிகாமத்திற்குப் போவதற்கு கலட்டிச் சந்திப் பாதையும் வலிகாமத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கு தட்டாத்தொருப் பாதையும் மட்டுமே இராணுவத்தினரின் சோதனைக்குப் பின்னர் நடமாட வழிவிட்டன. பல குறுக்கு வீதிகள் கம்பிவேலிகளால் தடைப்படுத்தப்பட்டிருந்தன. பிரதான மையங்களில் இராணுவச் சென்றிகள் அமைக்கப்பட்டிருந்தன.

தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகளிலிருந்து திரும்பி ஓடி வந்த மக்கள் இத்தடைகளுக்குப் பழக்கப்பட்டுவிட்டனர். சென்றிகளில் இறங்கி வாகனங்களை உருட்டி நடக்கப் பழகிவிட்டனர்.

எங்கள் வீடு அதிகளவில் சேதமடையவில்லை. பொருள்கள் களவு போயிருந்தன. பழையபடி அவ்வீட்டில் கலகலப்பு நிறைந்து விட்டது.

தம்பிநாதனின் வருகை அக்குடும்பத்தில் புதியதொரு உணர்வினை ஏற்படுத்தியிருந்தது. தம்பிநாதன் தன் பிள்ளைகளை அடையாளம் கண்டுகொண்டான்.

“அப்பா... அப்பா...” என்று சிவபுத்திரனும் தாரணியும் அவனையே அடிக்கடி சுற்றி வந்தனர். தம்பிநாதனின் மனநிலை படிப்படியாகத் திரும்பி வந்தது. எனினும், முன்னர் போல அவனால் அதிகம் பேச முடியவில்லை. வார்த்தைகள் மிக மெதுவாகவும் அளவாகவும் வெளிவந்தன.

ஜெயா குடும்பம் கோண்டாவிலுக்குச் சென்றுவிட்டது. ஆறு மாதங்கள் ஒன்றாக இருந்து ஒன்றாகச் சமைத்து ஒன்றாகப் பழகிவிட்ட அவர்களுக்கு அக்குடும்பத்தின் பிரிவு வேதனையைத் தந்தது. பவளம் குடும்பத்தினர் அராலிக்கு வந்துவிட்டனர். நான் இன்னமும் அராலி யிலேயே இருந்தேன். எல்லாரும் வந்து என்னை அழைத்தபோது நான், “அம்மாவின்ர துவசம் முடியட்டும். அதுவரை நான் இங்கதான் இருக்கப் போறன்” என்று மறுத்துவிட்டேன். என்னைப் பொறுத்தவரையில் அந்த வீட்டில் தையல் இன்னமும் சுற்றிக்கொண்டு இருப்பதாக எண்ணம்.

சிவபுத்திரன் சைக்கிளில் கலட்டிச் சந்தியை அடைந்தபோது வரிசையாக சைக்கிள்களும் மோட்டார் சைக்கிள்களும் நின்றிருந்தன. இன்னொரு வரிசையில் மக்கள் நின்றிருந்தனர். ஒவ்வொருவரையும் அவதானமாகச் சோதனையிட்டு அந்த சென்றியைக் கடந்து வலிகாமத்திற்குள் பிரவேசிக்க இராணுவத்தினர் அனுமதித்தனர். சைக்கிளை உருட்டிக்கொண்டு சென்றியைக் கடந்து ஏறி நாச்சிமார் கோயிலை நோக்கிச் செலுத்தினான்; கலட்டிச் சந்திக்கு அப்பால் சென்றிகள் இருக்கவில்லை. காக்கைதீவிலும், அராலிப் பாலத்திலும் இராணுவத் தடைமுகாம்கள் இருந்தன. அராலிச் சந்தியில் அவனைத் துருவித் துருவி விசாரித்தனர்.

“எங்க போறது?”

“அராலிக்கு...”

“எதுக்குப் போறது?”

“அப்புவைப் பார்க்க... அவர் அங்கதான் இருக்கின்றார்.”

“அப்பு?... சியாத?.... நீ எங்க இருக்கிறது?”

“கொட்டடியில...”

“தனியப் போறது ஏன்?”

அவனுக்கு இதற்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. விழித்துக் கொண்டு நின்றான்.

“சரி... சரி... போறது.”

அவன் சைக்கிளில் ஏறி அராலிப் பக்கமாகச் செலுத்தினான். எப்படியிருந்த யாழ்ப்பாணம்? இன்று இப்படி முழத்திற்கு முழம் சோதனைச் சாவடிகளைக் கொண்டு சிறைக்கூடமாக மாறிவிட்டது. பாதையின் ஒரு பக்கம் வயல்வெளி. ஒரு பக்கம் பனை வளவுகள். தென்மராட்சியிலிருந்து திரும்பி வந்த மக்கள் தங்கள் வீடுகளைத் திருத்துவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். குடிசைகளுக்குப் புதிதாக மரம் மாற்றிக் கொண்டிருந்தனர். கிடுகுகளால் வேய்ந்து கொண் டிருந்தனர்.

கட்டாக்காலிகளாக மாறிவிட்ட தங்கள் மாடுகளைக் கயிறுகளுடன் மூவர் கலைத்துப் பிடிக்க ஓடிக்கொண்டிருந்தனர். மாடுகள் தலையைச் சிலுப்பியபடி அவர்களின் பிடிக்குள் அகப்படாது தறிகெட்டு ஓடிக் கொண்டிருந்தன.

ஓரிடத்தில் சிலர் கலவரத்தில் ஈடுபட்டுக்கொண்டு நின்றதைச் சிவபுத்திரன் அவதானித்தான். குறி சுடாத கன்று ஒன்றினை ஒருவர் தன தெனப் பிடித்திருந்தார். மற்றவர் தன்னுடையதென வாதாடிக் கொண் டிருந்தார்.

சிவபுத்திரனுக்குச் சிரிப்பு வந்தது. இடப்பெயர்வின் பயனாக சமூகத்தில் புதிய பிரச்சினைகள் தோன்றத் தொடங்கிவிட்டன. அராலியில் ஆறு மாதங்களில் பல கன்றுகள் ஈனப்பட்டிருக்கும். சில பெரும் பசுக்களாகவும், எருதுகளாகவும் வளர்ந்திருக்கும். குறியில்லாத அவற்றிற்கு உரிமை கோரும் சொந்தக்காரர்கள் பலராகவிருப்பர்.

“என்ர பசுவோட நிக்குது. அதனால அது அதன் கன்றுதான்....”

“விசர்க்கதை... என்ர பசுவின்ர நிறம், குணங்குறி தெரிய வில்லையே?”

இப்படிப் பல சண்டைகள் நடக்கத்தான் போகின்றன.

அவன் பவளத்தின் வீட்டிற்கு வந்தபோது நான் போர்டிகோ குந்தில் அமர்ந்திருந்தேன். முகத்தில் ஓரளவு தெளிவு பிறந்திருந்தது.

தையலின் மரணத்தின் பின்னர் நான் சோர்ந்து போய்விட்டேன. எல்லாமே இழந்து போனது போல இடிந்து போனேன்.

“அப்பு...” என்றபடி சிவபுத்திரன் வந்தான். பேரனைக் கண்டதும் என் முகம் மலர்ந்தது.

“வா... வா.... பேரா...”

அவன் என் அருகில் அமர்ந்து கொண்டான். வீட்டிற்குள்ளி லிருந்து சரசு ஓடி வந்தாள்.

“உள்ளுக்குள் வா அண்ணை...”

“அப்புவோட கதைச்சிட்டு வாறன்.... அன்ரி எங்கே?”

“குளிக்கிறா.... அப்பா வெளிக்கிட்டிட்டார் சித்தங்கேணிக்கு...”

“நானும் பேரனும் பலவற்றைப் பேசிக்கொண்டோம்.

பேச்சுவாக்கில், “அப்பு நான் சாவகச்சேரியிலிருந்தபோது ஒரு சோதனை செய்தன். அது உங்களுக்குப் பிடிக்கும்....” என்றான் சிவ புத்திரன்.



"என்ன சோதனை?"

"கிராம சேவையாளர் பரீட்சை எடுத்தன்."

எனக்கு திருப்தியான மகிழ்வு.

"சந்தோசம். நீ நிச்சயமாகப் பாஸ் பண்ணுவாய். எங்கட காலத்தில் இப்படிச் சோதனையில்லை. கிராமத்தில் செலவாக்குள்ள, தலைமை வகிக்கக் கூடியவர்கள் விதானையாகத் தெரிவாவர். என் அப்பு விதானையாகவிருந்தால் எனக்கு அந்த வேலை கிடைச்சுது..."

சரசு தேநீர் வழங்கினாள். தேநீரை வாங்கிக்கொண்டு சிவபுத்திரன் கேட்டான்: "மாணிக்கராசன் கடிதம் ஏதாவது எழுதினானா?"

"இல்லையண்ணா... அம்மாவும் கடிதத்தை எதிர்பார்த்திருக்கிறா. புவனம் விசயத்தை அம்மா விரிவாக எழுதிவிட்டா. நீயும் எழுதினாய் தானே அண்ணா? அண்ணற்ர பதில்தான் வரவில்லை. கடிதம் கிடைக்க வில்லையோ?"

"கிடைக்கும்... கப்பலில் கடிதம் கொழும்புக்குப் போறதால தாமதமாகும். கெதியில பதில் வரும்."

"அப்புவுக்கு பத்மா அத்தை கடிதம் போட்டிருக்கா. இந்தியாவி லிருந்து எல்லாரும் வரவிருக்கினமாம். ஜனார்த்தனன், உமா எல்லாரும் வருகினமாம்."

அவன் என்னைப் பார்த்தான்.

"ஓமோம்... வருகினமாம். இந்தியாவில் இருக்க முடியாதாம். பிள்ளையளுக்கு வயது வந்திட்டுது. இங்கினேக்க ஏதாவது சம்பந்தம் செய்ய வேண்டுமென எழுதியிருக்கிறாள். வரட்டும்...."

முற்றத்தில் நின்றிருந்த ஆடுகள் கத்திக் குரல் தந்தன. தாய் ஆட்டினைப் பார்த்துவிட்டு நெடுமூச்செறிந்தேன். நாங்கள் இங்கு இடம்பெயர்ந்து வந்தபோது பாலத்தடியிலிருந்து எங்களைப் பின் தொடர்ந்து வந்த ஆடு. இன்று குட்டிகளுடன் பெருகி நிற்கின்றது. அவற்றினை எவ்வளவு கரிசனையாகத் தையல்முத்து பராமரித்தாள்.

"உந்த ஆடு உன்ர ஆச்சிக்குப் பின்னால் வந்தது."

நான் அந்தச் சந்தர்ப்பத்தை விளக்கினேன். பொறுமையாகக் கேட்டான்.

“ஆராவது இந்த ஆட்டைத் தேடி வருவினம் அப்பு.”

“வந்தால் எனக்கேன்? கொடுப்பன்.”

“அப்பு இப்படியே இருந்தால் என்னவாகிறது? எவ்வளவு காரியங்கள் நீங்கள் செய்ய வேண்டியிருக்குது....”

பேரனை நான் கேள்விக்குறியுடன ஏறிட்டேன்.

“சரசுவை லண்டனுக்குச் சிவபாலனிடம் அனுப்ப வேண்டும். ஜெயா அத்தையிடம் பேசி அவ சம்மதத்தைப் பெற்று புவனத்தை மாணிக்க ராசாவுக்கு அனுப்ப வேண்டும்.”

நான் சிரித்தேன்.

“எனக்கு வயது போயிட்டுது. இனி நீங்கள் எல்லாரும் அந்தக் காரியங்களைச் செய்யுங்கோ... குடும்பத்திற்கு மூத்தவனாக உன் அப்பா வந்திட்டார்.”

“எண்டாலும் அப்பு நீங்க செய்யிற மாதிரி வருமே?”

திருப்தியாகச் சிரிக்கத்தான் முடிந்தது.

மத்தியானம் எல்லாரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டோம்.

“இந்தச் சண்டைக்கு முடிவில்லையோ, அப்பு? வீதியில் நடப்பது எவ்வளவு அவமானமாகவிருக்கிது...” என்றாள் கவலை தொனிக்கப் பவளம்.

“சண்டையைக் முடிவுக்குக் கொண்டுவர ஒருத்தரும் விட மாட்டார்கள். ஆட்சி, அதிகாரம் என்றதைச் சுவை கண்டவர்கள் அரசியல்வாதிகள். இலேசில பிரச்சினைகளைத் தீர்க்க விடமாட்டான்கள். பல்வேறு வழிகளில் இந்த யுத்தத்தைச் சாட்டி உழைக்கிறவர்கள் இலேசில விட மாட்டார்கள். கொமிசன் ஏஜெண்டுகள், வியாபாரிகள், இராணுவம், உயர் அதிகாரிகள்.... விமானப் போக்குவரத்துக்காரர்... இங்க இப்ப கடைகளை விரித்துவிட்ட வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள்... எவர்களும் விடமாட்டார்கள். விரும்ப மாட்டார்கள். எல்லாரும் குழம்பிய குட்டையில இப்ப நல்லா மீன் பிடிக்கிறார்கள்...” என்று சிவபுத்திரன் சொன்னான்.

“வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களுமோ?”

"ஓமோம்... அப்பு. அவர்கள் தங்களுக்கு வருகிறதில ஒரு சிறு, மிகச் சிறு பங்கினை அப்படிக் கிள்ளித் தெளித்துவிட்டு மிகுதியை நிர்வாகச் செலவாகவும், சம்பளமாகவும் அனுபவிக்கினம். அவை விரும்ப மாட்டினம். மனித சமூகத்தில் சுய நலன்கள் கூடிவிட்டன அப்பு. ஒவ்வொருத்தரும் பணத்துக்கு அடிமையாகிவிட்டினம். மக்கள் எப்படிப் போனாலும் பரவாயில்லை. ஆட்சி தங்களிடம் இருக்க வேண்டுமென அரசியல்வாதிகள் நினைக்கினம். யுத்தம் தொடர்ந்தால் தான் உழைக்கலாமென வியாபாரிகள் எண்ணுகினம். எங்கும் எதிலும் சுய நலன்.... மக்கள் நலன் கருதுபவர்கள் எவருமில்லை...."

நான் பேரனை வியப்புடன் பார்த்தேன்.

## 24

# எதிர்க்காற்று



கடலை வெறித்துப் பார்த்தபடி செபஸ்தியான் நிற்கின்றான். அடி வானத்தில் செம்மேகங்கள் அனலாக எரியச் சூரியன் அமிழ்ந்து கொண் டிருந்தான். கண்ணுக்கு எட்டிய தூரம் கடல் வெறிச்சிட்டுக் கிடக்கின்றது. கடற்கரை மடத்தில் சிலர் அமர்ந் திருக்கின்றனர். தரகியர் செல்லையா யாருடனோ உரத்த குரலில் பேசிக் கொண்டிருக்கிறான். ஊர்க் கதையாகத் தான் இருக்கும். கடல் பக்கத்திலிருந்து மடப் பக்கமாக இரண்டு காகங்கள் காற்றில் மிதந்தபடி செல்கின்றன.

நினைக்க நினைக்க வேதனை யாகவும் கோபமாகவும் இருக்கின்றது.

'அன்ரனி, ஏன் இப்படி நடந்து கொண்டான்? லூசியன் அண்ணனின் கனவுகளை நாசமாக்கிவிட்டு எல்லாரையும் போலக் கடலில் இறங்கி விட்டானே?'

காலையில் பிடித்த மீன்களைச் சுடலைச் சந்தையில் மரியாத்தை யிடம் கொடுத்து விற்றுவிட்டு மத்தியானத்திற்குப்பின்னர்தான் வீட்டிற்கு வந்தான். பிள்ளைகள் இன்னமும் பாடசாலையிலிருந்து திரும்பவில்லை. அழகம்மா சோறாக்கியிருந்தாள்.

திண்ணைக்குந்தில் அமர்ந்ததும் அமராததுமாக அழகம்மா கூறிய தகவல்கள் எரிச்சலையும் கோபத்தையும் தந்தன.

"லூசியன் அண்ணற்ற மனிசி, இனி எங்கட உதவி வேண்டாமாம். இவ்வளவு காலமும் செய்தது போதுமாம்."

அவன் மனைவியை நிமிர்ந்து பார்த்தான்.

"என்ன? அப்ப என்ன செய்யப் போகினமாம்?" அவன் குரலில் கவலை தொனித்தது. லூசியன் மீது அவனுக்கு எப்பொழுதும் பெரும் மதிப்பு இருந்தது. தன்னிடம் தொழில் பார்த்த ஒருவன் அவமாகச் செத்துப் போனதும் அவன் குடும்பத்தைக் கடைசிவரை பட்டினி போடாது காப்பாற்றியவன். அவனைப் பற்றி அழகம்மா கதைகதையாகக் கூறியிருக்கிறாள். வீடு பார்க்க வந்து லூசியன் அவமாகச் செத்துப் போன பின்னர், அக்குடும்பத்திற்கு உதவுகின்ற வாய்ப்பினை உண்மையில் செபஸ்தியானும் அழகம்மாவும் பெரும் பாக்கியமாகக் கருதி விருப்பத்துடன் செய்துவந்தனர். அக்குடும்பத்திற்கு அப்படி ஓர் அவலம் நேர்ந்திருக்கக்கூடாது. லூசியனின் மரணத்துடன் அனைத்தையும் இழந்து அக்குடும்பம் நடுத்தெருவுக்கு வந்துவிட்டது.

"ஏன் அழகம்மா? எங்களிடம் வாங்கித் தின்னக்கூடாதென அவ நினைக்கிறாவா?"

"அப்படியோ தெரியவில்லை. கேட்டன்: 'ஏன் அக்கா இப்படிப் பேசிறியன்? லூசியன் அண்ணர் மட்டும் அண்டைக்கு எங்களுக்கு உதவியிருக்காவிட்டால் நானும் பிள்ளைகளும் இருந்த இடத்தில் இண்டைக்குப் புல் முளைத்திருக்கும்' என்றன். 'ஊராக்கள் எவ்வளவோ நாக்கு வழிக்கவும் எங்களுக்கு உதவுவதைத் தடுக்காத பெருந்தன்மை உங்களைவிட யாருக்கும் வரும் அக்கா?' என்றெல்லாம் கேட்டன். அவதிடமாக 'அன்ரனி கடலுக்குப் போகப் போறானாம். இந்தக் குடும்பத்தை அவன் இனிக் காப்பாற்றுவானாம்' என்கிறா."

துடித்துப்போய் அவளை செபஸ்தியான் ஏறிட்டான்.

"ஏ.எல். படிக்கிற பொடியன். இன்னமும் ஆறு மாதங்கள் இருக்குது எண்டவன். லூசியன் எவ்வளவு கனவுகள் கண்டார். 'நான்தான் சின்ன வயதில கலியாணமும் கட்டி கடலிலும் இறங்கிவிட்டன். என் பிள்ளைகள் அப்படியிருக்கக்கூடாது. படிக்க வேணும். படித்த பின்புதான் எந்தத் தொழிலெண்டாலும் செய்ய வேணும்' எண்டு கனவு

கண்ட மனிசன். பிள்ளைகள் படிக்க வேணும். அழகம்மா... அன்ரனி கடலில் இறங்க நான் விடமாட்டன்.''

குளித்துச் சாப்பிட்டுவிட்டு செபஸ்தியான் வெளியில் புறப் பட்டான். நேராகக் கடற்கரைக்கு வந்தான். கடற்கரை வெறிச்சிட்டுக் கிடந்தது. திரும்பி லூசியன் வீட்டிற்கு வந்தான். வீட்டில் றோசம்மாவும் பிலோமினாவும் இருந்தனர். முற்றத்தில் நின்றபடி அந்த வீட்டினை நிமிர்ந்து பார்த்தான். எப்படி இருந்த வீடு? ஒருபுறம் ஷெல் பட்டுச் சிதிலமாயிருந்தது. லூசியன் இருந்தபோது நிலவிய மகிழ்ச்சி நிரம்பித் தவழ்ந்த குதூகலம் அங்கில்லை.

"வா தம்பி செபஸ்தி'' என்றழைத்தபடி திண்ணையில் படுத்திருந்த றோசம்மா எழுந்தாள். முகம் வாடிக் களையற்று வெளிச்சிட்டுக் கிடந்தது. தலைவனின் மரணத்துடன் அந்தப் பெண்ணின் சந்தோசம் அனைத்தும் கலைந்துவிட்டன. விழிகள் குழி விழுந்து கன்னங்கள் சுருங்கி ஒட்டிப் போய் இருந்தன. காய்ந்த சருகாக அவள் காணப்பட்டாள். உள்ளே யிருந்த பிலோமினா குரல் கேட்டு வெளியே வந்தாள். செபஸ்தியான் எதுவும் பேசாமல் திண்ணைக் குந்தில் அமர்ந்து அவர்களைக் கேள்விக் குறியுடன் ஏறிட்டுப் பார்த்தான். அவன் பார்வையை றோசம்மாவால் எதிர்கொள்ள முடியவில்லை.

"உங்களுக்கே இது நல்லாயிருக்கா அக்கா?''

"அழகம்மாவிற்கு அவர் உதவினவர். அவவுக்கு எல்லாம் சின்னப் பிள்ளையள். எனக்கு அப்படியல்ல செபஸ்தி. அன்ரனி உழைக்கக் கூடியவன். மற்றவைக்குப் பாரமாக நாங்க இருக்கக் கூடாது.''

"அப்படி நாங்க நினைக்கவில்லை. தயவுசெய்து இன்னமும் ஒரு சில மாதங்கள் பொறுக்கட்டும். சோதனை எடுத்ததும பிறகு பார்க்கலாம். அவன் விதானையாருக்கான பரீட்சையும் எடுத்தவன் என்று சொன்னவன்.''

"அந்த மறுமொழி வந்திட்டுது, அண்ணை. ராகுலனின் அண்ணை சிவபுத்திரன் அந்தப் பரீட்சையில் பாஸாம். அண்ணனுக்கு இரண்டு மாக்ஸ் குறைவு. ரெண்டாவது லிஸ்றில அண்ணரைக் கூப்பிடுவினமாம்'' என்றாள் பிலோமினா.

செபஸ்தியான் அவளை ஆதரவோடு பார்த்தான். அவள் சொன்ன செய்திகள் திருப்தியாகவிருந்தன. அவளைப் பற்றி அவன் கேள்விப்

பட்ட செய்தியொன்று கவலையைத் தந்தது. அது உண்மையாக இருக்குமோ?

"அப்ப பிறகென்ன? துரையப்பரின் குடும்பம் பரம்பரை பரம்பரையாக விதானை... நாங்க வரக்கூடாதோ?"

"இப்ப எல்லாம் சோதனைதான். அண்ணருக்குக் கிடைக்கும்."

"கிடைக்கிற சந்தர்ப்பங்களை நாங்க சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் இப்படியெல்லாம் பேசப்படாது, செபஸ்தி."

"அதுக்குத்தான் நானும் சொல்லுறன் அக்கா, அன்ரனி படிக்கட்டும். ஏ.எல். பரீட்சை எடுக்குமட்டும் படிக்கட்டும்."

றோசம்மா மௌனமாக இருந்தாள். உடனடியாக எதைக் கூறுவதெனத் தெரியவில்லை. வெறிக்கப் பார்த்தாள்

"அண்ணை கேட்கமாட்டார். இப்பக்கூடக் கடலிற்குப் போட்டார்" என்றார் பிலோமினா.

"எங்களுக்கு அண்ணை படித்து உத்தியோகம் பார்க்க வேண்டும் என்றுதான் ஆசை."

செபஸ்தியான் விரைந்து எழுந்தான்.

"நான் அன்ரனியுடன் கதைக்கிறன். சுவாமியாரைக் கொண்டும் சொல்லுவிக்கிறன். அவன் கேட்பான்."

"கடலினை வெறித்துப் பார்த்தபடி செபஸ்தியான் நிற்கிறான். அடி வானத்தில் செம்பரப்பொளியில் ஒரு வள்ளம் கரையை நோக்கி வருவது தெரிகின்றது. வள்ளத்தின் அசுகை தெரிந்ததும் மடத்தின் கூரையில் இருந்த காகங்கள் கரைந்து தம் மகிழ்ச்சியைத் தெரிவிக் கின்றன. நிச்சயம் தூக்கியெறியும் கழிவு மீன் குஞ்சுகள் இல்லாமலா இருக்கும்?"

வள்ளம் கரையை வந்தடைகிறது. அதிலிருந்து அன்ரனியும் வடிவேலும் கரையில் குதித்து இறங்குகிறார்கள். அவர்கள் முயற்சிக்குரிய பலன் கிடைக்கவில்லையென்பது அவர்களின் முகங்களின் கருமையி லிருந்து தெரிகின்றது.

கரையில் தன்னைக் கோபத்துடன் வெறித்துப் பார்த்தபடி செபஸ்தியான் நிற்பதை அன்ரனி கண்டான். அவன் விழிகளில் தெறிக்கும் கனலிற்குரிய காரணம் அவனுக்குத் தெரியாமலில்லை.

"அன்ரனி, நீ இனிக் கடலிற்குப் போகப்படாது. அதை நான் பார்க்கிறன். நீ படிக்க வேணும். நல்லாப் படிக்க வேணும்..."

அன்ரனி எதுவும் கூறாமல் வள்ளத்திலிருந்த வலையை எடுக்கும் முயற்சியில் ஈடுபடுகிறான். செபஸ்தியான் ஓடிப்போய் அந்த வலையைப் பறித்தெடுத்தபடி, "விடடா அதை நான் இனிச் செய்யிறன்..." என்றான் கோபத்துடன், "உன்ரை அப்பன்ர விருப்பத்தை நாசமாக்காதை."

கடற்கரையில் வள்ளம் வந்ததையும் செபஸ்தியான் பெருங்குரலில் சத்தமிடுவதையும் மடத்தில் அமர்ந்திருந்த தரகியர் செல்லையாவும் அவருடன் இருந்த வேறிருவரும் கண்டனர். எழுந்து அவ்விடத்திற்கு வந்தனர். மடத்தின் கூரையில் அமர்ந்திருந்த காகங்களும் கடற்கரை நோக்கிப் பறந்து வந்தன.

"என்ன, என்ன செபஸ்தி. அவனோட சண்டை பிடிக்கிறாய்?" என்றார் தரகியர்.

"இது சண்டையில்லை, அண்ணை. அவனைக் கடலுக்குப் போக வேண்டாம் என்கிறன்" என்றான் செபஸ்தியான்.

"ஏன் கடல் உனக்கு மட்டுந்தான் சொந்தமோ? அவன் தகப்பன் செய்த தொழிலைச் செய்யத்தானே வேணும்."

"அவன் படிக்கட்டும்."

"கிழிச்சாய் போ. அவன் படிச்சு என்ன செய்யப் போறான்? விதானை வேலையா பார்க்கப் போறான்? அவனவன் பரம்பரைத் தொழிலைச் செய்ய வேணுமடா செபஸ்தி. துரையப்பரின் பேரன். அவனும் தன்ர பரம்பரைத் தொழிலுக்கு வந்திட்டான். லூசியன்ர மோனும் தொழிலைச் செய்யட்டும் விடு. எல்லாரும் படிப்பு, உத்தியோகம் என்று போனால் மீன் பிடிக்கிறது ஆர்? மரம் சீவுகிறது ஆர்?" என்று தரகியர் செல்லையா பெரும் சத்தத்துடன் சிரிக்கிறான். அக்கடற்கரையே ஒரு கணம் தன்னைச் சிலிர்த்துக்கொண்டதுபோல அன்ரனிக்குப் பட்டது. கோபத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்தான்.

"விசர்க் கதையளை விடுங்கோ. கொழுத்தாடு பிடிக்க வந்திருக்கிறியள். தயவுசெய்து போங்கோ" என்றான் செபஸ்தி.

"உண்மையைச் சொன்னா உனக்கேன் கொதிக்குது? லூசியன்ர மோன் படிச்சிடுவானோ? அது இலேசான விசயமோ?"

மாலைக் கருக்கலில் அந்தக் கடற்கரையில் எதுவும் நடந்து விடலாம். தரகியர் செல்லையாவின் சாதித் தடிப்பேறிய தோலினுள் எதுவும் உறைக்கப்போவதில்லை. லூசியனிடம் பட்ட அவமானம் இப்பொழுதும் பெரிதாகத் தெரிந்தது. அதனையும் மீறிப் பரம்பரை பரம்பரையாக இச் சமூகத்தில் செலுத்திய ஆதிக்க மனப்பாங்கும் அலட்சியமும் உடலில் ஊறிக்கொண்டிருக்கும் சாராயத்துடன் கலந்திருந்தன.

அன்ரனி ஒரு கணம் தன்னை மறந்தான். வள்ளத்திலிருந்து வாரித் தூக்கிய வலையை அப்படியே உயர்த்தித் தரகியரின்மீது ஓங்கி வீசி விட்டான். தரகியர் இதனை எதிர்பார்க்கவில்லை. அப்படியே மணலில் சரிந்து விழுந்தான்.

செபஸ்தியான் பயந்து திகைப்படைந்தான். இப்படி நடக்குமென்று அவர் எதிர்பார்க்கவில்லை.

"அன்ரனி..." என்று பயத்துடன் அழைத்தான். அன்ரனி அவனை ஏறிட்டுப் பார்த்தபடி, 'அண்ணை, நான் இனிக் கடலில் இறங்க மாட்டன். லூசியனின் மகன் இந்தக் கிராமத்தில் படித்து உத்தியோகம் பார்ப்ப வனாகத்தான் இருப்பான்" என்றபடி நடக்கத் தொடங்கினான்.

"நில்லடா" என்றபடி தரகியர் செல்லையா எழுந்தான். அவனுடன் கூடி நின்றவர்களும் கையில் அகப்பட்ட கற்களையும் தடிகளையும் எடுத்துக் கொண்டனர். செபஸ்தியனும் வடிவேலும் புரிந்து கொண்டனர்.

காகங்கள் கூச்சலிட்டன.

அந்த வேளை ராகுலன் சைக்கிளில் அவ்விடத்தில் வந்திறங் கினான். வீதியிலிருந்து பார்க்கும்போது கடற்கரையில் ஏதோ கலவரம் நடப்பது தெரிகிறது. இறங்கி ஓடி வந்தான். அவனைக் கண்டதும் அவ்விடத்தில் சற்று அமைதி ஏற்பட்டது.

"என்ன? என்ன?"

"உம்முடை பயிறு இனி அவியாது. இங்கே! நீ இதிலை தலையிடாதை" என்று செல்லையா கத்தினான்.

"நீர் மசிர், ஆடுற ஆட்டம் எனக்குத் தெரியாதோ? லூசியன் வீட்டில மாளப்போறாய்? பேச வந்திட்டார்."

ராகுலன் கோபத்துடன் அவனைப் பார்க்கிறான். விழிகள் சிவந்து கலங்குகின்றன. செல்லையா கத்துகிறான்.



“இங்க இப்ப நடக்கிறது ஆமி ஆட்சி. ஒரு கிறுக்குக் கிறுக்கி யனுப்பினன் எண்டால் தம்பி இருந்தவிடம் தெரியாம போயிடுவார். பேச வந்திட்டார்.”

தரகியரின் வார்த்தைகள் ராகுலனின் நெஞ்சில் பளீரெனத் தாக்கின. அவன் மெதுவாகத் தரகியர் அருகில் வந்தான்.

“செல்லையாண்ணை இதென்ன கதை? நீங்க வாருங்கோ போவம்.” என்று அவனுடன் கூட வந்தவர்கள் தரகியரை இழுத்தனர். தரகியரின் வெறி வார்த்தைகளைக் கொட்ட வைத்தது.

“இவனிடம் என்கென்ன பயம்? முன்னமாதிரி வெருட்டப் பார்க்கிறான். உவரை விடமாட்டேன்....”

“அண்ணை....” என்றான் ராகுலன்: “உபத்திரவம் தராமல் இருக்கப் பாருங்கோ. சந்தியில உங்கட மனிசி பிள்ளையள் தலைகளிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கதறி அழ வைச்சிடாதையுங்கோ” செல்லயாவை இழுத்துச் சென்றனர்.

செல்லையா திமிறியபடி திட்டிக்கொண்டு நகர்ந்தான்.

அடிவானத்தில் இன்னமும் சிவப்பேறியிருக்கிறது.

## பின் நிகழ்வு

# வானம் அழுகிறது



**சோ**னாவாரியாக மாரி மழை காலந்தப்பிப் பொழிந்து கொண்டிருக்கிறது. வானமே பொத்தல் விழுமாப்போல நீர்த்தாரைகள் மண்ணில் இறங்கிக் கொண்டிருக் கின்றன. அவரை வாங்கில் நீட்டி நிமிர்ந்து படுக்க வைத்திருக்கின் றார்கள். அவர் உடல் ஒட்டி வதங்கி யிருக்கின்றது. விழிகள் மூடிக் கிடக்கின்றன. அவர் மார்புக்கூடு ஏறியிறங்குவதிலிருந்து அவர் இன்னமும் இவ்வுலகின் பந்தங்களுடன் தன் உறவை அறுத்துக் கொள்ள வில்லை என்பது எல்லோருக்கும் தெரிகின்றது.

இன்றோ நாளையோவென அவர் உயிர் ஊசலாடிக் கொண்டிருக் கின்றது.

அவர் உதடுகள் மெதுவாகத் துடிப்பதை யோகம் காண்கிறாள்.

"அப்பு, ஏதோ சொல்ல விரும்புகிறார்" என்றாள் புவனம். அவரைச் சூழ்ந்து எல்லோரும் நிற்கின்றார்கள்.

"ஐயா, ஐயா, எங்களை ஒருக்காப் பாருங்கோ..." பாசப் பொழிவுடன் அவர் பிள்ளைகள் கண்ணீர் விட்டழைக்கின்றனர்.

“ராகுலா...” அவர் உதடுகள் துடிக்கின்றன: ‘பேரா, என் பேரா, உன்னை இனி எங்க காணப் போறன்? எத்தனை கனவுகளோடு என்னுடன் அளவளாவினாய்?’

ஒரு நாள் அதிகாலை அவர் முன் ராகுலன் நின்றான். அவனை அங்கு அவர் எதிர்பார்க்கவில்லை. யாழ்ப்பாணத்தினை இராணுவம் தன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்து, பதின்மூன்று மாதங்களாகின்றன. சந்திக்குச் சந்தி சென்றிகளுடன கூடிய அழுத்தங்கள், கைதாவோர், காணாமற் போவோர், பாலியல் வன்முறைக்குள்ளாவோர் எனத் துயரங்கள் ஒன்றன்பின்னொன்றாக மக்களின் தலைமேல் இறங்கிக் கொண்டிருந்தன.

“ராகுலா, உன்னை இப்படிக் கண்டபடி வெளியில திரிய வேண்டாமென்றல்லோ சொல்லியிருந்தனான். வீட்டிற்குள் இருக்கக் கூடாதா?”

“நான் இப்ப இயக்கத்தில் இல்லை அப்பு, விலகிவிட்டன்.”

“உதை யார் நம்புவினம? இருந்ததைத்தான் பார்ப்பினம். நீ வேறு தரகியர் செல்லையாவுடன் அண்டைக்குக் கொழுவுப்பட்டாயாம். அவன் ஒரு நஞ்சன். எதையும் செய்வான்” என்று கவலைப்பட்டார்.

“அதை விடுங்கோ அப்பு. நான் இப்ப ரெண்டு விசயங்கள் உங்களிடம் சொல்ல வந்தன்” என்று ராகுலன் தயங்கினான்.

அவர் பேரனை வியப்புடன் பார்த்தார். பின்னர் சிரித்துக் கொண்டார்.

“ஏனப்பு சிரிக்கிறியள்?”

“இல்லைச் சொல்லு.”

“சிரிச்சதுக்குக் காரணத்தைச் சொல்லுங்கோ...?” அவன் குரலில் அடங்கா ஆவல்.

அவர் எழுந்திருந்தார். “வா ராகுலா, இப்படியே கோயில் வரை காலாறப் போய்வருவம். கொஞ்ச நாளாக கால்கள் வலி காண்கின்றன. நடக்கட்டாம்... என்கிறார் வைத்தியர்.”

அவர்கள் வயற்கரையோரமாக நடந்து கொண்டிருக்கும் போது வயலில் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் காட்சிகள நடந்து கொண்டிருந்தன. இப்பக்கத்தில் இன்னமும் பிரச்சினை தீரவில்லை.

மெல்லிய காற்று சில்லென வீசியது. கிழக்கில் கதிர்கள் விரிந்து கொண்டிருந்தன.

"சொல்லுங்கோ, அப்பு?"

"உன்னை உன் மச்சான் சிவபாலன் வெளிநாட்டிற்குக் கூப்பிடுவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறான். நீ உன் அப்பாவோடு கொழும்புக்குப் போகப் போகிறாய். கொழும்புக்குப் போறது பயமில்லையோ?" என்று அவர் கவலையுடன் கேட்டார்.

"இங்க இனி இருக்கேலாது அப்பு. அப்படித்தான் எனக்குப் படுகின்றது." அவன் குரலில் துயரம் கோடிட்டது: "எனக்கு இந்த மண்ணை விட்டுச் செல்லக் கொஞ்சமும் விருப்பமில்லை, அப்பு. அம்மா அழுகிறா... நித்தம் அழுதபடி. எங்கையாவது போய் நல்லா இரு என்கிறா. வன்னிக்குப் போய் விடுகிறன் என்றன். அதுக்கு விருப்பமில்லை. வெளிநாட்டிற்குப் போகலாமெனப் படுகின்றது. எல்லாரையும் போல வாழ ஆசையாகவிருக்குது, அப்பு."

ராகுலனின் தோளில் ஆதரவாகக் கரம் பதித்தார் அவர். அந்தக் கரப் பற்றுதல் அவனுக்கு இதமாகவிருக்கிறது.

"அப்பு.... இன்னொரு விசயம்..."



“சொல்லு...”

“கோபிக்க மாட்டியளே?”

“இல்லை....”

“சத்தியமாக?...”

“சத்தியமாக...”

அவன் தயங்கி நின்றான். அவன் முகத்தில் வெட்கம் குடி கொண்டது. முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான். அவருக்குச் சிரிப்பு வருகிறது.

“பரவாயில்லை சொல் ராகுலா!”

“அப்பு, லூசியன் அண்ணற்ற மகள் பிலோமினாவைத் தெரியுமா?”

அவர் சிரிக்கிறார். அந்தச் சிரிப்பில் அர்த்தங்கள் பல தொக்கி அவனைக் கவ்வுகின்றன.

“நல்ல பெண். லூசியனின் மகள் பெயர் தெரியாது. அப் பெண்ணைத் தெரியும்...”

“அப்பு, அண்டைக்கொரு நாள் நீங்கள் சொன்னியள்... உன் கரத்திலிருக்கும் துப்பாக்கியைக் கீழே வைத்துவிட்டு ஒரு பெண்ணின் கரத்தைக் காதலுடன் பற்றிப்பார், இந்த வாழ்வின் இனிமை தெரியும் என்று...”

அவர் பேரனை வியப்புடன் ஏறிட்டார். முகத்தில் மகிழ்ச்சியின் ஆரவாரம் குமிழியிட்டது. நடப்பதை நிறுத்திவிட்டு ராகுலனைப் திரும்பிப் பார்த்தார்.

அவன் தலையைக் குனிந்து கொண்டான்.

“அவள் கரத்தினைப் பற்றாமலேரயே இந்த வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டேன், அப்பு. இதற்கு நீங்கள் மறுப்பியளா?”

ஆதரவோடு பேரனைப் பார்த்தேன்.

“நானேன் மறுக்க வேண்டும்?”

“அப்பு... நான் சைவம்... அவள் வேதம்...”

“அதிலென்ன?”

“நீங்கள் வெள்ளாளர். அவள் கரையார்...”

"அதிலென்ன பைத்தியக்காரா! இந்த உலகம் எவ்வளவு முன்னேறி விட்டது. இன்னமும் வறட்டுக் கௌரவங்களைப் பார்ப்பதும்.... சமயத்தையும் சாதியையும் தூக்கிப் பிடிப்பதும் எனக்குச் சரியாகப் படவில்லை. எங்கள் முன்னவர்கள் எவ்வளவு காட்டுமிராண்டிகளாக நடந்து கொண்டனர்! சாதியென்பது தொழிலிலில்லை; உடலிலில்லை; எங்கட அகங்கார மனதில்தான் இருக்கின்றது. எனக்கு மெத்தச் சந்தோஷம், பேரா! நீ அவளைக் கலியாணம் செய்து கொள்."

அவன் அப்படியே அவரைக் கண்டிக்கொண்டான். விம்மி விம்மி அழுதான். விழிகள் நீரைச் சொரிந்தன.

"அப்பு, எனக்கு உங்களைப் போல வாழவேண்டுமென்று ஆசையாயிருக்கு."

"நீ நூறு வருசம் வாழ்வாய் பேரா!"

"அவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தனர். வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தபோது இருபது இராணுவ மோட்டார் சைக்கிள்கள் கூவிக்கொண்டு நாலாபக்கங்களிலிருந்தும் வெளிப்பட்டன.

"அப்பு, ஆமி..." என்றான் ராகுலன். "ஆரோ காட்டிக் கொடுத்து விட்டார்கள்."

அவர் இதயம் இடிந்து போனது. வயல் வெளியில் நாயொன்று அவலமாகக் குரல் தந்தது. அவர்கள் இருவரும் சூழ்ந்துகொள்ளப்பட்ட போது, "அப்பு, என்னை மன்னித்து விடுங்கள்" என்றான் ராகுலன். என்ன நடந்தது, எது நடந்தது என்று தெரிவதற்கு முன்பே அவன் தன் வாயில் சயனைட் குப்பியைத் திணித்துக் கொண்டான். அவர்கள் நெருங்குவதற்கு முன்னரே அவன் நிலத்தில் சரிந்து வீழ்வதைக் கண்டார்.

"ராகுலா.... என் பேரா..." அவர் இதயம் பிளந்தது போல உணர்வு. நெஞ்சில் இனந்தெரியாத வலி... அழுத்தம். அப்படியே நிலத்தில் சரிந்து விழுந்தார்.

அன்று விழுந்தவாதான். பின் இன்னமும் எழும்பவில்லை. கண்கள் இறுக மூடிக்கிடக்கின்றன. தொண்டைக்குழிக்குள் சிக்கித் தவிக்கும் உணர்வுகள், நெஞ்சுக்கூடு ஏறியிறங்குகிறது.

வெளியே மழை தூறத் தொடங்கியிருந்தது. முற்றத்தில் வெள்ளம் வடியவில்லை.

அவர் படுக்கையைச் சுற்றி எல்லோரும் துயரத்துடன் நிற்கிறார்கள்.

ராகுலனின் மரணத்தை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எத்தனை ராகுலன்கள் இந்த மண்ணில் உரமாகிவிட்டாகள்!

அவர் உதடுகள் அசைகின்றன.

சிவபால்ன் அவர் அருகில் வந்து முழங்காலில் படுக்கையருகில் வந்தமர்ந்தான்.

"அப்பு.... நான் சிவபாலன்."

அவன் அழைப்பு அவருக்குக் கேட்டதென்பதற்கு அறிகுறியாக அவர் தொண்டைக்குழி ஏறியிறங்கியது. விழிகளைத் திறக்கச் சிரமப் பட்டார்.

"ஐயா, உங்கட விருப்பப்படி சிவபாலனுக்குச் சரசுவைக்கட்டிக் கொடுப்பம். மாணிக்கராசாவுக்குப் புவனத்தைக் கட்டிவைக்க ஜெயா மச்சாள் ஓமெண்டிட்டா. சிவபுத்திரனுக்கு உங்கட விதானை வேலை கிடைச்சிருக்குது" என்றபடி பவளம் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"ஓம் மாமா..." என்றாள் ஜெயராணி.

அவர் விழிகள் ஒரு கணப்பொழுது திறந்து கொண்டன. முகத்தில் பெரும் திருப்தி நிலவியது. நீண்டதொரு மூச்சு வாய் வழியாக வெளி வந்தது.

"ஐயா..."

"அப்பு..."

எல்லோரும் வாயிலும் வயிற்றிலுமாக அடித்துக்கொண்டு அலறி அழ, அவர் நிம்மதியாக நள்ளிரவு கடந்த சாமப்பொழுதில் விழிகளை நிரந்தரமாக மூடிக் கொள்கிறார்.

வெளியே வானம் அழுதுகொண்டிருந்தது.

◆ ◆ ◆


மின்நூலாக்கம்
சுபாஷ் சண்முகா

# போரே நீ போ...



## செங்கை ஆழியான்